1266

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை
# நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

VOL – 14 APR – 1989 NO – 1

D
V211,31'N89
N89.14.1
144367

வெளியீடு 14-9-1989 1266 Issued 14-9-1989

# தமிழ்நாடு
## சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

சனிக்கிழமை, ஏப்ரல் 29, 1989–தொகுதி 14–எண் 1
Saturday, the 29th April, 1989–Volume 14–No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat, Fort St. George
Madras-600 009

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

## உள்ளடக்கம்.

**29—4—1989**


| | பக்கங்கள். |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் .. | i—iii |
| Personnel of the Government of Tamil Nadu .. | iv—vi |
| தமிழ் நாடு சட்ட மன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் .. .. .. .. .. | vii—ix |
| தமிழ் நாடு சட்ட மன்றப் பேரவை உறுப்பினர் பட்டியல் (அகர வரிசைப்படி) .. .. | xi—xix |
| **1. இறங்கற் குறிப்பு—** | |
| முன்னாள உறுப்பினர் மறைவு | 1 |
| **2. வினாக்கள்—விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 1—28 |
| **3. தகவல் கோரல்—** | |
| (அ) சென்னை நகரில் குடிநீர் வழங்குவதில் உள்ள குறைபாடுகள் .. .. | 28—30 |
| (ஆ) போராட்டம் நடத்தும் சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுடன் நடைபெறும் பேச்சு வார்த்தை குறித்து .. | 30—31 |
| (இ) சென்னை பொது மருத்துவமனையில் பணியாற்றிய இருதய நோய் சிகிச்சை நிபுணர் பதவி விலகியுள்ளது குறித்து | 31—33 |
| (ஈ) ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் தொழிலாளர்களுடைய பிரச்சினை குறித்த பேச்சு வார்த்தை .. .. .. | 33 |
| **4. கவன ஈர்ப்பு—** | |
| (அ) ஒய்வு பெற்ற ஊழியர்களுக்கு அம்பாசமுத்திரம் மதுரா கோட்ஸ் நிறுவனம் பணிக்கொடை வழங்காதது குறித்து .. | 33—36 |
| (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், அழகப்பபுரத்தில் வானிலிருந்து இரத்தத் துளிகள் விழுந்தது குறித்து .. .. | 37—39 |
| **5. சட்ட முன்வடிவுகள்—** | |
| (அ) நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1989 .. .. .. | 39 |
| (ஆ) மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்ட முன்வடிவு, 1989 .. | 40 |

பக்கங்கள்.


6. மானியக் கோரிக்கைகள், 1989-90—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

கோரிக்கை எண். 31—பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் ..

மாண்புமிகு டாக்டர். எ. இராமகிருஷ்ணன். .. .. .. .. 40, 41, 130—145 146, 147

*திரு. ஆர். மூக்கன். .. .. .. 41—43

திரு. இளம்வழுதி. .. .. .. 44—48

திரு. ஆர். ஈஸ்வரன் .. .. .. 49—51

*டாக்டர் த. சாந்தகுமாரி. .. .. 51—58

*திரு. எம். அண்ணாமலை. .. .. 58—65

*திரு. வெ. கோவிந்தன். .. .. 65—69

திரு. எம். முகமது சித்திக். .. .. 69—73

டாக்டர் எஸ். சுந்தரராஜ். .. .. 75—80

*திரு. ந. நஞ்சப்பன். .. .. .. 80—85

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர். .. 85—93

*திரு. செ. பெருமாள். .. .. 93—91

*திரு. செங்கை சிவம். .. .. 96—100

*திரு. வெ. இராசு. .. .. .. 100—103

*திரு. ஜி. பழனிச்சாமி. .. .. 103—109

*திரு. ந. சௌந்திரபாண்டியன். .. 109—114

*திரு. வே. பெரியசாமி. .. .. 114—119

*திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள். .. 120—129

7. விதி 110-இன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை—

திரையரங்குகளில் நடைபெறும் முறைகேடுகளைக் களைய அரசு நடவடிக்கை .. 73—74

8. பாவேந்தர் பாரதிதாசன் பிறந்தநாள் வாழ்த்து 150

9. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள். 150—151



தமிழ்நாடு ... 600 008.

144367


# தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

ஆளுநர்—திரு. பி.சி. அலெக்சாண்டர்

அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் ... மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், காவல், நிதி, திட்டம், தொழில்கள், வணிக வரிகள், பிற்பட்டோர் நலம், இலஞ்ச ஒழிப்பு, மது விலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் உள்பட) மற்றும் ஆயத் துறை.

2. கல்வி அமைச்சர் ... மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: கல்வி (தொழில் நுட்பக் கல்வி உள்பட), ஆட்சி மொழி, சட்ட மன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், தமிழ்ப் பண்பாடு, விளையாட்டு மற்றும் இளைஞர் அணி, முன்னாள் இராணுவத்தினர் மற்றும் தொல்பொருள் இயல்.

3. சட்ட அமைச்சர் ... மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்—அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கம்பெனிகள் பதிவு, கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவைபற்றி சட்டம் இயற்றல் உள்பட) மற்றும் வக்ஃப்.

4. வருவாய்த் துறை அமைச்சர் ... மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர், ஆவணப் பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

| | |
|---|---|
| 5. போக்குவரத்துத் துறை அமைச்சர். | **மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள். |
| 6. அறநிலையத் துறை அமைச்சர். | **மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி :** அறநிலையத் துறை, வீட்டு வசதி, சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், வனங்கள் மற்றும் சின்கோனா. |
| 7. வேளாண்மைத் துறை அமைச்சர். | **மாண்புமிகு திரு. கோ. சி. மணி :** வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் மற்றும் வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (ஒன்றிய, மாவட்ட, பிரதம, கூட்டிணைப்பு அமைப்புகள் உள்பட) மற்றும் உணவு உற்பத்தி. |
| 8. உணவு அமைச்சர்... | **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** உணவு, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் நுகர் பொருள் வழங்கல், கூட்டுறவு மற்றும் புள்ளி விவரங்கள். |
| 9. செய்தி—தொழிலாளர் நலத்துறை அமைச்சர். | **மாண்புமிகுதிரு.பொன்.முத்துராமலிங்கம்:** செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம், தொழிலாளர், மக்கள் தொகைக் கணக்கு, வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப் பட்டவர்கள், இரும்பு எஃகுக் கட்டுப்பாடு, அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, எழுதுபொருள் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம். |
| 10. ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித் துறை அமைச்சர். | **மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் :** நகராட்சிகள், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராமப்புற கடன் சம்பந்தப்பட்டவை. |



| | |
|---|---|
| 11. பொதுப்பணித் துறை அமைச்சர். | **மாண்புமிகு திரு. துரைமுருகன் :** பொதுப்பணிகள், சிறு பாசனம் (சிறப்பு சிறு பாசனம் உள்பட), திட்டப்பணிகள். |
| 12. சமூக நலம்—ஊரகத் தொழிற்துறை அமைச்சர். | **மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்:** சமூகநலம் (குழந்தைகள், மகளிர் நலம் உள்பட), பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம், சத்துணவு, ஊரகத் தொழில்கள் (கிராம, குடிசை, சிறு தொழில்கள் உள்பட), கதர் வாரியம், பூமி தானம் மற்றும் கிராம தானம். |
| 13. ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர். | **மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்.** ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர். |
| 14. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர். | **மாண்புமிகு டாக்டர் பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** மக்கள் நல்வாழ்வு, மருந்துகள், நகர அமைப்பு, குடிநீர் வாரியம் மற்றும் சுற்றுச் சூழல் மாசுக் கட்டுபடுத்தல். |
| 15. மின்துறை அமைச்சர். | **மாண்புமிகு திரு. கே. என். நேரு :** மின்சாரம் மற்றும் பால். |
| 16. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர். | **மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்:** கால்நடை பராமரிப்பு, மீனளம் மற்றும் மீனள வளர்ச்சிக் கழகம். |
| 17. கைத்தறித் துறை அமைச்சர். | **மாண்புமிகு திரு. ச. தங்கவேலு :** கைத்தறி, நெசவாலைகள், நகர்ப்புற மேம்பாடு, குடிசை மாற்று வாரியம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு. |
| முதலமைச்சரின் பேரவைச் செயலர். | **திரு. எல். கணேசன்** |

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

GOVERNOR OF TAMIL NADU—*Thiru.* **P. C. ALEXANDER**

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

| | |
|---|---|
| 1. Chief Minister .. .. | **The Hon. Dr. M. KARUNANIDHI :** Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Police, Finance, Planning, Industries, Commercial Taxes, Backward Classes, Prevention of Corruption, Prohibition including grant of Liquor Permits and Excise. |
| 2. Minister for Education .. | **The Hon. Prof. K. ANBAZHAGAN :** Education including Technical Education, Official Language, Legislature, Elections, Electronics, Science and Technology, Tamil Culture, Sports and Youth Service Corps, Ex-Servicemen and Archaeology. |
| 3. Minister for Law .. .. | **The Hon. Thiru S. J. SADIQ PASHA:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money-lending and Legislation on Chits and Wakf. |
| 4. Minister for Revenue .. | **The Hon. Thiru NANJIL K. MANOHARAN :** Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration and Stamp Act. |
| 5. Minister for Transport – | **The Hon. Thiru M. KANNAPPAN :** Transport , Nationalised Transport, Motor Vehicles Act, Ports and Highways. |
| 5. Minister for Hindu Religious and Charitable Endowments. | **The Hon. Thiru K. P. KANDASAMY:** Hindu Religious and Charitable Endowments, Housing, Tourism, Tourism Development Corporation, Forest and Cinchona. |



| | |
|---|---|
| 7. Minister for Agriculture .. | **The Hon. Thiru KO. SI. MANI :** Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering and Service Co-operative Societies at the Block, District and Apex level including the Federation and Food Production. |
| 8. Minister for Food .. .. | **The Hon. Thiru Arcot N. VEERASAMY :** Food, Price Control and Civil Supplies, Co-operation and Statistics. |
| 9. Minister for Information and Labour. | **The Hon. Thiru Pon. MUTHURAMALINGAM :** Information and Publicity, Film Technology, Cinematograph Act, Labour, Census, Employment and Training, Indian Overseas, Refugees and Evacuees, Iron and Steel Control, Newsprint Control, Stationery and Printing and Government Press. |
| 10. Minister for Rural Development and Local Administration. | **The Hon. Thiru VEERAPANDI S. ARUMUGAM :** Municipal Administration, Rural Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness. |
| 11. Minister for Public Works .. | **The Hon. Thiru DURAIMURUGAN:** Public Works, Minor Irrigation including Special Minor Irrigation, Programme Works. |
| 12. Minister for Social Welfare and Rural Industries. | **The Hon. Thirumathi SUBBULAKSHMI JAGADISAN :** Social Welfare including Children and Women's Welfare, Beggers 'Home, Orphanages, Correctional Administration, Nutritious Noon Meals, Rural Industries including Village, Cottage and Small Industries, Khadi Board, Bhoodan and Gramadan. |

| | |
|---|---|
| 13. Minister for Adi-Dravidar Welfare. ... | **The Hon. Dr. E. RAMAKRISHNAN:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| 14. Minister for Public Health .. | **The Hon. Dr. K. PONMUDI** *alias* **DEIVASIGAMANI :** Public Health, Medicines, Town Planning, Water Board and Environmental Pollution Control. |
| 15. Minister for Electricity .. | **The Hon. Thiru K. N. NEHRU :** Electricity and Milk. |
| 16. Minister for Animal Husbandry. | **The Hon. Dr. K. CHANDRASEKARAN :** Animal Husbandry, Fisheries and Fisheries Development Corporation. |
| 17. Minister for Handlooms .. | **The Hon. Thiru S. THANGAVELU :** Handlooms, Textiles, Urban Development, Slum Clearance Board and Accommodation Control. |
| Parliamentary Secretary to Chief Minister. | Thiru L. GANESAN |



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

பேரவைத் தலைவர்

மாண்புமிகு டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன்

பேரவைத் துணைத் தலைவர்

திரு. பி. துரைசாமி.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

திரு. மு. இராமநாதன்.

திரு. என். கணபதி.

திரு. பெ. சீனிவாசன்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திரு. சி. கோவிந்தராஜன்.

செயலாளர்

திரு. சி. கு. இராமசாமி.

## பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

(அகர வரிசைப்படி.)

| | |
|---|---|
| சீனிவாசன், திரு. சா., பி.எஸ்ஸி., .. | முதுநிலை குழு அலுவலர். |
| சாமிநாதன், திரு. பொ. க. .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்). |
| சீதாராமன், திரு. வெ., பி.காம்., பி.ஜி.எல்., | துணைச் செயலாளர். |
| டில்லிதுரை, திரு. த. ப., பி.எஸ்ஸி., பி.எல்., | துணைச் செயலாளர். |
| ஜானகிராமன், திரு. செ. சு., பி.ஏ., பி.எல்., | துணைச் செயலாளர். |
| சீனிவாசன், திரு. கு.அ., பி.ஏ., .. | குழு அலுவலர். |
| இராமச்சந்திரன், திரு. ஆர். கே., பி.ஏ., பி.எல்., | சார்புச் செயலாளர். |
| கனகசபாபதி, திரு. பெ. ச., பி.ஏ., பி.எல்., | சார்புச் செயலாளர். |
| கேசவராம், திரு. சு., பி.ஏ., .. | சார்புச் செயலாளர். |
| சந்திரசேகரன், திரு. ஆர்., பி.ஏ., .. | சார்புச் செயலாளர். |
| சாலமன் ஜெயபால், திரு. டி., பி.எஸ்ஸி., பி.எல்., | சார்புச் செயலாளர். |
| சுந்தரராஜன், திரு. கா. செ., பி.ஏ., பி.ஜி.எல்., | சார்புச் செயலாளர். |
| முனிர் உன்னிசா, திருமதி., பி.எஸ்ஸி., | சார்புச் செயலாளர். |
| ராஜேந்திரன், திரு. பி.சி., பி.ஏ., .. | சார்புச் செயலாளர். |
| ரெஜினால்ட் ஜான், திரு. ஜே., பி.ஏ. .. | சார்புச் செயலாளர். |
| ஜான், திரு. வ. சா., பி.ஏ., ... | சார்புச் செயலாளர். |
| ஜேக்கப் ஆர்தர், திரு. டி., பி.ஏ., பி.எல்., | சார்புச் செயலாளர். |



| | |
|---|---|
| ஜோசப், திரு. மா. கு., பி.ஏ., .. | சார்புச் செயலாளர். |
| வெங்கட்டராமன், திரு. கோ. .. | பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர். |
| இராசமாணிக்கம், திரு. பெ., பி.ஏ., பி.எல்., | தலைமை நிருபர் (பேரவை). |
| சுவாமிநாதன், திரு. ச., எம்.ஏ., | தலைமை நிருபர் (குழுக்கள்). |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பட்டியல் அகர வரிசைப்படி.

| தொடர் எண் | உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| | ' அ ' | |
| 1 | அங்கமுத்து, திரு. கே. .. | உளுந்தூர்பேட்டை (செ. வ.) |
| 2 | அசேன், திரு. ஜெ. .. | இராணிப்பேட்டை |
| 3 | அண்ணாதுரை, திரு. கே. .. | பட்டுக்கோட்டை |
| 4 | அண்ணாதுரை, டாக்டர் கே. .. | வரகூர் (செ.வ.) |
| 5 | அண்ணாநம்பி, திரு. ஆர். .. | அவிநாசி (செ.வ.) |
| 6 | அண்ணாமலை, திரு. எம். .. | அரூர் (செ.வ.) |
| 7 | அதியமான், திரு. ஆ. .. | சேடப்பட்டி |
| 8 | அப்துல்சமத், திரு. பா. .. | வாணியம்பாடி |
| 9 | அப்துல் லத்தீப், திரு. எம். .. | சேப்பாக்கம் |
| 10 | அர்ஜுனன், திரு. கே. .. | தாரமங்கலம் |
| 11 | அழகர்சாமி, திரு. சோ. .. | கோவில்பட்டி |
| 12 | அழகுவேலு, திரு. ச. .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 13 | அறிவழகன், திரு. ஆ. .. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 14 | அன்பழகன், பேராசிரியர் க. .. | அண்ணாநகர் |
| 15 | அன்பழகன், திரு. வ. .. | செய்யாறு |
| 16 | அன்பில் பொய்யாமொழி, திரு. .. | திருச்சிராப்பள்ளி-2 |
| | ' ஆ ' | |
| 17 | ஆசையன், திரு. பெ. .. | ஆண்டிப்பட்டி |
| 18 | ஆண்டி அம்பலம், திரு. மெ. .. | நத்தம் |
| 19 | ஆறுமுகம், திரு. த. .. | அரியலூர் |
| 20 | ஆறுமுகம், திரு. வீரபாண்டி சோ. .. | சேலம்-2 |
| | ' இ ' | |
| 21 | இரகுமான்கான், திரு. அ. .. | பூங்காநகர் |
| 22 | இராசமாணிக்கம், திரு. இரெ. | குத்தாலம் |



| தொடர் எண் | உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| | ' இ '—தொடர்ச்சி. | |
| 23 | இராசமாணிக்கம், திரு க.வெ.வீ. | மேலூர். |
| 24 | இராசன், திரு. வி.பி. .. | ராஜபாளையம் (செ.வ.) |
| 25 | இராசு, திரு. வி.கே. .. | அரக்கோணம் (செ.வ.) |
| 26 | இராசு, திரு. வெ. .. | குளத்தூர் (செ.வ.) |
| 27 | இராசேந்திரன், திரு. அ. .. | போளூர் |
| 28 | இராதா, திரு. எஸ்.ஆர். .. | மதுரை கிழக்கு |
| 29 | இராதாகிருஷ்ணன், திரு. டி. .. | சோழவந்தான் |
| 30 | இராமகிருஷ்ணன், டாக்டர் எ. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 31 | இராமகிருஷ்ணன், திரு. நா. .. | கம்பம் |
| 32 | இராமச்சந்திரன், திரு. எம். .. | திருவோணம் |
| 33 | இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். .. | விளாத்திகுளம் |
| 34 | இராமச்சந்திரன், திரு. ந. .. | செஞ்சி |
| 35 | இராமசாமி, திரு. ஏ.எம். .. | ஆத்தூர் |
| 36 | இராமசாமி, திரு. கே.வி. .. | கரூர் |
| 37 | இராமசாமி, திரு.வி. .. | திருச்செங்கோடு |
| 38 | இராமசாமி, திரு. கே. ஆர். .. | திருவாடானை |
| 39 | இராமநாதன், திரு. மு. .. | கோவை (மேற்கு) |
| 40 | இராமலிங்கம், திரு. செ. .. | திருவிடைமருதூர் |
| 41 | இராஜேந்திரன், திரு. கே.ஆர். | பர்கூர் |
| 42 | இராஜேந்திரன், திரு. பி.வி. | வேதாரண்யம் |
| 43 | இளம்வழுதி, திரு. .. | எழும்பூர் (செ.வ.) |
| | ' ஈ ' | |
| 44 | ஈஸ்வரன், திரு. ஆர். .. | வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| | ' உ ' | |
| 45 | உகம்சந்த், திரு. எஸ்.டி. .. | மதுராந்தகம் |
| 46 | உதயசூரியன், திரு. தா. .. | சின்னசேலம் |
| 47 | உபயதுல்லா, திரு.எஸ்.என்.எம். | தஞ்சாவூர் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 'ஏ' | | |
| 48 எட்டியப்பன், திரு. ஆர். | .. | பெரணமல்லூர் |
| 'ஏ' | | |
| 49 ஏகாம்பர ரெட்டி, திரு. எ. | .. | பள்ளிபட்டு |
| 'க' | | |
| 50 கண்ணப்பன், திரு. மு. | .. | பல்லடம் |
| 51 கண்ணன், திரு. எஸ்.பி. | .. | அணைக்கட்டு |
| 52 கணபதி, திரு. என். | .. | குறிஞ்சிப்பாடி |
| 53 கணேசமூர்த்தி, திரு. என் | .. | மயிலாப்பூர் |
| 54 கணேசமூர்த்தி, திரு. ஏ. | .. | மொடக்குறிச்சி |
| 55 கணேசன், திரு. எல். | .. | ஒரத்தநாடு |
| 56 கணேசன், திரு. க.சொ. | .. | ஜெயங்கொண்டம் |
| 57 கணேசன், திரு. சா. | .. | தியாகராயநகர் |
| 58 கணேசன், திரு. வே. | .. | மங்களூர் (செ.வ.) |
| 59 கந்தசாமி, திரு. கே. | .. | கிணத்துக்கடவு |
| 60 கந்தசாமி, திரு. கே.பி. | .. | திருச்செந்தூர் |
| 61 கரீம், திரு. எம்.கே. | .. | கூடலூர் |
| 62 கருணாநிதி, டாக்டர் மு. | ... | துறைமுகம் |
| 63 கருப்பசாமி, திரு. எஸ்.எஸ். | | சர்த்தூர் |
| 64 கருப்பையா மூப்பனார், திரு. ஜி. | | பாபனாசம் |
| 65 கன்னையன், திரு. க. | .. | தொட்டியம் |
| 66 கஜபதி, திரு. டி.ஆர். | .. | ஆற்காடு |
| 67 காஞ்சனா, டாக்டர் க. | .. | கிருஷ்ணகிரி |
| 68 காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி, திரு. | | முதுகுளத்தூர் |
| 69 காளியப்பன், திரு. பி. | .. | ஒட்டன்சத்திரம் |
| 70 கிருஷ்ணமூர்த்தி, டாக்டர் து. | | சிதம்பரம் |
| 71 கிருஷ்ணன், திரு. சி. | .. | ஓமலூர் |
| 72 குணசேகரன், திரு. எஸ். | .. | தலைவாசல் (செ.வ.) |
| 73 குமரி அனந்தன், திரு. | .. | சாத்தான்குளம் |
| 74 குருநாதன், திரு. சு. | .. | பாளையங்கோட்டை |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 'க'—தொடர்ச்சி. | | |
| 75 குருமூர்த்தி, திரு. ஜி.ஜி. | .. | பவானி |
| 76 கோதண்டம், திரு. ஏ. | .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 77 கோபாலகிருஷ்ணன், திரு. வெ. | | மேட்டுப்பாளையம் |
| 78 கோவிந்தசாமி, திரு. சி. | .. | திருப்பூர் |
| 79 கோவிந்தசாமி, திரு. வி.சி. | .. | காவேரிப்பட்டினம் |
| 80 கோவிந்தராஜன், திரு. சி. | .. | நெல்லிக்குப்பம் |
| 81 கோவிந்தன், திரு. வெ. | .. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 'ச' | | |
| 82 சண்முகம், திரு. சி. | .. | ஆலந்தூர் |
| 83 சந்திரசேகர், திரு. வி.பி. | .. | பொள்ளாச்சி |
| 84 சந்திரசேகரன், டாக்டர் க. | .. | ஆலங்குடி |
| 85 சம்சுதீன் என்கிற கதிரவன், திரு. | | கடையநல்லூர் |
| 86 சம்பத், திரு. ஏ.ஜி. | .. | முகையூர் |
| 87 சற்குணம், திருமதி எஸ்.பி. | .. | இராதாகிருஷ்ணன் நகர் |
| 88 சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன், டாக்டர் மு. | | இளையான்குடி |
| 89 சாதிக்பாட்சா, திரு. எஸ்.ஜே. | | உடுமலைப்பேட்டை |
| 90 சாந்தகுமாரி, டாக்டர் த. | .. | தாராபுரம் (செ.வ.) |
| 91 சாமிநாதன், திரு. ஆர். | .. | திருமங்கலம் |
| 92 சிங்காரம், திரு. ஆர். | .. | பேராவூரணி |
| 93 சிவசுப்பிரமணியன், திரு. சா. | | ஆண்டிமடம் |
| 94 சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். | .. | பனைமரத்துப்பட்டி |
| 95 சிவலோகம், திரு. எஸ். | .. | புவனகிரி |
| 96 சின்னசாமி, திரு. கே. | .. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 97 சின்னசாமி, திரு. ரா. | .. | தர்மபுரி |
| 98 சின்னசாமி, திரு. வி.கே. | .. | பவானிசாகர் |
| 99 சீரங்கன், திரு. எம். | .. | மேட்டூர் |
| 100 சீனிவாசன், திரு. பெ. | .. | சிவகாசி |
| 101 சுந்தர், திரு. கே. | .. | உத்திரமேரூர் |
| 102 சுந்தரதாஸ், திரு. மா. | .. | விளவன்கோடு |
| 103 சுந்தரம், திரு. க. | .. | பொன்னேரி (செ.வ.) |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| **ச—தொடர்ச்சி.** | |
| 104 சுந்தரம், திரு. கே.ஆர். .. | குடியாத்தம். |
| 105 சுந்தரம், திரு. ப. .. | திருப்பத்தூர். |
| 106 சுந்தரராஜ், டாக்டர் எஸ். . | பரமக்குடி (செ.வ.). |
| 107 சுப்பிரமணிய பிள்ளை, திரு. கே. | கன்னியாகுமரி. |
| 108 சுப்பிரமணியம், திரு. தூ.க. | சத்தியமங்கலம். |
| 109 சுப்பிரமணியன், திரு. அ.லெ. | திருநெல்வேலி. |
| 110 சுப்பிரமணியன், திரு. வே.நா. | பெருந்துறை. |
| 111 சுப்பு, திரு. ஏ. .. | ராசிபுரம். |
| 112 சுப்புலட்சுமி செகதீசன், திருமதி | ஈரோடு... |
| 113 சுப்பையா, திரு. வ. .. | திருமயம். |
| 114 செங்குட்டுவன், திரு. ஏ. .. | மயிலாடுதுறை. |
| 115 செங்கை சிவம் திரு. | பெரம்பூர் (செ.வ.). |
| 116 செங்கோட்டையன், திரு. கே.ஏ. | கோபிச்செட்டிபாளையம். |
| 117 சேட்டு, திரு. எம். .. | செங்கம் (செ.வ.). |
| 118 சொக்கர், திரு. ரா. .. | விருதுநகர். |
| 119 சௌந்திரபாண்டியன், திரு. ந. | சமயநல்லூர் (செ.வ.). |
| **'ட'** | |
| 120 டேனியல் ராஜ், திரு. எஸ். .. | ஸ்ரீவைகுண்டம். |
| **'த'** | |
| 121 தங்கபாண்டியன், திரு. வே. | அருப்புக்கோட்டை. |
| 122 தங்கம், திரு. அ. .. | ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 123 தங்கராஜன், திரு. எஸ். ஏ. .. | திண்டுக்கல். |
| 124 தங்கராஜு, திரு. ஏ. .. | காட்டுமன்னார் கோயில் (செ.வ.). |
| 125 தங்கவேல், திரு. எம். .. | முசிறி. |
| 126 தங்கவேல், திரு. என். .. | குன்னூர் (செ.வ.). |
| 127 தங்கவேலு, திரு. ச. .. | சங்கரநாயனார் கோவில் (செ.வ.). |
| 128 தம்புசாமி, திரு. வி. .. | திருவாரூர் (செ.வ.). |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| **த—தொடர்ச்சி.** | |
| 129 தமிழ்மணி, திரு. வீ. .. | செங்கல்பட்டு. |
| 130 தயாளன், திரு. ஏ. சி. .. | ஆரணி. |
| 131 தனபாலன், திரு. கே. ஆர். ஜி. | சேலம்-1. |
| 132 தனராஜ், திரு. வி. .. .. | வந்தவாசி (செ.வ.). |
| 133 திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி. |
| 134 திருமூர்த்தி, டாக்டர் து. | திருப்போரூர் (செ.வ.). |
| 135 திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம். |
| 136 துரை சந்திரசேகரன், திரு. | திருவையாறு. |
| 137 துரைசாமி, திரு. பி. .. | நாமக்கல் (செ.வ.). |
| 138 துரைபாண்டி, திரு. பெ. .. | மானாமதுரை (செ.வ.). |
| 139 துரைமுருகன், திரு. .. | காட்பாடி. |
| 140 துரை ராமசாமி, திரு. .. | வெள்ளக்கோவில். |
| 141 தென்னரசு, திரு. எஸ். எஸ். | திருப்பத்தூர். |
| 142 தேவராஜ், திரு. வி. எம். .. | வேலூர். |
| **'ந'** | |
| 143 நஞ்சப்பன், திரு. ந. .. | பெண்ணாகரம். |
| 144 நடராசன், திரு. ஆ. .. | பேரூர். |
| 145 நடராசன், திரு. பொ. .. | திருத்தணி. |
| 146 நடேச உடையார், திரு. எகால் மு. .. | ரிஷிவந்தியம். |
| 147 நடேசன், திரு. ஆர். .. | திருவட்டாறு. |
| 148 நந்தகோபால கிருட்டிணன், டாக்டர் கோ. | பண்ருட்டி. |
| 149 நாராயணன், திரு. ராம. .. | காரைக்குடி. |
| 150 நூர்முகமது, திரு. செ. .. | பத்மநாபபுரம். |
| 151 நேரு, திரு. கே. என். .. | லால்குடி. |
| **'ப'** | |
| 152 பஞ்சாட்சரம், திரு. ஆர். | மேல்மலையனூர். |
| 153 பழனிச்சாமி, திரு. டி. கே. | திருவொற்றியூர். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| ப—தொடர்ச்சி. | |
| 154 பழனிச்சாமி, திரு. ஜி. .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.). |
| 155 பழனிசுவாமி, திரு. க. .. | எடப்பாடி. |
| 156 பழனிவேல், திரு. என். .. | பழனி (செ. வ.). |
| 157 பன்னீர்செல்வம், திரு. மா. .. | சீர்காழி (செ.வ.). |
| 158 பாண்டியன், திரு. பி. எச். | சேரன்மாதேவி. |
| 159 பாப்பா உமாநாத், திருமதி | திருவரம்பூர். |
| 160 பாப்பா சுந்தரம், திரு. அ. | குளித்தலை. |
| 161 பால்ராஜ், திரு. எஸ். .. | மதுரை (மத்திய). |
| 162 பாலசுப்பிரமணியன், திரு. அ. வே. | திருநாவலூர். |
| 163 பாலசுப்பிரமணியம், திரு. எஸ். ஆர். | பொங்கலூர். |
| 164 பாலையா, திரு. ஆ. .. | கொளச்சல். |
| 165 பிச்சாண்டி, திரு. கே. .. | திருவண்ணாமலை. |
| 166 பிச்சைமுத்து, திரு. ரெ. .. | பெரம்பலூர் (செ.வ.) |
| 167 பீட்டர் ஆல்போன்ஸ், திரு. சா. | தென்காசி. |
| 168 புகழேந்தி, திரு. இ. .. | கடலூர். |
| 169 பூவராகன், திரு. கோ. .. | விருத்தாசலம். |
| 170 பெரியசாமி, திரு. என். .. | தூத்துக்குடி. |
| 171 பெரியசாமி, திரு. ஐ. .. | ஆத்தூர். |
| 172 பெரியசாமி, திரு. வே. .. | அந்தியூர் (செ.வ.). |
| 173 பெரியண்ணன், திரு. அ. .. | புதுக்கோட்டை. |
| 174 பெருமாள், திரு. செ. .. | ஏற்காடு (ஆ.வா.). |
| 175 பொன்முடி, திரு. டி. .. | தண்டராம்பட்டு. |
| 176 பொன்முடி என்கிற தெய்வசிகாமணி, டாக்டர் க. | விழுப்புரம். |
| 177 பொன். முத்துராமலிங்கம் | மதுரை (மேற்கு). |
| 178 பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ.வ.). |
| 179 பொன்னுசாமி, பேராசிரியர், கே. | மருங்காபுரி. |
| 180 பொன்னுபிள்ளை, திரு. ஜி. .. | தேனி. |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| "ம" | |
| 181 மகேந்திரன், திரு. ஆர். .. | நாட்ராம்பள்ளி |
| 182 மணி, திரு. ஆச்சியூர் எம். .. | நாங்குநேரி |
| 183 மணி, திரு. கே. ஏ. .. | கபிலர்மலை |
| 184 மணி, திரு. கோ. சி. .. | கும்பகோணம் |
| 185 மணிமாறன், திரு. மா. .. | நன்னிலம் (செ.வ.) |
| 186 மதிவாணன், திரு. இரா. .. | ராயபுரம் |
| 187 மலர்மன்னன், திரு. அ. .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 188 மனோகரன், திரு. நாஞ்சில் கி. | திருவல்லிக்கேணி. |
| 189 மனோகரன், திரு. ப. .. | சிவகங்கை |
| 190 மாசிலாமணி, டாக்டர் சி. ரா. | திண்டிவனம் |
| 191 மாசிலாமணி, திரு. தி. ரா. .. | பூந்தமல்லி. |
| 192 மாதப்பன், திரு. கொ. .. | பாலக்கோடு |
| 193 மாரப்பன், திரு. பி. .. | காங்கேயம் |
| 194 மாரிமுத்து, திரு. அ. .. | வானூர் (செ.வ.) |
| 195 முகமது சித்திக், திரு. எம். .. | பூம்புகார் |
| 196 முத்துசாமி, திரு. ப. .. | வேடசந்தூர் |
| 197 முத்தையன், திரு. எம். .. | சங்கராபுரம் |
| 198 முத்தையா, திரு. எம். .. | ஒட்டப்பிடாரம் (செ.வ). |
| 199 முருகேசன், திரு. பொ. .. | காஞ்சீபுரம் |
| 200 முல்லைவேந்தன், திரு. வ. .. | மொரப்பூர் |
| 201 முனிரத்தினம், திரு. ஆ. மு. .. | சோளிங்கர் |
| 202 முனிரத்தினம், திரு. எஸ்.ஆர். | திருவள்ளூர் |
| 203 மூக்கன், திரு. ஆர். .. .. | உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 204 மூக்கையா, திரு. எல். .. | பெரியகுளம் |
| 205 மோகன், திரு. இரா. .. | சிங்காநல்லூர் |
| 206 மோசஸ், திரு. எம். .. | நாகர்கோவில் |

D-II A 53—100-D

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| " ய " | |
| 207 யசோதா செல்லப்பா, திருமதி | வலங்கைமான் (செ.வ. |
| " ர " | |
| 208 ரமணி, திரு. கே. .. .. | கோவை (கிழக்கு). |
| 209 ரமணி நல்லதம்பி, திருமதி. .. | ராதாபுரம் |
| 210 ரவி அருணன், திரு. .. | அம்பாசமுத்திரம் |
| 211 ராமச்சந்திர ரெட்டி, திரு. ந. | ஓசூர் |
| 212 ராமச்சந்திரன், திரு. கே. .. | மன்னார்குடி |
| 213 ராமச்சந்திரன், திரு. சி. .. | திருப்பரங்குன்றம் |
| 214 ராமசாமி, திரு. மொஞ்சனூர் ப. | அரவக்குறிச்சி. |
| 215 ராமசுப்பு, திரு. எஸ். எஸ். .. | ஆலங்குளம் |
| 216 ராஜு, திரு எச். எம். .. | உதகமண்டலம் |
| 217 ராஜேந்திரன் திரு., எம்.எஸ்.கே. | இராமநாதபுரம். |
| " ல " | |
| 218 லட்சுமி, திருமதி பி. .. | வால்பாறை (செ.வ.) |
| " வ " | |
| 219 வரதராசன், திரு. ஆர். .. | சங்கரி (செ.வ.) |
| 220 வரதராசன், திரு. உ. ரா. .. | வில்லிவாக்கம் |
| 221 வல்லரசு, திரு. பி. என். .. | உசிலம்பட்டி |
| 222 விஜயராகவன், திரு. பொன்... | கிள்ளியூர் |
| 223 விஜயேந்திரையா, திரு. டி. சி. | தளி |
| 224 வீராசாமி, திரு. ஆற்காடு நா. | புரசைவாக்கம் |
| 225 வீரையன், திரு. கோ. .. | நாகப்பட்டினம் |
| 226 வெங்கடாசலம், திரு. பெ. .. | வீரபாண்டி |
| 227 வெங்கடேஸ்வர தீட்சிதர், திரு. ஒய். | ஸ்ரீரங்கம் |
| 228 வெள்ளிங்கிரி, திரு. யூ. கே. .. | தொண்டாமுத்தூர் |
| 229 வேணு, திரு. கி. .. .. | கும்மிடிப்பூண்டி |
| 230 வைத்தியலிங்கம், திரு. மீ. அ. | தாம்பரம் |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| " ஸ " | |
| 231 ஸ்டாலின், திரு. மு. க. .. | ஆயிரம் விளக்கு |
| " ஜ " | |
| 232 ஜெயலலிதா, செல்வி ஜெ. | போடிநாயக்கனூர் |
| " ஹ " | |
| 233 ஹமீது இப்ராகிம், திரு. அ. மு. | கடலாடி |
| " ஸ்ரீ " | |
| 234 ஸ்ரீதர், திரு. ஆர். எஸ். .. | சைதாப்பேட்டை |
| 235 ஆஸ்கார் சி. நிக்லி, திரு. .. | நியமன உறுப்பினர். |

பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்:

திரு. கு. அழகிரிசாமி,
தலைமை வழக்கறிஞர்.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

**1989 ஏப்ரல் 29, சனிக்கிழமை.**

**சித்திரை 16, சுக்ல—திருவள்ளுவர் ஆண்டு 2020.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர். மு. சாத்தையா என்கிற தமிழ்க் குடிமகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

''அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி''

வறியவராகிய தாழ்த்தப்பட்ட மக்களின் கடும் பசியைத் தீர்க்க வேண்டும்; அதுவே பொருள பெற்ற ஒருவன் அப்பொருள் தமக்குப் பிற்காலத்தில் பயன்படுமாறு சேமித்து வைக்கும் இடமாகும்.

### 1. இரங்கற் குறிப்பு.

### முன்னாள் உறுப்பினர் மறைவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. இ. எல். இராகவ முதலியார் அவர்கள் 21–4–1989 ஆம் நாள் அன்று மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். திரு. இ. எல். இராகவ முதலியார் அவர்கள் 1952 ஆம் ஆண்டிலிருந்து 1957 ஆம் ஆண்டு வரை வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில பணியாற்றியுள்ளார். அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்து விட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை இப்பேரவையின் சார்பிலும், என சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன். இயற்கை எய்தியவருக்கு அஞ்சலி தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு மணித்துளி மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

*(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு மணித்துளி மௌனமாக எழுந்து நின்றனர்).*

### 2. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்று 20 வினாக்கள் இடம் பெறுவதால் அருள்கூர்ந்து துணைக் கேள்விகளைக் குறைத்து நேரடியாக அடுத்தடுத்த மூலக் கேள்விகளுக்கு வருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

## ஒட்டப்பிடாரம் தொகுதியில் கல்லூரி.

*149—(*வினா எண். 459)* திரு. எம். முத்தையா : *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—*

*ஒட்டப்பிடாரம் தொகுதியில் ஒரு கல்லூரி அமைக்க அரசு முன் வருமா?*

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அவ்வாறான கருத்துரு ஏதும் பெறப்படவில்லை.

திரு. எம். முத்தையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இல்லை என்றாலும் இனிமேலாவது என்னுடைய தொகுதியில் கல்லூரி அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிகள் தொடங்குவது என்பது அரசினுடைய பொருளாதார நிதிநிலை வசதிக்கு ஏற்பவும் மொத்தமாக நாட்டில் உள்ள கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் நிச்சயமாகத் தேவை என்று கருதப்படுகிற போதும் ஆராயப்படும்.

திரு. எம். முத்தையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னால் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஒன்று பரிவல்லிக்கோட்டையில் என்னுடைய தொகுதியில் இருக்கிறது. அது வீணாகக் கிடக்கிறது. அங்கே கல்லூரி திறக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் பயிற்சிப் பள்ளி இருக்கிற காரணத்தால் கல்லூரி வரவேண்டும் என்று கருதுவதற்குப் போதுமான காரணம் இல்லை. இருந்தாலும் நிதிநிலையைக் கருதித்தான் கடந்த 3, 4 ஆண்டுக் காலமாகக் கல்லூரிகள் திறக்கப்படுவது இல்லை என்ற ஒரு முடிவு ஏற்பட்டிருக்கிறது. தனியார் நிதி வசதியைப் பொறுத்து அப்படிப்பட்ட சுயநிதிக் கல்லூரி தொடங்குவதாக இருந்தால் அது ஏற்கெனவே பரிசீலிக்கப்பட்டிருக்கிறது. அதுவும் கூட இப்போது உள்ள நிலைமையில் சுயநிதிக் கல்லூரி எந்த முறையில் நடத்தப்படும் என்பது பற்றி ஆராய்ந்துதான் முடிவு எடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகக் கல்லூரிகள் திறக்கப்படாது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். ஒவ்வொரு ஆண்டும் மேல்நிலைப் பள்ளியிலிருந்து லட்சக்கணக்கான



மாணவர்கள் வெளியே வருகிறார்கள். அவர்கள் எல்லாம் கல்லூரிகளில் இடம் கிடைக்காமல் பெரும் சிரமத்திற்கு ஆளாகிறார்கள். தனியார் கல்லூரிகளில் போய் பல்லாயிரக்கணக்கான பணத்தைக் கொடுத்து வசதியானவர்கள் சேருகிறார்கள். முடியாதவர்கள் வேறு வேலைக்கு—சும்மா வீட்டில் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. அல்லது ஒருவேலையும் இல்லாமல் சுற்றிக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, புதிதாக மேல்நிலைப் பள்ளியை முடித்து விட்டு வரக்கூடிய மாணவர்களுக்கு கல்லூரிகளில் இடம் கிடைக்கக்கூடிய முறையில் புதிதாக கலைக் கல்லூரிகளை இந்த அரசு ஆரம்பிப்பதற்கு யோசிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வியைப் பற்றி புதிய புதிய சிந்தனைகள் உருவாகி வருகின்றன. கல்லூரிக் கல்வி என்பது, படித்துப் பட்டம் பெறுகின்றவர்கள் தங்களுடைய அறிவாற்றலை சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகளைப் பொறுத்தும் அவர்கள் பெறக்கூடிய தகுதி, அரசு அலுவல்களிலே இடம் பெறுவதற்கான ஒரு வாய்ப்பாக இல்லாமல் அந்தக் கல்வியைக் கொண்டு அவர்கள் வேறுவிதமான தகுந்த அறிவுத் தொண்டாற்றக்கூடிய வாய்ப்பும் உருவாகக் கூடிய நிலையில் கல்லூரிக் கல்வி அமையவேண்டுமென்பது அண்மைக் காலத்திலே உருவாகி வருகின்ற கருத்து; இல்லையானால், மேன் பவர் வேஸ்டேஜ் என்று சொல்லப்படுகிற முறையில், மனித சக்தி—படிப்பதாகச் சொல்லி, கல்லூரியிலே சேருவதாகச் சொல்லி அந்த சக்தியும், நேரமும், பொருளும் விரயமானதற்குப் பின்னர் அதற்குத் தகுந்த பலன் உருவாகிறதா என்ற கேள்வி எழுந்திருக்கிற காரணத்தால், அரசாங்கத்தினுடைய நிதிநிலையும் முட்டுக்கட்டையாக ஒரு பக்கம் இருந்தாலும்கூட இவைகளும் சேர்த்து எதிர்காலத்திலே பரிசீலிக்கப்பட வேண்டும்.

திரு. காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசினுடைய நிதிநிலைக்கேற்ப புதிய கல்லூரி தொடங்குவது கடினம் என்று தெரிவித்தார்கள். ஆனால் தனியார் கல்லூரி தொடங்குவதற்கு அரசு அனுமதி வழங்குமா? அப்படியானால் அதனுடைய விதிமுறைகள் என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இரண்டொரு சுயநிதிக் கல்லூரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. சிறந்த அறநிலையங்களால் தலைக் கட்டணம் என்ற 'கேப்பிடேஷன்ஃபீஸ் வசூலிக்கப்படாமல் மாணவர்களைச் சேர்க்கக்கூடிய வாய்ப்போடு கல்வி நிலையம் நடத்தப்படுமானால் அவை பற்றி பரிசீலிக்கலாம்.

[1989 ஏப்ரல் 29

புதுப்பேட்டை கிராமத்து உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்.

150—(*வினா எண். 502) திரு. ஆர். மகேந்திரன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதியில் புதுப்பேட்டை கிராமத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : 1989-90-ஆம் கல்வி ஆண்டில் புதுப்பேட்டை அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கு வேலூர் முதன்மைக் கல்வி அலுவலரிடம் இருந்து உரிய கருத்துருக்கள் பள்ளிக் கல்வி இயக்குநரால் பெறப்பட்டுள்ளன. அக்கருத்துருக்கள் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின்னர் அவற்றைப் பரிசீலித்து நிதி நிலைக்கேற்ப உரிய ஆணை வெளியிடப்படும்.

சென்னை நகரப் பேருந்துகளை அதிகப்படுத்துதல்.

151—(*வினா எண். 241) திரு. பி. கோவிந்தராஜன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரப் பேருந்துகளில் பிரயாணிகளின் நெரிசலைத் தவிர்க்கும் பொருட்டு மேலும் அதிகப் பேருந்துகள் விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, ஆம். அடுத்த ஐந்து ஆண்டிற்கு உலக வங்கியின் உதவியுடன் ஆண்டுதோறும் 50 பேருந்துகள் அதிகரிக்கத் திட்டம் வகுக்கப்பட்டு உள்ளது. அத்துடன் பழைய பேருந்துகளுக்குப் பதிலாக ஆண்டுதோறும் 250 புதிய பேருந்துகள் இயக்கத் திட்டம் உள்ளது.

திரு. பி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது, 'வி' சர்வீஸ், 'வீவீ' சர்வீஸ், 'ஜே' சர்வீஸ் 'ஜேஜே' சர்வீஸ் என்று புதிதாக விரைவு வண்டிகள் விடப்பட்ட பிறகு ஏற்கெனவே ஓடிவந்த 300 பஸ்கள் ஷெட்டுகளிலே நிறுத்தப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா? இவைகளை ஓட்டச் செய்தால் ஓரளவிற்குத் தற்காலிகமாக இந்த நெரிசலைக் குறைக்கலாம். நீங்கள் சொல்லக்கூடிய திட்டத்தை விட இது நல்லதாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து. அந்த அடிப்படையிலே அதை ஏற்பாடு செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.



1989 ஏப்ரல் 29]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒர்க் ஷாப்பிலே இருக்கக்கூடிய பழுதடைந்த பஸ்களினுடைய எண்ணிக்கையைப் பற்றி எனக்குத் தகவல் இல்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்து இருக்கின்ற தகவலின் அடிப்படையில் அதைப்பற்றி விசாரித்து அவைகளில் இயங்க வைக்கக் கூடிய பஸ்களை இயங்க வைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளலாம். பொதுவாக எவ்வளவு பஸ்களை நாம் அதிகப்படுத்தினாலும் போக்குவரத்து நெரிசல் என்பது காலையிலே 8½ மணியிலேயிருந்து 10½ மணி வரையிலும், அதேமாதிரி மாலை நேரத்திலே 3 மணியிலிருந்து 5 மணி வரையிலும் ஏராளமாக இருக்கிறது. அது பேருந்துகளினாலே மட்டுமல்ல, பொதுவாகவே பாதையிலே செல்லக்கூடிய கட்டை வண்டிகள், அதேமாதிரி இன்னும் பல் வேறு வகையான கை வண்டிகள், டிராலி, வேன், லாரி போன்றவைகளால் கூட நெரிசல் ஏற்படுகிறது. அதிகப்படியான பேருந்துகளைப் போட்டாலும் அவைகள் நேரத்துக்கு விரைந்து செல்ல முடியாத நிலைமைகளெல்லாம் இருக்கின்றன. எனவே நகரத்தைப் பொறுத்த வரையில் போக்குவரத்தை ஒழுங்குபடுத்த வேண்டிய சூழ்நிலையிலே நாம் இருந்து கொண்டிருக்கிறோம். பள்ளிகளினுடைய நேரத்தைக்கூட மாற்றி அமைக்கலாம். பள்ளி நேரங்களிலே மட்டும் 3 இலட்சம் பயணிகள் கூடுதலாக, மாநகரத்தைப் பொறுத்த அளவிலே பயணம் செய்ய வேண்டிய நிலைமை இருக்கிறது. இவைகளையெல்லாம் ஆராய்ந்து பார்த்து ஒவ்வொரு வழித்தடத்திலேயும் கூடுதலான பேருந்துகளை விடுகின்ற நேரத்தில் எப்படிப்பட்ட சூழ்நிலையிலே அந்தப் பேருந்துகளை இயக்கலாம் அல்லது நேரங்களை மாற்றி இயக்கலாம் என்பதைப்பற்றி—ஒட்டுமொத்தமான பல்லவனுடைய பஸ்கள்ஓடக் கூடிய பகுதிகளில் இதைப்பற்றியெல்லாம்—பரிசீலனை செய்ய வேண்டிய நிலைமையில் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறோம்.

(முற்பகல் 9-10)

திரு. பி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்தை ஒழுங்குபடுத்த வேண்டுமென்பது அவசியம். ஆனால் அதேநேரத்தில் சென்னை நகரில் பஸ்ஸில் பயணம் செய்வது கொடிய காரியமாக இருக்கிறது. 'வி', 'ஜே' சர்வீஸ்களில் கூட ஏறமுடியாத நிலைமை இருக்கிறது. அதற்கு முக்கியமான காரணம் 'வி' 'ஜே' சர்வீஸ்களை அதிக 'சிங்கிள்ஸ்' விடுவதால் அதிகமான ஆதாயம் வருகிறது; ஆகவே, பழைய வண்டிகளை ஓட்ட வேண்டாம் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த வண்டிகள் எல்லா ஸ்டாப்புகளிலும் நிற்பதில்லை. அதனால் நெரிசல் அதிகமாகிறது. இதை எல்லாம் கருத்தில் கொண்டு ஆணை பிறப்பிக்கப்படுமா? குறிப்பாக பல்லவன் பேருந்துகளை இப்படிப்பட்ட 'வி', ஜே' சர்வீஸ்களாக விடும் போது அல்லது அறிமுகப்படுத்தும்போது பழைய வண்டிகளை நிறுத்தக்கூடாது; அவைகளையும் ஓட்டவேண்டும் என்று அணையிடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, கூட்ட நெரிசலைத் தவிர்க்க வேண்டுமென்ற எண்ணத்தைக் கருத்தாகக் கொண்டுதான் 'வி', 'ஜே' சர்வீஸ்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தராஜன் அவர்கள் தெரிவித்ததைப்போல 'வி', 'ஜே' சர்வீஸ்களை விடும்போது ஏற்கெனவே எல்லா பஸ் ஸ்டாப்புகளிலும் நிற்கக்கூடிய பேருந்துகளும் குறைக்கப்படாமல் அல்லது நீக்கப்படாமல் நிச்சயமாக பாதுகாத்துக்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் நேரத்தைக் கருதி, வினாக்களைச் சுருக்கமாகக் கேட்க வேண்டும்.

திரு. எல். கணபதி : தலைவரவர்களே, மக்கள் தொகைப் பெருக்கத்திற்கு ஏற்ப ஆண்டுக்கு 50 பேருந்துகள் எவ்வளவு தூரம் தேவையைப் பூர்த்தி செய்யுமென்பது தெரியவில்லை. ஆனால் சென்னை நகரில் சாலைகளை விரிவுபடுத்தி 'ட்ரிப்' நேரத்தைக் குறைத்தால் நெரிசல் குறையும். எனவே, சாலைகளைச் சீர்படுத்தி, விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, சாலைகளையும் ஒழுங்குபடுத்த வேண்டும்; நெரிசலையும் குறைக்க வேண்டும். நெரிசல் அதிகமாக இருப்பதற்கு இன்னொரு முக்கியமான காரணம் மின்சார இரயிலில் பயணம் செய்யும் பயணிகளின் எண்ணிக்கை நாளுக்குநாள் குறைந்து வருகிறது. அதற்குக் காரணம் என்னவென்றால் உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். தாம்பரத்திலிருந்து கோட்டைக்கு வரவேண்டுமானால் இரயில் கட்டணம் 3 ரூபாய். ஆனால் பேருந்தில் வருவதாக இருந்தால் ரூ. 1.55 தான் கட்டணம். இப்போது கட்டணம் குறைவாக இருப்பதை ஒரு காரணமாகக் காட்டி, அதனால் கட்டணத்தை உயர்த்திவிடுவார்களோ என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்கவேண்டிய அவசியம் இல்லை.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரில் வீட்டுவாடகை அதிகம் அல்லது வீட்டுவசதி இல்லாத காரணத்தால் புறநகர்ப்பகுதிகளில் புதிய குடியிருப்புகள் நெடுந்தொலைவில் உருவாகின்றன. அந்தப் புறநகர்ப் பகுதிகளை சென்னை நகருடன் இணைப்பதற்கான வழித்தடங்களில் அதிகமாகப் பேருந்துகள் விடப்படுமா, அதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, நடவடிக்கை எடுக்கலாம்.





திரு. மு. க. ஸ்டாலின் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர்க்கு மட்டும் விடப்படும் பேருந்துகளை அதிகப்படுத்தும் திட்டம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, ஏற்கெனவே மகளிர்க்கு மட்டும் விடப்பட்டிருக்கிற பேருந்துகளை அதிகப்படுத்த வேண்டிய நிலைமை இருக்குமானால், தேவைப்பட்டால் அந்தப் பேருந்துகளின் எண்ணிக்கையை போக்குவரத்துக் கழகம் அதிகப்படுத்தும்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவரவர்களே, புதிய பேருந்துகளை வாங்குவதற்கு உலக வங்கியிடம் கடன் பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு என்ன நிபந்தனைகள் போட்டிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு நெரிசலைப் போக்க பள்ளிக்கூடங்கள் தொடங்கும் நேரத்தை மாற்றியமைக்க அரசு முன்வருமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, உலக வங்கியிடமிருந்து பெறக்கூடிய கடன் முழுமையாக நம்முடைய பல்லவன் போக்குவரத்துக் கழக எல்லைக்குள் பேருந்துகள் வாங்கி விடுவதற்கு பயன்படுத்தப்பட வேண்டும். காலா காலத்தில் திருப்பி வட்டியோடு கட்ட வேண்டும். இவைகள்தான் அவர்கள் விதித்திருக்கிற நிபந்தனைகள். (குறுக்கீடு) நெரிசலைத் தவிர்க்க பள்ளிக்கூடங்களுடைய நேரம் காலை 9-00 மணி அல்லது 10-00 மணிக்குத் தொடங்குவதை மாற்றி காலை 8-00 மணி அல்லது 7-30 மணி என்று வைத்தால் கிட்டத்தட்ட 3 இலட்சம் பயணிகள் பயணம் செய்யும் நெருக்கடியை நம்மால் தவிர்க்க முடியும். அதுபற்றி கல்வித் துறையைக் கலந்து, எதிர்காலத்திலே ஆலோசிக்கலாம்.

## அடையாற்றில் பாலம்.

152—(*வினா எண். 256) : திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அடையாற்றில் அனகாபுத்தூர் பேரூராட்சியையும், குன்றத்தூர் பேரூராட்சியையும் இணைக்கும் பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலத்தின் மூலமாக ஆண்டுக்கு ஒரு முறை கிராமத்திலே இருக்கின்ற மக்கள் 15 கிலோ மீட்டர் சுற்றி வரவேண்டியிருக்கின்றது. நெடுநாட்களாக நிலுவையில் உள்ள இந்தப் பாலம்—புறநகர் சாலை ஒன்று திண்டுக்கல் நெடுஞ்சாலையில் இருந்து கல்கத்தா வரை செல்வதாகவும், அந்தச் சாலை அடையாற்றை எங்கே கடக்கிறது என்று தெரியாத காரணத்தினால்தான் இது தாமதப்படுவதாகவும் பொதுமக்கள் மத்தியிலே பரவலாகப் பேசப்படுகிறதே, அதுதான் உண்மையா என்பதையும் அப்படியானால் எத்தனை கிலோ மீட்டர் அந்தச் சாலை செல்கிறது, அதனுடைய மதிப்பீடு என்ன என்பதையும், இன்றைய நிலை என்ன என்பதையும் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலத்தைப் பொறுத்தவரையிலே சென்னை புறவழிச்சாலை, தேசிய நெடுஞ்சாலை, திருச்சி—திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையையும், சென்னை—கல்கத்தா தேசிய நெடுஞ்சாலையையும் இணைக்கக் கூடிய ஒரு புறவழிச் சாலைக்குப் பக்கத்திலேதான் இந்தப் பாலம் அமைக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். இந்தப் புறவழிச்சாலை அமைக்கப்பட்டுவிடுமானால் அந்தப் பாலம் தேவையிருக்கின்ற சூழ்நிலை அந்தப் பகுதியிலே இருக்காது. எனவேதான், இந்தப் புறவழிச்சாலை அமைக்க வேண்டும் என்ற திட்டம் விரைவாக செயல்படுத்தப்பட்டால், செயல்படுத்தப்பட்டு முடிந்ததற்குப் பிறகு நிச்சயமாக அந்தப் பாலம் தேவைப்படாது என்ற கருத்தைத்தான் நெடுஞ்சாலைத் துறையிலேயிருந்து கருத்தாகச் சொல்லி இருக்கின்றார்கள்.

இந்தப் புறவழிச்சாலையைப் பொறுத்தவரையில் இதனுடைய மொத்த நீளம் 31.40 கிலோ மீட்டர் ஆகும். 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்தச் சாலைகளுடைய பணி தொடங்கப்படவிருக்கிறது. இந்தப் புறவழிச்சாலை அமைப்பதற்கு சுமார் 32 கிராமங்களில் 488.165 ஏக்கர் நிலம் கையகப்படுத்த வேண்டிய நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. இதுவரை இரண்டு கிராமங்களில் 10.36 ஏக்கர் நிலம்தான் நாம் கையகப்படுத்தியிருக்கிறோம். மேலும் 5 கிராமங்களில் 62.36 ஏக்கர் நிலம் கையகப்படுத்துகின்ற வேலை முடிவு பெற்று நஷ்ட ஈடு வழங்கக்கூடிய நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. மேற்கொண்டு கையகப்படுத்தக்கூடிய வேலைகள் விரைவாகச் செய்ய வேண்டும் என்று சம்பந்தப்பட்ட துறைக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பக்கத்திலே இருக்கின்ற பொது மக்களும் இந்தப் பக்கத்திலே இருக்கின்ற பொதுமக்களும் மழைக் காலங்களிலே அந்தப் பகுதியைக் கடப்பதற்கு 15 கிலோ மீட்டர் சுற்றிக்கொண்டு செல்லவேண்டியிருக்கின்றது. குறைந்தபட்சம்





அரசாங்கம் ஃபுட் பிரிட்ஜ்-ஐயாவது, நடைபாதையையாவது ஒன்று அமைத்தால் நல்லது மக்கள் நடந்து இந்தப் பக்கமும், அந்தப் பக்கமும் கடந்து செல்வதற்கான அளவில் ஒரு பாலத்தை அமைத்துத் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

## நெல்லை மாவட்டத்தில் நகரப் பேருந்துகளை தேசியமயமாக்குதல்.

153—(*வினா எண். 365) திரு. ஆச்சியூர் எம். மணி : மாண்புமிகுபோக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பேருந்துகளைத் தேசியமயமாக்கும் திட்டத்தின்படி நெல்லை மாவட்டத்தில் நகரப் பேருந்துகளை தேசியமயமாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அப்பணி எப்பொழுது ஆரம்பமாகும் ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆச்சியூர் எம். மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை—தூத்துக்குடி, மேலப்பாளையம், சங்கரன் கோயில் நகர்ப்பகுதிகளில் ஒடுகின்ற தனியார் பஸ்கள் அரசு பஸ்களாக மாற்றப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வியே அதுதான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், "இனிமேலாவது மாற்றப்படுமா ?" என்று கேட்டிருந்தால் அது துணைக் கேள்வியாக இருந்திருக்கும். நம்முடைய அரசைப் பொறுத்தவரையில் தமிழகத்தில் இருக்கக் கூடிய அனைத்துப் பேருந்துகளையும் அரசுடைமையாக்க வேண்டும் என்பதுதான் நம்முடைய கொள்கை. 1973-ஆம் ஆண்டில் இதற்காகத்தான் நாட்டுடைமைச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அதிலே பல்வேறு தடங்கல்கள் ஏற்பட்டு மேற்கொண்டு நம்முடைய அரசைப் பொறுத்தவரையில் படிப்படியாக மாநிலம் முழுவதும் செயல்படுத்துவோம் என்று ஏற்கெனவே அரசு அறிவித்துள்ளது. அந்த அடிப்படையிலே மாவட்ட வாரியாக இந்த நாட்டுடைமைக் கொள்கை வரும்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய அந்தப் பேருந்துகளை அரசு ஏற்றுக் கொள்ளக்கூடிய எதிர்காலம் வரும்.

[1989 ஏப்ரல் 29

திரு. கே. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு முன்னர் நிறைவேற்றியிருந்த சட்டம் தேசிய உடைமையாக் கும்படியான சட்டம். அதை எதிர்த்து எதிர் வழக்குப் போடப் பட்டு சுப்ரீம்கோர்ட் அது செல்லுபடியாகின்ற சட்டம் என்று தீர்ப்பளித்திருக்கிற சூழ்நிலையில் அந்தச் சட்டம் தொடர்பாக கொஞ்சம் விறுவிறுப்பாக நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கு என்ன ஏற்பாடுகள் இருக்கின்றன? எந்தெந்த லைன் பஸ்களை இந்த ஆண்டு தேசியமயம் ஆக்குவதற்கு அரசு திட்டம் வைத் திருக்கிறது என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பேருந்துகளை நாட்டுடைமையாக்க வேண்டுமென்று சொல்லுகின்ற திட்டத்தைப் பொறுத்தவரையில் தற்போது ஏற்கெனவே இருக்கின்ற 12,500 பேருந்துகள் பல்வேறு போக்குவரத்துக் கழகங்களின் மூலமாக இயக்கப்படுகின்றன. ஆனால் அவற்றில் ஏற்பட்டிருக்கின்ற நிர்வாகத்தவறுகள், மோசடி கள் பற்றி ஏற்கெனவே இந்த மன்றத்தில் நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தின்போதும், பல்வேறு நேரங்களில் கேள்வி நேரத்திலும் சொல்லப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட குறை பாடுகளை நீக்க ஒரு நிபுணர் குழு அமைக்கப்பட்டு, அவர்களு டைய ஆலோசனையின்பேரில் விரைந்து நடவடிக்கை எடுக்கப் பட்டு, ஏற்கெனவே இருக்கின்ற நிர்வாகக் கோளாறுகள் எல்லாம் தீர்க்கப்பட்டு, அதற்குப் பிறகு படிப்படியாக நாட்டுடைமை யாக்குகின்ற கொள்கையை இந்த அரசு *செயல்படுத்தும் என்ப தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னைக்கு துரிதப் பேருந்து.

154—(*வினா எண். 789) திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடக்கன்குளம் வழியாக கன்னியாகுமரியிலிருந்தும், நாகர்கோவிலிலிருந்தும் சென்னைக்கு துரிதப் பேருந்து விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது விடப்படும் ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.



1989 ஏப்ரல் 29]

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரியிலிருந்தும், நாகர்கோவிலில் இருந் தும் சென்னைக்குச் செல்கின்ற பேருந்துகளின் எண்ணிக்கை 40. வடக்கன்குளத்தில் இன்றைக்கு 15 ஆயிரம் ஜனங்களுக்கு மேல் வாழ்கிறார்கள். இவர்கள் இன்றையதினம் பஸ்களை பிடித்து சென்னைக்கு வர வேண்டுமானால் திருநெல்வேலிக்குச் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. காவல்கிணறு வரும்போது ஸ்டாப் கிடையாது. பனவெலி வருகிற பஸ் பைபாஸ் வழியாகப் போகிறது. ஆகவே, காவல்கிணறு விலக்கிலிருந்து வடக்கன் குளம் 6 கிலோமீட்டர் தூரத்திலேயே இருப்பதால் ஒருசில பஸ்களையாவது அந்த வழியாகப் போய்வரும் வகையில் அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது சென்னையிலிருந்து நாகர் கோயிலுக்கு 20 பேருந்துகளும், சென்னையிலிருந்து கன்னியா குமரிக்கு 8 பேருந்துகளும் பணக்குடி வழியாக இயக்கப்படு கின்றன. இவைகளின் மொத்த வழித்தட நீளம் முறையே 682 மற்றும் 700 கிலோ மீட்டர்கள் ஆகும். மேலும் நீட்டித்தால் அதிகப்படியான தூரம் ஆகும். இருந்தாலும் மாண்புமிகு உறுப் பினர் சொன்ன கருத்து அரசாங்கத்தின் கவனத்தில் கொள்ளப் பட்டு இந்தப் பேருந்துகளை நீட்டிக்கலாமா அல்லது தனியாக பேருந்துகளை விடலாமா என்பதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடக்கன்குளம் பஸ் ஸ்டாப்பிலிருந்து 6 கிலோ மீட்டர் தூரமே இருப்பதால் சிரமம் ஒன்றும் இருக்காது. இப் போது சென்றுகொண்டிருக்கும் பேருந்துகளில் சில பேருந்து களை 6 கிலோமீட்டர் தூரத்திற்கு நீட்டித்தாலே போதும். காரணம் அங்குள்ள மக்களில் நிறைய பேர் சென்னையிலே வியா பாரம் பண்ணுவதால், நிறைய பேருக்கு இது தேவைப்படுவதால் இதுபற்றி பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரமணி நல்லதம்பி அம்மையார் அவர்களுடைய கருத்தை அரசு பரி சீலிக்கும்.

திரு. என். பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடியிலிருந்து சென்னைக்கு விரைவுப் பேருந்து விடப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் பரிசீலிக்கும்.

[1989 ஏப்ரல் 29

குமரி மாவட்டத்திற்கு பாமாலின் எண்ணெய் ஒதுக்கீடு.

155—(*வினா எண். 2110) திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்த மாதம் குமரி மாவட்டத்திற்கு பாமாலின் எண்ணெய் ஒதுக்கீடு செய்யப்படவில்லை என அரசுக்குப் புகார் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்குக் காரணம் என்ன ?

(இ) குமரி மாவட்டத்திற்கு இம்மாதம் பாமாலின் எண்ணெய் விநியோகிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

(இ) ஏப்ரல் மாதத்துக்கு கன்னியாகுமரி மாவட்டத்திற்கு 300 மெட்ரிக் டன்கள் உதிரிப் பாமாலின் எண்ணெயும், 18 மெட்ரிக் டன்கள் டின்னில் அடைக்கப்பட்ட எண்ணெயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாதத்தின் ஆரம்பத்திலேயே இம்மாதிரி பாமாலின் எண்ணெயை கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யவில்லையென்று கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து தகவல் வந்தது. நானே அதனை மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு சென்றிருக்கிறேன். அதற்குப் பிறகு ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கலாம் என்று கருதுகிறேன். பாமாலின் எண்ணெயை மத்திய அரசு மாநில அரசுக்குக் கொடுக்கின்றபோது ஒதுக்கீட்டை குறைத்திருப்பதுதான் அதற்குக் காரணம் என்று தெரிகிறது. அது உண்மையா ?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, ஒரு மாதத்திற்கு நம்முடைய மாநிலத்தினுடைய தேவை 13,000 மெட்ரிக் டன்கள். 10,000 வரையில் மத்திய அரசாங்கம் நமக்கு ஒதுக்கீடு செய்து கொண்டிருந்தது. பிறகு ஜனவரி, பிப்ரவரி, மார்ச் மாதங்களில் அதை 3,600 டன்களாகக் குறைத்துவிட்டது. இந்த மாதம் 1,000 டன்கள்தான் வழங்கியிருக்கிறது. இது ஒரு காரணம் என்றாலும்கூட, பொதுவாக தமிழ்நாட்டிலே இன்றையதினம் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி அதிகமானதால், கடலை எண்ணெயினுடைய விலை வெகுவாகக் குறைந்துவிட்டது. அதனாலே ஏற்கெனவே இந்த இலாக்காவிலே



1989 ஏப்ரல் 29]

இருந்து அனுப்பியிருந்த பாமாலின் எண்ணெய்கூட மற்ற மாவட்டங்களில் விற்பனையாகவில்லை. கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பற்றாக்குறை இருப்பதாக அரசுக்கு இப்போது தகவல் இல்லை.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நகரங்களுக்கு பாமாலின் எண்ணெய் டின்களில் அடைத்து விற்பனை செய்யப்படுகிறது. ஆனால் கிராமப் புறங்களில் லூசாகக் கொடுப்பதால் அதில் சில சமயங்களில் கலப்படம் ஏற்படுவதற்கும், அதனுடைய எடை குறைவதற்கும் காரணமாக இருக்கிறது. எனவே குறைந்தபட்சம் பாலிதின் பைகளில் அடைத்தாவது பாமாலின் எண்ணெயை விற்பனை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற அந்த யோசனையின் பேரில்தான் இந்த அரசு இப்போது பொறுப்பு ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு பைகளில் அடைத்து விநியோகிப்பதற்காக, மாநில வர்த்தகக் கழகம் மூலம் ஒதுக்கீடு செய்யப்படும் எண்ணெயை இந்துஸ்தான் தாவர எண்ணெய்க் கழகம் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர் இணையம் ஆகியவை எடுத்து, பைகளில் அடைத்து, கூட்டுறவுகள் மூலமாக பொது விநியோக முறையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. சிலர் லூசாக இருப்பதைக் கேட்கிறார்கள். எனவே லூசும் கொடுக்கப்படும், பையும் கொடுக்கப்படும்.

தொழிலாளர்களுக்கு வீட்டு வாடகைப்படி வழங்குவதற்கான சட்டம்.

156—(*வினா எண். 3153) திரு. உ. ரா. வரதராசன் மற்றும் திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிலாளர்களுக்கு வீட்டு வாடகைப்படி வழங்குவதற்காகச் சட்டமியற்றப்படும் என்று ஏற்கெனவே மாநிலத் தொழிலாளர் ஆலோசனைக் குழுவில் பரிந்துரை செய்யப்பட்டது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான சட்டம் விரைவில் கொண்டு வரப்படுமா ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : தலைவர் அவர்களே,

(அ) தெரியும்.

(ஆ) இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

[1989 ஏப்ரல் 29

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது ஏற்கெனவே மாநிலத் தொழிலாளர்கள் ஆலோசனைக் குழுவில் பரிந்துரை செய்யப்பட்டு, ஆளுநர் ஆட்சிக் கால்த்தில் இதற்கான சட்டம் கொண்டுவரப்படுமென்று அறிவிக்கப்பட்டது. இதனால் ஏராளமானத் தொழிலாளர்கள் பயன்படக்கூடிய நிலையிலே இருக்கிற காரணத்தாலே, அதிலே உள்ள ஆலோசனைப்படி சம்பளத்திலே 5 சதவிகிதம், குறைந்தபட்சமாக 20 ரூபாய் வீட்டு வாடகைப் படி என்று சொல்வதாக முடிவெடுக்கப்பட்டது. இதற்கான சட்டம் விரைவிலே கொண்டு வரப்படுமா ? இதை ஒரு மே தினப் பரிசாக அரசு அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 5–3–86 ஆம் நாள் நடைபெற்ற தொழிலாளர் ஆலோசனைக் குழுவில் இது பற்றி பரிசீலிக்கப்பட்டு பின்னாலே காலதாமதம் ஆகியிருக்கிறது. இப்போது தீவிரமாக இந்தக் கருத்துக்களை அரசு பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறது. விரைவிலே உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகள் மதிக்கப்பட்டு, இது சட்டமாக வடிவம் பெறும். ஆனால் கொஞ்சகாலம் ஆகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வாடகைப் படியைப் பொறுத்த வரையில், அநேகமாக பல மாநிலங்களில் குறைந்தபட்சம் 5 சதவிகிதம் என்று சட்டங்கள் மாற்றப்பட்டு, நீண்ட காலமாகச் செயல்பட்டு வருகிறது. நீண்டகாலமாக தமிழகத்தில் இருக்கக்கூடிய தொழிலாளர்களும் அதை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். புதிய அரசாங்கம் பொறுப் பேற்றதற்குப் பிறகு, தொழிலாளர்களுக்கு ஏதாவது ஒரு சலுகையை அளிக்கின்ற வகையில், இந்தக் கூட்டத் தொடரிலேயே வீட்டு வாடகைப்படியை குறைந்த பட்சம் 5 சதமாக உயர்த்த சட்டத்தை மாற்றி, அதை மே தினப் பரிசாக அரசு கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெள்ளிங்கிரி அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் திரு. வரதராசன் அவர்களுடைய கேள்வியை மறு வடிவத்திலே கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். 1974ஆம் ஆண்டு மேற்கு வங்கத்திலே நிறைவேற்றப்பட்ட வீட்டு வாடகைப்படிச் சட்டத்தை மையமாகக் கொண்டுதான் இங்கே இந்தச் சட்டம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. 5–3–86-ல் ஆலோசனைக் குழுவிலே வைத்து பரிசீலிக்கப்பட்டு, நீண்ட காலமாகி இருக்கிறது. ஆக இந்த அரசு பொறுப்பில்லை. எனவே இப்போது இந்த அரசு அவைகளையெல்லாம் ஆழமாகப் பரிசீலித்து விரைவில் அதற்கு சட்ட வடிவம் கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1989 ஏப்ரல் 29]

(முற்பகல் 9-30)

**ஊராட்சி ஒன்றிய பள்ளிக் கட்டிடங்களை பழுது பார்க்க சிறப்பு நிதி**

157—(*வினா எண். 375) திரு. ப. முத்துசாமி : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு முழுவதும் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பழுதடைந்துள்ள கட்டிடங்களை சரிசெய்ய ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சிறப்பு நிதி ஒதுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, ஆம்.

திரு. ப. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, கடந்த 10 ஆண்டுக் காலமாகவே ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டிடங்கள் பழுதுபார்க்கப்படாமல் அவற்றின் மேற் கூறைகள் எல்லாம் பழுதுபட்டு, தரையெல்லாம் பெயர்ந்து, ஜன்னல்கள் எல்லாம் உடைந்து, கதவெல்லாம் பழுதுபட்டு வெறும் மரத்தடிப் பள்ளிகளாகவே தமிழகம் முழுவதும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, இவைகளுக்கு இந்த ஆண்டிலாவது அதிக அளவில் நிதி ஒதுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அரசின் வரவு-செலவுத் திட்டத்தில், ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளிக் கட்டிடங்களின் பராமரிப்புக்குத் தனி நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படுவதில்லை. ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டிடங்களின் பராமரிப்பு, ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பாகும். ஊராட்சி ஒன்றியங்களின் ஸ்தல வரியில் 4/9 பாகம் கல்வி நிதிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. தவிர, ஸ்தல மேல் வரிவசூல் பண்ணுவதில், ஸ்தல நிதி கணக்கு 3-க்கு சரி செய்யப்படும்படி உத்திரவிடப்பட்டுள்ளது. இதிலிருந்து ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணிபுரியும் ஆயாக்கள் மற்றும் நடத்தாட்டிகள் சம்பளமும் ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டிடங்களின் பராமரிப்புச் செலவும் மேற்கொள்ள வழி உள்ளது. இதை முறையாக அமுல்படுத்துவதன் மூலம் ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டிடங்களைப் பராமரிக்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே' பல ஊராட்சி ஒன்றியங்களில் போதுமான பொது நிதி இல்லாத நிலை இருக்கிறது. எனவே என்னதான் இப்போது அறிவிக்கப்பட்டிருக்கிற முறைகள் பின்பற்றப்பட்டாலும்கூட, பள்ளிக் கட்டிடங்களைச் சரி செய்வதற்கு போதிய நிதி கிடைக்காமல் தான் இருக்கும். ஆகவே, என்.ஆர்.ஈ.பி., ஆர்.எல்.ஈ.ஜி.பி., போன்ற திட்டங்கள் மூலமாகவாவது இதை எடுத்துக் கொள்ள அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

[1989 ஏப்ரல் 29

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வசூலிக்கப்படும் 45 பைசாவில் 20 பைசாவை இதற்கு என்று தனியாகவே ஒதுக்க வேண்டும் என்று விதி இருக்கிறது. அதனைச் சுட்டிக்காட்டி 17-4-1989-ல் இந்த ஆட்சி பொறுப்பேற்றுக் கொண்டவுடன் ஊராட்சி ஒன்றியங்களுக்கு மேற்கோள் வழிகாட்டுதலைத் தெரிவித்திருக்கிறது. மேலும் என்.ஆர்.ஈ.பி., ஆர்.எல்.ஈ.ஜி.பி., திட்டங்களின் கீழ் புதிதாக வேண்டுமானால் கட்டிடங்களைக் கட்டலாமே தவிர, பராமரிப்பு செய்வதற்கு இந்த நிதியிலிருந்து எடுத்துக் கொள்ள இயலாது.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது, ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டிடங்களைச் சீரமைப் பதற்கும் ரிப்பேர் செய்வதற்கும் சிறப்பு நிதி ஒதுக்கப்படும் என்று தெரிவித்தார்கள்—அதாவது ஆம் என்று சொன்னார்கள். இரண்டாவது, வேறு நிதியிலிருந்து அதற்கு செலவு செய்ய வேண்டிய வழிவகை இருக்கிறது என்றும் சொன்னார்கள். இப்போது பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களில் அனைத்துப் பள்ளிக்கட்டிடங்களுமே எந்தவிதமான ரிப்பேரும் செய்யப்படாமலேயே இருக்கின்றன. அதற்கான பிரதான காரணம் ஊராட்சி ஒன்றியங்களில் போதுமான நிதிவசதி இல்லாததுதான் என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கே தெரியும். பள்ளிகளுக்கு புதிய கட்டிடங்கள் கட்டுவது கட்டாயம் அவசியம்தான். அதோடு இருக்கிற கட்டிடங்களைச் சீர் செய்யவில்லை என்றால் ஒன்றுக்குப் பத்தாக பின்னாலே அதற்கான செலவு உயரும். ஆகவே எப்படியாவது இதற்குத் தனியாக நிதி ஒதுக்கியோ அல்லது என்.ஆர்.ஈ.பி., ஆர்.எல்.ஈ.ஜி.பி., போன்ற திட்டத்தின் மூலம் ஏதேனும் ஏற்பாடு செய்தோ இருக்கிற கட்டிடங்களைச் சீர் செய்வதற்கு துரிதமான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1-6-1981-ல் அரசாங்கம் உள்ளாட்சி மன்ற ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்கிவிட்ட பிறகு, பள்ளிக் கட்டிடப் பராமரிப்பை ஊராட்சி ஒன்றியங்கள் மேற்கொள்ளாமல் ஸ்தல வரியில் வசூலிக்கப்படும் நிதியிலிருந்து 20 பைசாவைக் கட்டாயமாகக் கட்டிடப் பராமரிப்புக்கு ஒதுக்கப்பட வேண்டிய அந்த நிதியையும் பொது நிதிக்கே எடுத்துச் சென்று ஊராட்சி ஒன்றியங்களில் பல்வேறு காரியங்களைச் செய்து விட்டார்கள். ஆகவேதான் இப்போது இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு 17-4-1989-ல் கட்டாயமாக ஸ்தல வரியில் ஒதுக்கப்பட வேண்டிய நிதியாக — 45 பைசாவில் 20 பைசாவைக் கட்டாயமாகக் கட்டிடப் பராமரிப்புக்காக ஒதுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம்.



1989 ஏப்ரல் 29]

## உசிலம்பட்டி பேருந்து நிலையத்திற்குப் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பெயர் சூட்டுதல்

158—(*வினா எண். 517) திரு. பி. என். வல்லரசு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி பேருந்து நிலையத்திற்குப் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பெயர் சூட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது சூட்டப்படும்?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

## பெரியாறு நீர்த்தேக்க நீர் மட்டத்தை உயர்த்துதல்

159—(*வினா எண். 372) திரு. நா. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியாறு நீர்த் தேக்கத்தின் நீர் மட்டத்தை 152 அடியாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு தலைவரவர்களே,

(அ) மற்றும் (ஆ) : ஆம்.

பெரியாறு அணை கேரள மாநிலத்தில் மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளின் குறுக்கே 1896-ல் கட்டப்பட்டது. இந்த அணையில் நூறு ஆண்டுகாலமாக எந்தத் தொய்வும் இன்றி நீர் 152 அடி நிரப்பப்பட்டு வந்தது. ஆனால் 1973 ஆம் ஆண்டு கேரளாவிலிருந்து வெளியாகும் மலையாள மனோரமா என்ற பத்திரிக்கையில் பெரியாறு அணை பலகீனப்பட்டு இருப்பதாகவும்,

அது உடையக் கூடிய அபாயம் ஏற்படலாம் என்றும் ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் சென்ட்ரல் வாட்டர் கமிஷன் வந்து அணையை நேரில் பார்த்து அதைப் பாதுகாக்க சில யோசனைகளைத் தெரிவித்தது. இருந்தாலும் பயப்பட வேண்டிய அளவுக்கு எந்த விதமான பாதகமும் அணையில் இல்லை என்று கருத்துத் தெரிவித்தது. இருந்தாலும் மீண்டும் 1978 ஆம் ஆண்டில் இத்தகைய ஒரு புரளி கேரளாவில் பத்திரிக்கை மூலமாக கட்டவிழ்த்து விடப்பட்டது. மீண்டும் சென்ட்ரல் வாட்டர் கமிஷன் ஒரு நிபுணரை அனுப்பி அணையைப் பரிசோதிக்கச் செய்தது. அந்த நிபுணரும் அந்த அணையைப் பரிசோதித்து அணையினுடைய கொள்ளளவு 152 அடியிலிருந்து 145 அடிக்குக் குறைக்கலாம் என்று ஒரு யோசனையைத் தெரிவித்தார். இது கூட அணை பலகீனப்பட்ட காரணத்தால் அல்ல ; கேரள மக்களிடையே பரவி இருக்கிற பயத்தைப் போக்குவதற்காகத்தான். அதற்குப் பிறகு மீண்டும் மீண்டும் கேரள அரசும், கேரள மக்களும் பெரியாறு அணை பலகீனப்பட்டு இருக்கிறது என்று திரும்பத் திரும்ப சொன்ன காரணத்தால் 1979 ஆம் ஆண்டு அதே சென்ட்ரல் வாட்டர் கமிஷன் சேர்மன் திரு. கே. சி. தாமஸ் திருவனந்தபுரத்திற்கு வந்து நீண்ட நேரம் தமிழக, கேரள அரசு அதிகாரிகளை அழைத்துப் பேசி பிறகு அணையைப் பலப் படுத்துவது என்கிற முடிவுக்கு வந்து அதை மூன்று கட்டமாகச் செய்வது என்ற ஒரு முடிவை எடுத்தார்கள்.

முதற் கட்டம் அணையினுடைய நீர் மட்டத்தை 145 அடியிலிருந்து 136 அடிக்குக் குறைப்பது.

இரண்டாவது கட்டம் அணைக்கு மேற்புரத்தில் மூடிபோன்ற ஆர்.சி.சி. கேப் போடுவது.

மூன்றாவதாக உபரி நீர் வழிந்தோட கூடுதலாக சில மதகுகளை, வாய்க்கால்களை அமைத்தல். இது உடனடியாகச் செய்யப்பட வேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்டது.

இரண்டாவது கட்டமாக அணையின் அடித்தளத்தை உயர் அழுத்த மின் கம்பிகள் மூலம் பாறையோடு இணைத்தல். அதை கேபிள் ஆங்கரிங் என்பார்கள். அதைச் செய்ய வேண்டும். நீண்ட காலப் பாதுகாப்புத் திட்டமாக அந்த அணைக்கு கான்கிரிட் பேக்கிங் மேற்கொள்ளுதல் வேண்டும். அணையின் அமைப்பை ஒட்டி அதே போல் இன்னொரு அணையைக் கட்டி அந்த அணையைப் பலப்படுத்துவது என்று முடிவு செய்யப்பட்டு, அதில் முதல் இரண்டு கட்டங்கள் முடிவு பெற்று விட்டன. மூன்றாவது க்ட்டமான கான்கிரிட் பேக்கிங் ஒரு பகுதி அதாவது 75 அடி வரையில் பலப்படுத்தப்பட்டது. 75 அடியிலிருந்து மேல் மட்டம் வரையில் கட்டுகிற அந்தப் பணி மட்டும் இப்போது நடைபெற்று வருகிறது. ஆனால் 1980 ஆம் ஆண்டு இந்த அணையைப் பற்றி, இதனுடைய வேலைகளைப் பற்றி





பலப்படுத்துவதைப் பற்றி டில்லியில் ஒரு கருத்து ஆய்வு நடைபெற்றது. அந்தக் கருத்து ஆய்வில் இவைகளை எல்லாம், அதாவது நீர் அமைப்பை ஆர்.சி.சி. கேப் போடுவது, உபரி நீர் போக கூடுதலாக சில மதகுகளை அமைத்தல், கேப் ஆங்கரிங் போடுவது ஆகியவை நடைபெற்ற உடன் 136 அடியாக இருக்கிற அந்தத் தண்ணீரை 145 அடிக்கு மீண்டும் உயர்த்தலாம் என்றும் மூன்றாவது கட்டப் பணி முழுவதும் முடிந்ததற்குப் பிறகு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஆற்றுக்குப் பெயர் தான் பெரியாறு ; ஆனால் விடை பெரிய விடையாக இருக்கிறது. (சிரிப்பு).

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** தலைவரவர்களே அதோடு சேர்த்துச் சொன்னால் தான் விளங்கும் ; இல்லாவிட்டால் மீண்டும் 152 அடி உயர்த்த வேண்டுமென்று சொன்னால் அவ்வளவாக விளங்காது என்ற காரணத்தால் தான் இந்த பேக்கிரவுண்டோடு சொன்னேன். மூன்றாவது கட்டப் பணி முடிந்த பிறகு 152 அடி வரையில் தண்ணீரை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(முற்பகல் 9-40)

**திரு. நா. இராமகிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மூன்றாவது கட்டப் பணி எப்பொழுது முடியும் ? இந்தப் பணி எந்த அரசால் டெண்டர் விடப்பட்டது ? அதை யார் எடுத்தது ? எவ்வளவு தொகைக்கு டெண்டர் விடப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இனிமேல் துணைக் கேள்விக்காக அனுமதி கேட்க மாட்டீர்கள் என்று நினைக்கிறேன். நான்கு கேள்விகள் கேட்டிருக்கிறீர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** தலைவரவர்களே, மூன்றாவது கட்டப் பணிக்கு முன் இருந்த பணியை, முன் இருந்த அரசுதான் செய்தது. அதிலே மூன்றாவது கட்டப் பணியும், இரண்டு கட்டமாக உண்டு. முதல் கட்டம், நான் முன்னால் குறிப்பிட்டதைப்போல முதல் 75 அடிக்கு Concrete backing போடுவது. இதை இராமலிங்கம் என்கிற ஒப்பந்தக்காரர் செய்து முடித்தார். இரண்டாவது, 75-லிருந்து மேல் மட்டம் வரையிலே போடுகிற Concrete backing. இது இரண்டாவது கட்டப் பணியாகும். அந்தப் பணியைச் செய்வதிலேதான் சில கோளாறுகள் ஏற்பட்டன. அதாவது ஆறுமுறை டெண்டர் விடப்பட்டிருக்கிறது. முதல் முறை விடுவது, கேன்சல் செய்வது, இரண்டாவது முறை டெண்டர் விடுவது, கேன்சல் செய்வது, மூன்றாவது முறை விடுவது. கேன்சல் செய்வது என்று இப்படி ஐந்து முறை நடந்து முடிந்து, ஆறாவது முறை தப்பித்தோம் பிழைத்தோம் என்று முடிவாகி கடைசியிலே டெண்டர் ஒப்பந்தக்காரருக்குக் கொடுக்கப்பட்டு, இப்பொழுது வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

[1989 ஏப்ரல் 29

### ஊத்தங்கரை வட்டத்தில் ஏரிகளை நிரப்புதல்

*160—(*வினா எண். 393)* திரு. எம். அண்ணாமலை: *மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—*

*அரூர் வட்டம் ஈச்சம்பாடி நீர்த்தேக்கத்திலிருந்து வீணாகும் நீரை ஊத்தங்கரை வட்டம் மண்ணுடிப்பட்டி மார்க்கமாக காட்டேரி, மூங்கலேரி, கீழ்க்குப்பம் வரை உள்ள ஏரிகளை நிரப்பி பாசனத்திற்குப் பயன்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?*

மாண்புமிகு திரு. துரைமுருகன் : *தலைவர் அவர்களே, இல்லை*

திரு. எம். அண்ணாமலை : *தலைவரவர்களே, ஊத்தங்கரை வட்டம், மண்ணுடிப்பட்டி மார்க்கமாக காட்டேரி, மூங்கலேரி, கீழக்குப்பம் வரை உள்ள பிரதேசம் வறட்சியான பகுதி. விவசாயிகள் பெரிதும் பாதிப்பிற்கு உள்ளாகி இருக்கின்றார்கள். இதனால், அரூர் வட்டம், ஈச்சம்பாடி அணையின் மழைக்கால உபரி நீரை அந்த ஏரிகளுக்கு விட்டு, விவசாயிகளுக்கு வேண்டிய நீர் வள ஆதாரத்தை உருவாக்க அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன் : *தலைவரவர்களே, கேள்வி ஈச்சம்பாடி அணையிலிருந்து தண்ணீர் விடப்படுமா என்பது. ஈச்சம்பாடி அணை என்பது பொன்னையாற்றுக்கருகே சாத்தனூர் அணைக்கு மேலே கட்டப்பட்டிருக்கிறது. இது மழைக் காலத்தில் வரும் தண்ணீரைத் தேக்கி வைக்க உதவுகின்ற நீர்த் தேக்கமே தவிர, பாசனத்திற்கு உரியது அல்ல. எனவே, இதிலிருந்து தண்ணீர் விட முடியாது. சாத்தனூர் அணையிலிருந்தும் இதற்குத் தண்ணீர் திருப்புகின்ற வாய்ப்புகள் இல்லை. ஆகையினாலேதான் இந்தத் திட்டம் பரிசீலனையில் இல்லை என்பதை நான் தெரிவித்தேன்.*

திரு. எம். அண்ணாமலை : *தலைவரவர்களே, நீர்த்தேக்க நீரிலிருந்து மழைக்காலங்களில் வரக்கூடிய வேஸ்டேஜ் நீரை அந்த ஏரிகளுக்கு திருப்பி விட்டால் உள்ளபடியே அது பலனளிக்கும். இது நல்லதொரு திட்டமாக அமையும். அரசு இதைப் பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன் : *தலைவரவர்களே, தற்போது பரிசீலனையில் இல்லை. வேண்டுமானால் எதிர்காலத்திலே பரிசீலிக்கும்.*



1989 ஏப்ரல் 29]

### புத்தாற்றில் நன்னிலம் வாய்க்கால் தலைப்பில் படுக்கை அணை

*161—(*வினா எண். 761)* திரு. மா. மணிமாறன் : *மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) காவிரி வளர்ச்சிப் பணி குடந்தைக் கோட்டத்தில் புத்தாற்றில் நன்னிலம் வாய்க்கால் தலைப்பில் படுக்கை அணை அமைக்கும் திட்டம் உள்ளதா ?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?*

மாண்புமிகு திரு. துரைமுருகன் : *தலைவர் அவர்களே (அ) திட்டம் ஆய்வில் உள்ளது.*

*(ஆ) புத்தாற்றில் எங்கெங்கு புதிய படுக்கை அணைகள், ரெகுலேட்டர்கள் அமைக்க வேண்டும் என்று ஆய்வு செய்து ஒட்டு மொத்த கருத்துருவை தயாரித்து வருகிறது. அதற்கான பாசனப் புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட்டு இத்திட்டத்தின் அவசியம் குறித்து மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.*

திரு. மா. மணிமாறன் : *மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, புத்தாற்றில் நன்னிலம் வாய்க்காலினுடைய தலைப்பில் படுக்கை அணை கட்டுவதற்கு,* Plan sanction *வாங்கி, நான்கு ஆண்டுகள் ஆகின்றன. நான்காண்டுகளாக, பணத்தை வாங்கி வைத்துக்கொண்டு, இன்னும் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னால், இந்த நான்காண்டுக் காலமாக அந்தப் பாசனம் பெறக்கூடிய வாய்ப்பு இருந்தும், வசதி இருந்தும், அது பயனளிக்க முடியாத அளவிற்குப் பொதுப் பணித்துறை திட்டத்தை ஒத்திப் போட்டுள்ளது. அதை விரைவிலே முடிப்பதற்கு ஆராயப்படுமா என்று கேட்பதோடு, பெரும்பாலான ஆறுகளில், வாய்க்காலினுடைய தலைப்பிலிருந்து தண்ணீர் ஏறுவதில் மிகச் சிரமம் ஏற்படுகிறது.* Theoretical bed level maintain *ஆக மாட்டேன் என்கிறது. ஆகையினால் முறை வைத்துத் தண்ணீர் விடுகின்ற காரணத்தால், சில வாய்க்கால்களில் அந்த* Theoretical bed level *இல்லாத காரணத்தினால், வாய்க்காலில் தண்ணீர் ஏறவே மாட்டேன் என்கிறது. ஆற்றிலே தண்ணீர் வருவதை, முறைக் காலங்களில் பார்க்கிறார்களே தவிர, முறையாகப் பாசனம் பெறவில்லை. எந்தெந்த வாய்க்கால்களில்* theoretical bed level maintain *ஆகவில்லையோ அதற்கெல்லாம் விதி விலக்கு கொடுத்து* theoretical bed level-*ஆவது கட்டுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.*

[1989 ஏப்ரல் 29

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** தலைவரவர்களே, இந்தக் கருத்தைக் கருத்திற்கொண்டுதான், ஆற்றில் எங்கெங்கு படுக்கை அணைகள் கட்டப்பட வேண்டுமென்று ஒட்டுமொத்தமாக அரசு ஆய்ந்துவருகிறது. அந்த ஆய்வு முடிந்த பிறகு அந்த அணைகள் கட்டப்படும்.

### கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நீராவி சலவை இயந்திரம்

162—(*வினா எண். 163) **திரு. கே. ரமணி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நீராவி சலவை இயந்திரம் (Steam Laundry) அமைக்க அரசு ஏற்கெனவே அனுமதி அளித்திருந்தும் இன்னும் அது நிறைவேற்றப்படாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அப்பணியை விரைவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் திரு. க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி:**

தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இந்த ஆண்டு ஆகஸ்டு மாத இறுதிக்குள் கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்ள நீராவி சலவை இயந்திரத்தை அமைக்க அரசு தக்க நடவடிக்கை எடுத்து வருகின்றது.

**திரு. கே. ரமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை அரசு அனுமதியளித்து எவ்வளவு காலம் இது நிறைவேற்றப்படாமல் இருந்து வந்திருக்கிறது. அப்படி நிறைவேற்றப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம் ? அந்தச் சந்தர்ப்பத்தில் அங்கே சலவை செய்யவேண்டிய நோயாளிகளுடைய துணிகள் சலவை செய்ய முடியாமல் அழுக்குத் தண்ணீரில் சலவை செய்து வந்ததை மோசமாக இருக்கிறது என்று டாக்டர்கள் ரிப்போர்ட் செய்ததால் அங்கே பக்கத்தில் இருக்கும்படியான ஈ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரியில் சலவை செய்து வந்தார்களே, அது நிறுத்தப்பட்டது உண்மையா ? அதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 19-9-1986-ல் கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ. 33.13 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் ஒரு நீராவி சலவை இயந்திரத்தை நிறுவுவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. இயந்திரங்கள் வாங்குவதற்கு இந்தத் தொகை போதுமானதாக இல்லாத காரணத்தால் மேலும் அரசாணை எண். 367 மூலமாக இயந்திரங்கள் வாங்குவதற்கு ஐந்து லட்சம் ரூபாயை கூடுதலாக செலவிட அனுமதி வழங்கப்பட்டது. கட்டட வேலையைப் பொறுத்தவரையில் முழுவதுமாக முடிவு பெற்றுவிட்டது. மூன்று வாஷிங் மெஷின்கள், மூன்று ஹைட்ரோ எக்ஸ்ட்ராக்டர்ஸ், இரண்டு பாய்லர்கள் ஏற்கெனவே நிறுவப்பட்டு விட்டன. இரண்டு ஸ்ட்ரைலசர் மெஷின்கள் மே மாத இறுதிக்குள் வருமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் இதற்குத் தேவையான இயந்திரங்களான Dyeing tumbler, Calendering Machine, Pressing Machine இவைகளுக்கான ஆணை வழங்கப்பட்டு தளவாடங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. இவைகள் அனைத்தும் வந்தவுடன் ஆகஸ்ட் மாத இறுதிக்குள் அதனுடைய பணிகள் முடிவடையும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



**திரு. கே. ரமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வளவு காலம், சென்ற அரசாங்கம் இருந்தபோது இந்த இயந்திரத்தை அங்கே ஸ்தாபிப்பதற்காக இதே மன்றத்தில் நான் தொடர்ந்து வாதாடியவன். இத்தனை காலம் கிடப்பில் போட்டுவிட்டது ஒரு மிகப்பெரிய தவறான நடவடிக்கை. இப்போதாவது ஆகஸ்ட் மாதத்திற்குள்-அமைச்சர் அவர்கள் சொல்வதைப் பார்த்தால், இவ்வளவு இயந்திரங்கள் பாக்கியிருப்பதை வாங்கி இங்கே ஸ்தாபிதம் செய்து வேலை துவங்கப்படுமா ? அப்படித் துவங்கினால் அந்த இயந்திரத்தின் கெபாசிடி என்ன ? எவ்வளவு ஆயிரம் துணிகளை அது ஒரு நாளைக்கு சுத்தப்படுத்திக் கொடுக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் நேற்று பதில் அளிக்கும் போது தமிழகத்தில் பல்வேறு கட்டடங்கள், பல்வேறு மருத்துவமனைகள் எல்லாம் கட்டப்பட்டும் கூட திறக்கப்படாமல் இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டி இருக்கிறேன். இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு அவைகளை எல்லாம் உடனடியாக நிறைவேற்ற வேண்டும், திறந்து வைக்க வேண்டுமென்ற எண்ணத்தில் வேகமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மருத்துவத் துறை இயக்குநரிடம்கூட தமிழகத்தில் எந்தெந்தப் பகுதிகளில் இதுபோன்று கட்டடங்கள் கட்டப்பட்டு திறக்காமல் இருக்கிறது என்பதையும், எந்தெந்த இடங்களில் கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றனஎன்பதையும் ஒருஅறிக்கையாகக்கூட கேட்டிருக்கிறேன். ஆகஸ்ட் மாதத்திற்குள் இது திறக்கப்படும். அங்கே வருகிற அனைத்துக் துணிகளையும் சலவை செய்யக்கூடிய தன்மை பொருந்தியதாக இந்தச் சலவை நிலையம் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1989 ஏப்ரல் 29

## முட்டம் சைமன் காலனி குடிநீர்த் திட்டங்கள்

163—(*வினா எண். 301) திரு. ஆ. பாலையா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முட்டம் குடிநீர்த் திட்டமும், சைமன் காலனி குடிநீர்த் திட்டமும் முடிக்கப்படாமலிருப்பதற்கான காரணம் என்ன ?

(ஆ) அவை எப்பொழுது முடிக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): முட்டம் குடிநீர்த் திட்டம் 15-4-1989 முதல் பயனுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. சைமன் காலனிக்கான திட்டம் டிசம்பர் 1989-க்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. ஆ. பாலையா : மாண்புமிகு தலைவர் அவர்களே, சைமன் காலனியில் அதிகப்படியாக மீனவ மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு குடிப்பதற்கு நல்ல தண்ணீர் கிடையாது. தற்போது வறட்சியான காலமாக இருப்பதால் அந்தத் திட்டத்தை விரைவாக செயல்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான பணிகள் டிசம்பர் 1989-க்குள் முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ஆ. பாலையா : மாண்புமிகு தலைவர் அவர்களே, குடி தண்ணீர் திட்டங்கள் எடுக்கப்படுகிற போது சரியான நீராதாரம் இல்லாத திட்டங்களை தயார் செய்து அந்தத் திட்டங்கள் முடிக்கப்பட்டிருக்கின்றன. தற்போது திட்டங்கள் நீராதாரம் இல்லாத காரணத்தால் பயன் இல்லாமல் இருந்து கொண்டிருக்கின்றன. எதிர்காலத்தில் இப்படிப்பட்ட நீராதாரம் இல்லாத திட்டங்களை எடுக்காமல், எந்தக் காலத்திலும் குடிதண்ணீர் வழங்கக்கூடிய திட்டங்களை எடுத்து அமலுக்கு கொண்டு வர முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போல கடந்த கவர்னர் ஆட்சிக் காலத்திலும், அதற்கு முன்பிருந்த ஆட்சிக்காலத்திலும் இதுபோன்ற பல்வேறு நீராதாரம் இல்லாத பணிகள் மேற்கொள்ளப்பட்டதாக ஆங்காங்கிருந்து குற்றச்சாட்டுகள்



1989 ஏப்ரல் 29]

(முற்பகல் 9—50)

வந்த வண்ணம் இருக்கின்றன. இப்போது அந்தப் பணிகளை துவக்குகின்றபோது, அதற்கான ஆய்வினைச் செய்தபிறகுதான் அதைத் துவக்கவேண்டும் என்று இறுதியாக சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் பல்வேறு பணிகளை மேற்கொண்டு இருக்கிறார்கள்.

## துறையூர் நகர அரசு மருத்துவமனை

164—(*வினா எண். 541) திரு. ஆர். மூக்கன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உப்பிலியாபுரம் தொகுதி, துறையூர் நகர அரசு மருத்துவமனையில் காது, மூக்கு, தொண்டை, பல் போன்றவற்றிற்கு தனியாக சிகிச்சைப் பிரிவுகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆர். மூக்கன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உப்பிலியாபுரம் தொகுதி, துறையூர் நகர அரசு மருத்துவமைனையில் காது, மூக்கு, தொண்டை மற்றும் பல் போன்றவற்றிற்கு தனியாக சிகிச்சைப் பிரிவுகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் விடையைக் காதில் வாங்கவில்லையோ !

திரு. ஆர். மூக்கன் : தலைவர் அவர்களே, வசதி இல்லாத ஏழை விவசாயிகளும், நெசவாளர்களும், மலைவாழ் மக்களும், ஆதி திராவிட மக்களும் என்னுடைய தொகுதியில் 2 லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் திருச்சிக்குச் சென்று சிகிச்சை பெறுவதற்கு வசதி இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். எனவே அரசு நடவடிக்கை எடுக்குமா எனத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, ஒவ்வொரு தொகுதியிலேயிருந்தும், தங்களுடைய தொகுதியிலே இருக்கின்ற மருத்துவமனைகளைப் பல்வேறு நிலைகளிலே உயர்த்தவேண்டும் என்று எல்லா

உறுப்பினர்களுமே கொடுத்திருக்கிறார்கள். அரசினுடைய நிதி நிலையையும், அங்கே இருக்கின்ற மருத்துவமனையினுடைய தகுதியையும் கருத்தில் கொண்டு, இந்த அரசு ஆவனச் செயல்லை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். மூக்கன் :** தலைவர் அவர்களே, என்னுடைய மலைவாழ்த் தொகுதி தனியாக பரிசீலிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** தலைவர் அவர்களே, இன்றைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞரை விட, மலைவாழ் மக்களின் மீதும், தாழ்த்தப்பட்ட மக்களின் மீதும் அதிக அக்கறை கொண்டவர்கள் யாரும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. நிச்சயமாக அதற்கான முயற்சிகள் விரைவில் எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்த வினா.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த உறுப்பினர் நான் இன்று வரமாட்டேன், மற்றொரு நாள் நான் வருகின்ற போது இந்தக் கேள்வியை எழுப்பலாம் என்று என்னிடம் கேட்டுக்கொண்டார்கள். நீங்கள் அனுமதிப்பீர்கள் என்று சொன்னால், வேறு ஒரு நாளைக்கு இந்தக் கேள்வியை எடுத்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண். 165 மாண்புமிகு அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.

### பொற்பந்தல் இராமத்தில் துணைமின் நிலையம்

*166—(*வினா எண். 361)* **திரு. கே. சுந்தர் :** மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உத்திரமேரூர் ஒன்றியம் சாலவாக்கம் பகுதியில் பொற்பந்தல் கிராமத்தில் புதிதாக துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. கே. என். நேரு :** மாண்புமிகு தலைவர் அவர்களே, செங்கற்பட்டிற்கும் மதுராந்தகத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் மின்தேவையின் மையப்பகுதியாக புக்கத்துறை என்ற கிராமம் உள்ளதால் பொற்பந்தலுக்குப் பதிலாக புக்கத்துறையில் துணை மின்நிலையம் அமைக்கும் திட்டம் ஆய்வில் உள்ளது.





**திரு. கே. சுந்தர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டம் ஆய்வில் உள்ளது என்று சொன்னதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது அந்தப் பகுதியில் 50 கிராமங்களில் உள்ள 20 ஆயிரம் விவசாயிகள் சரியான மின் வசதி இல்லாமல் மிகுந்த துயரத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். ஆகவே இந்தத் திட்டம் விரைவில் செயல்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு :** தலைவர் அவர்களே, விரைவில் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. சுந்தர் :** தலைவர் அவர்களே, அடுத்த ஆண்டில் செயல்படுத்தப்படுமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விரைவில் என்றால், அதற்கு என்ன பொருள் என்று கேட்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு :** தலைவர் அவர்களே, நிலம் கையகப்படுத்துவதற்கு ஆவன செய்து கொண்டிருக்கிறார்கள். நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன் அது நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### சென்னை காசிமேடு மீன்பிடித் துறைமுகம்.

*167—(* வினா எண். 1316)* **திரு. இரா. மதிவாணன் :** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை காசிமேடு மீன்பிடித் துறைமுகம் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதனை சீர்செய்ய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் :** தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): சென்னை மீன்பிடித் துறைமுகம் நல்ல முறையில் இயங்கி வருகிறது. இதில் பழுது ஏதும் ஏற்படவில்லை.

**திரு. இரா. மதிவாணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராயபுரம் மீன்பிடித் துறைமுகத்திற்கு சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் பெயர் சூட்டப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1989 ஏப்ரல் 29

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெயர் வைப்பது குறித்த கேள்வியினைக் குறித்து தனியாக எழுதினால், அதுபற்றி பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

168—(*வினா எண். 446) திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சமீப ஆண்டுகளில் மத்திய அரசிடமிருந்து மானியமும் கடனும் பெற்று வருகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : (அ) தலைவர் அவர்களே, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் மத்திய அரசிடமிருந்து மானியம் மற்றும் கடன் பெறவில்லை. மாநில அரசிடமிருந்து மானியம் மற்றும் கடன் பெறப்பட்டு இருக்கின்றது. பெருநகர் வளர்ச்சிக் குழுமம் நேரிடையாக கையாளும் எந்தத் திட்டமும் மத்தியஅரசினால் வகுக்கக்கப்பட்டதல்ல.

(ஆ) வினா எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

3. தகவல் கோரல்

(அ) சென்னை நகரில் குடி நீர் வழங்குவதில் உள்ள குறைபாடுகள்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரிலே கடுமையான குடி தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டு இருக்கிறது. அதனுடைய பிரதிபலிப்பாக இன்று நம்முடைய சட்டமன்ற வளாகத்திலே இருக்கின்ற குழாய்களிலே கூட தண்ணீர் வரவில்லை. இந்தக் குடி தண்ணீரை சென்னை நகரத்திலே லாரிகள் மூலமாக மெட்ரோ வாட்டர் விநியோகம் செய்து வருகிறது. அப்படி வழங்கப்படுகிற இடங்களில் குடம் ஒன்றுக்கு 10 காசு என்று சிலர் வசூலித்து வருகிறார்கள்.



1989 ஏப்ரல் 29] [திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்]

அதுமட்டுமல்ல. தண்ணீர் பிடிப்பதற்கு உரிமை வேண்டும் அல்லவா. அதற்கு ஒரு அட்டை வழங்கி அந்த அட்டை ஒன்றுக்கு 5 ரூபாய் என்று வசூலித்துக்கொண்டு வருகிறார்கள். சென்னை நகரத்தினுடைய பல்வேறு பகுதிகளிலே இது நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. குறிப்பாக சைதாப்பேட்டைத் தொகுதியில், ஜாபர்கான்பேட்டையில், ஏழுமலை என்கிற நபர், பாரதி பிளாக், தி.மு.க. இளைஞர் அணி, சுந்திரமூர்த்தி தெரு, குடிநீர் வழங்கும் அட்டை என்கிற பெயராலே அந்த அட்டையைப் போட்டு, அந்த அட்டையை 5 ரூபாய்க்கு வாங்கிக் கொள்ள வேண்டும், பிறகு தண்ணீர் பிடிக்க, லைனில் வந்து நின்றால், 10 காசு ஒரு குடத்திற்குத் தரவேண்டும் என்று சொல்லி வசூலித்துக்கொண்டு இருக்கிறார்கள்.

இரண்டு நாட்களுக்கு முன்னதாக பெண்கள் அங்கே கொடுமையாக தாக்கப்பட்டிருக்கிறார்கள். யார் யாருக்கு எல்லாம் இந்த அட்டைகளை வழங்கவில்லையோ, அவர்கள் மீண்டும் சம்பளம் வாங்கியோ, அல்லது கூலி வாங்கியோ தந்து விடுகிறேன் என்று சொல்லியும் கூட, அந்த நபர் ஏற்றுக் கொள்ளாமல், அவர்களைத் தாக்கியிருக்கிறார்கள். அவர்கள் மீது புகார் கொடுத்து வழக்கை தாக்கல் செய்து, வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. பல பெண்கள் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். இது போன்று பல பகுதிகளிலே நடைபெறுவதாக நான் அறிகிறேன். இன்னும் குடி தண்ணீர் முறையாக வழங்கப்படுவதற்கும், குடி தண்ணீர் வழங்கப்படுகின்ற இடங்களிலே இதுபோன்று முறைகேடுகள் நடைபெறாமல் இருப்பதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்பதற்காக நான் இதை கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

ஏழுமலை என்பவருடைய பெயரே ஆடு திருடி ஏழுமலை. பலர் எனக்கு எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். அதிலே வத்சலா, மகிளா, சாந்தி, பி.எஸ்.சி., ஆர்ட்ஸ் கிராஜுவேட் சுமதி, நீலா போன்றவர்கள் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் ஒன்று.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு பெரிய அறிக்கையே உண்டா ? கவனத்திற்குத்தான் இதைக் கொண்டு வர வேண்டும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : பாஸ்கர் என்பவர் குறளோவியம் கண்ட கலைஞர் நற்பணி மன்றத்தினுடைய பொருளாளர். அவரே எழுதிக் கொடுத்திருக்கிறார். இது போன்ற நபர்களால் கழகத்திற்கு அவப் பெயர் ஏற்படுகிறது. எனவே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அவரே கூட எழுதிக் கொடுத்திருக்கிறார். நடவடிக்கை எடுப்பதோடு மட்டும் நில்லாமல், இது போன்ற தவறுகள் இல்லாமல், அத்தனை பேருக்கும் குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1989 ஏப்ரல் 29

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, மாநகராட்சியிலே இது போன்ற குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கான பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதை இந்த அவையிலே அறிவித்திருக்கிறேன். நேற்று கூட இயக்குநருடன் தொடர்பு கொண்டு உடனடியாக லாரிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கச் சொல்லி, அதற்கான ஏற்பாடுகள் இன்று முதல் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நிச்சயமாக இந்த வறட்சிக் காலத்தில் குடிநீர்ப் பிரச்சினை இந்த நகரத்திலே தெரியாத அளவிற்கு நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும். மேலும் நீங்கள் சுட்டிக் காட்டியிருக்கின்ற குறிப்பிட்ட சில தகவல்கள் தவறாக இருக்கலாம். சில அரசியல் நோக்கங்களோடு அந்த இளைஞர் அணியின் மீது குற்றம் சுமத்த வேண்டுமென்ற எண்ணத்திலே கூட சொல்லப்பட்டிருக்கலாம். அவைகளையும் தீர விசாரித்து, நிச்சயமாக அது உண்மையாக இருக்குமானால், அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) போராட்டம் நடத்தும் சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுடன் நடைபெறும் பேச்சு வார்த்தை குறித்து.

*திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள சர்க்கரை ஆலைகளில் இருக்கக் கூடிய தொழிலாளர்கள் அனைவரும் வேலை நிறுத்தம் செய்யக் கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அப்படி ஒரு வேலை நிறுத்தம் வந்தால், அதிலுள்ள 35,000 தொழிலாளர்களும், கரும்பு வெட்டி அனுப்பக் கூடிய விவசாயிகளும், கரும்பு வெட்டக் கூடிய கூலிகளுமாக $3\frac{1}{2}$ இலட்சம் பேர்கள் பாதிக்கப்படக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. இதற்கு அடிப்படையான காரணம், அவர்களுடைய பழைய ஊதிய ஒப்பந்தம் 1985 ஜூன் மாதத்தோடு முடிவடைந்துவிட்டது. 4 ஆண்டுகளாக புதிய ஊதிய உயர்வு எதுவும் கிடையாது. ஆனால் இடைக்கால நிவாரணமாக ஒரு சிறு தொகையை அவர்கள் பெற்றுக்கொண்டு வருகிறார்கள். ஆளுநர் அரசு இருந்த போதிலிருந்தே பேச்சு வார்த்தை நடைபெற்றுக் கொண்டு வருகிறது. இப்போது கூட பேச்சு வார்த்தைகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த அரசு வந்த பிறகு 17–2–89-ல் தொழிலாளர் நல இலாக்காவிலிருந்து மார்ச் மாதம் 15 ஆம் தேதிக்குள் எப்படியும் அது முடிவடைந்து விட வேண்டுமென்று புரொசிடீங்ஸ் போட்ட பிறகும் கூட, அது முடிவடையவில்லை. அதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. இருந்தபோதிலும் கூட, இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை வராமல் இருப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது பற்றி அண்மையில் பேசப்பட்டும், கிட்டத்தட்ட ஒரு முறிவு நிலைமை இப்போது ஏற்பட்டிருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. அதற்கு அடிப்படையான காரணங்கள்,



1989 ஏப்ரல் 29] [திரு. சி கோவிந்தராஜன்]

இரண்டு பிரச்சினைகளில் உடன்பாடு ஏற்படவில்லை என்று தெரிகிறது. ஒன்று அவர்கள் 15 சதவீதம் ஊதிய உயர்வு கேட்கிறார்கள். இரண்டாவது கேஷுவல் தொழிலாளர்களுக்கு ஆக்குபேஷனல் வேஜ் வேண்டுமென்று கேட்கிறார்கள். ஆக்குபேஷனல் வேஜ் கொடுக்கப்படவேண்டுமென்று உச்ச நீதி மன்றத்தினுடைய தீர்ப்பும் இருக்கிறது. பல்வேறு வேஜ் போர்டுகளுடைய தீர்ப்பும் இருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் அதை ஒரு பிரின்சிபிளாக ஏற்றுக்கொண்டு, இந்தப் பிரச்சினையில் ஒரு உடன்பாடு காண்பதற்கும், இந்த 15 சதவீதம் ஊதிய உயர்வு சம்பந்தமாகவும் பரிசீலனை செய்து எப்படியாவது ஒரு உடன்பாட்டை அவர்களிடத்திலே கொண்டு வந்து இப்படிப்பட்ட ஒரு பெரிய வேலை நிறுத்தத்தையும் அதனால் $3\frac{1}{2}$ இலட்சம் பேர்களுக்கு ஏற்படுகிற பாதிப்பையும் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்கரைத் தொழிலாளர்களுடைய போராட்டம் பற்றியும் அவர்களுடைய பேச்சு வார்த்தை தொடர்ந்து நடப்பது பற்றியும் சில விவரங்களை மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தராஜன் அவர்கள் இந்த மன்றத்திலே தெரிவித்திருக்கிறார்கள். அந்தப் பேச்சு வார்த்தை ஊதிய உயர்வு மற்றும் அக விலைப்படி உயர்வு போன்ற பல்வேறு பட்ட கோரிக்கைகளை மையமாக வைத்து தொழிற்சங்கத்தினர் அதிகாரிகளோடு தொடர்ந்து பேச்சு வார்த்தை செய்துகொண்டிருந்தார்கள். ஒரு கட்டத்தில் ஒரு இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டவுடன் அவர்களை நானே நேரிடையாக அழைத்து தொடர்ந்து 2, 3 நாட்களாக பேச்சு வார்த்தை நடந்துக் கொண்டிருக்கிறது. இன்றுகூட அந்தப் பேச்சு வார்த்தை நடைபெற இருக்கிறது. ஆகவே எந்த வகையிலும் ஒரு இணக்கமான முடிவை வெகு விரைவில் ஏற்படுத்தவும் அங்கே வேலை நிறுத்தமோ மற்றைய வேறு விதமான முடிவுகளுக்கோ இடம் இல்லாமல் சுமூகமான முடிவை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை இந்த மன்றத்தின் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) சென்னை பொது மருத்துவமனையில் பணியாற்றிய இருதய நோய் சிகிச்சை நிபுணர் பதவி விலகியுள்ளது குறித்து.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, இன்று சென்னையில் இருக்கிற அரசு பொது மருத்துவ மனையில் எனது ஊரைச் சேர்ந்த ஒரு பேஷன்டை அழைத்துச் சென்று போய் இருதய நோய்ப் பிரிவில் ஆபரேஷன்

செய்வதற்காக அட்மிட் செய்தேன். அங்கே சிறப்பான முறையில் பணியாற்றிய, இந்திய நாட்டிற்கே பெருமை தருகின்ற அளவிற்கு வைத்தியம் செய்த கார்டியாலஜி பிரிவு டாக்டர் சாலமன் விக்டர் அவர்கள் ராஜினாமா செய்துவிட்டு போய்விட்டதாக அறிந்தேன். அவருடைய இழப்பு இந்த அரசுக்கு மட்டுமல்ல, தமிழகத்திற்கு மட்டுமல்ல, இந்தியாவிற்கே மிகப் பெரிய இழப்பு என்று எல்லோராலும் கருதப்படுகிறது. அப்படிப் பட்ட டாக்டர் ஏன் ராஜினாமா செய்தார். எதற்காக ராஜினாமா செய்தார். மீண்டும் அவரை அழைக்கின்ற உத்தேசம் இந்த அரசுக்கு உண்டா ? அப்படி மீண்டும் அவரை அழைத்தால் அது தமிழகத்திற்கு மட்டுமல்ல இந்தியாவிலுள்ள அத்தனை மக்களுக்கும் குறிப்பாக சென்னை நகர மக்கள், ஏழை எளிய மக்கள் எல்லாம் இருதய நோய்க்காக வைத்தியம் செய்வதற்கு மிகவும் வசதியாக இருக்கும். ஆகவே அவரை மீண்டும் அழைக்கின்ற முயற்சியிலே இந்த அரசு ஈடுபடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் அந்த டாக்டர் ராஜினாமா செய்தார் என்று குறிப்பிட்டார்கள். அவரே ஏன் ராஜினாமா செய்தார் என்பதை அங்கே வினவி இருக்கலாம். அதற்கான காரணத்தை அவரே சொல்லுமாறு தயவுசெய்து கேட்டுக்கொள்கிறேன். என்னிடத்தில் தனியாகப் பேசும்போது சொன்னார். இங்கே அதைச் சொல்வதற்கு அச்சப்படுகிறார். அவர் அதைச் சொன்னால் அதற்கான பதிலை நான் சொல்லுகிறேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன நினைக்கின்றார் என்பது எனக்கும் தெரியும். ஆனால் என்னைப் பொறுத்த வரையில் நான் உழைக்கின்ற வர்க்கத்தினுடைய பிரதிநிதி. யார் எங்கே தவறு செய்தாலும் சுட்டிக் காட்ட நான் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆகவே அந்த அளவில் டாக்டர் சாலமன் அவர்கள் அங்கே சிறப்பாக பணியாற்றிக்கொண்டிருந்த நேரத்தில் முந்தைய அரசு அவருடைய நிர்வாகத்தில் எங்கேயோ தலையிட்டு அவருக்குத் தொல்லை கொடுத்த காரணத்தால், அல்லது அவருடைய சீனியாரிட்டியை ஓவர்லுக் செய்து ஒரு அவமானத்தை ஏற்படுத்திய காரணத்தினால்தான் ராஜினாமா செய்து விட்டு போய்விட்டதாக அறிந்தேன். அதையெல்லாம் நான் அனுபவ ரீதியாக அந்த ஆஸ்பத்திரியில் கஷ்டப்பட்ட சூழ்நிலையில்தான் உணர்வு பூர்வமாக உங்களுக்குத் தெரிவிக்கிறேன். யார் தவறு செய்தாலும் இந்த தமிழக அரசு அவரை திருப்பி அழைக்கின்ற முயற்சியில்தான் ஈடுபட வேண்டும். அதற்காகத்தான் நான் இதைக் குறிப்பிட ஆசைப்படுகிறேன். ஆகவே, மீண்டும் அவரை அழைக்கின்ற முயற்சியில் இந்த அரசு ஈடுபடுமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்று கடந்த காலங்களில் அரசியல் நோக்கத்திற்காக சிறந்த திறமையானவர்கள் யார் பழி வாங்கப்பட்டிருந்தாலும் அவர்கள் மீண்டும் இந்த அரசிலே பதவி வேண்டுமென்று விண்ணப்பிப்பார்கள் என்று சொன்னால் முதலமைச்சரோடு கலந்து ஆலோசித்து அவர்களுக்கு மீண்டும் அந்தத் திறமையை தகுதியை பயன்படுத்திக் கொள்ள இந்த அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### (ஈ) ஸ்டாண்டர்டு மோட்டரார்ஸ் தொழிலாளர்களுடைய பிரச்சினை குறித்த பேச்சு வார்த்தை.

**திரு. எஸ். டி. உகம்சந்த் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்டாண்டர்டு மோட்டார்ஸினுடைய தொழிலாளர் பிரச்சினை கடந்த 3 மாதங்களாக இருந்து கொண்டு வருகின்றது. அங்கே கதவடைப்பு செய்யப்பட்டு 3 மாதங்கள் முடிய இருக்கிறது. அங்கு சுமார் 600 பேர்களுக்கு வேலை இழப்பு செய்வதற்காக நோட்டீஸ்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அந்த 3 மாத கெடுவும் விரைவில் முடிய இருக்கிறது. வருகின்ற 2-ந் தேதி அந்தத் தொழிலாளர்கள் எல்லாம் சாலை மறியல் செய்ய இருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த கதவடைப்பானது சட்ட விரோத கதவடைப்பு என்று அரசு அறிவிக்கவில்லை என்று சொன்னாலும், விரைவிலே தீர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னாலும் அரசே அந்தத் தொழிற்சாலையை ஏற்று நடத்துவதற்கு முன்வரவில்லை என்று சொன்னாலும், எல்லோருமே வேலையை இழக்கின்ற ஒரு நிலைமை ஏற்படும். இதை கருத்தில் கொண்டு உடனடியாக அந்தத் தொழிற்சாலையை அரசு மேற்கொள்ளுவதற்கு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் :** பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் நிரம்ப விவரங்களை எதிர்பார்க்கிறார்கள். அவர் தெரிவித்த பல்வேறு கருத்துக்களின் அடிப்படையிலேதான் நாம் தொடர்ந்து தொழிலாளர்களோடும், நிர்வாகத் தரப்போடும் பேச்சுவார்த்தை செய்து கொண்டிருக்கிறோம். ஒரு சுமுகமான முடிவினை நாம் ஏற்படுத்த வேண்டும் என்கின்ற அடிப்படையிலேதான் தொடர்ந்து பல்வேறு கட்ட பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. வெகு விரைவிலே ஒரு நல்ல முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 4. கவன ஈர்ப்பு.

### (அ) ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு அம்பர்சமுத்திரம் மதுரர் கோட்ஸ் நிறுவனம் பணிக்கொடை வழங்கர்தது குறித்து.

***திரு. ரவி அருணன் ;** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' அம்பாசமுத்திரத்திலுள்ள மதுரா கோட்ஸ் நிறுவனத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ள தொழிலாளர்களுக்குச் சேர

வேண்டிய பணிக்கொடை பாக்கித் தொகையை பட்டுவாடா செய்யாதது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

**அறிக்கை.**

அம்பாசமுத்திரம் மதுரா கோட்ஸ் நிறுவனம் 5,893 தொழிலாளர்கள் பணிபுரியும் ஒரு நெசவு ஆலை.

2. 1985-ஆம் ஆண்டில் 320 தொழிலாளர்கள் திருநெல்வேலி, பணிக்கொடை பட்டுவாடா சட்ட கட்டுப்பாடு அதிகாரியிடம் பணிக்கொடை கோரி மனுச் செய்தனர். கட்டுப்பாட்டு அதிகாரி, நிர்வாகம் மனுதாரர்களுக்கு பணிக்கொடை தொகை வழங்க வேண்டுமென பணிக்கொடை வழங்கும் சட்டத்தின் கீழ் தீர்ப்பளித்தார். இத்தீர்ப்பு திருப்தி அளிக்காததால், நிர்வாகத்தினர் திருநெல்வேலி, பணிக்கொடை பட்டுவாடா சட்ட மேல்முறையீட்டு அதிகாரியிடம் மேல் முறையீடு செய்தனர்.

3. பணிக்கொடை பட்டுவாடா சட்டப் பிரிவு 7 (7)-ன்படி நிர்வாகம் மேல்முறையீடு செய்யும்போது, கட்டுப்பாட்டு அதிகாரியால் தீர்ப்பளிக்கப்பட்ட பணிக்கொடைத் தொகையை கட்டுப்பாட்டு அதிகாரியிடமோ அல்லது மேல் முறையீட்டு அதிகாரியிடமோ செலுத்தவில்லை. எனவே, மேல்முறையீட்டதிகாரி நிர்வாகத்தின் மேல்முறையீட்டு மனுக்களை அனுமதிக்கவில்லை. இதை எதிர்த்து நிர்வாகம் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில் பணிக்கொடைத் தொகையை செலுத்த வற்புறுத்தாமல், மேல்முறையீட்டை விசாரிக்குமாறு மேல்முறையீட்டதிகாரிக்கு கட்டளையிடப்பட்டது. இதன்படி, மேல்முறையீட்டதிகாரி, நிர்வாகத்தின் மேல்முறையீட்டை விசாரித்து, கட்டுப்பாட்டு அதிகாரியின் தீர்ப்பை உறுதி செய்தார். மேல்முறையீட்டதிகாரியின் இத்தீர்ப்பை நிர்வாகம் சென்னை உயர் நீதிமன்றத்தின் டபிள்யூ எம். பி. 6874/88 மூலம் தடுப்பு செய்துள்ளது. இவ்வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் இன்னும் நிலுவையில் உள்ளது.

4. 1986-87-ஆம் ஆண்டில் சில தொழிலாளர்கள் பணிக்கொடை பாக்கித் தொகையைக் கோரி, திருநெல்வேலி கட்டுப்பாட்டு அதிகாரியிடம் விண்ணப்பம் செய்தனர். மனுதாரர்களின் விண்ணப்பம் காலம் கடந்ததாகவும், கட்டுப்பாட்டு அதிகாரி முதலில் காலதாமதத்தை மன்னிப்பது பற்றி விசாரிக்கவேண்டும் என்றும் நிர்வாகம் முதநிலை மறுப்பு (Preliminary objection)





எழுப்பியது. இது தொழிலாளர்களால் எதிர்க்கப்பட்டது. காலதாமதத்தை அனுமதிப்பது பற்றி எடுத்துக் கொள்வதாக கட்டுப்பாட்டு அதிகாரி அளித்த தீர்ப்பை எதிர்த்து, நிர்வாகம் உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. சென்னை, உயர்நீதிமன்றம், முதலில் காலதாமதத்தை அனுமதிப்பது பற்றி விசாரிக்குமாறும் அதன்பின் பணிக்கொடை பற்றிய விண்ணப்பத்தை விசாரிக்குமாறும் கட்டுப்பாட்டு அதிகாரிக்கு கட்டளையிட்டது.

5. அதற்கிணங்க, கட்டுப்பாட்டு அதிகாரி மீண்டும் விசாரித்து மனுதாரர்கள் காலம் கடந்து மனுச் செய்ததற்கு தகுந்த காரணங்களைக் காட்டவில்லை எனக் கூறி வழக்கை தள்ளுபடி செய்தார்.

6. கால தாமதத்திற்காக பணிக்கொடை கட்டுப்பாட்டு அதிகாரி தள்ளுபடி செய்ததை எதிர்த்து தொழிலாளர்களுக்கு ஆட்சேபனை இருந்தால் மேல்முறையீட்டு அதிகாரியிடம் (துணை ஆணையர்) மேல் முறையீடு செய்து நிவாரணம் காணலாம். இதில் அரசு தலையிடுவதற்கில்லை.

***திரு. ரவி அருணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணிக்கொடை சட்ட விதிகளின்படி பணிக்கொடை சட்டம் அமுலுக்கு வந்த நாளுக்கு முன்பும், பின்பும் உள்ள நாட்களைக் கணக்கிட்டு வருஷ சர்வீசுக்கு 15 நாள் வீதம் பணிக்கொடை வழங்க வேண்டும் என்றும்," பணிக்கொடைத் தொகை 30 நாட்களுக்குள் வழங்கவில்லை என்றால் அதற்கு வட்டியுடன் சேர்த்து வழங்க வேண்டும் என்று அரசு விதியிருக்கிறது. இவ்வாறு அம்பாசமுத்திரம் மதுரா கோட்ஸ் நிறுவனத்தில் பணிபுரிந்த அந்த நிறுவனத்தின் வளர்ச்சிக்காக பாடுபட்ட 3,567 தொழிலாளர்களுக்கு பணிக்கொடை பாக்கி ரூ. 3 கோடி வரை அந்த நிறுவனம் வழங்க வேண்டியிருக்கிறது. இதில் 338 தொழிலாளர்களுக்கு மட்டும் பணிக்கொடை பாக்கித் தொகை வழங்குவதற்கான நீதிமன்றத் தடை உள்ளது.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் கேட்க வேண்டியது சிறு விளக்கம். உரையாற்றக்கூடாது.

**திரு. ரவி அருணன் :** நீதிமன்றத் தடை உள்ள 338 தொழிலாளர் போக மீதம் உள்ள 3,229 தொழிலாளர்கள் கடந்த இரண்டு வருடங்களாக அரசுக்கு பல்வேறு மனுக்களை அனுப்பியும் பலன் அளிக்காமல் கடந்த இரண்டு வருடங்களாக பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்றார்கள். கடந்த பிப்ரவரி மாதம் 15 ஆம் தேதி கூட மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு 200-க்கு மேற்பட்டவர்கள் கைது செய்து பின்பு விடுதலை செய்யப்பட்டனர். வருகின்ற 1-ந் தேதி தொழிலாளர் தினத்

[திரு. ரவி அருணன்] [1989 ஏப்ரல் 29

தன்று ஒரு போராட்ட அறிவிப்பு செய்துள்ளனர். ஆகவே அரசு சட்ட விதிகளின்படி அவர்களுக்கு வழங்க வேண்டிய பணிக் கொடை பாக்கியை வழங்க தொழிற் தகராறு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுத்து, நிர்வாகத்திடம் வசூல் செய்து அந்தத் தொகையை தொழிலாளர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரம் மதுரா கோட்ஸ் நிறுவனத்தில் ஏறத்தாழ 1985 ஆம் ஆண்டு 320 தொழிலாளர்களுக்கு பணிக் கொடை பட்டுவாடா செய்யப்படவில்லை என்கின்ற அடிப் படையில் பணிக்கொடை பட்டுவாடா கட்டுப்பாட்டு அதிகாரி யிடம் மனு கொடுத்து அதனைத் தொடர்ந்து மேல் முறையீடு தீர்ப்பு வழங்கப்பட்டு, அதனைத் தொடர்ந்து உயர்நீதிமன்றத்திலே நிர்வாகம் தடை வாங்கி வைத்திருக் கிறது. அதன் காரணமாகத்தான் அரசு தலையிடமுடியாத ஒரு இக்கட்டான சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் 1986-87 ஆம் ஆண்டுக்கும் சில தொழிலாளர்கள் பணிக்கொடை பட்டுவாடா செய்யப்பட வேண்டும் என்கின்ற அடிப்படையில்மனு செய்யப்பட்டுஅது பல்வேறு கட்டங்களை அடைந்து, இன்றைக்கு, தொழி லாளர்கள் வேண்டுமானால், மேல்முறையீடு செய்யலாம் என்கின்ற கட்டத்தை அடைந்திருக்கிறது. எனவே, நான் முன் னாலே குறிப்பிட்ட அந்தத் தொழிலாளர்கள், 320 தொழி லாளர்களைப் பொறுத்தமட்டில், உயர்நீதிமன்றத்தினுடைய தடை இருக்கிறது. அதனாலே அரசு தலையிட முடியவில்லை. இரண்டாவது குறிப்பிட்ட தொழிலாளர்களைப் பொறுத்த மட்டில், தொழிலாளர்கள் மேல் முறையீடு செய்து, அவர்கள் முறைப்படி தாங்கள் நிவாரணம் பெறலாம் என்கின்ற நிலையை விளக்கிட விரும்புகின்றேன்.

(முற்பகல் 10-10)

திரு. ரவி அருணன் : தலைவர் அவர்களே, ஓய்வுபெற்ற தொழிலாளர்களுக்கு சட்டவிதிகளின்படி சேரவேண்டிய பணிக் கொடை பாக்கித் தொகையை வழங்குவதற்கு உயர்நீதிமன்றம் விதித்துள்ள தடையை நீக்குவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: தலைவர் அவர்களே அரசு முன்வரும். நீதிமன்றம் முன்வருமா என்பதுதான் கேள்வி. எனவே, அரசு எடுக்க வேண்டிய அரசின் சார்பான நடவடிக்கை கள் நிச்சயமாக எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



1989 ஏப்ரல் 29]

(ஆ) கன்னியாகுமரி மாவட்டம், அழகப்பபுரத்தில் வானிலிருந்து இரத்தத் துளிகள் விழுந்தது குறித்து.

திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கன்னியாகுமரி மாவட்டம் அழகப்பபுரம் என்னும் கிராமத்தில் வானிலிருந்து துர்நாற்றம் வீசும் ரத்தம் மழைபோல் கொட்டியதால் அப்பகுதி மக்களின் நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க் கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

கன்னியாகுமரி மாவட்டம் அழகப்பபுரம் கிராமத்தில் 28-3-1989 முதல் 30-3-1989 வரை இரத்தம் போன்ற துளிகள் விழுவது பற்றி பரிசீலிக்கப்பட்டது. 28-3-1989 அன்று சுமார் 11.30 மணியளவில் வகுப்புகள் நடந்து கொண் டிருக்கும் தருணத்தில் செயிண்ட் ஆண்டனி பள்ளியில் 5-வது வகுப்பு படித்துக்கொண்டிருக்கும் ஜி. அனிதா என்ற சிறுமியின் மீது சில இரத்தத் துளிகள் விழுந்தன. அந்த வகுப்பறையில் ஓடு கள் பொருத்தப்பட்டிருந்தன. எனவே அந்த வகுப்பறை வேறு கட்டிடத்திற்கு மாற்றப்பட்டது. ஆனால் அங்கும் 5 சிறுமிகள் மீது இரத்தத் துளிகள் விழுந்ததால் அந்தப் பள்ளிக்கு விடுமுறை அளிக்கப்பட்டது.

29-3-1989 அன்று சுமார் 7 மணியளவில் மளிகை சாமான் கள் வாங்கிய 7 மனிதர்களின் மீது சில இரத்தத் துளிகள் விழுந்தன. இந்த மளிகைக் கடையின் மேற்புரம் முழுவதும் இரத்தக்கரை படிந்திருந்தது. தீவிரமாக விசாரித்ததில் இந்தத் துளியினால் எந்தவித சுகாதாரக்கேடும் விளைவிக்கவில்லை. இந்த நிலைமை 29-3-1989ல் முடிவடைந்துவிட்டதால் 30-3-1989 முதல் பள்ளி நடைபெற்று வருகிறது.

இது குறித்து கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அறிக்கை யும் கேட்கப்பட்டது. 29-3-1989 மற்றும் 30-3-1989 ஆகிய இரு தினங்களில் அழகப்பபுரம் கிராமத்தில் சுமார் 75 பேர்களின் மீது இரத்தம் போன்ற துளிகள் விழுந்ததாகவும், விழுந்த சில துளிகளை எடுத்து அங்கிருந்த சோதனைக் கூடத்தில் சோதனை செய்யப்பட்டதில் மனித இரத்தத்திற்கும் அதற்கும் சில ஒத்த தன்மை இருப்பதாகவும் அறியப்பட்டதென்றும், அவைகள் எப்படி, எவ்வாறு, எங்கிருந்து விழுந்தனவென்று கண்டுபிடிக்க முடியவில்லை என்றும், இதனால் அப்பகுதியில் சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏதும் எழவில்லை என்றும், எவரும் பாதிக்கப்படவும் இல்லை என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவிக்கின்றார்.

திரு. பொன். விஜயராகவன் : தலைவர் அவர்களே, இந்த விஞ்ஞான யுகத்தில் புரியாத புதிராக, கடந்த மாதம் ஏறத்தாழ 28—3—89-லிருந்து 30—3—89 வரையிலும் இரண்டு, மூன்று நாட்கள் தொடர்ந்து அந்த கிராமத்தில் ஏறத்தாழ 75 நபர்களின் மேல் ரத்தம் கொட்டியிருக்கிறது. அங்கே இருக்கக்கூடிய பள்ளியில் படிக்கக்கூடிய மாணவர்களைக் கூட, மாணவிகளைக் கூட, ரத்தம் கொட்டிய காரணத்தினாலே விடுமுறை அளித்திருக்கிறார்கள். அங்கே இருக்கக்கூடிய ஒரு கடையினுடைய கூரை முழுவதும் ரத்தமாகத் தோய்ந்திருக்கிறது. ஆனால் அரசாங்கத்தினுடைய சார்பில் இந்த அறிக்கை கொடுத்திருக்கின்றபோது இதனுடைய ரத்தத்தை ஆய்வு செய்ததில் மனித ரத்தத்திற்கும், ஆய்வு செய்யப்பட்ட ரத்தத்திற்கும் சில ஒத்த தன்மைகள் இருப்பதாகவும், இங்கே குறிப்பிட்டு இருக்கின்றார்கள். ஆனால் எப்படி அந்த ரத்தம் வந்தது, எங்கேயிருந்து வந்தது, என்ன என்பது பற்றி அரசாங்கத்திற்கே தெரியவில்லை. விஞ்ஞான முறைப்படி மிகப்பெரிய விஞ்ஞானிகளையும், மிகப் பெரிய ஆய்வாளர்களையும் வைத்திருக்கக்கூடிய அரசாங்கத்தில் இதைக் கண்டுபிடிக்க முடியாததற்கு என்ன காரணமோ தெரியவில்லை. அதைக் கண்டுபிடிப்பதற்கான முயற்சியிலே அரசாங்கம் ஈடுபடுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது 28-ஆம் தேதி முதல் 30—3—89 வரை இந்த நிகழ்ச்சிகள் அங்கொன்றும், இங்கொன்றுமாக நடைபெற்றிருக்கின்றன. உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவரும் அந்த இடத்திற்கு விரைந்து சென்று அதற்கான நடவடிக்கைகளிலே ஈடுபட்டு இருக்கிறார்கள். மருத்துவத் துறையைச் சார்ந்தவர்களும் அங்கே சென்று ஈடுபட்டிருக்கிறார்கள். அந்த மூன்று நாட்களுக்குப் பிறகு, அந்த நிகழ்ச்சி அங்கே நடைபெறவில்லை. மக்களுக்கு இருந்த பீதியும் இப்போது கிடையாது. இருந்தாலும் கூட, அதை என்னவென்று கண்டுபிடிக்கமுடியாத ஒரு சூழ்நிலையிருக்கிறது. ஆகவே, இதுபோன்று மேலும் ஒரு முறை நிகழும் என்று சொன்னால், அதைப் பரிசோதனையாகக் கூட செய்து பார்த்து, அது என்னவென்று கண்டுபிடிக்க ஆய்வாளர்களுக்கும் ஒரு வாய்ப்பு இருக்கும். அது உடனடியாக நின்று விட்டதனால், கண்டுபிடிக்க முடியாத சூழ்நிலைகளும் இருந்து இருக்கக்கூடும். ஆகவே, இது குறித்து இப்போது அங்கே பீதி இல்லாத காரணத்தினால், எந்தவிதமான பயமும் இல்லாத காரணத்தினால், இதைப்பற்றி தீவிரமான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பொன். விஜயராககவன் : தலைவர் அவர்களே, அந்த கிராம மக்கள் மத்தியிலே எந்த பீதியும் இல்லை என்று சொல்வது ஏறறுக்கொள்ளமுடியாத ஒன்று. ஏற்கெனவே நடைபெற்ற





சம்பவத்தினால் அந்தக் கிராமம் முழுவதும் ஏதோ ஒரு தவறு நடைபெற்று விட்டது போலவும், ஏதோ மாயமோ, மந்திரமோ, குறளி வித்தையோ என்னவோ என்கின்ற அளவிற்கு ஒரு மிகப் பெரிய பீதி இன்னும் ஏற்பட்டிருக்கிறது. ஒரு வேலை அரசாங்கத்தினர் ஒத்துக்கொள்வார்களோ, என்னவோ எனக்குத் தெரியாது. விஞ்ஞானத்தின் மூலமாகவோ, எந்த ஆய்வின் மூலமாகவோ நடைமுறைப்படுத்த முடியாததை நாட்டு மக்கள் நம்பிக்கொண்டு இருக்கக்கூடிய, ஏதோ மந்திரவாதம், தந்திரம் என்று சொல்லக்கூடிய அடிப்படையிலேயோ, குறளி வித்தை என்ற அடிப்படையிலேயோ அதைப் பார்த்து அதற்கு ஒரு முடிவு, பரிகாரம் ஏற்படுத்துவதற்கான முடிவுகளை மேற்கொண்டு, கிராம மக்கள் மத்தியில் இருக்கக்கூடிய பீதி, பயம் இவைகளைத் தடுப்பதற்கு அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அறவே அந்த பயம் மக்களிடம் விலகியிருக்கின்றது. அப்படி மாண்புமிகு உறுப்பினர் சொல்வது உண்மையாக இருக்குமென்று சொன்னால், அறிவியல் முறையில் அதைத் தீர்ப்பதற்கு என்ன முயற்சிகள் எடுக்கப்படமுடியுமோ அதை இந்த அரசு எடுக்குமென்று மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 5. சட்ட முன்வடிவுகள்.

### (அ) நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1989-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி, மனோகான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

]1989 ஏப்ரல் 29

(ஆ) மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத் மானத்தை மொழிகிறேன்;

"1989-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

6. மானியக் கோரிக்கைகள் 1989–90—விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

கோரிக்கை எண். 31.

பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 31—பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 76,11,61,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்",

திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட பழங்குடி மாணவ மாணவியர்களுக்கு தனியான புதிய வீடுகள் கட்ட வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 31—பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.76,11,61,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."



1989 ஏப்ரல் 29]

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடியினர் மற்றும் ஆதி திராவிடர் நல விடுதி மாணவர்களுக்கு மாதாமாதம் சாப்பாட்டுக்கு ரூ. 85 கொடுப்பதை ரூ. 150 ஆகவும், இதரச் செலவுக்கு ரூ. 2 வழங்குவதை ரூ. 10 ஆகவும் வழங்கப்பட வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 31—பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன்—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 76,11,61,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையின் முன் வைக்கப் பெற்றுள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை* நான் படித்ததாகக் குறிப்பேட்டில் ஏற்றிக் கொள்ள வேண்டும்.

இந்த அவையின் முன் வைக்கப்பட்டுள்ள கொள்கை விளக்கக் குறிப்புகள் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்ததற்குப் பிறகு என்னுடைய கருத்தை இறுதியில் வைக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைய விவாதத்தில் பல உறுப்பினர்கள் பங்கு பெறுகிறார்கள். ஒவ்வொரு கட்சியும் தங்களுடைய கட்சியின் சார்பில் பெயர்களைக் கொடுத்த பிறகு குறைந்த நேரம் பேசுவார்கள், பகிர்ந்து கொடுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்களுடைய வேண்டுகோளை முழுமையாக ஏற்றுக்கொண்டிருக்கிறேன். எனவே பேசுகின்ற உறுப்பினர்கள் வரையறுத்த நேரத்திற்குள் பேசினால் அனைத்துப் பேருக்கும் வாய்ப்பு அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். முதலில் விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் திரு. மூக்கன், அவருக்கு 7 மணித்துளிகள்.

*திரு. ஆர். மூக்கன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் அவர்கள் வழியில், புரட்சித் தலைவி அவர்கள் தலைமையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பழங்குடியினர் மற்றும் ஆதி திராவிடர் முதலியோர் நலன் என்ற மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கன்னிப் பேச்சைத் துவக்குகிறேன். என்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பிய உப்பிலியாபுரம் தொகுதி மக்களுக்கு என்னுடைய இதயங்கனிந்த நன்றியை இந்த மன்றத்தின் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

* 152—199-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.

[திரு. ஆர். மூக்கன்] [1989 ஏப்ரல் 29

நமது நாடு சுதந்திரம் அடைந்து 42 ஆண்டுகள் ஆகியும் இன்னும் மலைவாழ் மக்களும், ஆதி திராவிட மக்களும் இருக்க இடம் இல்லாமல், படுக்க பாய் இல்லாமல், குடிக்க கஞ்சி இல்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். என்னுடைய உப்பிலியாபுரம் தொகுதியில் அரசின் சலுகை பெறாத கிராமங்கள் உள்ளன. துரையூர் ஒன்றியத்தைச் சார்ந்த ஏரிக்காடு, எருமைப் பட்டி, குண்டூர், குறிச்சி, வாழியூர், நாகூர் போன்ற கிராமங்களும் உப்பிலியாபுரம் ஒன்றியத்தைச் சார்ந்த மங்கப்பட்டி என்ற கிராமமும் இதிலே குறிப்பிடத்தக்கது.

(முற்பகல் 10-20)

என்னுடைய தொகுதியில் வாழுகின்ற மக்கள் படிப்பறிவு இல்லாதவர்கள். இதைப் பயன்படுத்தி அரசு அதிகாரிகளும் மற்றும் உள்ளவர்களும் அவர்களை ஏமாற்றி வருகின்றார்கள். குறிப்பாக, ஜீவன்தாரா திட்டத்தின் கீழ் பச்சைமலையில், கிணறு வெட்டுவதற்கான உரிமையை சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த, தற்போது துறையூரில் வசிக்கும் திரு. வெங்கட்டராமன், ஆதி திராவிட நல மேம்பாட்டுக் கழகத்தின் தலைவராக இருந்தார். ஆனால் முறையாக அவர் செயல் படாத காரணத்தினால் மலைவாழ் மக்கள் புகார் கூறினார்கள். நான் தற்போதுள்ள திட்ட அலுவலரிடம் இதுபற்றி நடவடிக்கை எடுக்கும்படி கூறியும் நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தால், இதில் பல இலட்சம் ரூபாய்களை அவர் ஏமாற்றியுள்ளார், இது குறித்து அரசு உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்த ம்ன்றத்தின் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

பழங்குடியினருக்குப் பாதுகாப்புக்காக கொடுக்கப்பட்ட துப்பாக்கிகளை—போலீஸ் துறையினர் பாரதப் பிரதமர் தமிழகத்திற்கு வருகை தந்தபோது அவர்களிடமிருந்த எல்லா துப்பாக்கிகளையும்—போலீஸ் ஸ்டேசனிலே ஒப்படைக்க வேண்டுமென்று சொல்லியதன் பேரில் எங்கள் பகுதி மக்கள் துப்பாக்கிகளை ஒப்படைத்து உள்ளனர். இன்னும் அவைகள் திருப்பித் தரப்படவில்லை. அதனால், கரடி, மலைப்பாம்பு போன்ற மிருகங்களுடன் பாதுகாப்பின்றி, அந்த மக்கள் போராட வேண்டிய நிலையிலே உள்ளார்கள். எனவே எல்லோருடைய துப்பாக்கிகளையும் திருப்பித் தர உத்தரவிடும்படி மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். பழங்குடியினர் மற்றும் ஆதி திராவிடர் மக்கள் இறந்தால் அரசு, ஈமச் சடங்கு புரிவதற்காக உதவித் தொகை எந்தவிதமான நிர்பந்தமும் இன்றி உடனடியாக வழங்கவேண்டுமென்று அரசு உத்திரவிடவேண்டும். ஏனென்றால் அவர்கள் இறந்து நான்கு மாதங்கள் ஆகியும் அந்த உதவித் தொகை கிடைப்பதில்லை. எனவே அரசு உடனடியாக இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.



1989 ஏப்ரல் 29] [திரு. மூ. மூக்கன்]

ஆதி திராவிட நலத் துறையைத் தனியாகப் பிரிக்க 1979-ல் ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதுநாள் வரை அது செயல்படுத்தப்படவில்லை. அதை உடனடியாகச் செயல்படுத்தும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில், பச்சைமலையில் கருப்புக் கல் கிடைக்கிறது. தற்போது தனியார் மூலம் அந்தக் கல் வெளிநாட்டுக்கு எடுத்துச்செல்லப்பட்டு விற்பனை ஆகிறது. இதை தமிழக அரசு ஏற்று ஒரு தொழிற்சாலையை உருவாக்கினால் அரசுக்கு நல்ல வருமானம் கிடைப்பதுடன் அங்கே படித்த பட்டதாரிகளுக்கும் வாலிபர்களுக்கும் வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்றும் மேலும் பச்சைமலை தெம்பரநாடு, வண்ணாடு, கோம்பை போன்ற பஞ்சாயத்துக்களில் உள்ள கிராம மக்கள் சாலை வசதிகளும், மின் வசதிகளும், பல ஊர்களில் காலனி வசதிகளும் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். இந்த வசதிகள் இல்லாமல் பழங்குடியினரும் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். எனவே அரசு இதுகுறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பழங்குடியினர் நலன் கருதி என்னுடைய தொகுதியிலுள்ள வண்ணாடு, கோம்பை, தெம்பரநாடு, சேலம் மாவட்டதிற்கு அருகிலுள்ள ஆத்திநாடு ஆகியவற்றை ஒன்றாக இணைத்து பச்சைமலைக்கு பழங்குடியினர் சார்பாக தனி ஊராட்சி ஒன்றியத்தை அமைப்பதற்கு அரசை மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் குடிநீர் பற்றாக்குறையை நிரந்தரமாகத் தீர்க்கும்பொருட்டு செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. அவைகளைப் பரிசீலிக்கும்போது, கீழ்க்கண்ட இரண்டு திட்டங்களையும் உடனடியாகச் செயல்படுத்தித் தரும்படி தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன். ஒன்று, முசிரியை அடுத்த மணமேட்டிலிருந்து காவிரி நீரை மேட்டுப்பாளையம் தத்தங்கார் பேட்டை வழியாக உப்பிலியாபுரம் தொகுதிக்கு குடிநீர் கொண்டு வரும் திட்டமும், இரண்டு, தாங்கள் முன்பு முதல்வராக பணியாற்றியபோது புளியஞ்சோலை டூ புதுப்பட்டி குடிநீர்த் திட்டம் அரசு ஆய்வில் உள்ளதைச் செயல் படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அனைவரையும் நான் கேட்டுக்கொள்வது, எதிர்க் கட்கி சட்டமன்ற உறுப்பினர்கள் தானே கூறுகின்றார்கள் என்று நினைக்காமல் அவர்களுடைய தொகுதிகளுக்கும் சென்று, மக்களின் குறைகளைத் தீர்க்கும்படி கேட்டுக்கொண்டு, எனக்கு வாய்ப்பளித்த இம்மன்றத்திற்கு என்னுடைய இதயபூர்வமான நன்றியைக் கூறி, விடைபெறுகிறேன் வணக்கம்.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின் காவல் தெய்வமாக விளங்குகின்ற எங்கள் தானைத் தலைவர் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் என்னை இந்த மன்றத்திற்கு அனுப்பி வைத்த எனது எழும்பூர் தொகுதி வாக்காளர் பெரு மக்களுக்கும் எனது நெஞ்சார்ந்த வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களால் இந்த அவையில் சமர்ப் பிக்கப்பட்டுள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி முதலியோர் நலன் குறித்த மானியக் கோரிக்கை மீது எனது கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பு நல்கிய பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

வரலாறு திரும்பும் என்று சொல்வார்கள். வரலாறு திரும்பி 13 ஆண்டுகள் வனவாசத்திற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி கோட்டையிலே கொலுவீற் றிருக்கிறது.

"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு"

என்று சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் உரக்கச் சொல்லி வந்தவர்களால் மொழி காக்க களம் கண்ட நாங்கள், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாங்கள் இந்த மன்றத்திலே அமர முடி யாது என்று அன்றைக்கு இந்த அவையில் இருந்த மிருக பலத்தின் மூலமாக எங்களை வெளியேற்றி எள்ளி நகையாடி னார்கள். ஆனால் அவர்கள் எல்லாம் நாணி, கூனி, வெட்கித் தலை குனிந்து போகின்ற அளவுக்கு இன்றைக்கு மிகப் பெரும் பான்மையோடு மக்கள் எங்களை இந்த அவைக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள்.

மொழிப் போரில் பங்கு கொண்ட எங்களை இந்த அவையி லிருந்து நீக்கியபோது நாங்கள் அஞ்சவும் இல்லை, கலங்கவும் இல்லை ; சிறைக் கோட்டத்தில் அடைக்கப்பட்டபோதும் நெஞ்சம் நொந்ததில்லை. மாறாக மொழிப் போர் வரலாற்றில் இடம் பெற்றேன் என்ற பெருமையோடு நெஞ்சை நிமிர்த்தித் தான் சிறை ஏகினேன். வரலாற்றுச் சிறப்புமிக்க அந்த தியாகத் தழும்போடு இந்த மன்றத்திலே தலை நிமிர்ந்து நிற்கின்ற நான் இப்போது சொல்கிறேன். இந்தத் தமிழ் சமுதாயத்திற்காக, தமிழ் மொழிக்காக, அதன் நலன்காக்க எங்களையே அற் பணித்துக் கொள்வது என்ற கொள்கையை மேற்கொண்ட தற்கொலைப் படைதான் திராவிட முன்னேற்றக் கழகம். கொண்ட இலட்சியங்களுக்காக தன்னையே பலி கொடுக்கவும் தயங்காதவர்தான் எங்களுடைய இனமான தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள். எனவே எங்களுக்கு பட்டங்கள் புதிதும் அல்ல ; பெரிதும் அல்ல. எங்கள் தலைவர் டாக்டர் கலை



ஞருக்கு இருக்கிற தனித் தகுதியைவிட அவை ஒன்றும் உயர்ந் ததும் இல்லை ; சிறந்ததும் இல்லை. எங்களைப் பொறுத்த வரையில் கிடைத்திருக்கிற இந்த வாய்ப்பை, எங்களுடைய இலட்சியங்களை நிறைவேற்றக் கிடைத்திருக்கிற ஒரு சந்தர்ப்ப மாக, கருவியாகத்தான் கருதுகிறோம். அந்த வகையிலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலட்சியங்களில் ஒன்று தான் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் தலை நிமிர்ந்து தன்மானத்தோடு வாழ வழி செய்வதாகும்.

எங்கள் முன்னோடிகளான தந்தை பெரியாரும் பேரறிஞர் அண்ணா அவர்களும், டாக்டர் கலைஞர் அவர்களும், பேரா சிரியர் பெருந்தகை அவர்களும் ஆற்றிய அரும்பணிகள் இந்த நாட்டின் வரலாற்று வரிகள். இன்று ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிற எங்கள் தானைத் தலைவர் கலைஞர் வெறும் வாய்ப் பேச்சு வேதாந்தி அல்ல என்பதை நாடே அறியும். இந்தத் தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக தனியாக ஒரு அமைச்சகத்தையும் அமைச்சரையும் உருவாக்கியதே டாக்டர் கலைஞர்தான் என்று சொன்னால் அது மிகையாகாது. ஆம். பிற்பட்டோர் நலத் துறையோடு இணைந்திருந்த இந்தத் துறையை 1972 ஆம் ஆண்டு தனியாகப் பிரித்து இதற்கு என்று 8.5 கோடி ரூபாயை ஒதுக்கி, திட்டங்களை வகுத்து செயல்படுத்தியவர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

அது மட்டுமல்ல. அந்த 8.5 கோடி ரூபாயில் 5.63 கோடி ரூபாய் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடி மக்களின் கல்வி மேம்பாட்டிற்காக செலவிடப்பட்டது என்பது மிகவும் குறிப் பிடத்தக்கது. இதை விடச் சிறந்ததாகச் சொல்ல வேண்டு மானால் 1987 ஆம் ஆண்டு அன்றைக்கு இருந்த அரசு இந்தத் துறைக்காக ஒதுக்கிய தொகை 51.11 கோடியாகும். ஆனால் கஜானாவும் காலி, களஞ்சியமும் காலி என்ற நிலையிலே அரசுப் பொறுப்பை ஏற்ற கலைஞர் இத்தகைய பொருளாதார நெருக் கடியான சூழ்நிலையும் ஏறத்தாழ 79 கோடியை ஒதுக்கி யிருக்கிறார்கள் என்றால் இந்த மக்களின் முன்னேற்றத்திற் காக இந்த அரசு கொண்டிருக்கிற அக்கறைக்கு இதை விட வேறு சான்று தேவையில்லை என்று கருதுகிறேன்.

மேலும் சிறப்பு உள்ளடக்கிய திட்டத்தின்கீழும் பழங் குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழும் மற்ற பல்வேறு துறைகளின் வாயிலாகவும் இந்த மக்களுக்காக 178 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இது இந்த மக்களின் வாழ் வுக்கும் வளர்ச்சிக்கும் மிகப் பேருதவியாகத் திகழும் என்பதை மெத்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் கூறப்பட்டிருப்பது போல தமிழ் நாட்டில் தாழ்த்தப்பட்ட மக்களின் எண்ணிக்கை 89 இலட்சமாகும். அவர்களில் 71 இலட்சம் மக்கள் கிராமப் புறங்களில் வாழ்கிறார்கள் ; 18 இலட்சம் மக்கள் நகரப்

புறங்களில் வாழ்கிறார்கள். நகரப் புறங்களில் வாழ்கிற மக்களில் ஏறத்தாழ 41 சதவீதமும், கிராமப் புறங்களில் வாழ்கிற மக்களில் 26 சதவீதமும்தான் கல்வி அறிவு பெற்றவர்களாக இருக்கிறார்கள். மொத்தம் ஆதி திராவிட மக்களில் கல்வி அறிவு பெற்றவர்கள் 29.67 சதவீதம்தான். இதைக் கருத்தில் கொண்டு கல்வி அறிவை மேம்படுத்த ஆரம்பப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேல் நிலைப் பள்ளிகள் என்று 1,204 பள்ளிகளை இந்த அரசு நடத்தி வருவதோடு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்கள் தங்கிப் படிக்க மேலும் 25 புதிய விடுதிகளை இந்த ஆண்டு தொடங்க முன்வந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது மட்டுமல்ல, பாராட்டுக்குரியதுமாகும்.

(முற்பகல் 10-30)

மேலும் பட்டப்படிப்பு வரை ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடி மக்களுக்கு, மாணவர்களுக்கு இலவசக் கல்வி என்று அறிவித்து அதை செயல் படுத்த நிதி ஒதுக்கீடும் செய்திருக்கிறது இந்த அரசு. இது போல பல்வேறு திட்டங்கள் இதில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றையெல்லாம் நான் அடுக்கிக் கொண்டே போனால் இந்த அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்பட வேண்டும் சூழ்நிலை ஏற்பட்டு விடும். அப்படிச் செய்தாலும் பரவாயில்லை. கரத்தை நீட்டி, நேரத்தைக் காட்டி, என் பணி முடிக்க மணியடித்து விடுவார்களோ என்ற அச்சம் ஒரு புறம் இருப்பதால் விரைவாக ஓரிரு கருத்துக்களைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

ஆதி திராவிட மக்களில் 7 இலட்சம் பேர்கள்தான் சொந்தமாக விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். 20 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் விவசாயக் கூலிகளாகத்தான் இருக்கின்றார்கள். இந்த விவசாயக் கூலிகளாக இருக்கின்ற மக்களை சொந்த நிலம் உள்ள விவசாயிகளாக மாற்றுகின்ற வகையில் பினாமி பேர்களில் நிலங்களை வைத்திருக்கின்ற நிலப் பிரபுக்களிடமிருந்து நிலங்களை எல்லாம் அரசாங்கம் கைப்பற்றி அவற்றை விவசாயக் கூலிகளாக இருக்கின்ற அந்த மக்களுக்கு வழங்கி அவர்கள் உழுகின்ற நிலங்களை அவர்களுக்கே சொந்தமாக்கித் தர வேண்டும். மேலும் 27 இலட்சத்திற்கு மேற்பட்ட ஆதி திராவிட மக்கள் அன்றாடக் கூலிகளாக பிழைத்துக் கொண்டிருக்கின்றார்கள். வாட்டமுற்றுக் கிடக்கின்ற அந்த மக்களின் வாழ்க்கையில் ஒளி ஏற்றுகின்ற வகையில் நம்முடைய முழு சக்தியையும் பயன் படுத்தி நாம் ஏதாவது செய்தாக வேண்டும் என்று மெத்த பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். சில ஆண்டுகளுக்கு முன்பு பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான ஒதுக்கீட்டை 32 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாக ஒதுக்கியது போல தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் மக்களுக்கான ஒதுக்கீட்டை 18 சதவிகிதத்திலிருந்து 25 சதவிகிதமாக



உயர்த்தித் தர வேண்டும். 86 இலட்சம் தாழ்த்தப்பட்ட மக்களில் நானும் ஒருவன் என்ற முறையிலே அந்த மக்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மக்கள் தொகையின் அடிப்படையிலேதான் 18 சதவிகிதம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்ற காரணத்தைக் காட்டி என்னுடைய தாழ்மையான வேண்டுகோளை தட்டிக்கழிக்கக்கூடாது. இந்தநேரத்திலே பேசிக்கொண்டிருக்கின்ற நான் என் இதயத்தின் அடித்தளத்திலேயிருந்து பீரிட்டு வருகின்ற உணர்வுகளைத்தான் இங்கே வார்த்தைகளாக இங்கே கொட்டிக்கொண்டிருக்கின்றேன். ஐயா, இந்த மக்களில் ஏறத்தாழ 90, 95 சதவிகிதத்திற்கு மேற்பட்டவர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்பவர்கள். 70 சதவிகிதம் மக்கள் படிப்பறிவு இல்லாதவர்கள். ஆதிதிராவிடர்கள் கூலி வேலை செய்து பிழைப்பவர்கள். படித்தவர்கள் எண்ணிக்கை வெறும் 29 சதவிகிதம் தான். அதுமட்டுமல்ல, இந்த மக்களுக்கு போராட்டம் நடத்தத் தெரியாது. காலக் கெடு வைத்து மிரட்டத் தெரியாது. அரசியல் சதுரங்கம் ஆடத் தெரியாது. எங்களுக்குத் தெரிந்தது எல்லாம் இரு கரம் கூப்பி எங்களுக்கு வாழ்வு தாருங்கள் என்று கேட்டுக் கொள்வதுதான். எனவே, கருணையே வடிவான கருணாமூர்த்தியே, தாயுள்ளம் கொண்ட தாழ்த்தப்பட்ட மக்களின் காவல் தெய்வமே, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களே, உங்கள் காலத்தில் நீங்கள் செய்யாவிட்டால் எங்களுக்கு வேறு யார் செய்வார்கள்? இவ்வளவு தூரம் உங்களை மன்றாடிக் கேட்டுக் கொள்வதற்குக் காரணம் தாயுள்ளத்தோடு எனது கோரிக்கையை நிறைவேற்றுவீர்கள் என்ற நம்பிக்கையிலேதான்.

குடிசையில் வாழ்ந்தவனை கோபுரத்திலே உட்கார வைத்தீர்கள். மனிதனை மனிதன் மாடு போல இழுக்கின்ற கை ரிக்ஷாக்களை ஒழித்து சைக்கிள் ரிக்ஷாக்களை வழங்கினீர்கள். ஆதி திராவிடர் வரதராஜனை ஹைக்கோர்ட் நீதிபதியாக ஆக்கினீர்கள். தொழு நோய்ப் பிச்சைக்காரனுக்கு மறுவாழ்வு கண்டீர்கள். எல்லாவற்றிற்கும் மேலாக தாழ்த்தப்பட்ட பெண்மணியை தங்கள் மகன் அழகிரிக்கு மணமுடித்துவைத்து, ஜாதிமத பேத மற்ற சமுயாயத்திற்கு வழிகாட்டியாக கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறீர்கள்.

குடிசையில் வாழ்ந்தவனை, கண்ணில்லாதவனை, கைவண்டிக்காரனை, புண்ணோடு உழல்கின்றவனை, புனர் வாழ்வைக்காட்டி கருணை இல்லத்தைக் கொடுத்த தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களே உங்களைப்போல ஒரு தலைவர் இனிமேல் எங்களுக்குக் கிடைப்பார் என்ற நம்பிக்கை இல்லாத காரணத்தினாலே நீங்கள் அமர்ந்திருக்கின்ற திசை நோக்கி தெண்டனிட்டு என்னுடைய கோரிக்கையை பரிவோடு பரிசீலித்து நிறைவேற்றுவீர்கள் என்ற நம்பிக்கையில் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அரிஜன் வெல்பேர் கமிட்டி என்ற ஒன்றை அமைப்பதாக 1980-ஆம் ஆண்டு அன்றைக்கு இருந்த அரசாங்கம் அறிவித்தது. ஆனால் 9 ஆண்டுக்காலம் ஆகியும் அந்த அறிவிப்பு அறிவிப்பாகத்தான் இருக்கிறது. எனவே, இந்த அரசாங்கம் அதனை உடனே விரைந்து நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கலப்புத் திருமணம் செய்து கொள்கின்றவர்களுடைய குழந்தைகளுக்கு "கேஸ்ட்லெஸ்" சாதியற்றவர்கள் என்று சான்றிதழ்கள் தரவேண்டும் என்று பல ஆண்டுகளாக கோரப்பட்டு வந்த கோரிக்கையாகும். ஒருபடி மேலும் போய்ச் சொல்லுகிறேன். அவர்களையெல்லாம் "மோஸ்ட் பிரிவிலெட்ஜ்ட் கேஸ்ட்" மிகுந்த முன் உரிமை பெற்ற வகுப்பினர் என்று சொல்லி. ஒதுக்கீடு நீங்கலான பொதுத்தொகுப்பில் எவ்வித வரைமுறைகளும் இல்லாமல் முன் உரிமை தந்து முதலிடமே தர வேண்டும். அது கல்வியானாலும், வேலைவாய்ப்பு ஆனாலும், இந்த முறையை நாம் பயன்படுத்தினால்தான், சாதி ஒழிப்பு முயற்சியில் இந்தத் தலைமுறையிலாவது நாம் வெற்றி பெற முடியும்.

அடுத்து, விரைவாக சட்ட மாமேதை டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கார் அவர்கள் பெயராலேதான் அடுத்த மாவட்டம் அமையும் என்று நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் டாக்டர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள். அதற்காக தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பில் கோடானுகோடி நன்றிகளை இதயப் பூர்வமாக நான் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் அந்த அறிவிப்புக்கு செயல்வடிவம் தந்து இந்த கூட்டத் தொடரிலேயே இதை அறிவித்து எங்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தவேண்டும் என்று கேட்டுக் கொண்டு மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த மானியக் கோரிக்கையை முழுமனதோடு ஆதரித்து அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசாங்கத்தைப் பற்றி உறுப்பினர் சொல்கிற போது பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்களுடைய வழியிலே, பேரறிஞர் அண்ணா வழியிலே, இன மான தலைவர் கலைஞர் ஆட்சியிலே என்று சொன்னதை எல்லாம் நான் மிகுந்த உற்சாகத்தோடு கேட்டுக் கொண்டிருந்தேன். பகுத்தறிவுப் பாதையிலே தான் எல்லாம் செல்ல வேண்டும் என்பது நம்மைப் பொறுத்தவரையில் கூட ஒத்துக்கொண்ட ஒன்றுதான். அப்படி இருக்கின்ற பொழுது அழகப்பபுரத்திலே பெய்த ரத்த மழையைப் பற்றி இந்த அரசாங்கம் ஒன்றும் கண்டுபிடிக்க முடியவில்லை என்று சொன்னதற்குப் பதிலாக திரு. கி. வீரமணி அவர்களுடைய சேவையைப் பயன்படுத்தி அதைக் கண்டுபிடிக்க இந்த அரசாங்கம் முன்வருமா ?





**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் இதை இடையிலே எழுப்ப என்ன இருக்கிறது ? இது என்ன "Point of order" ?

**திரு. குமரி அனந்தன் :** அதனுடைய தொடர்பாக— அப்படிப்பட்ட அரசாங்கத்தில் எப்படியாவது கண்டுபிடிக்க வேண்டும்—அதற்கு அவர்களுடைய உதவியைப் பெற வேண்டும் என்பதற்காகத்தான் ......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த அரசாங்கம் கவனித்து ஆவன செய்ய நான் பரிந்துரை செய்வேன். (குறுக்கீடு) அருள்கூர்ந்து சுவைக்காகச் சொல்வதை நான் வரவேற்கிறேன். ஆனால் அவைக்காகச் சொல்லக் கூடாது. (சிரிப்பு) ஏனென்றால் நேரம் வீணாகும். திரு. வெங்கடேஸ்வர தீட்சிதர் சொல்லாமல் ஒன்றுக்கும் முடிவுக்கு வர முடியாது. (சிரிப்பு).

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. குமரி அனந்தன் அவர்கள் சொன்னதை நான் கேட்டுக் கொண்டிருந்தேன். உறுப்பினர் அவர்கள் பேசியதற்கு பிறகு இவர் பகுத்தறிவுப் பாதையிலே ஒரு சம்பவத்தைப் பற்றிக் கண்டுபிடிக்க வேண்டுமென்று இங்கே சொல்கிறார். ஏற்கெனவே இந்த நாட்டில் ராமாயணம்— மகாபாரதம் பற்றி பட்டிமன்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதுபற்றி ஏற்கெனவே இங்கே ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டிருக்கிறது. இது இங்கே தொடர்பு இல்லாதது. நான் உங்களை உட்கார வைக்க வேண்டி வந்தால் நீங்கள் வருத்தப்படக் கூடாது. திரு. ஈஸ்வரன் அவர்கள் பேச்சைத் தொடங்குவார்கள். திரு. ஈஸ்வரன். (குறுக்கீடு). இடையிலே எந்தப் பேச்சும் தேவையில்லை. திரு. ஈஸ்வரன் நீங்கள் பேசுங்கள்.

**திரு. ஆர். ஈஸ்வரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் பற்றிய மானியக் கோரிக்கையிலே கலந்துகொண்டு பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்ததற்காக என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். ஆதி திராவிடர் நலத் துறையிலே சென்னை நகரில் பயிலும் கல்லூரி மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூபாய் 140-ம், வெளியூரிலுள்ள கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூபாய் 135-ம் உணவுக் கட்டணமாக வழங்கப்படுகிறது. இப்போது விலைவாசி அதிகமாக இருக்கின்ற காரணத்தால் இந்தத் தொகை போதுமானதல்ல. ஆகவே இந்த ரூபாயைக் கொஞ்சம் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ஆர். ஈஸ்வரன்] [1989 ஏப்ரல் 29

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்து, ஆண்டு ஒன்றுக்கு இரண்டு சீருடைகள் அவர்களுக்கு கொடுக்கப்படுகின்றன. இந்த சீருடைகளை இனிமேல் மூன்றாக வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதுபோல எண்ணெய், சோப்பு இவைகளை எல்லாம் குறைந்த விலையில் கொடுக்கிறார்கள். இப்போது இருக்கிற விலைவாசியில் அதனையும் அதிகப்படியாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஆதி திராவிட பழங்குடி மாணவர்கள் 6 முதல் 10-ஆவது வகுப்பு வரை தங்கி படிப்பவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 250 ரூபாயிலிருந்து 350 ரூபாய்வரை கொடுக்கப்படுகிறது. இது போதுமானதல்ல. ஆகவே, இதையும் கூட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, அரசுப் பணியில் இட ஒதுக்கீடு அளிக்கப்படுகிறது. அனைத்து வகையான பணிகளிலும் 18 சதவிகிதம் ஆதி திராவிட பழங்குடி மக்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறதா இல்லையா என்பதைப் பற்றி தயவு செய்து இந்த அரசு ஆய்வு செய்ய வேண்டும். அதற்கும் தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைவராக இருக்கிறார்கள். அதுபோல மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் அவர்கள் அந்தக் குழுவுக்கு துணைத் தலைவராக இருக்கிறார்கள். ஆகவே, அனைத்துத் துறைகளிலும் இந்த 18 சதவிகித வேலைவாய்ப்பு கண்டிப்பாக அளிக்கப்பட்டு வருகிறதா, எல்லாத் துறைகளிலும் அது பூர்த்தி செய்யப்பட்டு வருகிறதா அல்லது இல்லையா என்பதை ஆராய்ந்து பார்த்து அப்படி பூர்த்தி செய்யப்படவில்லையென்றால் தயவு செய்து அதனை பூர்த்தி செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களையும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கு வீடுகள் கட்டுவதற்கு முந்தைய அரசு 6,000 ரூபாய் வழங்கி வந்தது. ஆனால் மாண்புமிகு தமிழக முதல்வரவர்கள் இப்போது கான்கிரீட் வீடு கட்டுவதற்கு அவர்களுக்கு 10,000 ரூபாய் அனுமதித்திருக்கிறார்கள். அதற்காக தமிழக முதல்வர் அவர்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், அனைத்துத் தொழில் துறைகளிலும் 18 சதவிகிதம் வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டும். தனியார் தொழில் துறைகளிலும் ஆதி திராவிடர் மக்களுக்கு 18 சதவிகிதம் வேலை வாய்ப்பு அளிப்பதற்கு மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வரவர்கள் வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டு



1989 ஏப்ரல் 29] [திரு. ஆர். ஈஸ்வரன்]

மென்று கேட்டுக்கொள்கிறேன். அதே மாதிரி ஆதி திராவிட நலத் துறையிலே அந்த மக்களுக்கு வீடுகள் கட்டுவதற்காக தனியார் நிலங்களை ஆர்ஜிதம் செய்யும்போது, அந்த நிலங்களின் சொந்தக்காரர்கள் கோர்ட்டுக்குச் செல்லுகிறார்கள். அவர்கள் அப்படி கோர்ட்டுக்குச் செல்கிற காரணத்தால் பல ஆண்டுகள் காலதாமதமாகிறது. எனவே அவர்கள் கோர்ட்டுக்குப் போகாமல் தடுக்க, அரசு —ஒரு தடை விதிக்க வேண்டுமென்று நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து ராஜகம்மளம் என்ற சமுதாயத்தை பின் தங்கிய சமுதாயமாக அறிவித்திருக்கிறார்கள். மதுரை, சேலம், கோவை, திண்டுக்கல் மாவட்டங்களிலும் அவர்களை பின் தங்கிய சாதியினர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஆதிதிராவிட நலத் துறையில் நிலங்களை ஆர்ஜிதப் படுத்தும்போது அந்த நிலத்திற்குச் சொந்தக்காரர்கள் தென்னை மரங்களைப் போட்டு, அதை காலதாமதப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த மாதிரி நிலைமையை மாற்றி, அரசு துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் எல்லாத் துறைகளிலும் வேலை வாய்ப்பு கொடுக்க, பதவி உயர்வுகளை விகிதாச்சாரப்படி கொடுக்க இந்த அரசு துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய பேச்சினை முடித்துக்கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

*டாக்டர் த. சாந்தகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, என் அரசியல் வாழ்வின் முன்னோடிகளான தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் இவர்களது தாள் வணங்கி என் கன்னிப் பேச்சினைத் தொடங்குகிறேன்.

வரலாற்றின் நெடிய பயணம் முழுதும் தீண்டாமைக் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு ஒடுக்கப்பட்டவர்களாக, நசுக்கப்பட்டவர்களாக புறக்கணிக்கப்பட்டவர்களாக இன்றும் இருப்பவர்கள் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆவர். இந்த மண்ணின் மைந்தர்கள் இவர்கள். இன்றைக்கு இந்த ஆதி திராவிடர் நலன் குறித்த மானியக் கோரிக்கை டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் முகிழ்த்தெழுந்துள்ள திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆதி திராவிடர் நலத்துறை மூலம் ஆற்ற முனைந்திருக்கிற செயற் திட்டங்கள் இங்கே முன் வைக்கப்பட்டிருக்கின்றன.

ஒரு 10 ஆண்டுக்காலம் நான் அரசு மருத்துவராகப் பணியாற்றி இருக்கிற அனுபவத்தைக் கொண்டும், உலகத் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களது தலைமையின்கீழ் இயக்கப் பணியில் என்னை ஈடுபடுத்திக் கொண்டிருப்பவள் என்ற வகையிலும் இந்த அவையின் கவனத்தில் இப்பொழுது இருக்கிற

ஆதி திராவிடர் நலத் துறையின் திட்டங்களை மதிப்பீடு செய்ய வேண்டுமென்றால், சயான திசை நோக்கி எடுத்து வைக்கப் பட்டுள்ள முதல் அடி, முதல் படி, இது என்று கூறிட விழை கிறேன்.

இன்னும் சொல்லப்போனால் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் இந்த மாமன்றத்தில் முன் வைக்கப்பட்டுள்ள வர லாற்றுப் புகழ் பெறப் போகிற நிதிநிலை அறிக்கை முழுவதுமே, வறுமைக் கோட்டுக்குக் கீழே வாடிக் கிடக்கின்ற கோடிக்கணக் கான ஏழை ஏதிலிகள், நலிவுற்றோர், விவசாயம் மற்றும் தொழில் சார்ந்த பாட்டாளிகள், பெண்கள், குழந்தைகள் இவர் களுக்கே பிரதானமாகப் பெரும்பயன் சேர்க்கும் வகையிலே அமைந்திருப்பதைப் பார்க்கிறேன். இந்த வகையைச் சேர்ந்தவர் கள் தான் ஆதிதிராவிடரும், பழங்குடியினரும் என்பதனை நினைவில் நிறுத்திப் பொறுத்திப் பார்க்கிறபொழுது, இந்த நிதிநிலை அறிக்கை, ஆதி திராவிடர் மக்களுக்கே முற்றாகப் பயன் சேர்த்திடும் பாங்கில் அமைந்திருக்கிறது என்று கூறி, ஆதி திராவிடர் மக்கள் சார்பாக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயக் கூலிகளுக்கு கூடுதல் கூலி நிர்ணயம், தொழிலாளி இறந்தால் 10,000 ரூபாய் உதவி, சொத்துரிமையில் பெண்களுக்கு சமபங்கு, பெண்களுக்கென அனைத்து வேலை வாய்ப்புகளிலும் 30 விழுக்காடு ஒதுக்கீடு, தொடக்கப் பள்ளியின் முதல் இரண்டு வகுப்புகளுக்கு பெண்களுக்கு மட்டுமே ஆசிரியப் பணி, ஏழைப் பெண்களுக்கு இளங்கலைப் பட்டப் படிப்புவரை இலவசப் படிப்பு வசதி, எட்டாவது வரை எட்டிவிட்ட ஏழைப் பெண்கள் திருமணத்திற்கென்று 5,000 ரூபாய் உதவி, ஏழைப் பெண்கள் கருவுற்றால் நிறைமாதங்களின்போதும், பேறு காலத்திற்குப் பின்பும், மொத்தம் 4 மாதங்களுக்கு 200 ரூபாய், பச்சை உடம்புக்கு சத்தும் ஊட்டமும் பெற—இப்படி அடுக்கடுக்காக அமுலுக்கு வர இருக்கிற அனைத்துச் சலுகைகளும் யாரைச் சென்றடையும்? முற்றாக ஆதி திராவிட மக்களைத்தான் சென் றடையும் என்பதால் இந்த சமூகம் பெறப்போகும் பயன் கருதி எனது உளமார்ந்த நன்றிதனை காணிக்கையாக்குகின்றேன்.

இவை அத்தனைக்கும் முத்தான சிகரம் வைக்கும் வகையில், புத்தாண்டுக்கு 5 கிலோ இலவச அரிசி வேறு; ஏழைகள், பாழை கள், பாவப்பட்ட மக்கள் பயனுறும் வகையில். மனமாற வாழ்த்துகிறேன்—இவர்களைச் சார்ந்த பிரதிநிதி நான் என்ற முறையில்.

அடுத்து, ஒரு மாவட்டம் தனக்கு ஒரு பெயர் சூட்டிக்கொள் வதாக இருந்தால் அண்ணல் அம்பேத்கார் பெயரைத் தான் சூட்டுவேன் என்று இந்த மன்றத்திலேயே அறிவித்திருக்கிற மாண்புமிகு தமிழக முதல்வருக்கு—என் தலை வணங்குகிறேன். இப்படி, ஏழை ஒடுக்கப்பட்டவர்கள்பால் சார்ந்து நிற்றல் என்ற பரிவான நிலை Preferential option for the poor and the oppressed





என்ற நிலை—என்ற கொள்கை—இந்த நிதிநிலை அறிக்கை முழுவதும் நிரவிக் கிடக்கின்ற வகையைப் பார்த்து, பாராட்டு கிறேன். அதே நேரத்தில்—முந்தைய அரசு செய்த—நெஞ்சிலே முள்ளாக நெருடுகின்ற சிலவற்றை இங்கே சொல்லித்தான் ஆக வேண்டும்.

கிறிஸ்தவ ஆதி திராவிடர்களின் நிலை. இவர்கள் இருந்த மதத்திலும் தீண்டாமை கொடுமை—வந்த மதத்திலும் தீண் டாமைக் கொடுமை. 18 விழுக்காடு அரசு சலுகையும் இல்லை. கிருஸ்தவ மதத்திலும் ஓரங்கட்டுகிற நிலை. இதனை அரசியல் சட்டத் திருத்தத்தின் மூலம்தான்—நடுவணரசு தான் செய்ய வேண்டும் என்று விட்டுவிடாமல்—கிருஸ்தவ ஆதி திராவிடர் களுக்கும் இந்த 18 விழுக்காடு இட ஒதுக்கீடு பொருந்தும் வகையில் சேர்க்க வேண்டுமென்று இந்த மாமன்றம் தீர்மானம் நிறை வேற்றி நடுவணரசுக்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் உச்ச வரம்புக்கு மேல் உள்ள நிலங்களை, நலிவுற்ற ஏழை ஆதிதிராவிட மக்களுக்கு வழங்கிட வேண்டுமென்று—திராவிட முன்னேற்றக் கழக அரசு 1969 ஆம் ஆண்டிலேயே வழிவகுத்துக் கொடுத்திருக்கிறது. அதற்குப் பிறகு வந்த அரசு என்ன செய்தது? ஆதி திராவிடர்களுக்கு நிலம் வழங்குவ தாகப் பேர் பண்ணிக் கொண்டிருந்தார்கள். உதாரணத்திற்கு என் தாராபுரம் தொகுதியில் 84-ம் ஆண்டிலே, 25 ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு தலா 1-1/4 ஏக்கர் நிலம் குடிமங் கலத்திலே வழங்குவதாக உத்திரவு போட்டிருக்கிறார்கள். உத்திரவு—தாளோடு சரி! இன்று வரைக்கும் அவர்களுக்கு அந்த நிலங்கள் ஒப்படைக்கப்படவில்லை. அவைத் தலைவர் அவர்கள் பார்வைக்கு இது தொடர்பான ஆவணப் படிகளை அளிக்கிறேன்.

வாராது போல் வந்த மாணிக்கம்—மாமனிதர்—தலைவர் கலைஞர் அவர்கள் இது குறித்து தக்க நடவடிக்கை எடுப் பார்கள் என்று நம்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆதிதிராவிட மக்களுக் கென்று கான்க்ரீட் வீடுகளை—13 ஆண்டுகளுக்கு முன்பே கட்டிக் கொடுத்திருக்கிறது. இன்றைக்கும் நிலை குலையாமல் நிமிர்ந்து நிற்கின்றன அவைகள். அதற்குப் பிறகு வந்தவர்கள் ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுப்ப தாகக் களத்தில் இறங்கினார்கள். இவர்கள் வன இலாக்கா வின் தொகுப்பு மரம் வளர்த்த கதைதான் இங்கும். என்னுடைய தாராபுரம் தொகுதியின் அரசூர், வேலாயுத கவுண்டன்புதூர் இந்த ஊர்களில் ஆதிதிராவிடர் பெயரைச் சொல்லி, தொகுப்பு வீடுகள் கட்டினார்கள் 1986 ல் கோலாகல விழா வெடுத்துத் திறப்பு விழாக் கொண்டாடி முடித்து—இவர்கள் அந்தப் பக்கம்

போமளவும் நின்ற வீடுகள்—ஒரே வாரத்தில் இடிந்து குட்டிச் சுவர்களாகிவிட்டன. கட்டிய மகராசர்களின் நினைவுச் சின்னங் களாக இவைகள் நிற்பதனை—நிழற்படங்களாக்கி இருக் கிறேன் அவையின் பார்வைக்கு.

'நெற்கொண்டு போமளவும், நிற்பாய் நெடுஞ்சுவரே' என்று அவ்வைப்பாட்டி பாடியதாகச் சொல்லுவார்களே அந்த அடிகள் தான் நினைவுக்கு வருகின்றன எனக்கு. பானை சோற்றுக்குப் பதம் ஒரு சோறு என்பார்கள். அப்படி இது. நான் விசாரித்துப் பார்த்த வகையில் இப்படிப்பட்ட அரசூர் கள் தமிழகத்தில் நிறைய இருப்பதாக அறிகிறேன்.

இந்த நிலைமைகளையெல்லாம் கருத்தில் கொண்டுதான், தமிழக முதவர் அவர்கள்—ஆதிதிராவிடர்களுக்கு ரூ. 10,000 செலவில் காங்கிரீட் வீடுகள் கட்டிக் கொடுக்க உதவியாக இருப்பது அறிந்து—இருகரம் கூப்பி உளமார வாழ்த்துகிறேன்.

தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் அரசு நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டங்களின் அடிப்படையில் இதுவரை ஆதிதிராவிட பழங்குடி மக்களுக்கு ரூ. 6,000-ல் தான் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால் திராவிட முன்னேற்றக் கழக அரசு இந்தத் திட்டத்திலே மத்திய அரசின் திட்டத்திற்கு மேலாக மேலும் ரூ. 4,000 சேர்த்து மொத்தம் ரூ. 10,000-ல் கான்கிரீட் வீடுகள் கட்ட முடிவு செய்துள்ளதானது—இந்திய நாடு முழுவதற்குமே ஒரு முதல் முன்னோடித் திட்டமாக அமைந்துள்ளது என்று கூறிப் பாராட்டுகிறேன்.

இதில் மாநில அரசின் பங்கு ரூ. 1,250 மட்டும் என்றிருந் ததை தி.மு.க. அரசு ரூ. 5,250 ஆக உயர்த்திக் கொடுப்பது— தி.மு.க. அரசு—டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையிலே தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிட மக்கள் பக்கம் எவ்வளவு கருணையோடு சார்புநிலை எடுத்திருக்கிறது என்றும்— The D.M.K. has taken a preferential option for the poor and the oppressed என்பதைத்தான் காட்டுகிறது.

இந்த நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். வீடு என்பது மனித வாழ்வின் மையம். அந்த மனித வாழ்வின் மையங்களை ஊருக்கு வெளியே மூன்று கிலோ மீட்டருக்கு அப்பால் ஒதுக்குப் புறத்திலே—புறந்தள்ளிவிடப்படுகின்ற நிலை மாற வேண்டும்.

ஆதிதிராவிடர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும்போது, அவர்களையும் சமுதாயத் தொடர்புடைய அங்கமாக மதித்து மனித நேயத்தோடு கூடிய அனைத்து வசதிகளும் அடங்கிய திட்டமிட்ட குடியிருப்புகளாக அமைத்துத் தரும்படி வேண்டு கிறேன். IRDP, NREP, RLEGP, THADCO



என்று எத்தனையோ திட்டங்கள். இவை ஏழை ஆதிதிராவிட மக்களைச் சென்றடையவில்லையே ஏன். பாய்ச்சுகிற நீரைப் பாதியிலேயே பலரும் பகிர்ந்து கொண்டு கடைசியில் ஆதி திராவிடர்கள் கையில் கொஞ்சம் ஊற்றிவிடுகின்ற நிலை தனைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

(முற்பகல் 10–50).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவு செய்து பேரவையின் உறுப்பினர்கள் அவரவர்கள் இடத்தில் உட்கார வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் த. சாந்தகுமாரி : விடுதலை பெற்று 42 ஆண்டுகள் ஆகியும், ஆதிதிராவிட மக்கள் அதிலும் குறிப்பாக அருந் ததிய மக்கள் சுதந்திரத்தின் விடியலை இன்னும் சுவைத்துப் பார்க்கவே இல்லை. ஏழு ஐந்தாண்டுத் திட்டங்களிலும் தாழ்த்தப்பட்ட அருந்ததிய மக்கள்—ஓரந்தள்ளப்பட்ட நிலை யிலேயே இருக்கின்றனர். தமிழகத்தின் புராதன சமுதாய அமைப்பு முறையில் தொழில் ரீதியை உள்ளடக்கிய சமூகப் பாகுபாடுகளும், கடமைகளும் ஒதுக்கப்பட்டிருந்தன. அதற் கொப்ப, ஆண்டாண்டுக் காலமாக தமிழகத்தில் வாழும் தாழ்த்தப்பட்ட அருந்ததிய மக்கள் விவசாயப் பெருங்குடி மக்களுடன் துணைத் தொழிலை நம்பி வாழ்க்கை நடத்தி னார்கள். விவசாயத் தொழில் விஞ்ஞான முறையில் நவீனப் படுத்தப்பட்டதினால் தாழ்த்தப்பட்ட இந்த அருந்ததிய சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள், தொழில் பாதிப்புக்குள்ளாகி நாதியற்றவர்களாகிவிட்டார்கள். இதற்குக் காரணம் பணிப் பாதுகாப்புக் கொடுக்கப்படாததுதான். கைத்தறி நெய்கிற நெசவாளர்கள் பிரிவுக்கு விஞ்ஞான தொழில் வளர்ச்சியால் பாதிப்பு ஏற்பட்டபொழுது, அவர்களுக்கு அரசாங்கமே முன்வந்து திட்டங்கள், உதவிகள் செய்து தொழில் பாதுகாப்பு, பணிப் பாதுகாப்பு வழங்கியது. அதேபோல, நகை செய்கின்ற தட்டார் பொற்கொல்லர் பிரிவு, பணிமுடக்கம் ஏற்பட்டபொழுது அரசு முன்நின்று சிறப்புச் சலுகைகள், திட்டங்கள் மூலம் தொழில் பாதுகாப்பு வழங்கியது.

காலங்காலமாக அருந்ததிய மக்கள் தோல் தொடர்பான தொழில்கள்—தோல் பதனிடுதல், காலணி மற்றும் தோல் பொருள் செய்தல், நீரேற்றும்—பரி செய்தல், போன்ற விவ சாயத் துணைத் தொழில்களைச் செய்து வந்திருக்கிறார்கள். நவீன அறிவியல் தொழில் நுட்ப மாற்றத்தால் எங்கள் அருந்ததிய மக்கள் பாதிப்புக்குள்ளான போது, நெச வாளர்களுக்குக் கொடுத்ததுபோல பொற்கொல்லர்களுக்குக் கொடுத்ததுபோல தோல் தொழிலாளர்களான அருந்ததியர் களுக்குப் பணிப் பாதுகாப்பு கொடுக்கப்படாமல் புறக்கணிக்கப் பட்டார்கள். இதுதான் அருந்ததிய மக்களின் பொருளாதார வீழ்ச்சியின் வரலாற்றுப் பின்புலம்.

அதோடு தோல் தொழில் தொடர்பான பேரதிகாரத்தை மத்திய அரசு தன்கையில் தக்க வைத்துக் கொண்டிருக்கிற நடைமுறையால், பல கோடி வருவாய் ஈட்டித் தருகின்ற தோல் சம்பந்தப்பட்ட தொழிலை நடுவனரசு அருந்ததியர் மக்களிடமிருந்து பறித்துக் கொண்டிருக்கிறது என்பதுதான் உண்மை நிலையாகும்.

இன்றைக்கு பஞ்சாயத்து ராஜ்யம் என்ற பேரிலே குறிப்பாக காங்கிரசு அல்லாத மாநிலங்களில் அமைப்பதற்குத் துடிக்கின்ற பாரதப் பிரதமரின் நோக்கத்தை, நாம் இவ்விதப் பின்னணியிலிருந்து தான் பார்த்திடல் வேண்டும். இந்த நிலையில் தாழ்த்தப்பட்ட அருந்ததிய மக்களுக்குக் கடந்த 13 ஆண்டுக் காலமாக ஆட்சியில் இருந்தவர்கள் எந்தப் பாதுகாப்பும் செய்திடவில்லை. கிராமங்கள் தோறும் தாழ்த்தப்பட்ட அருந்ததியர் மக்களுக்குத் தனித் தனியே இங்குமங்குமாக ''ஆட்டு லோன், மாட்டு லோன்'' என்று வழங்குவதெல்லாம் தலைவலியைப் போக்கத் தற்காலிகத் தைலம் பூசுவதல்லாமல் மூல வியாதியை மூடி மறைப்பதற்கொப்பானதாகும் என்று உறுதியோடு சொல்லிக்கொள்ள விழைகின்றேன். கடன்களைத் தனித் தனியாகக் கொடுக்காமல் இந்த மக்கள் தலைமுறையாகப் பழகி வந்த தொழிலை அடிப்படையாக வைத்து கூட்டாக, உறவாக, அமைப்பாக தொழில் நுட்பமாக உற்பத்தியைப் பெருக்கும் வகையில் செயல்படுத்தினால், 'கரோனா' என்ன, 'நார்த் ஸ்டார்' என்ன, 'பாட்டா' என்ன, அவர்கள் பாட்டனுக்குக் கூடப் பாடம் சொல்லிக் கொடுக்கக்கூடிய தோல் தொழில் வல்லுநர்களாக இவர்கள் ஜொலிப்பார்கள். வடக்கே இருக்கும் கான்பூர், கோலாப்பூருக்கு ஈடாக தெற்கே ஒரு தாராபுரம், ஒரு பொங்கலூர், ஒரு வெள்ளக்கோவில், ஒரு காங்கேயம், ஒரு பொள்ளாச்சி இப்படி கால் அணிகளுக்குப் பெயர் பெறும் வகையில் அரசே முன்னின்று தொழிற்சாலைகளை அமைத்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீர் தொடர்பாக 13 ஆண்டு காலமாக முந்தைய அரசு ஆதி திராவிட அருந்ததிய மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் கொடுத்திடவில்லை. என்னுடைய தொகுதியிலே வெள்ளியம்பாளையத்தில் நீர் இல்லாமல் அங்குள்ள கிணறுகளில் தண்ணீர் இல்லாமல், தனியார் குழாய் ஒன்றின் உடைப்பினுடைய கசிவை சிறுகச் சிறுகச் சேமித்து குடிக்க எடுத்துச் செல்ல வேண்டிய அவல நிலை இன்றும் தொடருகிறது.

18 விழுக்காடு ஒதுக்கீடு, ஆதி திராவிடர்களுக்கு. ஆனால் அவ்வப்பொழுது நடக்கிற கல்வி, வேலை வாய்ப்பு தேர்வின் போது இந்த வேலைக்கு ஆதி திராவிடர் வரவில்லை என்று, வேறு பிரிவினருக்கு அந்த வேலைகள் கைமாறிவிடுகின்றன. அதனையடுத்து அந்த ஏழை ஆதி திராவிட மக்களுக்கு அந்த



வேலைகளை உத்தரவாதப்படுத்தும் நடைமுறையை வகுத்திடல் வேண்டும். ஒவ்வொரு கட்டப் பதவி உயர்வின்போதும் இந்த முறைதனைக் கடைபிடிக்க வேண்டும். மேலும் 18 விழுக்காடு என்பதனை எல்லா வேலைகளுக்கும், எல்லா நிலைக்கும், எல்லா மட்டத்திற்கும், எல்லா நிறுவனங்களுக்கும் தொய்வில்லாமல் செய்யவேண்டும்.

பெண்களுக்கென 30 விழுக்காடு ஒதுக்கும் நிலையிலும், முதல் இரண்டு வகுப்பு ஆசிரியைகளுக்குக் கொடுக்கும் நிலையிலும், சத்துணவு மையப் பணியாளர் நிலையிலும், இப்படி அனைத்திலும் இதனை சாத்தியமாக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

நாட்டுடைமை ஆக்கப்பட்ட போக்குவரத்துக் கழகங்களில் கிட்டத்தட்ட 91,388 தொழிலாளர் உள்ளனர். இதில் 16,450 பேர் தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் ஆவர். 18 விழுக்காடு கணக்கின்படி இன்னும் சுமார் 1,000 பேருக்கு இந்தத் துறையில் வேலை கொடுக்கப்பட்டு இருக்க வேண்டும். முந்தைய அரசு இதை அமல்படுத்தவில்லை. மேலும் போக்குவரத்துக் துறையில் பேருந்து வழித் தடங்களுக்கு ஒதுக்கீடு செய்வதிலும் பேருந்துகள் வழங்குவதிலும்கூட இந்த ஒதுக்கீட்டு விழுக்காடு காப்பாற்றப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். இதன் தொடர்பான அரசு ஆணை எண். 1614, 2126 இதற்கு துணை நிற்கும்.

இதற்கெல்லாம் தாழ்த்தப்பட்ட ஆதி திராவிட மக்களை மனித நேயத்தோடு மாண்புறச் செய்ய முனைந்து செயல்படுவதற்கெல்லாம் ஒரு கொள்கைத் தெளிவு ஏற்பட வேண்டும். அது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நடைமுறையிலே நாடி நரம்புகளில் இரண்டறக் கலந்து இருக்கிறது. இந்த நெறிதனை நமக்கு வழங்கியவர் ஐயா, தந்தை பெரியார் அவர்கள். இதனை முன்னெடுத்துச் சென்ற தளபதி பேரறிஞர் அண்ணா அவர்கள், வழிநடத்திச் செல்லும் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் — இவர்களது கொள்கை முழக்கங்கள் அனைத்தும் தமிழகத்தின் பட்டிதொட்டிகள் முழுவதும் எடுத்துச் சொல்லப்பட வேண்டும்.

புத்தகங்களாக, ஒலி நாடாக்களாக, துண்டுப் பிரசுரங்களாக, பாடல்களாக அரசே பொறுப்பேற்று மலிவு விலையில் வெளியிடுதல் வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் இன்றைக்கு பட்டிதொட்டியெல்லாம் சாதீய உணர்வுகள் மேலோங்கி நிற்பது தவிர்க்கப்பட்டு தந்தை பெரியார் அவர்களின் கொள்கைகளும் இலட்சியங்களும் நிறைவேற ஏதுவாகும்.

நேரம் கருதி சில வேண்டுகோள்களை நேரடியாக முன் வைக்கிறேன்.

என் தொகுதியில் பெதப்பம்பட்டியில் ஆதி திராவிட மாணவர்கள் 50 பேருக்கும் மாணவிகள் 50 பேருக்கும். மாணவர் நல விடுதிகளை அமைத்துக் கொடுத்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தாராபுரம் நகராட்சி எல்லைக்குள் ஆதி திராவிடர்களுக்கென்றே 1916-ம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட இடங்களில் இன்றளவும் வீட்டு மனைப்பட்டா வழங்கப்படாத நிலையில் பாதிக்கப்பட்டுள்ள 600-க்கு மேற்பட்ட ஏழை ஆதி திராவிட அருந்ததிய குடும்பங்களுக்கு, உடனடியாக கருணை கூர்ந்து பட்டா வழங்கிட வேண்டுமாய் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தாராபுரம் தொகுதி கடந்த பல ஆண்டுகளாக வறண்டு கிடக்கின்ற நிலையில் தாராபுரம் தொகுதியை வறட்சிப் பகுதியாக அறிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு எனது தொகுதி தொழில் ரீதியாகப் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட்டும் இன்னும் எந்தத் தொழிற்சாலைகளும் ஆரம்பிக்கப்படாததால் அரசே முன்வந்து பெரிய தொழிற்சாலைகளைத் துவக்கி என் பகுதி மக்களுக்கு வாழ்வளிக்க வேண்டுகிறேன்.

மேலும் தாராபுரம் நகரில் அரசினர் பெண்கள் கலைக் கல்லூரி ஒன்று ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முடிவாக, இந்த நிதிநிலை அறிக்கை — ஒரே வார்த்தையில் கூறுவதானால் இது சமூக நீதியை, அரசியல் நீதியை, பொருளாதார நீதியை உள்ளடக்கிய நிதி நிலை அறிக்கை என்று கூறி என் கன்னிப் பேச்சினை முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

*திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு ஆதி திராவிடர் பழங்குடி மக்கள் நலத்துறை அமைச்சரவர்களால் இங்கே முன் வைக்கப்பட்ட மானியக் கோரிக்கையின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் எனது கருத்துக்களைத் தெரிவிக்கிறேன்.

தலைவரவர்களே, நாடு விடுதலை பெற்று 42 ஆண்டுகள் கடந்து விட்டன. ஒன்பதாவது முறையாக வாக்காளர்களிடத்திலே வாக்குப் பெற்று முடிந்தாகிவிட்டது. ஆனால் இன்றைக்கும் ஆதி திராவிடர்கள் பழங்குடி இன மக்களுக்கான கடைசி அடிப்படை வசதியான சுடுகாட்டுப் பிரச்சினை தீர்க்கப்படவில்லை என்ற இந்த வெட்கக் கேடான நிலைமையை இன்று நான் எடுத்துச் சொல்வது என்னுடைய முதற் கடமையாகக் கருதுகிறேன்.



இந்தச் சுடுகாட்டுப் பிரச்சினை எப்படி வந்தது? சுடுகாடு இல்லையா? கிராமம் இருக்கிற இடமெல்லாம் சுடுகாடு இருந்தது, ஆனால் அந்தச் சுடுகாட்டைப் பெற்றுத் தருவது புதிய ஒரு சாதனையா? இல்லை. அந்தச் சுடுகாடுகள் ஒவ்வொரு கிராமத்துக்கும் அந்தக் காலத்திலேயிருந்தே இருந்தன. இன்று நிலங்களும் வழிகளும் பொறுத்தவரையில், ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதால் சுடுகாடு இருந்தால் நடைபாதை இல்லை; நடைபாதை இருந்தால் சுடுகாடு இல்லை. இரண்டும் இல்லாத கிராமங்களும் உண்டு. இத்தகைய நிலைமைக்குக் காரணம் என்ன? இன்றைக்கு அந்தச் சுடுகாட்டு நடைபாதைகள் பெரிய பெரிய நிலச்சுவான்தார்களாலும் பக்கத்து நில உடமையாளர்களாலும் ஆக்கிரமிக்கப்பட்டதன் காரணமாக அந்தச் சுடுகாட்டுக்கு நடைபாதை இல்லாமல் உள்ளது. இது, மாநிலம் முழுவதும் எந்தப் பகுதியை எடுத்துக்கொண்டாலும், ஒருசில இடங்களைத் தவிர, உள்ள பெரும் பிரச்சினையாகும். இன்றைக்கு மனுப் போட்டு சுடுகாடு வேண்டும், நடைபாதை வேண்டும் என்று அந்த மக்கள் மனுப் போட்டால் இதற்கு என்ன பதில் கிடைக்கிறது? மனுப் போட்ட ஒரே குற்றத்திற்காக இன்றைக்கு ஊர்க் கட்டுப்பாடு, வேலை மறுக்கப்படுவது, ஊர்கூடி தாக்குதல், அடிபடுதல், எரிபடுதல்— இதுதான் மாநிலம் முழுவதும் உள்ள நிலை.

ஆகவே, இந்த நிலை இனியும் நீடிக்க வேண்டுமா என்பதே இன்று நம் முன்னால் உள்ள கேள்வி. இதை அனுமதிக்க இயலாது. இந்த அரசு உடனடியாக இதன் பேரில் ஒரு துரித நடவடிக்கை எடுத்து, இந்தச் சுடுகாடு, நடை பாதை ஆகிய இந்தக் காரியங்களுக்கு இறுதியாக ஒரு முற்றுப் புள்ளி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

எடுத்துக்காட்டுக்காக நான் சொல்கிறேன், அரூர் வட்டத்தில் சங்கிலிவாடி என்று ஒரு கிராமம். அந்தக் கிராமத்தில் சுடுகாட்டுப் பிரச்சினை உள்ளது. ஏறத்தாழ ஒரு கிலோ மீட்டர் தூரத்திலே உள்ள அந்தச் சுடுகாடும், அதற்கான நடைபாதையும் இன்றும் ஆக்கிரமிப்பிலேயே உள்ளதால் அந்த பெரிய நிலச்சுவான்தாரரால் சுடுகாட்டுக்கு ஒரு பிரேதம் உள்ளபடியே எடுத்துச் செல்லப்படுகிறபோது பல பூசல்களை உருவாக்கி தடுக்கப்படுகிறது. பிரேத அடக்கம் என்றால், இன்றைக்குப் போலீசும், தாசில்தாரும் அந்த இடத்திற்குப் போக வேண்டும். பிரேதத்தை மத்தியிலே வைத்து விட்டு, அங்கு ஒரு சமரசத்தை ஏற்படுத்தி, அந்தப் பிரேதத்தை அடக்கம் செய்ய வேண்டிய நிலைமை அங்கே ஏற்படுகிறது.

அதே போல், மாம்பாடி என்ற ஒரு கிராமம். அந்தக் கிராமத்தில் சுடுகாடு ஆக்கிரமிப்புகள் நடந்துள்ளதால் சுடுகாடா அல்லது பட்டா நிலமா என்பது தெரியாமல், ஒரு பிரேதம் புதைக்கப்பட்டு, ஒரு ஜாதிக் கலவரமாகவே அங்கே உருவாகும் பதட்டம் உருவாகிவிட்டது.

(முற்பகல் 11-00)

அந்த நேரத்தில் வருவாய்த் துறை அதிகாரிகளும், போலீஸ் அதிகாரிகளும் தலையிட்டு புதைத்த பிரேதத்தை வேறு இடத்தில் எடுத்து புதைக்க வேண்டிய நிலைக்கு ஆளாக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும். சுடுகாடு, நடைபாதை ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும். ஆகவே இதற்காக அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இதுவும் கூட மலை ஜனங்களுக்கு இந்தச் சுடுகாடு என்பது இல்லாத நிலை இருக்கிறது. இப்போது காடுகளிலும், ஆற்றோரங்களிலும் புதைத்துக் கொண்டிருக்கிறார்கள். வனத் துறை அதிகாரிகள் அங்கே போனாலும் விரட்டி வழக்குப் போடுகிறார்கள். ஆறு, ஓடை பகுதி ஓரங்களுக்கு வந்தால் பெரிய நிலச்சுவான்தார்கள் ஆக்கிரமிப்பு, அந்த மலை வாழ் மக்களுக்கு சுடுகாடு என்பது அடையாளப்பூர்வமாகக் கூட இல்லாத கொடுமை இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், இந்த சுடுகாடு, நடைபாதை பிரச்சினைகளாக எழுந்து பின்னால் அவை ஜாதிக் கலவரங்களாக மாற்றப்படுகின்றன என்பது இங்கே கவலையோடு பார்க்க வேண்டிய விஷயம் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து இன்றைக்கு மலை வாழ் மக்களுடைய ஒட்டு மொத்தமான கோரிக்கையாக கடந்த 28—7—1987-ல் தென்னாற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சியில் 22 மலைகளிலிருந்து கூட்டப்பட்ட அந்த மலைவாழ் மக்களுடைய மாநில மாநாட்டில் முன் வைக்கப்பட்ட கோரிக்கையை இங்கே எனது கருத்தாக முன் வைக்க விரும்புகிறேன். மலைவாழ் மக்கள் பரம்பரையாக சாகுபடி செய்து வரக் கூடிய நிலங்கள் இன்று வரையில் பட்டா செய்யப்படவில்லை. இதனால் வனத்துறை அதிகாரிகளுடைய கொடுமைகளுக்கும், பல்வேறு தாக்குதல்களுக்கும் ஆளாக்கப்படுகிறார்கள். எனவே, உடனடியாக அரசு அனைத்து சாகுபடியில் உள்ள மலை நிலங்களையும் பட்டா செய்ய வேண்டும். மலைகளில் உள்ள பூர்வ குடி மக்களிடம் இருக்கும் நிலங்கள் வெளியாருடைய ஆதிக்கத்தில் இன்றைக்கு பெருமளவில் போய்க் கொண்டிருக்கின்றன. அப்படி வெளியார் மலை ஜனங்களின் நிலங்களை வாங்கக் கூடாது என்று சட்டம் இருந்தும் இன்றைக்கு பத்திரப் பதிவுகள் நடைபெறுகின்றன. விக்கிரயங்கள் நடைபெறுகின்றன. இன்றைக்கு நாடு முழுவதும் ஒவ்வொரு மலையிலும் மலை ஜனங்களிடம் இருக்கிற நிலங்கள் கைமாறிப் போய் உள்ளது. குறிப்பாக கொல்லி மலை போன்ற இடங்களில் சிறுகச் சிறுக இத்தகைய நிலங்கள் சேர்க்கப்பட்டு இன்றைக்கு பெரிய எஸ்டேட்டுகளாக, தோட்டக் காடுகளாக மாறி வருகின்றன. அரசு இந்த நிலைமைகளை எல்லாம் அனுமதிக்கக் கூடாது. சட்ட விரோதமான கிரயங்கள் தடை செய்யப்பட வேண்டும். இந்த நிலம் யாரிடம் இருந்ததோ அந்த நிலத்தை அவர்களுக்கே பெற்றுத் தரும்படியாக, அவசியப்பட்டால் ஒரு சட்ட திருத்தம் கொண்டு வந்து கூட அந்த மக்களிடம் அவை ஒப்படைக்கப்பட வேண்டும்.





மலைகளின் செல்வங்கள் இன்றைக்கு காட்டு மரங்கள், சந்தனக் கட்டைகள், அரசியல் செல்வாக்கும், பண வசதியும் படைத்த பெரிய நபர்கள் தங்களுடைய செல்வாக்கைக் கொண்டு இன்றைக்கு லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான ரூபாய்களை இந்தக் காட்டுச் செல்வங்களை அழித்து கொள்ளை அடிக்கிறார்கள். ஆகவே, அதைத் தடுத்து நிறுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதோடு மலைவாசிகளைக் கொண்ட ஒரு வனப் பாதுகாப்பு கமிட்டியையும் அமைக்க வேண்டுமென்று அந்த மாநாட்டில் ஆலோசனை தெரிவிக்கப்பட்டது. இதை அமுலாக்க வேண்டும்.

அடுத்து, மலைகளில் உள்ள கருங்கற்களை இன்றைக்கு தனியாருக்கு 'கான்ட்ராக்ட்' கொடுத்து கோடிக்கணக்கான அளவிற்கு லாபம் அடைய வழி வகுக்கப்பட்டிருக்கிறது. இவற்றை அரசே ஏற்று நடத்தி இதனால் வருகிற இலாபத்தை மலை வாழ் மக்களுடைய மேம்பாடு திட்டம் போன்ற பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு பயன் படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மலைகளில் மேல் நிலைப் பள்ளி வரை ஏற்படுத்த வேண்டும். இன்றைக்கு ஐந்து வகுப்புகள் வரையில் உள்ள பள்ளிக் கூடங்கள் தான் அங்கே இருக்கின்றன. அதிலும் இரண்டு ஆசிரியர்களுக்கு மேல் அங்கே இல்லை. அதனால் இன்றைக்கு மாணவர்கள் மேல் நிலைப் பள்ளிகளுக்கு தூரமான பகுதிகளுக்குச் சென்று படிக்க வாய்ப்பு இல்லாத காரணத்தால் தரமான வளர்ச்சி பெறக் கூடிய மாணவர்களை உருவாக்குவதில் ஏராளமான சிரமம் இருக்கிறது. அந்த மலைப் பகுதிகளில் உயர் நிலைப் பள்ளிகளை உருவாக்கி, அந்த மலை வாழ் மக்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தாழ்த்தப்பட்ட பழங்குடியினருக்கு ஒதுக்கக்கூடிய வேலை வாய்ப்பு இடங்கள், பதவிகள் அதற்கான ஆட்கள் இல்லையென்று சொன்னால், அதற்கான தகுதியை அவர்களிடத்தில் உருவாக்கி அந்த இடத்தை நிரப்புவதோடு, ஏற்கனவே இருந்த நிலுவையான இடங்களையும் இறுதியில் பூர்த்தி செய்யக் கூடிய அளவிற்கு அரசு பொறுப்பேற்று, கண்காணித்து, அமல் நடத்த வேண்டும்.

மற்றும், மருத்துவம், சாலை வசதி, போக்குவரத்து, நியாய விலைக் கடைகள் போன்ற பல்வேறு காரியங்களை அந்தப் பகுதியிலே உருவாக்கித் தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எம். அண்ணாமலை] [1989 ஏப்ரல் 29

இறுதியாக இன்றைக்கு இருக்கக் கூடிய பொய் வழக்குகளை எடுத்துக் கொண்டால், மலைப் பகுதியிலே 3 விதமான தாக்குதல்கள் நடைபெறுகின்றன. ஒன்று வனத்துறை, இரண்டாவது இன்றைக்கு வெளிப் பகுதிகளிலிருந்து குடியேறியிருக்கிற ஆட்கள், மூன்றாவது போலீஸ், இவர்களுடைய கருவியாக இன்றைக்குப் போலீஸ் செயல் படுகிறது. எந்த நிமிடமும் அந்த மக்கள் தாக்கப்படலாம், வஞ்சிக்கப்படலாம் என்ற நிலை இருக்கிறது. எனவே அத்தகைய நிலைக்கு ஒரு பாதுகாப்பு அளிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக அவர்கள் மேல் வழக்குப் போடுவது என்றால், குறைந்த பட்சம் அவசியமாக ஆர்.டி.ஓ. அல்லது தாசில்தார் முன்னிலையில் இதைப் பரிசீலனை செய்து, அது சரியா என்பதை அறிந்த பிறகு வழக்குப் போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இந்த மலை ஜனங்களுக்காக ஒரு தனி இயக்குநர் அலுவலகத்தை உருவாக்க வேண்டும் என்று அந்த மாநாடு கேட்டுக் கொண்டுள்ளது. அதை அமுல்படுத்தும்படி கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சித்தேரி மலையில் உள்ள லேம் சொசைட்டி, இன்றைக்கு மலை வாழ் மக்கள் நல கூட்டுறவு சங்கம் என்பது நான் அறிந்தவரையில் இது ஒன்று தான் இருக்கிறது. இன்றைக்கு என்ன நடந்து இருக்கிறது என்று சொன்னால், பல லட்சக்கணக்கான ரூபாய்கள் கொள்ளை நடந்து, அந்த போர்டு கலைக்கப்பட்டு இருப்பதாகத் தெரிகிறது. அதே நேரத்தில் லேம் சொசைட்டிக்குப் பயன்படுத்தப்பட்ட வேன், சந்தனக் கட்டைக் கடத்தப்பட்டதாக பிடிபட்டு இன்றைக்கு வழக்குத் தொடரப்பட்டு, அந்த டிரைவர் மேலே தான் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதில் சம்பந்தப் பட்டவர்கள் மறைக்கப்பட்டிருக்கிறார்கள். நான் இங்கே வலியுறுத்திச் சொல்ல விரும்புவது, விவரமாகச் சொல்ல நேரம் இல்லை, இதன் பேரில் அரசு ஒரு பூர்வாங்கமான விசாரணை செய்ய வேண்டும். அதிலே யார் யாரோ எத்தகைய மனிதர்களோ ஒளிந்து இருக்கிறார்கள். ஆனால் அந்த டிரைவர் மேல் மட்டுமே வழக்குப் போட்டு சஸ்பெண்டோ, டிஸ்மிஸ்ஸோ செய்யப்பட்டு இருப்பதாகத் தகவல். இதன்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் ஆதி திராவிட பழங்குடி மக்களுடைய நலத்திட்டங்களைச் செயல்படுத்துவதில் எந்த அளவிற்கு இன்றைக்கு நிர்வாகத்திலே கோளாறுகளும், முறைகேடுகளும் நடந்துள்ளன என்பதற்கு சமீபத்தில் ஆதி திராவிட நலத்துறை இயக்குநர் அவர்களால் வெளியிடப்பட்டுள்ள ஒரு செய்தி 16–2–1989 தினமணியில் வெளியாகி உள்ளது. அந்தச் செய்தியை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ''தாழ்த்தப்பட்ட மற்றும்



1989 ஏப்ரல் 29] [திரு. எம். அண்ணாமலை]

பழங்குடி மக்களுக்கான அரசின் நலத்திட்டங்கள் சரிவர நிறைவேற்றப்படாததற்கு, கல்விக்கூட தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள முதல்வர்களும், ஆசிரியர்களுமே காரணம் என அந்தக் கூட்டத்தில் பேசிய அவர் புகார் கூறினார். இப்பணிக்கு கூட்டுறவுத் துறையும் சரிவர உதவ மறுத்துள்ளது என்று அவர் சொன்னார். இவ்வாண்டு தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட 85 கோடி ரூபாயில் செலவழிக்கப்பட்டது 35 கோடி ரூபாய், இதற்குக் காரணம் சில கல்வி நிறுவனங்களால், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்களுக்கான புத்தகங்கள் இதர வகுப்பினருக்குத் தரப்பட்டுள்ளது. இது தீண்டாமை ஒழிப்புச் சட்டப்படி குற்றமாகும். இப்படி நடந்த முதல்வர், தலைமை ஆசிரியர்கள் கைதாகும் நிலையும் வரலாம் என்று அவர் எச்சரித்தார். ஒரு கல்லூரியில் ரூபாய் மூன்று லட்சம் வரையில் துஷ்பிரயோகம் நடந்துள்ளது. சில கல்வி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட உதவித் தொகையை வழங்காமல், வங்கியிலே போட்டுவிட்டு மெதுவாகவே மாணவ மாணவியர்களுக்கு தருகின்றனர் என அவர் சொன்னார். இவ்வாண்டு தாழ்த்தப்பட்ட பழங்குடியினர்களுக்காக அளிப்பதற்காக ரூபாய் 11 லட்சம் ஒதுக்கப்பட்டதில் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது 4 லட்சம் ரூபாய்தான் என்று ராஜ்குமார் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

தலைவர் அவர்களே, உங்கள் வாயிலாக நான் கேட்டுக் கொள்ள விரும்புவது, மாணவர்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட தொகையில் 85 கோடியில் 35 கோடி ரூபாய்தான் செலவழிக்கப்பட்டுள்ளது. தாழ்த்தப்பட்ட மக்களுக்காக கொடுக்கப்பட்ட புத்தகங்கள் வேறு மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அதற்காக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

தீண்டாமைக் குற்றத்தின்கீழ் கைது செய்யப்படவேண்டும் என்று அந்த இயக்குநரே தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் இதுவரையில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை நான் அறிய விரும்புகிறேன். கல்லூரியில் மூன்று லட்சம் வரையில் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு இருக்கிறது. மாணவர்களுக்கு பரிசுத் தொகையாக ஒதுக்கப்பட்ட 11 லட்சத்தில் 4 லட்சம் தான் கொடுக்கப்பட்டு இருக்கிறது. இப்படிப்பட்ட நிலை இலாக்கா வாயிலாகவே நடந்தால், இன்னும் எத்தனை எத்தனை கொடுமைகளும் கொள்ளைகளும் இந்தத் துறையில் இடம் பெற்றிருக்கும் என்பதை வேதனையோடு எடுத்துக்கூறி இதன் பேரில் துரித நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது வந்துள்ள செய்தி தஞ்சை பெண்களுடைய கல்லூரியில் அவர்களுடைய உதவித் தொகை இன்று வரையில் கொடுக்கப்படவில்லை. பரிட்சை முடிந்து வீட்டுக்குப் போகக்கூடிய நிலைமையில், கொடுக்காமல் இருப்பது, என்பது இந்தத் துறை எந்த அளவிற்கு செயல்படுகிறது என்பதற்கு இது ஒரு சரியான எடுத்துக்காட்டு. ஆகவே இந்த நிலைமைகளை உடனடியாக மாற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு வீடு கட்டக்கூடிய திட்டம் ஒன்று இதில் அறிவிக்கப்பட்டு இருக்கிறது. இதிலே ஒரு திருத்தம் நான் சொல்ல விரும்புவது, இதனுடைய அகல நீளத்தை இன்னும் கொஞ்சம் கூட்டவேண்டும்.

(முற்பகல் 11-10)

இன்றைக்கு இருக்கிறபடி, ஒரு தனி மனிதன்கூட வாழ முடியாத நிலைமை இருக்கிறது. எனவே இன்னும் கொஞ்சம் அதனுடைய அளவுகளைக் கூட்டவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்லூரி மாணவர்களுக்கான உதவித் தொகை, உணவுக் கட்டணங்கள், இன்றுள்ள விலைக்குத் தக்க அளவிற்கு, அதனுடைய உணவுக் கட்டணங்கள் போன்றவற்றை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் நான் கேட்டுக் கொள்வது இந்த ஆதிதிராவிட மாணவர்கள் கிராமப்புறங்களிலிருந்து தான் பெரும் பகுதி அளவிற்கு இன்றைக்கு வருகிறார்கள். விடுதிகளில் ஆண்டுக்காண்டு அந்த மாணவர்களுடைய விகிதாச்சாரத்தின் அடிப்படையில் மாணவர்கள் சேர்க்கப்படுவதில்லை. விடுதிகளில் ஆண்டுக்காண்டு அந்த வளர்ச்சியின் அடிப்படையில் அந்த மாணவர்கள் சேர்க்கப்பட வேண்டும். வெளியே இருந்து வரக்கூடிய மாணவர்களுக்கு இலவச 'பஸ் பாஸ் வழங்கினால், அது உள்ளபடியே ஒரு முதல் உதவியாக, பேருவிதயாக இருக்குமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன். அதுபோன்று இன்றைக்கு இருக்கக்கூடிய ஆதிதிராவிடர் மாணவர்களுடைய விடுதிகள் தனியாரிடத்திலேதான் பெரும் பகுதி இருக்கிறது. நான் குறிப்பாகச் சொன்னால், அனுபவ ரீதியாகச் சொன்னால், வீடு கொடுக்கவே பலர் அச்சப்படுகிறார்கள். உதவாத விடு, தேவைப்படாத இடம், இந்த இட நெரிசலில் சுகாதாரக் கேடான நிலையில், அந்த மாணவர்கள் படிக்க வேண்டிய நிலையை நாம் யோசிக்கவேண்டும்.

இன்றைக்கு படிப்பதற்குத் தொகையும், வாய்ப்பும் கொடுத்தால் மட்டும் போதாது. அந்த மாணவர்கள் படிப்பதற்கான சூழ்நிலையையும், சுற்றுச் சார்பையும் நாம் உருவாக்கிக் கொடுக்க வேண்டாமா ? ஒரே இடத்தில் ஒருவர் மீது ஒருவர் மோதி மிதிபட்டு, இன்றைக்கு இருந்தால்,



உள்ளபடியே அந்த மாணவர்கள் இன்றைக்கு தேர்வுகளில் தவறக் கூடிய ஒரு யதார்த்த நிலைமை ஏற்படக் கூடிய பிரச்சினை எழுகின்றது. அந்த விடுதிகளில் இருக்கக் கூடிய இட வசதி, அதனால் வரக் கூடிய நெருக்கடி, அந்த உணவில் வரக்கூடிய மோசடிகள்...... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முடித்துவிடச் சொன்னேன். சீக்கிரம் முடித்து விடுங்கள்.

திரு. எம். அண்ணாமலை : அந்த உணவில் வரக் கூடியது போன்றவைகளினால் அன்றாடம் துக்கக் கண்ணீர் வடிக்கக் கூடிய நிலையில் அந்த மாணவர்கள் இருக்கின்றார்கள். எனவே அந்தக் கொள்கைகளையும் முறைகேடுகளையும் தவிர்த்து, உள்ளபடியே அந்த மாணவர்களின் கல்விக்காகவும், அவர்களுடைய எதிர்கால வளர்ச்சிக்காகவும் உறுதியாகப் பாடுபடவேண்டுமென்பதற்காக இந்தத் தணிக்கை முறைகளும், கண்காணிப்பு முறைகளும் சீராக இல்லை என்று சொன்னால், நிச்சயமாக இந்தப் பலன் கிடைக்காது. இந்த நிலைமை மேலும் மேலும் நீடித்த வண்ணம் தான் இருக்கும். எனவே இந்த அரசு அதன் பேரில் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. வெ. கோவிந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மாமன்றத்திலே பேசுவதற்கு எனக்கு இந்த இனிய சந்தர்ப்பத்தை வழங்கிய உலகெங்கும் வாழ்கின்ற தமிழ் உள்ளங்களில் நீங்காத இடத்தினைப் பெற்றுள்ள தமிழ் இனத் தலைவரும், தமிழக முதல்வருமான டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், இனமான காவலர் மாண்புமிகு பேராசிரியர் அவர்களுக்கும், மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியினை சமர்ப்பித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில் நான்வெற்றிபெற்று வந்துள்ள பேரணாம்பட்டு தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு என் கன்னிப் பேச்சினை தொடங்குகின்றேன். இந்த நிதிநிலை அறிக்கையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்காக 1989-90 ஆம் ஆண்டில் 76.1 கோடியாக உயர்த்தியிருப்பது குறித்து நான் மகிழ்ச்சியோடும் பெருமையோடும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இடைப்பட்ட ஆண்டில் ஆதித் திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு மேலும் 25 மாணவர் விடுதி புதியதாக திறக்கப்படுவதையும், அவர்களுக்குப் பட்டப் படிப்பு வரை இலவசமாகக் கல்வி அளிக்கப்படுவதையும் அறிவித்திருப்பது அம்மக்களின் மீது தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் எவ்வளவு அக்கறை கொண்டு செயல்படுகிறார் என்பதைத் தெள்ளத் தெளிவாகக் காட்டுகிறது.

[திரு. வெ. கோவிந்தன்] [1989 ஏப்ரல் 29

ஆதிதிராவிடர் பணியீட்டாளர்களுக்கு தொடக்க செலவாக வழங்க இதுவரை தாட்கோ மூலமாக 15.56 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதில் 12.17 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தை மேலும் தீவிரமாகச் செயல்படுத்த 1989-90 ஆம் ஆண்டில் தாட்கோவிற்கு 200 லட்சம் ரூபாய் அளிக்கப்படுவதை மேலும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி திட்டங்களுக்கு கழக அரசு 20 கோடி ரூபாய் செலவில் சிறப்புத் திட்டங்களை ஏற்படுத்த இருப்பதை பெரும் வரவேற்கிறேன். சொன்னதை செய்வோம் செய்வதை சொல்வோம் என்பதற்கு ஏற்ப கழக ஆட்சி பொறுப்பேற்ற குறுகிய காலத்தில் தமிழினத் தலைவர் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எப்.எஸ். தேர்வுகளுக்கு செல்லும் தமிழ்நாட்டு மாணவர்களுக்கு தமிழ்நாடு இல்லத்தில் குறைந்த கட்டணத்தில் தங்க இடமும் உணவும் அளிப்பது போற்றப்பட வேண்டியதாகும்.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்ற பேரறிஞர் அண்ணாவின கூற்றுப்படி ஏழை எளிய பாட்டாளி மக்களின் பல்லாண்டு கால இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் முடிவு எடுத்ததை தமிழகம் பாராட்டுகிறது. மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களை இனம் பிரித்து அவர்களுக்கு சலுகை அறிவித்தது சமுதாய அறிஞர்களின் பாராட்டுதலைப் பெறக் கூடியதாகும். ஜாதி மத பேதமற்ற சமுதாயத்தை உருவாக்க தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய வழியில் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் நடைபோட்டு முழுமையான சமுதாய சீர்திருத்தத்தை ஏற்படுத்தி, சமுதாய சீர்கேடுகளைக் களைந்து எறிய தந்தை பெரியார், டாக்டர் அம்பேத்கார் போன்ற அறிஞர்களின் வாழ்க்கை வரலாற்றை மாணவ மாணவியர் அறியும் வண்ணம் பாடப் புத்தகங்களில இடம் பெறச் செய்ய வேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு மனை கையகப்படுத்தும் போது முந்தைய அரசு நடைமுறையை மாற்றி இருக்கிறது. கட்டாய கையகப்படுத்தும் முறையை வீட்டுவசதி வாரியம், குடிசை மாற்று வாரியம், போன்றவற்றில் இருப்பதைப் போல கட்டாயக் கையகப்படுத்தும் முறையை கொண்டு வரவேண்டும். இத்திட்டம் 1967-ல் நமது கழக அரசு நடைமுறைப்படுத்திய திட்டமாகும். மேலும் ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டு மனை கையகப்படுத்தும் நடவடிக்கைகளில் பல வழக்குகள் தேங்கி கிடக்கின்றன. இவற்றைத் தீர்க்க தனி நீதிமன்றம் அமைக்க மாண்புமிகு தமிழக முதல்வர் சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1989 ஏப்ரல் 29] [திரு. வெ. கோவிந்தன்].

அடுத்து பிரிக்கப் போகும் மாவட்டம் எதுவாக இருந்தாலும் அதற்கு சட்ட மாமேதை டாக்டர் அம்பேத்கார் மாவட்டம் எனப் பெயர் சூட்டுவதாக ஆதிதிராவிட மக்கள் கேட்காமலேயே தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அறிவித்தது. ஆதிதிராவிட மக்களின் நீண்ட நாளைய ஆசையை அவர் நிறைவேற்றிய திட்டமாகும். அதை பெரிய மாவட்டமாக வட ஆற்காடு மாவட்டத்தில் வேலூரை தலைநகராகக் கொண்டு இயங்கும் மாவட்டத்திற்கு டாக்டர் அம்பேத்கார் மாவட்டம் என்று பெயர் சூட்ட வேண்டுமென்று ஆதிதிராவிட மக்களின் சார்பாக வேண்டுகிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியைப் பற்றி சில வார்த்தைகள் கூறி முடித்துக் கொள்கிறேன். எனது தொகுதியில் ஒரே ஒரு இஸ்லாமிய மேல்நிலைப் பள்ளி மட்டும் தான் இருக்கிறது. பெண்களுக்கென்று மேல் நிலைப்பள்ளி இதுவரையில் இல்லை. குறிப்பாக பேரணாம்பட்டைச் சுற்றியுள்ள கிராமங்களிலிருந்து வருகிற ஆதிதிராவிட மாணவிகள் மேற்கொண்டு படிக்க இயலாமல் மிகவும் கஷ்டப்பட்டு தங்களுடைய படிப்பை பாதியிலேயே நிறுத்தி விடுகிறார்கள். அதற்காக பேரணாம்பட்டில இருக்கக் கூடிய பெண்கள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பேரணாம்பட்டு நகரில் ஒரு ஆதிதிராவிடர் நலப்பள்ளி உள்ளது. அப்பள்ளியில் சுமார் 1,000 மாணவர்கள் படித்து வருகிறார்கள். 23 ஆசிரியர்கள் பணியாற்றி வருகிறார்கள். அப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக ஆக்க வேண்டுமாய் அன்போடு கேட்டுக் கொள்கிறேன். சுமார் 1,000 மாணவிகள் உயர்நிலை மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் கல்வி கற்க சுற்றுப்புற கிராமங்களிலிருந்து வந்து பயின்று வீடு திரும்ப முடியாத நிலையில் அவர்களுடைய நிலை இருக்கிற காரணத்தால் மாணவிகளுக்கு அங்கேயே தங்கிப் படிக்க மாணவியர் விடுதி ஒன்றைத் தொடங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பேரணாம்பட்டு கலைஞர் நகரில் சுமார் 500 மாணவர்கள் 3 கிலோ மீட்டர் தூரம் நடந்து வந்து நெரிசலான பஸ் போக்குவரத்து சாலையை கடந்து வந்து கல்வி கற்கின்ற சூழ்நிலையில் இருக்கிறார்கள். ஆகவே அங்கே கலைஞர் நகரிலே ஒரு ஆதிதிராவிட நலப் பள்ளியைத் துவக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-20)

எனது தொகுதி மிகப்பரந்த கிராமங்களைக் கொண்ட தொகுதி. திடீரென்று தீ பிடித்துக் கொண்டால் தீயணைப்பு நிலையம் எதுவும் இல்லை. 20 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள ஆம்பூர் மற்றும் குடியாத்தம் நகரிலிருந்துதான் தீயணைப்பு வண்டி வர வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அந்த வண்டி வருவதற்குள் பெருத்த சேதம் ஏற்படுகிறது. எனவே பேரணாம்பட்டிலே

நிரந்தர தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். பேரணாம்பட்டு பகுதியில் தோல் பதனிடும் தொழிலும், பீடி சுற்றும் தொழிலும் நடைபெற்று வருகின்றன. அனைத்தும் இயந்திரங்களைக் கொண்டு நடைபெறுவதால் வேலை கிடைக்காமல் கூலியாட்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். பதனிடப்பட்ட தோல்களைக் கொண்டு கைவினைப் பொருள்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை அரசு நிறுவினால் இளைஞர் மற்றும் மகளிர் போன்றவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படும். அரசு அந்நியச் செலாவணி பெற்று வருவாய் பெருகவும் வழி ஏற்படும். பேரணாம்பட்டு மருத்துவமனையில் அதிக எண்ணிக்கை கொண்ட படுக்கை வசதி, அறுவை சிகிச்சை வசதி மற்றும் போதிய மருத்துவ அலுவலர்கள் இல்லாமல் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். அதைப் போக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து எனது தொகுதியில் மதனாப்பள்ளி, மிட்டப்பள்ளியிடையில் பரந்த காட்டாறு ஒன்று ஓடுகிறது. மழைக் காலங்களில் இக்காட்டாற்றின் பெருத்த வெள்ளத்தினால் குறிப்பாக தீவு போல் அமைந்து விடுகிறது. பஸ் போக்குவரத்து இல்லாமல் படிக்கும் மாணவர்களும், தோல் பதனிடும் தொழிலைச் செய்கின்ற மகளிரும் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே இந்தக் குறையைப் போக்குவதற்காக மதனப்பள்ளி கொட்டாற்றில் மேலும் மேம்பாலம் கட்ட இந்த அரசை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அடுத்து எனது தொகுதியில் அடர்ந்த் காடுகள் அடங்கிய பகுதிகளான மோர்தானா, எருக்கம்பட்டு, அரவுட்லா, சாரங்கல் முதலிய கிராமங்களில் கூட்டம் கூட்டமாக யானைகள் படையெடுத்து வந்து பயிர்களை அழித்து பெரும் சேதத்தை உண்டுபண்ணுகின்றன. கிராமங்களில் புகுந்து உயிர்சேதம் ஏற்படுத்துகிறது. குறிப்பாக கிராமங்களில் பயந்து வாழவேண்டியதால் மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். இந்தக் குறையை அரசு போக்க வேண்டும் என அன்போடு கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக என்னுடைய தொகுதியில் பத்திரப்பதிவு அலுவலகம் இதுவரையில் இல்லை. குறிப்பாக அவர்கள் பத்திரம் பதிவு செய்ய வேண்டுமென்றால் 20 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள ஆம்பூர் அல்லது குடியாத்தம் சென்றுதான் பத்திரம் பதிவு செய்யவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. பேரணாம்பட்டு நகரிலே நிரந்தரமான பத்திரப் பதிவு சார்பு நிலைய அலுவலகம் திறக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக எனது தொகுதியில் உள்ள மாதனூரில் காவல் நிலையம் வேண்டும் என்ற நீண்ட நாள் கோரிக்கையை இந்த அரசு நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். பேரணாம்பட்டு தொகுதியில் உள்ள நடுப்பட்டறை கிராமத்தில் நீண்ட நாட்களாக சுடுகாடு இல்லாமல் மக்கள் அவதிப்படுகிறார்கள். அவர்கள் சமீபத்தில் ஒரு பிணத்தை



தாலுக்கா அலுவலகத்தின் முன்பு புதைப்பதாக நோட்டீஸ் அடித்து, அதை நான் பார்த்து அந்த மக்களிடத்தில் சென்று கூடிய விரைவில் சுடுகாட்டிற்கு இடத்தைப் பெற்றுத் தருகிறேன் என்று உறுதி கூறியிருக்கிறேன். ஆகவே இந்த அரசு அந்த கிராம மக்களுக்கு சுடுகாட்டுப் பிரச்சினையைத் தீர்க்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இறுதியாக இந்த நிதி நிலை அறிக்கையில் குறிப்பாக தாழ்த்தப்பட்ட, ஏழை எளிய மக்களுக்கும் பழங்குடியினருக்கும் சிறப்பான உயர்வை அளித்துள்ளது. மாநில அரசு குறிப்பாக ஆதிதிராவிட மக்களுக்கு பல நன்மைகளைத் தீட்டியுள்ளது என்று கூறி தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், எனக்கு பேச வாய்ப்பு அளித்த துணைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. எம். முகமது சித்திக் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர், பழங்குடியினர் மானிய கோரிக்கை மீது இங்கே சில கருத்துக்களை எடுத்துக் கூறுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறுகிறேன். ஆதி திராவிடர்களுக்கு குடியிருப்பு வசதிகள், தாட்கோ மூலமாக கிராமப்புற பகுதிகளில் மட்டுமே கட்டப்படுகிறது. இதனால் நகர்ப்புற பகுதிகளில் வாழும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அவ்வாய்ப்பு அமைவதில்லை. இருந்த இடத்தை விட்டு நகர்வதால் அதற்கு நகர் என்று பெயர். ஆனால் நகரத்தை நோக்கி இத்திட்டத்தை நகர வைப்பதற்குரிய ஏற்பாடுகளை அரசு முன்வந்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்கள் சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், எவ்வளவு தூரம் அடிமட்டத்தில் வீழ்ந்து கிடக்கிறார்களோ, அதே அளவிற்குத்தான் தாழ்த்தப்பட்ட, மதம் மாறிய கிறிஸ்துவ சகோதரர்களும் இருக்கிறார்கள். எனவே அரசு மதம் மாறிவிட்டதால் அவர்களை விடுதலைப்பட்ட மக்களாகக் கருதி சலுகைகளை வழங்குகின்ற விஷயத்தில் வழங்கப்பட வேண்டிய அளவிற்கு உரிமைகளை வழங்குவதா இல்லை. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்னென்ன சலுகைகள் உண்டோ, அந்தந்த சலுகைகளை மதம் மாறியவர்கள் என்று பாராமல், வீழ்ந்து கிடக்கும் மக்கள் என்று பார்த்து, வழங்க வேண்டுமென வேண்டிக்கேட்டுக்கொள்கிறேன். இறந்த பிறகு மனிதர்களை புதைக்கும் இடுகாட்டை சமரசம் உலாவுமிடம் என கவிஞர்கள் குறிப்பிடுகிறார்கள். வாழ்வில் காண முடியாத சமத்துவத்தை, மரணம் மக்களுக்கு வழங்கிவிடுகிறது. ஆனால் அப்படி புதைக்கப்படும் இடத்தில் கூட வேறுபாடு கருதி, பிணங்களிடத்திலும் தீண்டாமை கடைபிடிக்கும் மனிதாபிமானமற்ற நடைமுறை, நாட்டில் பரவலாகக் காணப்படுகிறது.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, இறந்தவர்கள் உடலை மற்றவர்கள் இடுகாட்டில் புதைக்கக்கூடிய உரிமைகள் இல்லை. அவர்களுக்கென, புதைப்பதற்கு தனிப்பட்ட இடுகாடு வசதியும் இல்லை. அவர்கள் வாழ்க்கை இருக்கையிலே, ஆடை இல்லை, இறந்துவிட்டால் பாடையும் இல்லை என்பதோடு மட்டுமின்றி, கண்ணிய

மாகப் புதைப்பதற்கு வழியும் இல்லை என்ற நிலைதான் உள்ளது. அதைத் தீர்த்து வைப்பது அரசின் தலையாய கடமையாகும். மக்கள் சேர்ந்து வாழும் இடத்தைத்தான் சேரி என்று அழைக்கிறார்கள். ஆனால் இன்று சேர்ந்து வாழாத இடத்தைத்தான் சேரி என்று அழைக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களும் இந்த மண்ணின் மக்கள் தான் எனக் கருதி, அரசாங்கம் அவர்களுக்கென ஊரை விட்டு நாடு கடத்தப்படும் இடங்களில் எல்லாம் வீடுகளை அமைப்பதை விட்டுவிட்டு, எல்லா மக்களும் கலந்து பழகும்வண்ணம், கலந்து பழகக்கூடிய இடங்களில் அவர்களுக்குக் குடியிருப்புகளைக் கட்டித் தர வேண்டும். சிங்கப்பூரில் நல்லதொரு நடைமுறை இருக்கின்றது. அங்கே சீனர், மலேசியர், தமிழர் என்று மூன்று இனத்தைச் சேர்ந்த மக்களுக்கு வீட்டு வசதி செய்வதற்கு ஒரு நல்ல நடைமுறை கடைப்பிடிக்கப்படுகிறது. அரசாங்கம் நிர்மாணிக்கும் குடியிருப்புகளில் வரிசையாக ஒரு சீனர், அடுத்து ஒரு மலேசியர், அடுத்து ஒரு தமிழர் என்ற அடிப்படையில் வீடுகள் ஒதுக்கப்படுகின்றன. ஒரே இனம் தனித்த பெரும்பான்மையோடு ஒரே இடத்தில் குடியிருப்பதால் தான் பெரும்பான்மை அசுர பலத்தால் மற்ற இனங்கள் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்படுகிறது. பரவலாக எல்லா இன மக்களும் கலந்து வசிக்கும் வண்ணம் அரசாங்கக் குடியிருப்புகள் ஒதுக்கப்பட வேண்டும் என்பதை இந்தப் பேரவையிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்டவர்களுக்சாக, அரசாங்கம் நடத்துகின்ற விடுதிகள் நிலை மிகவும் பரிதாபகரமாக இருக்கிறது. அவர்கள் வாழும் விடுதிகளின் கூரைகள் அவர்களுடைய விலா எலும்புகள் போல் காட்சியளிக்கின்றன. தாழ்த்தப்பட்ட மாணவர்கள் பாதுகாப்பான பள்ளிக் கட்டடங்களிலே படிப்பைத் தொடர வேண்டும் என்கிற நோக்கத்தோடு கட்டப்பட்ட பள்ளிக் கட்டடங்கள், வயது முதிர்ந்த தாயை பிள்ளையே ஒதுக்கி வைப்பது போல சரிவர பராமரிக்காத காரணத்தால் விடுதிகள் கெடுதிகளாக மாறி வருகின்றன.

விடுதிகளில் தங்கியிருக்கும் மாணவர்களுக்கும் வெறும் உணவு மட்டுமே போடப்படுகின்றது. அந்த விடுதிகளிலுள்ள மாணவர்களுக்கு தனி பயிற்சிகள் வழங்கும் வண்ணம் ஆசிரியர் பெருமக்கள் நியமிக்கப்பட்டால் சவலைக் குழந்தைகளுக்கு ஏ வட்டமின் மாத்திரைகளாக அமையும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பள்ளி, கல்லூரி விடுமுறை நாட்களில் விடுதிகள் பயன்பாடு இன்றியிருக்கின்றன. அந்தந்தப் பகுதியைச் சார்ந்த பத்தாம் வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்பு, கல்லூரி பட்ட வகுப்பு மாணவர்களுக்கு அங்கே விடுமுறைக் கால பயிற்சி முகாம்களை நடத்துவதற்கு விடுதிகள் பயன்படுத்தப்பட வேண்டும்.





தற்போது தொழில் கல்லூரிகளில் சேர்வதற்கான நுழைவுத் தேர்வுக்கு சிறப்பு பயிற்சி வகுப்புகள், பணிகளுக்கான போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள் நகர்ப்புறங்களில் மட்டுமே நடத்தப்படுகின்றன. இதுபோன்ற வகுப்புகள் கிராமப்புற விடுதிகளில் அந்தப் பயிற்சி வகுப்புகள் விடுமுறை நாட்களில் நடத்தப்பட்டால், கிராமப்புற மாணவர்கள் அதிகச் செலவின்றி பயிற்சி பெற வாய்ப்புக் கிடைக்கும். அதற்காக விடுதிகள் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, உண ஆட்டும் இடங்கள், உணர்வு ஊட்டும் இடங்களாக மாறுவதற்கு வழி இருக்கின்றது என்று கூறிக்கொள்கிறேன்.

மேலும், தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கு அரசு கொடுக்கும் சலுகைகள், அந்த சமூகத்திலிருக்கும் இன்றைய பெரும் அதிகாரிகளாலும், பெரும்புள்ளிகளாலும், தங்களது வாரிசுகளுக்குச் சாதகமாக்கி, கிராம வாழ் தாழ்த்தப்பட்டோரை விட, அவர்கள் மட்டுமே மேன்மேலும் பொருளாதார ரீதியிலும், கல்வி வசதி போன்ற அனைத்து வழிகளிலும் மேன்மை அடைகிற நிலை உள்ளது. இதற்கு அரசு தக்க வழிமுறை கண்டு, கிராம மலைவாழ் மக்களுக்கு முழு அளவில் சென்றடைய பாடுபட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மைனாரிட்டி டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் என்பது ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா போன்ற மாநிலங்களில் இருக்கின்றது. அதைப்போல, இங்கே நம் தமிழ்நாட்டிலும் ஏற்படுத்தி, தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்குத் தொழில் நடத்துவதற்குக் கடன் வழங்க முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஆதி திராவிடர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற சலுகைகள், மானியங்கள் கடந்த ஆட்சியில் மற்ற ஆதி திராவிடர் அல்லாதவர்கள் பெற்றிருக்கிறார்கள். மற்ற சாதிக்காரர்கள் ஆதி திராவிடர் என்று ஜாதியை மாற்றி போலிச் சான்றிதழ் பெற்று ஆதி திராவிடர் பெறுகின்ற சலுகைகளைப் பெற்று விடுகின்ற அளவிற்குக் கூடப் போய்விட்டார்கள். அரசு இது சம்பந்தமாக, முக்கியமாக கல்வி சலுகை, உத்தியோகத்தில் நியமிக்கப்படுகின்ற போது, மற்ற சலுகைகள் அளிக்கின்றபோது மிகவும் கண்காணித்து அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சில தொகுதிகளில் சில சட்டமன்ற உறுப்பினர்கள் கூட தேர்தலில் நிற்பதற்கு இதுபோன்ற போலிச் சான்றிதழ்கள் பெறுவதற்கு முயற்சி செய்வதாகத் தெரிய வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஆதி திராவிட மக்களுக்கு, அவர்களுக்குத் தெரிந்த தொழிலை ஆய்வு செய்து அவர்களுக்குப் பண உதவி செய்து, சிறுதொழிலை ஊக்குவித்து வருவாயைப் பெருக்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எம். முகமது சித்திக்] [1989 ஏப்ரல் 29

(முற்பகல் 11-30)

ஆதி திராவிடர்கள் வசிக்கும் பகுதிகளுக்கு பேருந்துகள் செல்லும் வண்ணம் சாலை வசதியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அவர்களுக்கு இடுகாட்டுக்குச் செல்வதற்கு பாதை வசதி சரியாக இல்லை. அதுபோன்ற பகுதிகளுக்கு எல்லாம் அந்த இடுகாட்டுக்குச் செலவதற்கு பாதை வசதியைச் செய்து கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர்களின் பள்ளிகளுக்குச் சென்றால் அங்கே ஆசிரியர்கள் உட்காருவதற்கு கூட மேசை, நாற்காலி இல்லை, மாணவர்கள் படிப்பதற்கு மேசை இல்லை. ஆகவே ஆதி திராவிடர்கள் படிக்கும் பள்ளிகளுக்கு மேசை, நாற்காலி வசதியைச் செய்து கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

கழகப் பேருந்துகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கு பொங்கல், திருவள்ளுவர் தினம், ஆயுத பூஜை, தீபாவளி, குடியரசு தினம், காந்தி ஜெயந்தி, தமிழ் வருடப் பிறப்பு, மே தினம், கிருஸ்துமஸ் ஆகிய தினங்களுக்கு விடுமுறை வழங்கப்படுகின்றன. ஆனால் ரம்ஜான், பக்கிரீத் திருநாளுக்கு மட்டும் அரசு விடுமுறை இல்லை. மாண்புமிகு கலைஞர் ஆட்சிக் காலத்தில் முன்பு வழங்கப்பட்டு வந்தது. எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் அது நீக்கப்பட்டு விட்டது. மீண்டும் கலைஞர் ஆட்சிக் காலத்தில் ரம்ஜான், பக்கிரீத் திருநாளுக்கு அரசு விடுமுறை வழங்கப்பட வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் பஞ்சாயத்து ஒன்றியங்களில் 100 வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டம் இருந்து வருகிறது. இந்த தொகுப்பு வீடுகளை கட்டிக் கொடுப்பதற்கு 8, 10 ஒன்றியங்களை ஒன்றாக இணைத்து ஒரு பொறியாளரை நியமிக்கிறார்கள். அவர் சரியான முறையில் பணியினை செய்வதில்லை. 8, 10 ஒன்றியங்களில் உள்ள வீடுகளை அவர் பார்ப்பதால் இங்கே கேட்டால் அங்கே சென்று விட்டார் என்றும், அங்கே கேட்டால் இங்கே சென்று விட்டார் என்றும் சொல்லி பணியில் தாமதம் செய்து வருகிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) இதற்காக ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் தொகையும் கேட்கிறார்கள். இதை தவிர்க்க அந்த ஒன்றியங்களில் உள்ள பொறியாளரையே இதற்கு நியமித்தால் தவறு நடைபெறாமல் இருக்கும் என்பதை எனது மேலான கருத்தாக இங்கே தெரிவிக்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கைக்கு சம்பந்தம் இல்லாவிட்டாலும் கூட எனது தொகுதியில் உள்ள ஒரு முக்கியமான பிரச்சினையை இந்த மன்றத்தில் நான் தெரிவிக்கிறேன். ஓசோன்



1989 ஏப்ரல் 29] [திரு. எம். முகமது சித்திக்]

வாயு என்ற ஒரு வாயு உலகத்திலேயே—கடற்கரைக் காற்றிலிருந்து வருவது—3 இடங்களில் தான் கிடைக்கிறது என்று அறிஞர்களும், விஞ்ஞானிகளும் கூறுகிறார்கள். அந்த ஓசோன் வாயு அதிகமாக எனது தொகுதியில் தரங்கம்பாடி கடற்கரைக் காற்றில் அதிகமான சதவீதத்தில் இருப்பதாக அவர்கள் சொல்கிறார்கள். கடற்கரை காற்றில் ஓசோன் வாயு அதிகமாக இருப்பதால் அதை சுவாசிக்கிற மனிதர்களுக்கு சுவாச சம்பந்தமான வியாதிகள் அதிகம் பாதிப்பது இல்லை என்பதாக அவர்கள் கூறுகிறார்கள். இது மாதிரி உலகத்திலேயே ஒருசில இடங்களில் தான் உள்ளன என்பதை அவர்கள் கூறுகிறார்கள். அதைப்பற்றிய விவரங்களை இந்த அரசு ஆராய்ந்து தெரிந்து கொள்கின்ற முறையில் தரங்கபாடியை சுற்றுலா மையமாக ஏற்பாடு செய்யும்படி கேட்டுக்கொண்டு சுவாச சம்பந்தமான வியாதிகள் களையப்படும் என்றால் தரங்கம்பாடியில் காசநோய் சிகிச்சை மையம் அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இங்கே பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

## 7. விதி 110-ன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை.

### திரையரங்குகளில் நடைபெறும் முறைகேடுகளைக் களைய அரசு நடவடிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டப் பேரவை விதி 110-ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கையை அவையின்முன் படைப்பார்கள்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள திரையரங்குகள் கேளிக்கை வரிவிதிப்பு தொடர்பாக இரண்டு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒன்று அனுமதிச் சீட்டு விற்பனையின் மீது வரி செலுத்தும் வகை. மற்றொன்று ஒட்டுமொத்த வரி (Compounding) செலுத்தும் வகை. சென்னை, மதுரை, கோவை ஆகிய பெரு நகரங்கள், சேலம், திருச்சி, ஈரோடு, வேலூர், தஞ்சாவூர், பொள்ளாச்சி, தூத்துக்குடி, ஊட்டி, திருப்பூர், கரூர், திண்டுக்கல், நாகர்கோவில், திருநெல்வேலி ஆகிய சிறப்பு நிலை நகராட்சிகள், புதுக்கோட்டை, குன்னூர் நகராட்சிகள் மற்றும் கன்டோன்மென்ட் எல்லை ஆகிய இடங்களில் உள்ள திரையரங்குகள் அனுமதிச் சீட்டு விற்பனையின் அடிப்படையில் கேளிக்கை வரி செலுத்துகின்றன. இவை தவிர, பிற பகுதிகளிலுள்ள திரையரங்குகள் ஒட்டுமொத்த வரி (Compounding) செலுத்துகின்றன.

திரைப்படத் தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் திரையரங்கு உரிமையாளர்கள் ஆகிய மூன்று தரப்பினரும் பல கோரிக்கைகளை அரசின் முன் வைத்து தகுந்த நிவாரணங்களை வேண்டியுள்ளனர். அரசும், இந்த மூன்று தரப்பினர்களோடும் கலந்து பேசி உரிய முடிவை எடுக்க ஆவன செய்து வருகிறது. இதற்கிடையே, சில திரையரங்குகள், கள்ள அனுமதிச் சீட்டுகள் விற்பது, நிர்ணயிக்கப்பட்ட விலையை விட பன்மடங்கு அதிக விலைக்கு (flate rate) அனுமதிச் சீட்டை விற்பது, குறிப்பிட்ட பொதுநல நிறுவனங்களுக்கு நிதி திரட்ட நடத்தப்படும் காட்சிகள் என்ற போர்வையில் மிக அதிக விலைக்கு பொது மக்களிடம் அனுமதிச் சீட்டுகளை விற்பது, திரையரங்கு உரிமத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கையை விட மிக அதிகமாக அனுமதிச் சீட்டுகளை வழங்குவது, ரிசர்வ் செய்யப்படும் வகுப்புகளுக்கான அனுமதிச் சீட்டுகளைக் குறிப்பிட்ட கையாட்கள் மூலமாக அதிக விலைக்கு வெளியில் விற்பது, அனுமதிக்கப்பட்ட நான்கு காட்சிகளுக்கு மேலாக பல காட்சிகளை நடத்துவது என்பன போன்ற முறைகேடுகள் செய்வதாக பொது மக்கள் மூலமாக பல புகார்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. இதனால் அரசுக்கு வரி இழப்பு மிக அதிக அளவில் ஏற்படுவது மட்டுமின்றி பொது மக்களும் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாக்கப்படுகின்றார்கள். எடுத்துக்காட்டாக, ஒரு திரையரங்கு, ஒரு காட்சிக்கு தவறான முறையில் 7,000 ரூபாய் வசூல் செய்துவிட்டு, கணக்கில் 1,400 ரூபாய் மட்டுமே வசூலானதாகக் காட்டி, வரி ஏமாற்றம் செய்துள்ளதாகத் தகவல் வந்துள்ளது. இதனால் அரசுக்கு வர வேண்டிய வருவாய் மோசடி மட்டுமல்லாமல் அளவுக்கு மீறி மக்களை அனுமதிப்பதால் பொது மக்களுக்கு சுகாதாரக் கேடும், பாதுகாப்பற்ற நிலையும் ஏற்படுகிறது. எனவே தவறு செய்யும் திரையரங்குகளின் மேற்கண்ட போக்கினை நிரந்தரமாக ஒழிப்பதற்கு வணிக வரித்துறை அலுவலர்கள், காவல் துறையினர் மற்றும் வருவாய்த் துறை அலுவலர்கள் மூலமாக அரசு குற்ற இயல் சட்டப்படி கடுமையான நடவடிக்கைகளை எடுக்க உள்ளது என்றும் இதுபோன்ற முறைகேடுகள் புரியும் திரையரங்குகளின் உரிமங்களும் உடனடியாக ரத்து செய்யப்படும் என்றும் எச்சரிக்கப்படுகிறது. இந்த மோசடிகளைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க ஒரு சிறப்புக் கண்காணிப்புப்படை அமைக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

முறைகேடுகள் நடைபெறும் திரையரங்குகள் பற்றிய தகவல்களைப் பொதுமக்கள் உடனுக்குடன் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், அரசுக்கும் தெரிவித்து உதவுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.



**டாக்டர் எஸ். சுந்தரராஜ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989–90 ஆம் ஆண்டிற்கான ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மானியக் கோரிக்கையின் மீது நான் சார்ந்து இருக்கக் கூடிய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இன்றைய தினம் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை 76.12 கோடியாகும். தமிழகத்தில் வசிக்கின்ற ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மொத்தத்தில் 19.5 சதவிகிதமாகும். ஆனால் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை மிகவும் குறைவு என்பதை இப்போது சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார நலன்களை மேம்படுத்த அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டியும் அதன் பலன்கள் மக்களைச் சேருவதில்லை. அரசின் நோக்கம் எதுவாக இருப்பினும் நடை முறையில் உள்ள சிக்கல்களை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இன்றும் அனுபவித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். பொருளாதார நிலையில் இன்னமும் பின்னடைந்துள்ள ஆதி திராவிட மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த அரசு அவர்களுக்கு அளிக்கும் தொகை அவர்களுக்குப் போய்ச் சேருவதே இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊருக்கு அப்பால் அமைக்கப்படும் ஆதிதிராவிட காலனிகளுக்கு குடிநீர் வசதி, இணைப்புச் சாலைகள் அமைத்தல், மின் வசதி, பள்ளி வசதி, சுகாதார வசதி முதலியன பெரும்பாலும் செய்யப்படாமலேயே இருக்கின்றன. ஆதி திராவிட மக்கள் குடியிருக்கும் ஒவ்வொரு காலனிக்கும் தொடக்கப் பள்ளி வேண்டும். பாடப் புத்தகங்களும், நோட்டுப் புத்தகங்களும் தொடக்கத்திலேயே இலவசமாகக் கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். விலைவாசிக்குத் தகுந்தாற் போல் உதவித் தொகை அதாவது ஸ்காலர்ஷிப் அளிக்க வேண்டும்.

ஆதி திராவிடர் மாணவ மாணவியர்களின் விடுதிகளினுடைய எண்ணிக்கையைக் கூட்டி, விடுதிகளில் உள்ள மாணவ மாணவியர்களின் எண்ணிக்கையையும் அதிகப்படுத்த இந்த அரசு முயல வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். ப்ளஸ் 1,

ப்ளஸ் 2 வகுப்புகளில் படிக்கும் ஆதி திராவிட மாணவ மாணவியருக்கென்று தனியாக ஆதி திராவிடர் நல மாணவ மாணவியர் விடுதிகளைக் கட்டித்தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பெரும்பாலான ஆதிதிராவிட மக்கள் ஓரளவு நிலம் வைத்திருப்பவர்களாகவே இருக்கிறார்கள். அவர்களது விவசாயத்திற்குப் பாசன வசதி செய்வதற்காக குறைவாக நிலங்கள் இருப்பினும் விதிகளைத் தளர்த்தி கிணறு வெட்ட அரசு மானியத்துடன் கூடிய கடன் கொடுக்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன். பாசனக் கிணறுகளுக்கான உதவித் தொகையும், உழவு மாடுகள் வாங்குவதற்கான உதவித் தொகையும், மாவட்ட ஆதி திராவிட நல அலுவலர்கள் மூலமாக வழங்க நான் அரசைக் கேட்டுக் கொள்கிறேன். அடிப்படை வசதிகள் இன்றி ஆதி திராவிட மக்கள் வாழ்க்கையில் விரக்தி அடைந்து உள்ளனர். இறந்து விட்டால் சுடுகாட்டிற்கு எடுத்துச் செல்லக் கூட வழித்தடங்கள் இன்றி அனேக ஊர்கள் இருக்கின்றன என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

சமூகக் கூடங்கள் கட்டும் திட்டம் செயற் குறிப்பில்தான் உள்ளதே தவிர எந்தத் திட்டமும் அமுல்படுத்தப்பட்டதாகத் தெரியவில்லை.

தீண்டாமையை ஒழிக்க, சமுதாய சமத்துவத்தைக் கொண்டு வர குடியுரிமை பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வழக்குகள் பதிவு செய்யும் அதிகார வர்க்கத்திற்கு விலக்குகள் அளிக்கப்படுகின்றன. சட்டம் சட்டமாகவே இருக்கிறதே தவிர, அது அமல் செய்யப்படுவதே இல்லை.

தீண்டாமை ஒழிப்பு பிரச்சாரத்திற்காக தயாரிக்கப்பட்ட தீர்த்த யாத்திரை படம் பிரச்சார வண்டியில் ஏற்றப்பட்டு யாத்திரைக்கு அனுப்பபட்டு விட்டதோ என்று சந்தேகப்படக் கூடிய அளவிற்கு, எந்த ஊரிலும் அந்தப் படம் காட்டப்படவில்லை என்பதைத்தெரிவித்துக் கொள்கிறேன்.

தீண்டாயமையைப் பற்றி பேசும் கூட்டத்தில் பங்குகொள்ள பெமர்களைப் போட்டாலும், நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர், காவல் துறை அதிகாரிகள், நீதிபதிகள், இவர்களில் யாரும் அந்தக் கூட்டங்களில் கலந்து கொள்வதே என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



(முற்பகல் 11-40)

ஆதி திராவிட மக்கள் தவறு செய்தால் சமுதாயத்திலிருந்து ஒதுக்கி வைத்துவிடுகிறார்கள். ஆனால் இதே தவறுகளை மற்றவர்கள் செய்தால் தட்டிக் கேட்பதில்லை. இந்த அநீதி எல்லா ஊர்களிலும் இருக்கிறது. இந்த அநீதி நீக்கப்பட வேண்டும்.

ஆதி திராவிட மக்களுக்கு மலிவு விலையில் கொடுக்கும் விதை, நாற்று மற்றும் பூச்சிக் கொல்லி மருந்துகள் போன்றவை உரிய காலத்தில் கிடைப்பதில்லை. இந்த நிலையை மாற்றி, உரிய காலத்தில் அவை எல்லாம் கிடைக்கத் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆதி திராவிட மக்களின் முன்னேற்றத்திற்காக அரசு பல திட்டங்களைப் போட்டும், அக்குடும்பத்தினர் தாம் பெறும் விவசாயக் கூலியின் மூலமாகத்தான் வாழ்க்கை நடத்துகிறார்கள். எந்தத் திட்டமும் ஆதி திராவிட மக்களின் முன்னேற்றத்திற்கு உரிய திட்டமாக இல்லை. 'காடு விளைந்தால் மச்சான் நமக்குக் கையும் காலும் தானே மிச்சம்' என்று சொல்வதைப் போல ஆதி திராவிட மக்கள் தங்களுடைய கையையும் காலையும் நம்பித்தான் உழைத்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

ஆதி திராவிட மக்கள் இருக்கின்ற பகுதிகளில் கூட்டுறவு நூற்பாலைகளை அமைக்க மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆதி திராவிட மக்கள் சொந்தமாகத் தொழில் தொடங்க வங்கிகள் கடன் கொடுக்க மறுக்கின்றன. மனுக்கள் கொடுத்தால், அந்த மனுக்களைப் பரிசீலனை செய்யாமலேயே தள்ளுபடி செய்து விடுகிறார்கள். ஆதி திராவிட மக்கள் தொழில் தொடங்க உரிய வழி வகை செய்யப்படவில்லை. இந்த நிலை மாற்றப்பட வேண்டும்.

ஆதி திராவிட மக்கள் வாழுகின்ற காலனிகளில், அநேகமாக எல்லாக் காலனிகளிலும் தெரு விளக்கு வசதி இல்லை ; போக்குவரத்து வசதி இல்லை ; குடிதண்ணீர் வசதி இல்லை ; இந்த வசதிகளை எல்லாம் அந்தக் காலனிகளுக்கு செய்து கொடுக்க வேண்டும். குறிப்பாக எல்லாக் காலனிகளுக்கும் ஊருக்கு ஓர் ஆழ் குழாய்க் கிணறு போட்டுக் குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கறவை மாடுகள் வாங்க ஆதிதிராவிட மக்களுக்குக் கொடுக்கப்படும் லோன் சரியாகக் கிடைக்கவில்லை. ஆங்காங்கு பால் சொசைட்டி தலைவர் லிட்டர் மூன்று ரூபாய்க்கு வாங்கி, கிலோ 3 ரூபாய் 80 காசுக்கு விற்கிறார். அதில் கிடைக்கிற

இலாபத்தை சொசைட்டி தலைவர் பெற்றுக்கொள்கிறார். கிடைக்கும் இலாபத்தில் மாட்டுக்காரர்களுக்கு, அந்தச் சங்கத்தின் உறுப்பினர்களுக்குப் பங்கு கொடுப்பதில்லை. மேலும் கறவை மாடுகள் வாங்க பல வருடங்கள் காத்திருப்பதோடு பல்வேறு சூழ்நிலைகளில் பலருக்கு மாமூல் கொடுக்கவேண்டி நிலை இருக்கிறது. இந்த நிலைமைகள் எல்லாம் மாற்றப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிட மக்களில் சட்டம் பயின்ற 20 பேர்களுக்கு ஆண்டுதோறும் அனுபவம் பெற்ற வழக்கறிஞர்களைக் கொண்டு பயிற்சி கொடுக்கும் திட்டம் இருக்கிறது. அது திட்டமாக இருக்கிறதே தவிர அந்த மக்களுக்குப் பயன்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப் போன்று ஆதி திராவிட மக்களுக்கு வீட்டு மனை வழங்குவதற்காக நிலம் கையகப்படுத்துவதிலும் காலதாமதம் ஏற்படுகிறது. அதற்கு என்ன காரணம் என்றால், நிலத்திற்கு அதிக விலை பெறுவதற்குக் கையகப்படுத்தும் அதிகாரிகளே நிலச் சொந்தக்காரர்களைத் தூண்டிவிட்டு, நீதிமன்றங்களிலே வழக்குகள் போட்டு, அந்த வழக்குகள் தீர்க்கப்படாமல் இருக்கின்றன. அதைப் போன்று மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கின்ற அருந்ததியினர்க்கும் வீட்டுமனைப் பட்டாக்கள் சரியாக வழங்கப்படவில்லை. காலனி வீடுகள் கட்டிக்கொடுக்கப்படவில்லை. அந்த மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கி, வீடுகள் கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று காட்டு நாயக்கன் வகுப்பைச் சேர்ந்த பாம்பு பிடிக்கும் மக்களுக்கும் காலனி வீட்டுவசதி இல்லை; வீட்டு மனைப் பட்டாவும் கொடுக்கப்படவில்லை. அதற்கெல்லாம் விரைவிலே ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்களுக்கு வழங்கப்படுகின்ற கல்வி உதவித் தொகையை உரிய காலத்தில் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படும் பாடப் புத்தகங்களை ஆண்டின் கடைசியில் கொடுத்து வருகிறார்கள். இந்த நிலையை மாற்றி, ஆண்டுத் தொடக்கத்திலேயே அவர்களுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வெளி மாநிலங்களில் சிறப்புக் கல்வி பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்களுக்கு—குறிப்பாக மருத்துவம், பொறியியல் போன்ற படிப்புகளைப் படிக்கும் மாணவர்களுக்கு ஆகும் செலவுத் தொகை முழுவதையும் அரசே ஏற்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



ஆதி திராவிட மக்கள் இறந்துபோனால் அவர்களின் ஈமச் சடங்குக்கு தற்போது 100 ரூபாய் வழங்கப்படுகிறது. இந்த 100 ரூபாயை 500 ரூபாயாக உயர்த்தி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

'கன்வர்ட்டட் கிறிஸ்தவர்' களை ஆதி திராவிட மக்களோடு சேர்த்து, சலுகைகள் வழங்குவதாக இருந்தால் ஆதி திராவிட மக்களுக்கு இருக்கிற ரிசர்வேஷன் சீட்டை 20 சதவீதமாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிட மக்கள் வீடுகள் கட்டிக்கொள்ள ஆதி திராவிடர் வீட்டுவசதி சொசைட்டிகளைத் தனியாக ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

மதுரை மருத்துவக் கல்லூரியில் மாணவர் விடுதி அரசின் சார்பில் நடத்தப்படவில்லை. அதனால் அங்கே படிக்கும் ஆதி திராவிட மாணவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, அங்கே அரசே உணவு விடுதியை நடத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜாதிக்கு ஜாதி கல்லூரி இருக்கும் இந்தத் தமிழ்நாட்டில் ஆதி திராவிடர்களுக்கு என்று ஒரு கல்லூரி இதுவரையில் இல்லை. ஆகவே, டாக்டர் அம்பேத்கார் பெயரில் ஆதி திராவிடர் கல்லூரி ஒன்றை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வறுமையின் காரணமாக ஆதி திராவிட மக்கள் பணத்திற்கு அடிமைப்பட்டு சில தவறுகளைச் செய்துவிடுகிறார்கள். பணம் படைத்தவர்கள் பணத்தைக் கொடுத்து தண்டனையிலிருந்து தப்பித்துவிடுகிறார்கள். ஆனால் பண வசதி இல்லாத ஆதி திராவிட மக்கள், அந்த அப்பாவி மக்கள் தண்டனை பெறுகிறார்கள். இந்த நிலையைப் போக்க அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர் நலத் துறையில் வேலை பார்க்கும் அதிகாரிகள் அந்த மக்களுக்குப் பணியாற்றும் தொண்டு உள்ளம் படைத்தவர்களாக இருக்க வேண்டும். அப்படிப்பட்டவர்களை ஆதி திராவிடர் நலத் துறையில் நியமிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் நடத்தப்படும் ஆதி திராவிட மக்களின் கடைகளை அடிக்கடி வேறு வேறு இடங்களுக்கு மாற்றிவிடுவதாகச் சொல்கிறார்கள். அதனால் அந்த மக்களுக்குப் பல சிரமங்கள் ஏற்படுவதால் அவ்வாறு மாற்றும் முறை இல்லாமல் இருக்க தகுந்த உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிட மக்களுக்காக நடைபெறும் பள்ளிகளில் பெஞ்சு இல்லை, நாற்காலி இல்லை; மேசை இல்லை; இதர உபகரணங்கள் இல்லை; போதுமான ஆசிரியர்களும் இல்லை. இத்தகைய அவல நிலையைப் போக்கி, அனைத்துப் பள்ளிகளிலும் பெஞ்சு, நாற்காலி, மேசை, இதர கருவிகளை வாங்கிக் கொடுத்து, போதுமான ஆசிரியர்களையும் நியமித்து, அந்த மாணவர்களுக்கு ஸ்பெஷல் கோச்சிங் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

பரமக்குடியில் ஆதிதிராவிட மக்களே வீடு கட்டிக்கொள்வதற்கு 20-11-1985-ல் 25 இலட்சம் ரூபாய் தாட்கோ மூலம் ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வளவு ஆண்டுகள் ஆகியும் இன்னும் கட்டாது இருக்கின்ற சூழ்நிலைகளைக் குறித்து அரசுக்குத் தெரியப்படுத்துகிறேன். ஆகவே கருணைகூர்ந்து மாணவர் மாணவிகள இல்லத்தை விரைவில் கட்டுவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆதி திராவிடர்கள் மாணவர்கள் நல அலுவலகம் தாலுக்காவுக்கு ஒன்றாக அமைக்கும்படியும், ஆதி திராவிடர்கள் (தாசில்தார்) அவர்களுக்கு வேண்டிய ஜீப்பும் போதிய அலுவலர்களும் கொடுக்குமாறு கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மதிப்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஓர் அறிவிப்பு. டாக்டர் அம்பேத்கார் பெயரில் ஏற்கெனவே வியாசர்பாடியில் ஒரு கல்லூரி இருக்கிறது என்பதையும், அவர்கள் அருள்கூர்ந்து சென்னையில் ஓய்வாக இருக்கும் போது அதைச் சென்று கண்டு களிக்க வேண்டும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

***திரு. ந. நஞ்சப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர்கள் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கை மீது பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு இந்திய பொது உடமைக் கட்சியின் சார்பாக எனது கருத்துக்களைக் கூற விழைகின்றேன்.

எவ்வளவோ சட்டங்கள் வகுக்கப்பட்டு இருந்தும் கூட, பல திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருந்தாலும்கூட, தாழ்த்தப்பட்ட மக்களை அந்தத் திட்டங்கள் எட்டிப்பார்க்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.. குறிப்பாக இன்றைக்கும் பஞ்சமர்களாக, அடிமைகளாக, தீண்டத்தகாதவர்களாக கிராமப்புறங்களிலே வதைபட்டுக்கொண்டு இருக்கின்றார்கள் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.





அதுவும் பொருளாதாரத்திலே அவர்கள் மிகவும் பின்தங்கியவர்களாக இருக்கிறார்கள். அந்த மக்களுடைய வாழ்வில் விடிவு ஏற்படவேண்டுமென்றால், விஞ்ஞான பூர்வமான கல்வியைக் கொடுப்பதோடு, அனைவருக்கும் வேலைக்கு உத்தரவாதம் செய்து தொழில் துறையில் அவர்களை ஈடுபடுத்தி, பொருளாதார ரீதியில் உற்பத்தியில் ஈடுபடுத்துவதோடு கௌரவமான வாழ்க்கை வாழ்வதற்கான வழியை, பாதுகாப்பை அவர்களுக்கு நல்க வேண்டும். அதுவும் குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்கள், இன்றைக்கு ஒரு கவிஞன் குறிப்பிட்டதுபோல ஊனநாங்கள் அரிசனங்கள், ஆகையால்தான் கரிசனங்களாக ஆக்கிக்கொண்டு இருக்கிறார்கள்; என்று குறிப்பிட்டுள்ளார்கள்—கங்கை நதி தீரத்திலே, காவிரிக் கரையிலே பல்வேறு பகுதிகளிலே தோண்டிய இடங்களில் எல்லாம் கரிசனங்களாகத்தான் காட்சி அளித்துக் கொண்டிருக்கிறார்கள் அந்த வதைப்படலங்கள் இன்றைக்கும் ஒழியவில்லை என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பழங்குடி மக்களும் தாழ்த்தப்பட்ட மக்களும் வடிக்கின்ற கண்ணீரும் அழுகுரலும் ஆட்சியாளர்களின் செவிப்பறைகளுக்கு இன்னும் எட்டவில்லை. ஆட்சியாளர்களின் செவிப்பறையைக் கிழிக்கின்ற அளவுக்கு அவர்களுடைய வர்க்கப் போராட்டம் உக்கிரமாக நடக்கின்ற காலமும் வரும் என்று நான் கருதுகிறேன்.

குறிப்பாக அருந்ததியர்களைப் பொறுத்தவரையில் மின்சாரமயம் ஆக்கப்பட்ட பின்னால் நீர்ப்பாசனத்துக்கு மின்சார மோட்டார்கள், ஆயில் இன்ஜின்களும் வைத்துவிட்ட பின்னர அவர்கள் அந்தத் தொழிலை நம்பியிருந்தபோது, பரிகளையுர் தோல்களையும் தைத்துக்கொண்டிருந்த அந்த மக்கள் வேம் பிழைப்புத் தெரியாத காரணத்தினால் அவர்கள் பிழைப்பையுறு இழந்துவிட்டு என்ன செய்வது என்று அறியாது 20 ஆண்டுக் காலமாக திகைத்துக் கொண்டிருக்கிறார்கள். சொல்லப்போனால் அவர்கள் செருப்புக்கூட தைத்து விற்கமுடியும் ஆனால் பாட்டா போன்ற கம்பெனிகளோடு கிராமப்புறத்திலே வாழ்கின்ற அந்தச் செருப்புத் தொழிலாளிகள் போட்டிபோடமுடியாது. ஆகவே அவர்களுடைய வாழ்க்கைக்கு உத்தரவாதம் கொடுக்கக் கூடிய அளவுக்கு மாற்றுத் திட்டங்களை அரசு செய்யவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பழங்குடி மக்களைப் பொறுத்தவரையில் அவர்கள் மிகவும் பின்தங்கிய நிலையிலே இருக்கின்றார்கள், காடுமலைகளிலே அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். சொல்லப்போனால் இந்தக்காலங்களிலே குகைகளிலே வாழக்கூடிய மனிதர்களும் இருக்கிறார்கள் என்பதை மீண்டும் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மக்களுடைய வாழ்க்கை வளமாக இருக்கவேண்டுமானால் பழங்குடியினர் மக்களுக்கென ஒரு தனி வாரியம் அமைக்க வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்திக் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். காடுகளிலே வாழ்கின்ற இந்த மக்கள் காடுகளிலே இருந்து அடித்துத் துரத்தப்படுகின்றார்கள். வேறு

தொழில் செய்ய அறியாத மக்கள் காடுபடு பொருள்களை அனுபவிக்கமுடியாத நிலையில் இருக்கின்றார்கள். அவர்களுக்கு அந்த உரிமை பறிக்கப்படுகிறது. ஆகவே அவர்கள் வளர்ச்சி பெறுகின்ற காலம் வரை காடுபடுபொருள்களை அனுபவிப்பதற்கான வாய்ப்பினை இந்த அரசு வழங்கவேண்டும்.

குறிப்பாக பழங்குடி மக்கள் என்று அங்கீகரிக்கப்படாத இன்னொரு மக்கள் ஏராளமாக இருக்கிறார்கள். ஆந்திராவிலும், கர்நாடகாவிலும் லம்பாடி மக்கள், சுகாளி மக்கள் பழங்குடி மக்களாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் இருக்கின்றார்கள். அவர்கள் பழங்குடி மக்களாக அங்கீகரிக்கப்படவில்லை. அதே போலவே குரும்பர்கள், கர்நாடகத்திலே பழங்குடி மக்களாக அங்கீகரிக்கப்பட்டு இருக்கின்றார்கள். தமிழகத்திலே வட ஆற்காட்டிலே, நீலகிரியிலே, பெரியார் மாவட்டத்திலே பழங்குடி மக்களாக அறிவிக்கப்பட்டிருக்கின்றார்கள். தர்மபுரி மாவட்டத்திலே இருக்கின்ற குரும்பர்களைப் பொறுத்தவரையில் 'குரும்மன்ஸ்' என்று எழுதினால்தான் அவர்கள் பழங்குடி மக்களாக அங்கீகரிக்கப்படுகிறார்கள். ஆனால் குரும்பர்கள் அல்லது குரும்பன்கள் என்று தமிழில் எழுதியதால் அவர்கள் பழங்குடி மக்களாக அங்கீகரிக்கப்படவில்லை. தர்மபுரி மாவட்டத்திலே ''குரும்பன், குருப, குரும்பாஸ், குரும்பர்கள் என்று பலவிதமாக அழைக்கின்றார்கள். கர்நாடகத்திலே வட ஆற்காட்டிலே உறவு கொண்டுள்ள இந்தப்பழங்குடிமக்களை தர்மபுரி மாவட்டத்திலே உள்ளவர்களைப் பழங்குடி மக்களாக அங்கீகரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே போல தமிழகத்திலே ''குறிச்சான், குஞ்சிகர்' என்று அழைக்கப்படுகின்ற குறிச்சான் வகையினரைச் சேர்ந்த மக்கள் கோவையிலும் தர்மபுரியிலும் இருக்கின்றார்கள். ஆனால் கோவையிலே பழங்குடியினராக அங்கீகரிக்கப்பட்டுள்ள பழங்குடி மக்கள் தர்மபுரி மாவட்டத்திலே அங்கீகரிக்கப்படவில்லை. குறிச்சான் மக்களை பழங் குடிமக்களாக அங்கீகரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-50)

அடுத்து தமிழ்நாட்டிலே வளர்ச்சியின்றி, பன்னெடுங்காலமாக பழங்குடியினர் அல்லல்பட்டு வருகிறார்கள். குறிப்பாக வலையர் பகுதி மக்கள், அதுபோல உப்பிலியன் மக்கள் இவர்களை எல்லாம் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க வேண்டும். இந்த மக்கள் ஒரு பக்கத்திலே பழங்குடியினர் என்று அங்கீகரிக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். அந்த வகையில் அங்கீகரிக்கப்பட்ட பழங்குடியினர் $5\frac{1}{3}$ லட்சம் பேர் இருக்கிறார்கள். இந்த அறிவிப்பு 1981 ஆம் ஆண்டு கணக்குப்படி. இன்றைய மக்கள் தொகையைக் கணக்கெடுத்துப் பார்த்தால் இன்னும் பல மடங்கு அது அதிகரித்திருக்கிறது. ஆகவே, தாழ்த்தப்பட்ட மக்கள், பலவிதமாக வளர்ச்சிப் பெறாமல் இருக்கிற நேரத்தில் பழங்குடி மக்களையும் இவர்களோடு சேர்த்திருக்கிற நிலையில் பழங்குடியினர் மக்கள் தொகை இன்னும் அதிகமாகிறது.





ஆகவே, பழங்குடியினருக்காக தனியாக ஒரு வாரியம் அமைக்கப்பட வேண்டும், அதன்மூலம் அவர்கள் வாழ்க்கைக்கு ஓர் உத்தரவாதம் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுவும் என் தொகுதியில் வாழ்கிற இருளர் மக்களைப் பொறுத்தவரையில் ஒருவர் கூட படித்தவர் இல்லை. அரசு அறிவித்திருக்கிற வகுத்திருக்கின்ற பழங்குடியினர் துணைத் திட்டத்திலே மேற்கு மலைத் தொடர்ப் பகுதி மக்களை இணைக்கவில்லை. 6 ஆயிரம் மக்கள் தொகை உள்ள பகுதியிலே இந்தத் துணைத் திட்டம் அமுல்படுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பெண்ணாகரம், கெலமங்கலம், பாலக்கோடு, தளி ஆகிய இந்த 4 ஒன்றியங்களிலும், ஆரவல்லி மலைப் பகுதியில் 6 ஆயிரத்திற்கு மேல் மக்கள் வாழ்கின்றனர். அதுவும் அந்த மக்களில் பலர் குகைகளிலே வாழ்கிறார்கள். ஆகவே அந்தத் திட்டத்தை அந்தப் பகுதியிலே அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அதைவிட வருத்தப்படக்கூடிய ஒரு சம்பவம் இருக்கிறது. அதை இங்கே நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இருளர் பிரிவிலே ஒருவர் கூட படித்தவர் இல்லை. ஆனால் ஒரே ஒரு மாணவனை மட்டும் இழுத்து வந்து படிக்க வைக்க முயற்சி செய்தோம். 5 ஆம் வகுப்பு படித்த அந்த மாணவனை 6 ஆம் வகுப்பில் சேர்ப்பதற்கு இயலாமல் போய்விட்டது. கட்டாய நன்கொடையைக் கட்டாத காரணத்தாலே அந்த பழங்குடி வகுப்பு மாணவனை, அந்த இனத்திலிருந்து படித்து வந்த ஒரே ஒருவனை அங்கே சேர்க்க முடியவில்லை. பெரு முயற்சி செய்து உயர்நிலைப் பள்ளியில் சேர்த்தோம். சான்றிதழ் கொடுக்கப்படாத காரணத்தாலே தங்கும் விடுதியில் சேர்க்க அனுமதிக்கப்படவில்லை என்று சொன்னார்கள். ஆகவே, தங்கிப் படிக்கின்ற வாய்ப்பை அந்த மாணவன் இழந்து விட்டான் இன்றைக்கு ஒரே ஒரு மாணவன், அதுவும் 5 ஆம் வகுப்பு வரை படித்து இருந்தவன் கூட கல்வி பயில முடியாத ஒரு மோசமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. காரணம் அங்கீகரிக்கப்பட்ட பழங்குடி மக்களுக்குக் கூட சான்றிதழ் வழங்குவதிலே காலதாமதம் ஏற்படுகிறது.

இன்னொரு பக்கத்திலே அங்கீகரிக்கப்படாமலேயே குகைகளிலே, மலைப் பகுதிகளிலே ஏராளமான மக்கள் அழுது புலம்பிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களை வன இலாகாவினர் அடித்துத் துரத்துகிறார்கள். இன்னும் சொல்லப்போனால் சென்ற ஆண்டில் குகையில் இருந்துகொண்டிருந்த ஒரு பழங்குடி பெண்ணை, 3 மாத கைக்குழந்தை உள்ள அந்தப் பெண்ணை, அந்தத் தாயை, வன இலாகாவினர் அடித்துத் துரத்தினர் என்பது மட்டுமல்ல, கைக் குழந்தையை வெளியே போட்டார்கள். அந்த குகைக்குப் பக்கத்திலே போட்டிருந்த சிறு குடிசையிலிருந்து அந்த 3 மாத கைக்குழந்தை வெளியே தூக்கி எறியப்பட்டது. அது மட்டுமல்ல, அந்தக் குடிசைக்குத் தீவைத்தார்கள்.

இத்தகைய ஒரு கோரமான சம்பவம் நடைபெற்றிருக்கிறது. பாரம்பரியம் மிக்க இந்த நாடு இன்றைக்கு எவ்வளவோ வளர்ச்சிப் பெற்றிருக்கிறது. பல்வேறு துறைகளிலே வளர்ந்திருக்கிறது. இந்தப் புண்ணிய பாரத பூமியில் 20 ஆம் நூற்றாண்டில் ஒரு மனிதன் குகையிலே வாழ்கிறான். அவனுக்குப் பாதுகாப்பு இல்லை என்ற நிலை இருக்கிறது. இந்த மோசமான நிலையை இனிமேல் போக்குவார்களா என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சலுகைகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக பிற்படுத்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் பலர் தாழ்த்தப்பட்ட மக்களைப் போல கிராமபுறங்களில் வசதியின்றி விவசாய தொழிலாளர்களாக இருக்கிறார்கள். தங்களுக்குச் சலுகைகள் கிடைக்கவில்லை என்ற காரணத்தாலேயே இந்த அப்பாவி மக்கள்மீது கோபித்துக்கொண்டு தாக்குகிறார்கள். ஆனால் யாரிடம் கோரி உரிமைகளைப் பெறுவது என்பதைப் பற்றி அவர்களால்-கல்வி அறிவும், விழிப்பும் இல்லாத காரணத்தாலே-அறிய முடியவில்லை. சேர்ந்து போராட வேண்டிய மக்கள் பிளவுபட்டு நிற்கிறார்கள். பல்வேறு அரசியல் கட்சிகளும் கூட ஜாதியில் ஆளைப் பிடித்து ஒவ்வொரு அரசியல் கட்சியும் ஒவ்வொரு ஜாதி அரசியலை செய்கிற நிலை நீடிக்கிறது. இத்தகைய அவலமான நிலையைப் போக்குவதற்காகக் கட்டாயம் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஜாதி, இனக் கலவரங்களைத் தூண்டுகின்ற எந்த அரசியல் அமைப்பைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி அதைச் சட்ட விரோதமாக அறிவிக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆகவே, நந்தனின் வாரிசுகள் இன்றும் வதைபட்டுக் கொண்டிருக்கிறார்கள். வெண்மணியில் வெந்தவர்களின் வாரிசுகள் இன்றைக்கும் வெந்துகொண்டிருக்கிறார்கள். கிராமங்களில் இருக்கிற அந்த விவசாயத் தொழிலாளர்களுடைய ஜீவன்களைக் கொடுங்கரங்களைக் கொண்டு, ஆதிக்க சக்திகள் துன்புறுத்துகின்றன, நசுக்குகின்றன, ஒடுக்குகின்றன.

ஆகவே, சட்டபூர்வமாக சில சலுகைகள் அறிவிக்கப்பட்டிருந்தாலும் அப்படிப்பட்ட அந்தச் சலுகைகள் அந்த மக்களை எட்டுவதில்லை. ஆகவே, ஆட்சியில் இருப்பவர்கள் சட்டத்தை வகுத்து விட்டோம் என்று இருந்தால் மட்டும் போதாது. அந்தச் சட்டத்தின் பலன் மக்களுக்குப் போய் சேர்கிறதா என்பதை உணர்ந்து அதை அமுல்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒருகால், நாம் காலதாமதம் செய்தால், இந்த நாட்டிலே இருக்கிற தாழ்த்தப்பட்ட மக்கள், பழங்குடி மக்கள், வாழ்க்கையில் நலிந்து, நொடிந்துள்ள மக்கள் வேறு நிலையை மேற்கொள்ளவேண்டிய நிலை ஏற்படும். இப்போதே சொல்கிறார்கள், நாங்கள் தேர்தலில் ஓட்டு போட்டுப் பலன் இல்லை என்று.





இன்றைக்குப் பாராளுமன்ற ஜனநாயகத்தைத் தவறான முறையிலே தங்கள் கையிலே எடுத்து பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிறவர்கள், இந்த மக்களையும் திசை திருப்பும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது. பல தன்னார்வக் குழுக்கள் ஊடுருவி இந்தப் பழங்குடி மக்களைத் திசை திருப்பி, நாட்டுக்கு எதிரான சதித் திட்டங்களை உருவாக்கும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது. இதை உணர்ந்து, அரசு இந்த மக்களைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் இருளர் மக்களுக்கு மூலபெல்லூரில் ஒரு துவக்கப்பள்ளி ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அனைத்து தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களுக்காக இருக்கின்ற விடுதிகளில் உள்ள மாணவர்களுக்கு வசதிகளை ஏற்படுத்த வேண்டும். அந்த விடுதிகளுக்கு அரசே சொந்தமான கட்டிடங்களைக் கட்டித் தரவேண்டும். இன்றைக்குச் சிறை போன்று இருக்கும் நிலைமைகளை மாற்ற வேண்டுமென்று கேட்டு, அவர்களுக்கு ஒதுக்கும் தொகை மற்றும் மாணவர்களுக்குக் கொடுக்கும் உதவித் தொகை ஆகியவற்றை அதிகரிக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடை பெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, ஆதிதிராவிடர் நலனில் மிகுந்த அக்கறை கொண்ட திரு. வெங்கடேஸ்வர தீட்சிதர் அவர்கள்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, ஆதிதிராவிடர் நலத் துறை மானியத்திலே எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த சபாநாயகர் அவர்களுக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆதிதிராவிடர், பழங்குடி மக்கள் மானியத்தில்—சுதந்திரம் கிடைத்து 43 வருஷங்கள் ஆகிறது—மத்தியிலும் சரி, மாநிலங்களிலும் சரி, ஒவ்வொரு வருடமும் பேசுகிறோம். மானியத் தொகை ஒதுக்குகிறோம். மத்தியிலே பல கோடி ரூபாய், மாநிலங்களிலே பல கோடி ரூபாய் ஒதுக்குகிறோம். அவர்கள் நிலைமை பற்றி எவ்வளவோ கேட்கிறோம். ஆனால் இன்னும் எந்தவிதமான முன்னேற்றமும் அவர்களுக்கு ஏற்படவில்லை. பெரியார் சொன்னார், அண்ணா சொன்னார், கலைஞர் சொன்னார், அவர் சொன்னார், இவர் சொன்னார், காமராஜர் சொன்னார் என்று சொல்லுவோம். 1930-ல் மகாத்மா காந்தியடிகள் சுதந்திரம் கிடைக்காததற்கு முக்கிய காரணம், நம்மிடம் ஒற்றுமையில்லை, வகுப்பு, சாதி துவேஷம் இருக்கிறதென்பதை ஒத்துக்கொண்டே தீர வேண்டுமென்று சொன்னார். தீண்டாமை என்ற பெரிய விஷத்தை நாட்டை விட்டே அகற்றுவேன் என்று சொல்லி இந்தியா பூராவும் சுற்றுப்பயணம் செய்தார்கள். 1930 என்று நினைக்கிறேன், 1931 ஆகவும் இருக்கலாம். இந்தியா பூராவும் சுற்றுப்பயணம் செய்து, தீண்டாமையை ஒழிப்பேன் என்று சொன்னார்கள். கிட்டத்தட்ட 60 வருஷமாகிறது. எல்லோரும்

[திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்] [1989 ஏப்ரல் 29

காந்திஜெயந்தி வரும்போது உட்கார்ந்து சாப்பிடுவார்கள். தியாகி பட்டம் பெற்று வெளியிலே வருவார்கள். இன்றைய வரையில் அதுதான் நடக்கிறது. ஆதிதிராவிடர் இல்லத்தில் கல்யாணம் என்றால் தீட்சிதர் அங்கே இருப்பேன். இங்கேயிருந்து யார் வேண்டுமானாலும் போன் பண்ணி கேளுங்கள், இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் இருக்கிறார். திருச்சி நகரில் உள்ள அத்தனை தொகுதிகளின் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். கேளுங்கள். நான் இங்கேயே இருக்கிறேன். ஆதிதிராவிடர் இல்லக் கல்யாணம் என்றால், தீட்சிதரை அதில் போடாமல் இருக்க மாட்டார்கள். அரிசி, மஞ்சள் கயிறு எடுத்துக் கொண்டு நான் போவேன். என்னுடைய தொழில் மாதிரி அதை வைத்திருக்கிறேன்.

ம,ண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு.வெங்கடேஸ்வர தீட்சிதர் அவர்கள் சமுதாய சீர்திருத்தவாதி என்ற முறையில் அந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறாரா அல்லது ஓதுவார் என்ற முறையில் கலந்து கொள்கிறாரா? (சிரிப்பு).

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : சமூகத்தைச் சீர்திருத்த வேண்டும். அப்படிப்பட்ட ஒரு கொள்கையைக் கிட்டத்தட்ட 50 வருடங்களாக வைத்திருக்கிறேன். இன்றைக்கு ஏற்பட்டதல்ல. அலங்காரத்திற்கு இப்படி இருக்கிறேன், குடுமி வைத்திருக்கிறேன் என்று நினைக்கிறார்கள். வெஜிடேரியனாக இருந்தால் எங்கே வேண்டுமானாலும் சாப்பிடுவேன்.

சுதந்திரம் கிடைத்து 42 வருடங்களாகிறது. அவர்களுடைய நிலைமைகளைப் பற்றி அறிக்கையிலேதான் இருக்கிறது. ஆனால் அவர்கள் முன்னேறவில்லை. முதலிலே இருக்க வீடு, பிறகு சாப்பாடு, உடை — இவைதான் அவர்களுக்கு வேண்டும். ஆதிதிராவிடர் காலனிகளில் இன்றைக்கு குடியிருக்க அவர்களுக்கு வசதிகள் இல்லை. அந்தக் காலனிகளில், அரிஜன் தெருக்களில், அந்தக் குடிசைப் பகுதிகளில் அவர்கள் குடியிருக்க வசதி கிடையாது. முன்பு கலைஞர் அவர்கள் ஆட்சியில் இருந்தபோது இலட்சம் வீடுகளைக் கட்டுகிறேன் என்று சொல்லி, கொஞ்சம் நடந்தது. 40,000 வீடுகளைக் கட்டி முடித்தார்கள். 60,000 பாக்கி இருக்கிறது. அதற்குள் ஆட்சியைக் கலைத்து விட்டார்கள். நம்முடைய நாட்டிலே அரிஜனங்களுடைய நிலைமை எப்படி இருக்கிறது? நாங்கள் கூட ஜனதா கட்சி சார்பில் ஜெகஜீவன்ராம் அவர்களை நிறுத்திப் பார்த்தோம்.

(நண்பகல் 12-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஜனதாவிலா, ஜனதா தளத்திலா?



1989 ஏப்ரல் 29]

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : இரண்டும் ஒன்றாக இருக்கும்போது ஜகஜீவன்ராம் ஒரு தாழ்த்தப்பட்டவர் என்பதற்காக எல்லோரும் ஆதரிப்பார்கள் — அவர் ஜெயிப்பார் என்று நினைத்து நிறுத்தினோம். ஆனால் அரசியல் ரீதியில் அப்படி யாரும் ஆதரவு கொடுக்கவில்லை. தாழ்த்தப்பட்டவர் ஒருவரை நிறுத்தினால் அதற்கு மேலே அவரைவிட ஒசத்தியான ஜாதியில் ஒருத்தரை நிறுத்தினார்கள். கடைசியில் அவர்தான் ஜெயித்தார். அவருக்குத்தான் எல்லோரும் வாக்களித்தார்கள். அதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்னும் தாழ்த்தப்பட்டவர்கள் தாழ்த்தப்பட்டவர்களாகவே இருக்கிறார்கள். ஆகஸ்ட் 15 ஆம் தேதி மட்டும் சமபந்தி போஜனம் நடத்துகிறார்கள். எம். ஜி. ஆர். இருக்கும்போது ஆகஸ்ட் 15-ல் சமபந்தி போஜனம் நடத்துவார்கள். என்னை எல்லோரும் அழைப்பார்கள். நானும் ஒரு கோயில் விடாமல் போய் விடுவேன். அங்கே மட்டும்தான் பாகுபாடு கிடையாது. ஆனால் அங்கே கூட நானும் சௌந்தரராஜன் அவர்களும் ஒன்றாக ஒரு பந்தியில் உட்கார்ந்து இருப்போம். அவர்களெல்லாம் எட்டி ஒரு பந்தியில் உட்கார்ந்திருப்பார்கள். நம்ம பக்கத்திலே அவர்களே வந்து உட்கார மாட்டேன் என்கிறார்கள். சாமான்யமாக அவாகள் வந்து சேரமாட்டேன் என்கிறார்கள். அவர்களின் உணர்வு எப்படி இருக்கிறது என்று நீங்கள் பார்க்க வேண்டும்.

இதே ஆதிதிராவிடர்கள் ஐ. ஏ. எஸ். அல்லது ஐ.பி.எஸ். என்று கொஞ்சம் முன்னேற்றம் அடைந்து விட்டால் நம்மோடு வந்து உட்கார்ந்து பழகுகிறார்கள்—சாப்பிடுகிறார்கள். இல்லாவிட்டால் அவர்களே பழக சம்மதிக்க மாட்டேன் என்கிறார்கள். இதிலேதான் சிக்கல் இருக்கிறது. நாம் முதலில் இந்தச் சிக்கலை எடுக்க வேண்டும்.

நாமே பழகினாலும் அவர்கள் பழகமாட்டேன் என்கிறார்கள். தெருவுக்குள் ஆதிதிராவிடர்கள் வரலாம் என்கிறோம். ஆனால் அவர்கள் எட்டியே இருந்து கொண்டு....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு பெ. சீனிவாசன் தங்களோடு ஏதோ பேச விரும்புகிறார்.

*திரு. பெ. சீனிவாசன் : நான் அவரோடு மோதவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. தீட்சிதர் அவர்கள் சிக்கல் இருக்கிறது என்றார்கள். அந்தச் சிக்கல் எதிலே இருக்கிறது என்றால் ஆதிதிராவிடர்கள் ஆதிதிராவிடர்களாகவும் மேல் ஜாதிக்காரர்கள் மேல் ஜாதிக்காரர்களாகவும் இருக்கிற காரணத்தால்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனவேதான் சிக்கல் இல்லாத இஸ்லாமிய மதத்திற்குத் தாழ்த்தப்பட்டவர்கள் மாறுகிறார்கள். எனவே ஜாதிகளை ஒழிப்பதில் திரு. தீட்சிதர் அவர்களுக்கு உடன்பாடு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. சீனிவாசன் அவர்களுக்கு நான் ஒரு நல்ல பதிலைக் கொடுக்கிறேன். ஆதிதிராவிடர்களில் வெகு பேருக்கு படிப்பு இல்லை. அதனால் அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால், நாம் கிருத்துவ மதத்தில் சேர்ந்தால் ஏதோ பெரிதாகக் கிடைக்கும் என்று போகிறார்கள். ஆனால் அங்கே கிருத்துவ மதத்திற்குப் போனாலும் கூட பறையன்கள் கிருத்துவ மதத்தில் இருக்கிற பறையன்களைத்தான் கல்யாணம் பண்ணிக்கொள்ள வேண்டும். பள்ளர்கள் கிருத்துவ மதத்தில் இருக்கிற பள்ளர்களைத்தான் கல்யாணம் பண்ணிக்கொள்ள வேண்டும். எத்தனையோ பிராமணர்கள் கிருத்துவர்களாக மாறியிருக்கிறார்கள். இன்னும் எத்தனையோ சமூகத்தைச் சேர்ந்தவர்கள் கிருத்துவர்களாக மாறியிருக்கிறார்கள். ஆனால் அவர்களெல்லாம் இவர்களுக்குப் பெண் அல்லது பிள்ளையைக் கொடுப்பதில்லை. நிச்சயமாகச் சொல்லுகிறேன் — கலைஞர் ஒருத்தர்தான் அப்படி ஆதிதிராவிடப் பெண்ணைத் தன் குடும்பத்திலே திருமணம் பண்ணிக் கொண்டார். அதை யாரும் மறுக்க முடியாது. நீங்கள் சொல்லுவதற்கு முன் நானே சொல்லிவிடுகிறேன். காரணம் அந்தப் பெண் எங்க ஊர். நான் கூட கல்யாணத்திற்குப் போயிருந்தேன். நாமெல்லாம் சொல்லுவோம் — எனக்கு ஓட்டுப் போடுங்கள் நான் பின்னாலே உங்களுக்கு ஏதேனும் செய்வேன் என்று ஆதிதிராவிடர்கள் வாழ்கிற பகுதிக்கு ஓட்டு கேட்கப் போகிறபோது சொல்வோம். ஓட்டு முடிந்த பிறகு எல்லாம் எட்டிப் போய்விடுவோம். ரொம்பப் பேர் சொன்னார்கள் — நான் சீர்திருத்த கல்யாணம் செய்து கொள்கிறேன் என்று. என்ன சீர்திருத்தக் கல்யாணம். ஒரு அரிஜனப் பெண்ணும் பிராமணப் பிள்ளையும் கல்யாணம் பண்ணிக் கொள்கிறார்களா? இல்லை. ஒரு அரிஜனும் பிள்ளையும் கல்யாணம் பண்ணிக் கொள்கிறார்களா? அல்லது ஒரு அரிஜனும் நாயுடுவும் கல்யாணம் பண்ணிக் கொள்கிறார்களா? இல்லை. இதில் என்ன சீர்திருத்தம் இருக்கிறது? இப்படி இதர ஜாதிகளோடு கல்யாணம் பண்ணினால் பரவாயில்லை. அது சீர்திருத்த கல்யாணம் என்று ஒப்புக் கொள்வேன். செலவு 3 பங்கு செய்துவிட்டு சீர்திருத்தக் கல்யாணம் என்று மேடையில் மைக் முன்னாலே பேசுவார்கள். அவ்வளவுதான் சீர்திருத்தம்.

இன்றைக்கும் நீங்கள் பாருங்கள், பல அரிஜனங்கள் வேலைக்கு அலைந்து கொண்டிருக்கிறார்கள். 18 சதவிகிதம் அவர்களுக்கு என்று ஒதுக்கியிருக்கிறோம். இன்னும் 2 சதவிகிதம் அவர்களுக்குச் சேர்த்துக் கொடுத்தால் நாம் எங்காவது ஓடிப் போய் விடுவோமா? அவர்களுடைய முன்னேற்றத்திற்கு எத்தனை பர்சென்ட் தேவையோ அதைக் கொடுக்கலாம். அவர்களுக்கு முதலில் வேலையைக் கொடுக்கவேண்டும். இருப்பிடத்தை



மாற்ற வேண்டும். இங்கே பேசிய ஓர் உறுப்பினர் சொன்னார் முதலில் ஒரு லே அவுட் போட்டால் 20 பிளாட் இருக்கிறது என்றால் அதில் 2 பிளாட் அல்லது ஒரு பிளாட்டை அவர்களுக்கு ஒதுக்க வேண்டும். அவர்களால் வாங்க முடியவில்லை என்றால் நாம்தான் வாங்கித் தர வேண்டும்.

அரிஜனங்களுக்கு இடமில்லை என்றால் அக்கொயர் பண்ணி இடத்தைக் கொடுப்பதில் சங்கடம் இருக்கிறது என்றார்கள். ஒரு சங்கடமும் இல்லை. விலை ஒன்றுக்குத்தான் சங்கடம். மற்றவைகளை எல்லாம் அட்ஜெஸ்ட் பண்ணி வாங்கிக் கொடுக்கலாம். அதற்கு நமக்கு மனசு வருவதில்லை. ஹைக்கோர்ட்டில் இருக்கிறது, சுப்ரீம் கோர்ட்டில் இருக்கிறது என்கிறார்கள். விலை ஒன்றுக்காக மட்டும்தான் கோர்ட்டுக்குப் போகிறார்கள். அரசாங்கம் அதைக் கொடுத்து வாங்கிக் கொடுத்துவிடலாம்.

மத்திய சர்க்காரில் எஸ்.டி./எஸ்.சி. என்று போடுகிறார்கள். மற்றவர்களையெல்லாம் அவர்கள் சேர்ப்பதில்லை. ஆனால் அந்த எஸ்.டி./எஸ்.சி.க்களையும் ஆள் கிடைக்க வில்லை என்று சொல்லி மேல் ஜாதிக்காரர்களே வாங்கி விடுகிறார்கள். வேலையிலும் கல்வியிலும் உரிமை கொடுக்கிறோம் என்கிறோம். உண்மையில் மற்றவர்கள்தான் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். என்னால் புள்ளி விவரமே கொடுக்க முடியும். கேட்க நாதியே இல்லை. எப்படி எப்படியோ சர்டிபிகேட் வாங்கிவிடுகிறார்கள். மாவட்ட மானியம் பற்றி பேசும்போது சர்டிபிகேட் வாங்குவதைப்பற்றி குறிப்பிட்டார்கள். சிலருக்குத் தமிழில் சான்றிதழ் என்று சொன்னால்தான் புரியும். யார் யாரோ வாங்கிவிடுகிறார்கள். பச்சைமலைக்கு வந்து பாருங்கள். அங்கே பல பேர் உண்மையிலேயே வாங்க முடியவில்லை. பழங்குடியினர் மலைவாழ் ஜாதி என்றெல்லாம் சேராதவர்கள் பல பேர் இருக்கிறார்கள், லம்பாடிகள் இருக்கிறார்கள். லம்பாடிகளைப் பற்றி முன்பு ஒருவர் சொன்னார். லம்பாடிகள் கூட்டம் நம்முடைய நாட்டில் நிறைய இருக்கிறது. அதே மாதிரி போயர்கள் என்று ஒரு கூட்டம் இருக்கிறது. ஒட்டர்கள் கூட்டம் இருக்கிறது. உப்புநீர் என்று ஒரு கூட்டம் இருக்கிறது. இந்தக் கூட்டத்தில் உள்ளவர்கள் எல்லாம் அதிகம் வேலை செய்கிறார்கள். நாம் அடிமைக் கூட்டம் என்று சொல்லுவோமே அதுபோல் அந்தக் கூட்டத்தினர் வெளிநாட்டுக்குப் போய் கூலி வேலை செய்கிறார்கள் நான் மீட்டுக்கொண்டு வந்து விட்டேன் என்று சொல்வார்கள். அதற்கு நல்ல வார்த்தை ஒன்று சொல்வது வழக்கம். நாம் அப்படிச் சொல்கிற அத்தனை பேரும் அவர்கள் தான். நம்முடைய இனங்களில் அவர்களுக்கு வாய்ப்பு இல்லை. அவர்களை எல்லாம் பட்டியலில் சேர்ப்பதற்குக் கூட அரசு தவறிவிட்டது. இப்போது லம்பாடிகள் இருக்கிறார்கள். அவர்கள் ஒரு பெட்டிஷன் கொண்டுவந்து தங்களைச் சேர்க்க வேண்டுமென்று

சொல்கிறார்கள். ஒருவர் இன்னொருவரை வாயால் வசை சொல்லும்போது பாடி என்று சொல்லுவார். லம்பாடிகள் எல்லாம் ஃபுளோட்டிங் பாப்புலேஷன் மாதிரி இருக்கிறார்கள். இங்கு 100 பேர், அங்கு 200 பேர் இன்னொரு இடத்தில் 400 பேர் இருப்பார்கள். அவர்கள் போய்க் கொண்டே இருப்பார்கள். அதேமாதிரி குறவர்களும் இருக்கிறார்கள். இப்படி பல சாதிகள் இருக்கின்றன. அதுவும் சேட்டு செங்கம் ஊரில்தான் லம்பாடிகள் அதிகம் இருக்கிறார்கள். அதற்குப் பக்கத்தில் தளி, மற்றும் மலைப் பிரதேசங்களில் அவர்கள் நிறைய இருத்கிறார்கள். அவர்கள் எஸ்.சி./எஸ்.டி.-யில் சேர முடியவில்லை. அவர்கள் வேலை செய்து செய்து நலிந்து போனவர்கள். இப்படிப்பட்ட லட்சக்கணக்கான குடும்பங்கள் நம்முடைய நாட்டிலே வாழ்கின்றன. அவர்களைப் பற்றி பலரும் சொன்னார்கள். அவர்கள் இறந்து போனால் நூறு ரூபாய்தான் ஒதுக்குகிறார்கள். 500 ரூபாய் வரை ஒதுக்க வேண்டும் என்று கேட்டார்கள். அவர்கள் இறந்து போனால் அவர்களை சுடுகாட்டில் கொண்டு போய் வைக்க வேண்டுமா, இல்லையா ? அவர்கள் எரிக்கிறார்கள் அல்லது புதைக்கிறார்கள். நாங்களாக இருந்தால் எரிக்கிறோம் ; கிறித்தவர்களாக இருந்தால் புதைக்கிறார்கள். அந்தச் சுடுகாட்டிற்கு போவதற்கு ஒரு வழி இருக்க வேண்டுமல்லவா ? இன்னும் சாதி வித்தியாசம் இருக்கிறது ; சுடுகாட்டில் கூட 18 பட்டரை, 20 பட்டரை, அதிலும் அரிசனங்களுக்குத் தனிப் பட்டரை இருக்கிறது. அங்கு போவதற்குக் கூட வழி இல்லை ; அதற்கு வழி இல்லை என்று இங்கு ஒவ்வொரு மானியத்திலும் சொல்கிறார்கள் ; நான் பத்திரிகையிலும் பார்த்தேன். அதற்கு வழி இருக்கிறதா என்றால், இருக்கிறது. வருடத்திற்கு அரசு 200 கிராமங்களை எடுக்க வேண்டும். அங்கு போவதற்கு வழி இல்லை என்றால், ஒரு வரப்பு மாதிரி போட வேண்டும். ஆறு அடி இருந்தால் போதும். அங்கு பிரேதத்தைத் தூக்கிக் கொண்டு போய் வைப்பதற்கு அனுமதி கொடுக்க வேண்டும். இன்னும் அது அங்கு செய்யப்படவில்லையே. எந்தச் சர்க்காரும் எதுவும் செய்யவில்லை. ஆர்ஜிதம் பண்ணி விடலாம். அதைப் பற்றிக் கவலை இல்லை. ஆர்ஜிதம் பண்ண வேண்டிய சொத்தைக் கூட நாம் பண்ணிவிடலாம். அவர்கள் விலகித்தான் போகவேண்டும். சட்டம் அப்படி இருக்கின்றது.

அதே நேரத்தில் இந்தக் குடியிருப்புப் பகுதிகளுக்கு அரிசன் கோவாபரேட்டிவ் பில்டிங் சொசைட்டியில் ஆர்ஜிதம் பண்ணி விட்டார்கள். ஆர்ஜிதம் பண்ணி ஃபிளாட் ஒதுக்கினால், அங்கு போய்ப் பார்க்கும்போது, அரிசன் தெரு ஓரமாக இருக்கிறது ; எனவே இது வேண்டாம் ; பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிடுங்கள் என்று சொல்லும் நிலைமைதானே இன்னும் இருக்கிறது. அரிசன் தெரு பக்கத்தில் இருக்கிறது ; எனவே இந்த ஃபிளாட் வேண்டாம் ; அங்கு குடியேறுவதில் சிரமம்



இருக்கும் என்கிற நிலைமையை நாம் நிச்சயமாக உணர்ந்து அந்த நிலைமை தொடராதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். எப்படியோ 42 வருடங்கள் போய்விட்டன. சாதி இந்துக்கள் விசேஷம் ஒன்றில் சமீபத்தில் நான் கலந்து கொண்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்னும் ஒரு மணித் துளி.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :** நான் நிறைய குறித்துக் கொண்டு வந்திருக்கிறேன். நீங்கள் ஒரு நிமிடம் கொடுத்தால் போதாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தங்கள் பொன்னான கருத்துக்கு பொன்னான ஒரு மணித் துளி.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :** திருச்சிராப்பள்ளியைப் பற்றித் தான் சொல்கிறேன். மற்ற விஷயத்துக்குப் போகவில்லை. திருச்சி மாவட்டத்தில் நான் காங்கிரசில் இருந்த போது அந்த மாவட்டத் தலைவராக இருந்தேன். ஜனதா வந்தபோதும் மாவட்டத் தலைவராக இருக்கிறேன். அங்கே நடக்கிற சம்பவங்களைச் சொல்ல வேண்டுமல்லவா ? முதலில் ராம்ஜி நகரைப் பற்றி சொல்கிறேன். அதுபற்றி கவன ஈர்ப்பு எழுதிக் கொடுத்தேன். ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்தேன் ; ஆனால் இப்போது ரொம்ப சந்தோஷப்படுகிறேன். நாங்களே அந்தப் பிரச்சினையைப் பற்றிப் பேசி சமரசப் படுத்திவிட்டோம். ஒத்தி வைப்புத் தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்ற உடனே நாங்களே போனோம். நீங்கள் நாலு பேர், நீங்கள் நாலு பேர் வாங்க என்று சொன்னோம். பிரச்சினை ஒன்றும் பெரியதல்ல. கிணற்றில் தண்ணீர் எடுத்தான் அரிசன். சண்டை வந்துவிட்டது கிணற்றில் தண்ணீர் எடுத்ததற்காக சண்டை வந்துவிட்டது. என்றால் வேறு என்ன ஆகி இருக்குமென்று எண்ணிப் பாருங்கள். வேலாயுதம் பாளையத்திலும் அதேமாதிரி. அரிசனங்களுக்கும், சாதி இந்துக்களுக்கும் சண்டை வந்தால் அரிசனங்களின் குடிசைகள் ஏராளமாக எரிக்கப்படுகின்றன. சாதி இந்துக்கள் வீடுகள் எரிக்கப்படவில்லையா என்றால், அவர்களுடைய வீடுகள் நல்ல வீடாக, மெத்தை வீடாக இருக்கிறது. நெருப்பு வைத்தால் அது போதுமா ? அரிசனங்கள்தான் குடிசையில் இருக்கிறார்கள். நெய்குப்பையில் பெரிய சண்டை நடந்தது. சமயபுரம் பக்கத்தில் பெரிய சண்டை நடந்தது. அந்தப் பக்கத்தில் பேசாமல் இருக்கிறார்கள். இங்கே சாதி இந்துக்கள் இருக்கிற இடத்தில் நான் சொன்னால் கோபித்துக் கொள்ளக் கூடாது. எரியனும் என்று அவர்கள் ஆசைப்படவில்லை ; யார் வைத்தார்களோ ? பண்டம் ஒரு பக்கம், பழி ஒரு பக்கம். இரண்டு பேருக்கும் சண்டை ஒருவருக்கு ஒருவர் இளைத்தவர்கள் அல்ல.

அதனால் சொல்கிறேன், குடிசைப் பகுதிகளை மாற்ற வேண்டும். வேலாயுதம்பாளையம் பற்றி சொல்லிவிட்டேன். செட்டி குளத்துக்குப் பக்கத்தில் பொம்மலப்பட்டியில் எப்போதும் சண்டை நடக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பெரியவர் அவர்கள் முடித்து உதவ வேண்டும். ஏனென்றால் நிறைய உறுப்பினர்கள் இருக்கிறார்கள்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :** சுகா, தேகா என்ற பிரிவினர் இருவரும் ஒரே சாதியாக இருக்கிறார்கள். அவர்கள் தங்களை எஸ். டி. வகுப்பில் சேர்க்க வேண்டுமென்று கோரிக்கை கொடுத்து இருக்கிறார்கள். தலைவரவர்களே குறித்துக் கொள்ளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** குறித்துக் கொண்டேன்.

(பிற்பகல் 12-10)

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :** அவர்களை அதில் சேர்ப்பதில் ஒன்றும் தவறில்லை. தங்களை எஸ். டி. வகுப்பில் சேருங்கள் என்கிறார்கள். பள்ளர்கள், பறையர்கள், சக்கிலியர்கள், வள்ளுவர்கள், ஒட்டர்கள் எஸ்.டி. வகுப்பிலே இருக்கிறார்கள். இதிலே பறையர்கள் என்ற சாதிதான் எல்லா கிராமத்திலும் ஒட்டு இருக்கும். அவனுக்கு ஊழியம் உண்டு. தப்பை எடுத்துக் கொள்வான். தாரையை எடுத்துக் கொள்வான், கொம்பை எடுத்துக்கொள்வான். அதில் ஜாதித் தகராறு ஏற்படுவது இல்லை. ஏனென்றால் அவன் ஜாதியிலே கலந்து போய் விட்டான். ஒவ்வொரு வருஷமும் கிராம தேவதை உற்சவம் வந்தது என்றால் அவனுக்கும் காப்பு கட்டி விடுவார்கள். அப்பொழுது ஒற்றுமையைக் காப்பாற்றுகிறோம். அந்த ஒற்றுமையெல்லாம் எங்கே என்றால், வெகு இடங்களிலே ஜாதி இந்துக்களுக்கும் இவர்களுக்கும் தகராறு என்றால் கிராம தேவதை உற்சவமே நின்று போய் விட்டது. பிறகு திருச்சி ஜில்லாவிலே ஒவ்வொன்றாகக் கொண்டுவந்து, இப்பொழுது நாம் நான்கு கிராமங்களிலே மெதுவாக சீர்திருத்தமெல்லாம் செய்து, அவனவன் தெருவுக்கும் சுவாமி போக வேண்டும் என்று செய்யப்பட்டது. இதுவரைக்கும் இந்த சுவாமியெல்லாம் அங்கே போகக் கூடாது, எங்கே? அந்த சுவாமியே பயப்பட்டுக் கொண்டிருந்தது. இப்பொழுது போகிறது. அரிஜன் தெருவுக்குச் சுவாமியெல்லாம் போகிறது. ஒன்றும் பயப்படாமல் போய்க்கொண்டிருக்கிறது. அதற்கெல்லாம் நாங்கள் கூட



இருக்கிறோம். கூடப்போய் நாங்கள்தான் தேங்காய் உடைக்கிறோம். நைவேத்தியம் செய்கிறோம். அதை ஏற்றுக்கொள்கிறது. உடனே தேங்காயை நாங்கள்தான் சாப்பிடுகிறோம். அது சாப்பிடவில்லை. உடனே அந்தத் தேங்காய் பழத்தையும் பக்கத்திலேயிருக்கிற நாம்தான் சாப்பிடுகிறோம். ஆனால் அது சாப்பிட மாட்டேன் என்கிறது.

அவ்வளவுதான். பேசுவதற்கு நீங்கள் இடம் கொடுத்தால் ஒரு ஐந்து நிமிஷம் கூட.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இல்லை. தங்களுக்கு இதுவரைக்கும் நிறைய நேரம் கொடுத்திருக்கிறேன். இன்னும் நிறைய வாய்ப்பு இருக்கிறது. நாம் இந்த அவையிலே பேசாமலேவா போகப்போகிறோம்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :** இல்லை. இதற்குக் கொஞ்சமாவது ஆரம்பித்தால் போதும். இப்பொழுது குறைகளையெல்லாம் சொல்லியிருக்கிறோம். சொல்லிய இந்தக் குறைகளை நிவர்த்தி செய்வதற்குக் கலைஞர் ஆரம்பித்தாலேயே போதும். வேறொன்றும் வேண்டியதில்லை. தானே இந்த ஐந்து வருஷங்களுக்குள்ளே நல்ல சொர்க்கமாக ஆக்கிவிடலாம். ஏற்கனவே ஆரம்பித்தாரே, அதற்குள்ளே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அந்த சொர்க்கத்தோடு நாம் நிறுத்துகிறோம். (சிரிப்பு).

***திரு. செ. பெருமாள்** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பழங்குடியினர், ஆதிதிராவிடர் நலனைப்பற்றிப் பேச எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியினைத் தெரிவித்து ஒருசில வார்த்தைகளைப் பேச ஆசைப்படுகிறேன்.

இம் மாநிலத்தில் பழங்குடியினர் மக்கள் தொகையில் 5.20 இலட்சம் ஆகும். இது, மொத்த மக்கள் தொகையில் 1.07 சதவிகிதம் ஆகும். பழங்குடியினர் அதிகமாக வாழும் பகுதிகளில் விரிவான, ஒருங்கிணைந்த மேம்பாட்டுப் பணிகளைச் செயல்படுத்தும் வகையில் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் கொண்டு வரப்பட்டது. சேலம், தர்மபுரி, வடாற்காடு, திருச்சிராப்பள்ளி, தென்னாற்காடு ஆகிய மாவட்டங்களில் பழங்குடியினர் அதிகமாக வாழ்கின்றனர், தமிழ் நாட்டிலுள்ள மொத்தப் பழங்குடியினரில் சுமார் 40.4 சதவிகிதம் பழங்குடியினர் இப்பகுதிகளில் வாழ்கின்றனர். இவர்களது பிரதான தொழில் விவசாயம். விவசாயத்திற்கு வேண்டிய கருவிகள், மண்வெட்டி, கடப்பாறை, தட்டு, குடம் போன்றவை இலவசமாகப் பழங்குடியினருக்கு வழங்கப்பட வேண்டுமென மாண்புமிகு முதல்வரவர்களிடத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. செ. பெருமாள்] [1989 ஏப்ரல் 29

மேலும், பழங்குடியினருக்கு சிறிய, பெரிய விவசாய நிலம் சமப்படுத்துவதற்கு அரசு மானியம் அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பழங்குடியினருக்கு அரசு உதவியுடன் மானியமாக வழங்கும் நிதியானது சரியானபடி அவர்களுக்குக் கிடைப்பதில்லை. அப்படிக் கிடைப்பதற்கு வகையாக ஒரு கமிட்டியை அமைக்க வேண்டும். அந்தக் கமிட்டியில் பழங்குடி இனத்தவர்களையும், ஆதி திராவிடர்களையும்—குறிப்பாக விவசாயம் செய்பவர்களை இடம்பெறச் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பழங்குடியினர் வாழும் பகுதிகளில் வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு திட்டங்களை அரசு தீட்டியுள்ளது. அதாவது சாலை போடுதல், சுகாதார வசதிகளை ஏற்படுத்துதல், பள்ளிகளை ஏற்படுத்துதல், தெரு விளக்கு போடுதல், குடியிருப்புகளுக்கு மின்னிணைப்பு வழங்குதல், குடிநீர் வழங்குதல் போன்ற திட்டங்களை ஏற்படுத்த முதல்வரவர்கள் கூறியுள்ளார்கள். இவற்றை வெறும் ஏட்டளவில் இல்லாமல் செயல் அளவில் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், மலைப் பகுதிகளில் வாழும் பழங்குடியினர் வீடுகளெல்லாம் குடிசை, மண்ணால் கட்டப் பட்டவை. அங்கு மின் வசதியில்லாமல்தான் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கும், விண்ணப்பம் இல்லாமல் மின்னிணைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மலைப் பகுதியில் பாதை வசதி இல்லாத காரணத்தால், மின் விளக்குகள் கூட இல்லாமல் வாழ்ந்து வருகிறார்கள். குறிப்பாக எனது தொகுதியான நெய்யமலை, ஈச்சங்காடு ஆகிய கிராமங்களில் பாதை வசதியும் இல்லை. மின்சார வசதியும் இல்லை. ஏதாவது உடல் நலம் குறைவாக இருக்குமானால் அவர்கள் கீழே இருக்கும் டவுனுக்கு வருவதாக இருந்தால் சுமார் பத்து கிலோமீட்டர் தூரம் நடந்து வந்து பிறகு பஸ் ஏறிச்செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. அந்தச்சூழ்நிலையைத் தவிர்க்க இந்த அரசு உடனே சாலை வசதியும், மருத்துவ வசதியும், அதாவது சுகாதார வசதியும் செய்து தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பழங்குடியினர் போதிய கல்வி அறிவு இல்லாமல் இன்னும் மூடப் பழக்கங்களோடுதான் வாழ்ந்து வருகிறார்கள். இப்படி இருப்பதால் ஒரு சிலர் அவர்களை ஏமாற்றி, அவர்களுடைய நிலங்களைக் குறைந்த விலை கொடுத்து, அதிகமாக தொகை கொடுத்ததாக எழுதிக்கொண்டு அவர்களிடமிருந்து நிலங்களைப் பறித்து விடுகிறார்கள். இந்த நிலை ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். அப்பாவி மக்கள் திரும்ப பணம் கேட்டாலும் அல்லது நிலத்தை திருப்பித் தருமாறு கேட்டாலும் அவர்களை மிரட்டி விரட்டி விடுகிறார்கள். ஏனென்றால் அவர்களுக்குப் படிப்பு அறிவு இல்லை. ஆகவே பழங்குடியினருக்கு **இனிமேல்**



1989 ஏப்ரல் 29] [திரு. செ. பெருமாள்]

இம்மாதிரியான நிலை ஏற்படாமல் இருக்க மலைவாழ் மக்கள் நிலத்தை யாரும் வாங்கக்கூடாது என்றும், அப்படி அவர்கள் விற்பதாக இருந்தால் அந்த நிலத்தை அந்த இனத்தவரே வாங்கிக் கொள்ளலாம் என்றும் உத்தரவு போடும்படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

அரசு உள்ளாட்சி, மற்றும் அரசு உதவி பெறும் நிறுவனங்கள் போன்ற அனைத்து வகையான கல்வி நிறுவனங்களிலும் உள்ள அனைத்து படிப்புகளிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்க்கு 18 சதவீதம் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதை இன்னும் அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதாவது எஸ்.சி.-க்கும் எஸ்.டி.-க்கும் தனியாக இட ஒதுக்கீடு செய்யுமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், பழங்குடியினர் கல்வி, வேலை வாய்ப்பு, நாகரீகம் ஆகிய இவற்றில் பின்தங்கிய நிலையில்தான் இருக்கிறார்கள். எஸ்.டி-க்கும் எஸ்.சி-க்கும் 18 சதவிகிதம் என்று ஒதுக்குவதில் பெரும்பகுதியை எஸ்.சி. வகுப்பினரே அடையும் நிலை ஏற்படுகிறது. (மணியடிக்கப்பெற்றது) மாநில அரசுக்கு மத்திய அரசு கொடுக்கும் தொழில் முதலீட்டில் மலைவாழ் மக்களுக்கு என்று எவ்விதமான தொழில் முன்னேற்றத்திற்கும் அறிகுறியே இல்லை. எனவே நாங்கள் வாழும் இடங்களான ஏற்காடு, கல்வராயன் மலை, பச்சைமலை, கொல்லிமலை போன்ற இடங்களில். தொழில்பயிற்சி பள்ளி அமைக்க வலியுறுத்துகிறேன்.

மேலும் கல்வராயன்மலையில் மரவள்ளிக் கிழங்கு அதிகமாக உற்பத்தி செய்யப்படுவதால் கூட்டுறவு முறையில் அங்கே ஒரு 'சாகோ' பாக்டரியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எங்களைப் போன்ற மலைவாழ் மக்கள் வாழ்க்கை, பொருளாதாரம், கல்வி போன்றவற்றில் பின்தங்கிய நிலையில் இருப்பதால் மைய அரசாங்கமே 7 சதவீதம் என்று ஒதுக்கி எல்லா துறைகளிலும் எங்கள் மக்களுக்கு சலுகை அளிக்கிறது. ஆனால் மாநில அரசு எஸ்.டி.-க்கு மட்டும் இத்தனை விழுக்காடுகள் என்று பிரிக்காமல் ஒன்றாக நடைமுறைப்படுத்துவதால் மலைவாழ் மக்கள், குறிப்பாக கல்வித் துறையில் முன்னேற முடியவில்லை. (மணியடிக்கப்பெற்றது)

அடுத்து மலைப் பகுதிகளில் வெல்பேர் ஹாஸ்டல், வெல்பேர் ஸ்கூல் போன்றவற்றில் பள்ளி ஆசிரியர்கள் ஒழுங்காக வருவதில்லை. ஏனென்றால் கிராமங்களில் அவர்கள் தங்குவதற்கு வீடுகள் இல்லை. ஆகவே மலைப்பகுதிகளில் வேலை செய்யும் அனைத்து ஊழியர்களுக்கும் தங்குவதற்குக் கட்டடங்களைக் கட்டித் தருவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய கட்சியில் கடைசி உறுப்பினரை விட்டுவிட வேண்டியிருக்கும். அதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். உறுப்பினர் சீக்கிரத்தில் முடிக்க வேண்டும்.

திரு. செ. பெருமாள் : பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிலத்தை ஆர்ஜிதம் செய்கிற போது தனியார் வழக்குமன்றத்திற்குச் சென்று தடை வாங்குகிறார்கள். அந்த முறையை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அத்தியாவசியமான பிரச்சினைகளான, குடிதண்ணீர் பிரச்சினை, சுடுகாட்டுப் பிரச்சினை, சுடுகாட்டிற்கு வழிப் பிரச்சினை போன்ற பிரச்சினைகள் இருக்கின்றன. எனவே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் சுடுகாடே இல்லாமல் கிராமங்கள் எல்லாம் இருக்கின்றன. (மணியடிக்கப்பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முடித்து விடுங்கள். அடுத்து மதிப்புமிகு உறுப்பினர் திரு. செங்கை சிவம்.

(பிற்பகல் 12-20)

*திரு. செங்கை சிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை ஒரு சட்டமன்ற உறுப்பினராக, சாமானியமான என்னை, இந்த மாமன்றத்திற்கு அனுப்பி வைத்த, அனுப்புவதற்கான நல்ல சந்தர்ப்பத்தையும் வாய்ப்பையும் அளித்த தமிழினத் தலைவர், தாழ்த்தப்பட்ட மக்களுடைய நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கக்கூடிய டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், பெரம்பூர் தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கும் இந்த நேரத்திலே என்னுடைய மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்து, இங்கே பேச வாய்ப்பளித்த தங்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, எனது கன்னிப் பேச்சைத் துவக்க விரும்புகிறேன்.

நடப்பாண்டில் திட்ட மதிப்பீடு ரூ. 16.54 கோடி என்பதை ரூ. 31.54 கோடியாக இந்த அரசு மாற்றியுள்ளது. ஆகவே இந்த மானியத்தை வரவேற்றுப் பேசவும் விரும்புகிறேன். அடுத்து நடப்பாண்டில் 25 மாணவ விடுதிகளைக் கட்ட திட்டமிட்டு இருக்கிறது. தேர்தல் அறிக்கையில் கூறியதைப் போல், தாழ்த்தப்பட்ட மக்களுக்காக பட்டப் படிப்பு வரையில் இலவசம் என்று அறிவித்துள்ளது.

அதுமட்டுமல்ல, இலவச வீட்டு மனைப் பட்டா வழங்கவும் ரூ. 115 லட்சத்தை உயர்த்தி நடப்பாண்டிலே ரூ.225 லட்சமாக மாற்றி உள்ளது. மேலும் தாழ்த்தப்பட்ட மலைஜாதி மக்கள் சுயவேலை வாய்ப்பு பெறவும், சிறுதொழில் செய்ய வேலை வாய்ப்புப் பயிற்சி அளிக்கவும் நடப்பாண்டிலே 20 கோடி ரூபாயை இந்தஅரசு ஒதுக்கி, மிகச் சிறப்பான நல்ல ஒரு நிலையை உருவாக்கியிருக்கிறது.



அதேபோல் 1974-லிருந்து 1975 வரை, இரண்டு ஆண்டுக் காலத்தில் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நல்ல வீடுகளை அரிசன வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக சிறந்த முறையில் கட்டிக் கொடுக்கின்ற ஒரு சூழ்நிலையைக் கழக அரசு உருவாக்கியது. அதற்குப் பின்னாலே 13 ஆண்டுக் காலத்திலே 34 ஆயிரம் வீடுகளைக் கட்டி இருந்தாலும் கூட, இவை மிகவும் பழுவதடைந்த நிலைமையில் இருக்கின்றன. அத்திட்டத்திற்கு மீண்டும் 49 கோடி ரூபாயை ஒதுக்கி, ஏறக்குறைய 45 ஆயிரம் வீடுகளைக் கட்ட இந்த அரசு திட்டமிட்டு இருக்கிறது. முன்பு நம்முடைய மறைந்த மத்திய அமைச்சர் பாபு ஜகஜீவன்ராம் அவர்களை அழைத்து நம்முடைய கழகத் தலைவர் முதல்வர் அவர்கள் அந்தத் திட்டத்தை நல்ல முறையில் அன்றைக்குத் துவக்கிவைத்தார்கள்.

அதுமட்டுமல்ல, கல்வி மானியத்திலே குறிப்பாக 50 தொடக்கப் பள்ளிகளை ஆதி திராவிடப் பகுதிகளில் துவங்குவது என திட்டமிட்டு இருப்பதை, இந்த அரசு செய்திருப்பதை, நான் வரவேற்கிறேன்.

அதுமட்டுமல்ல, மற்ற, மற்றத் துறைகளிலேயும் கூட ஒதுக்கப்பட்டுள்ள நிதியின் மூலமாக இன்றைய தினம் குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், 80 விழுக்காடுகளுக்கு மேலே தாழ்த்தப்பட்ட மக்கள் பயன் அடைகிறார்கள். எடுத்துக் காட்டாக, பொங்கல், தீபாவளி, தமிழ்ப் புத்தாண்டு, அதைப்போல அண்ணா கலைஞர் பிறந்த நாளில் 5 கிலோ அரிசி வழங்குகின்ற திட்டம் மூலமாக குறிப்பாக வறுமைக் கோட்டுக்குக் கீழேயிருக்கின்ற மக்கள்தான் பலன் அடைகிறார்கள். வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிற மக்கள் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை நான் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

அதேபோல் முதியோர், விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், ஊனமுற்றோர்களுக்கு வழங்கிவந்த 35 ரூபாயை 50 ரூபாயாக உயர்த்தி இருக்கிறார்கள். இதிலும் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர்கள், குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்கள்தான் பயன் அடைகிறார்கள்.

அதுமட்டுமல்லாமல் கருவுற்ற நாளிலிருந்து, கர்ப்பிணிப் பெண்களுக்கு மாதம் 50 ரூபாய் வீதம் நான்கு மாதங்களுக்கு வழங்குகிற திட்டமும் கொண்டுவரப்பட்டு உள்ளது. அதேபோல் இன்றைக்குச் சத்துணவுத் திட்டம் மூலமாக பெரும்பாலும் பயன் அடைகின்றவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள்தான். ஆகவே பல்வேறு துறைகளின் மூலமாக போடப்பட்ட திட்டங்களின் மூலமாக 50, 60 விழுக்காடுகளினுடைய பலன் இன்றைக்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் போகிற அளவிற்குக் கலைஞருடைய ஆட்சி நல்ல திட்டங்களைக் கொண்டு வந்து அறிவித்திருப்பதை நான் பெரிதும் வரவேற்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இங்கே அ.தி.மு.க.-வைச் சேர்ந்த உறுப்பினர் டாக்டர் சௌந்திரராஜன் பேசும்போது, அம்பேத்காருடைய பெயரால் எவ்விதமான கல்லூரியும் தொடங்கப்படவில்லை என்று சொன்னார். எங்களுடைய கழகத் தலைவர் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1975-ல் முதல்வராக இருந்த நேரத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுடைய சம்பந்தியாக விளங்கியவர், அம்பேத்காருடைய பெயரிலே கலைக் கல்லூரியை என்னுடைய தொகுதியிலே துவக்கினார்கள். அது மட்டுமல்ல. அங்குள்ள சாலைக்கு—மிக நீண்ட சாலை அது—5 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைக்கு—டாக்டர் அண்ணல் அம்பேத்கார் அவர்களுடைய பெயரைச் சூட்டினார்கள் என்பதை நான் இங்கே பெருமையோடு எடுத்துக் கூற விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, பால் நினைந்தூட்டும் தாயினைப் போல நம்முடைய முதல்வர் அவர்கள் அம்மையார் திருமதி. பொன்னம்மாள் அவர்கள் கேட்ட கேள்விகளுக்குத் தானாகவே முன்வந்து பதில் சொன்னார்கள். உண்மையாகச் சொல்லப் போனால், அம்பேத்கார் பிறந்த மராட்டிய மாநிலத்தில்கூட ஒரு கலைக் கல்லூரிக்கு அவர் பெயர் கிடையாது. எந்த மாவட்டத்திற்கும் பெயர் கிடையாது. எந்தத் துறைக்கும் அவருடைய பெயர் கிடையாது.

அதுமட்டுமல்ல, நம்முடைய தந்தை பெரியார் அவர்கள் தான் முதன் முதலாக, தென்னாட்டுக்கு அம்பேத்கார் அவர்களை அறிமுகப்படுத்தி, தாழ்த்தப்பட்ட சமுதாயமே, உங்களுக்காக உழைத்துக் கொண்டு இருக்கிற தலைவன் அம்பேத்கார் என்று சொன்னார். அந்த அம்பேத்காருடைய பெயரைப் புதிதாக துவக்கப் போகிற மாவட்டத்திற்கு வைக்கப்போவதாக நம்முடைய முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். உண்மையிலே தாழ்த்தப்பட்ட சமுதாயம் காலம் உள்ளளவும், கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நன்றி உள்ள சமுதாயமாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் எடுத்துக் கூற நான் விரும்புகிறேன்.

அடுத்து ஒருசில கோரிக்கைகளை நான் இங்கே எடுத்து வைக்க விரும்புகிறேன். இன்றைக்குத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அப்பாயிண்ட்மெண்டிலே 18 சதவீதம் இட ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அவர்களுக்கு புரமோசனிலும் 18 சதவீதம் ஒதுக்கீடு வழங்கவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

மற்ற யூனியன்களுக்கு அங்கீகாரம் அளிப்பதைப் போன்று, இந்த எஸ்.சி.எஸ்.டி.-க்களுடைய நல சங்கங்களுக்கும் உரிய அங்கீகாரம் அளிக்கவேண்டும். அப்போதுதான் அந்தத் துறையில் இருக்கிற நெகோசியேஷன் டேபிளிலே அமர்ந்து அவர்களுக்காக வாதாட முடியும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.



ஒவ்வொரு டிபார்ட்மெண்டிலும் அவர்களுடைய நலன்களைப் பாதுகாக்க ரோஸ்டர் சரியான முறையில் கடைப்பிடிக்கப்படுகிறதா என்பதைப் பார்க்க, லையசன் ஆபீசர்களை நியமித்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, முந்தைய ஆட்சிக் காலத்தில் கல்விச் சலுகைகள், மற்ற சலுகைகளுக்காக வருமான வரம்பு ரூ. 9,000 என்றிருந்ததை ரூ. 15,000 ஆக உயர்த்தியதற்காக இந்த அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு, அது போதுமானதல்ல இன்னமும் உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் இன்றைக்கு மாத வருமானம் ரூ. 1,000, ரூ. 1,500 என்பதை கடைநிலை ஊழியர்களே கூட, பெறுகிறார்கள். ஆகவே அதை உயர்த்தித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : : என்னால் அதை உயர்த்தித் தரமுடியாது என்பதை நான் உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன் (சிரிப்பு).

திரு. செங்கை சிவம் : 1981-ல் 12,000—10 ஏ (1) களைத் தற்காலிகமாக நியமித்தார்கள். 25–6–1984-ல் அவர்களை முன்பிருந்த அரசு நிரந்தரம் ஆக்கினார்கள். அதில் ரிசர்வேஷன் பாலிசியைக் கடைப்பிடிக்கவில்லை. எல்லாத் துறைகளிலும் அப்படித்தான் இருக்கிறது. அது ஊரக வளர்ச்சித் துறையானாலும், குடிநீர்த் துறையானாலும், காவல் துறையானாலும், மற்ற துறைகளானாலும் சரி, 5 அல்லது 6 ஆண்டுகளாக நிரந்தரமாக்கப்பட்டார்கள். காண்ட்ராக்ட் முறையில் அமர்த்தப்பட்டவர்கள். அதில் ரிசர்வேஷன் பாலிசியைகடைப்பிடிக்கவில்லை.

அதுமட்டுமல்ல, High Level Committee High Power Monitory Commi'tee என்றுகலைஞர் ஆட்சிக் காலத்தில் துவக்கப்பட்டன. ஆனால் அவை இன்று செயல்படவில்லை. இக்கமிட்டிகள் உரிய நடவடிக்கைகளை எடுத்து, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுடைய நலன்களை பாதுகாக்கவும், அவர்களுக்கு விகிதாச்சார முறையினை அளிக்கவும் வகைசெய்து பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கமிட்டிகளிலே நான்—அரசியல் என்ற நிலையில் தாழ்த்தப்பட்டவர்களையே நியமித்து அவர்களுடைய நலன்களை பாதுகாக்கப் வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

அகில இந்தியாவிலேயே அதிகமாக தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கிறார்கள் என்று சொன்னால், அது பெரம்பூர் தொகுதியில்தான். 175 பகுதிகளை கொண்டிருக்கிற பெரம்பூர் தொகுதியில் 120 பகுதிகளில் தாழ்த்தப்பட்ட மக்களே வாழ்கின்

[திரு. செங்கை சிவம்] [1989 ஏப்ரல் 29

மிகப் பெரிய ஒரு தொகுதியாக இருக்கின்ற காரணத்தால் அதிலே உள்ளடக்கிய சில விவகாரங்களை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

முதன் முதலில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக நம் முடைய தலைவர் பி. எஸ். மூர்த்தி நகரில் அவர்கள் குடிசை மாற்று வாரிய வீடுகளைக் கட்டித் தந்தார்கள். இன்று அவை கள் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. அதை மாற்றித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கி றேன். பெரம்பூர், வியாசர்பாடி, எருக்கஞ்சேரி, அதை யொட்டி இருக்கின்ற பகுதிகளிலே கட்டப் பட்டிருக்கின்ற ரயில்வே சப்-வேக்கள் மழைக் காலங்களிலே தீவாக மாறுகின் றன. மிகச் சிறப்பிற்கு உரிய வியாசர்பாடி என்பது, வியாசர் அவர்கள் அன்றைக்கு மகாபாரதத்தை ஈற்றுத் தந்தார்களே, அவர்கள் எங்களுடைய வியாசர் பகுதியிலே தங்கி, பாடிய ஊர், அதனால் அதற்கு வியாசார்பாடி என்ற பெயர் வந்தது.

அதுமட்டுமல்ல, வள்ளலார் அவர்கள் எங்களுடைய தொகுதி வழியாகச் சென்றார்கள்.

(பிற்பகல் 12-30)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 'வியாசர்' என்று நான் கருதுகிறேன். எங்கள் ஊரிலேயும் ரொம்பப் பேர்கள் பாடியிருக் கிறார்கள். நாங்கள் அப்படிப் பெயர் வைக்க முடியாமல் போய் விட்டது.

உங்களுக்கு இன்னும் ஒரே ஒரு மணித் துளிதான் எஞ்சி இருக்கிறது. அதற்குள் நீங்கள் முடிக்க வேண்டும். இல்லா விட்டால் வாய்ப்பு அடுத்தவருக்குத்தான்.

**திரு. செங்கை சிவம் :** மழைக் காலங்களில் ஏற்படுகிற தொல்லைஅதிகம். ஆகவே அங்கே ஓவர் பிரிட்ஜ் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டும் அல்லாமல் எங்களுடைய பர்மா தமிழர் பகுதியில் 600க்கும் மேற்பட்டவர்கள் வீடு இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தச் சூழ்நிலை யையும் நீங்கள் கருத்திலே கொண்டு, அவை தீர்க்கப்பட வேண் டும் என்றும், டாக்டர் அம்பேத்கார் பெயரிலே கட்டப்பட்டிருக்கிற ஒரு கலைக் கல்லூரி மிக மோசமான சூழ்நிலையில் இருக் கிறது, கலைஞர் காலத்தில் கட்டிய காரணத்தால் மிகவும் பழுதடைந்திருக்கிறது. அதையும் இன்றைக்குச் சீரமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு கலைஞர் காலம் தாழ்த்தப் பட்ட மக்களின் பொற்காலம் என்று சொல்லி விடை பெறு கிறேன். வாய்ப்புக்கு உங்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள் கிறேன், நன்றி, வணக்கம்.



D V211, 31/N89 N89/141

1989 ஏப்ரல் 29]

**திரு. சம்சுதீன் என்கிற கதிரவன் :** பேரவைத் தலைவர் அவர் களே, கலைஞர் காலத்தில் கட்டிய கட்டிடம் பழுதடைந்திருக் கிறது என்று சொன்னார்கள். கலைஞர் காலத்தில் கட்டிய கட்டிடம் இடைக்காலத்தில் செப்பனிடப்படாது இருந்த காரணத்தினால் பழுது அடைந்திருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் ;** இதிலே Point of Order ஒன்றும் இல்லை.

144367

***திரு. வெ. இராசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, ஆதித்திராவிட மற்றும் பழங்குடியினர் நலன் என்ற தலைப் பின் கீழ் 1989—90 ஆம் ஆண்டிற்காக ரூ. 76.12 கோடி வழங்கு வதற்கான 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின் மீது பேசு கின்ற வாய்ப்பு நல்கியதற்கு நான் சேர்ந்திருக்கக் கூடிய அனைத் திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏழைகளின் காவல் தெய்வமாக விளங்கிய புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களையும், சமுதாயத்தில் தாழ்த்தப் பட்டு தள்ளப்பட்ட இனத்திற்காக தள்ளாத வயதிலும் தன் இறுதி மூச்சாக போராடிய ஈரோட்டுச் சிங்கம் வெண்தாடி வேந்தர் பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களையும், பட்டித் தொட்டிகளில் எல்லாம் பகுத்தறிவை ஊட்டி தீண்டாமை என்ற தீயை அணைத்த தென்னாட்டு பெர்னாட்ஷா பேரறிஞர் அண்ணா அவர்களையும், சமத்துவம் கண்டு சமநீதி காண்போம் என்று இந்திய நாட்டில் அரசியல் சட்டத்தை உருவாக்கிய சட்ட மாமேதை டாக்டர் அம்பேத்கார் அவர்களையும், கர்ம வீரர் காமராஜர் அவர்களையும் இந்த நல்ல நேரத்தில் எனது நெஞ் சில் நிறுத்தி இந்த ஆதித் திராவிட இன மக்களின் பிரதிநிதியாக விளங்கக் கூடிய டாக்டர் அம்பேத்கார் அவர்களுடைய பிறந்த தின விழாவைக் கொண்டாடுகிற இந்த நல்ல நேரத்தில் ஆதித் திராவிடர் மற்றும் பழங்குடியினர் மானியக் கோரிக்கையை விவா திப்பது ஒரு தனிச் சிறப்பு வாய்ந்ததாகும்.

அந்த அடிப்படையில் இந்த விவாதம் நடைபெறுகிற இந்த நேரத்தில் நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆதித் திராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆகியோர்களுக்குத் தொடர்ந்து நல்ல பல திட்டங்களை அறிவிப்பார்கள் என்று எதிர் நோக்கி இந்த மானியக் கோரிக்கையிலே எனது ஒருசில கருத்துக்களை முன் வைக்க விரும்புகிறேன். ஏழைகளின் சிரிப்பில் இறைவ னைக் காண்போம் என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள். அவர்களின் பொன்மொழிக்கேற்ப, ஆதித் திராவிடர் மற்றும் பழங்குடியினர் கிறித்துவர்களாக மதம் மாறிய ஆதித் திராவிடர் மாணவர்கள் உள்பட அனைத்து மாணவர்களுக்கும் தமிழக அரசு தொடக்க நடுநிலை, உயர்நிலை, மேல் நிலைப் பள்ளிகளை உள் ளடக்கிய 1,204 பள்ளிகளை அறிவித்துள்ளதை வரவேற்கின்ற

[திரு. வெ. இராசு] [1989 ஏப்ரல் 29

போதிலும், மேலும் ஆதித் திராவிட மக்கள் அதிகமாக வசிக்கக் கூடிய குக்கிராமங்களிலும் அவர்களுக்குப்பள்ளிகளை ஆரம்பித்து, அப்படி ஆரம்பித்த பள்ளிகளிலே விடுதி வசதிகளையும் ஏற்படுத்தித் தரவேண்டுமாய் இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பள்ளிகளிலும் கல்லூரிகளிலும், படிக்கின்ற மாணவர்களுடைய பெற்றோர்களுக்கு வருமான வரம்பு அப்போது ரூபாய் 12 ஆயிரமாக இருந்தது. அதைத் தற்போது அரசு ரூ. 15 ஆயிரமாக உயர்த்தியுள்ளது. இருந்த போதிலும் அவர்களுக்கு இப்போது அறிவித்திருக்கக் கூடிய சம்பள கமிஷன் மூலமும் அடிக்கடி கொடுக்கக் கூடிய பஞ்சப்படி மூலமும் அவர்களுடைய வருமானம் உயர்த்திருக்கிறது. ஆகவே இப்படி உயர்த்தி இருக்கக் கூடிய இந்த வருமான வரம்புப் போதுமான பயன் அளிப்பதாக இல்லை.

கல்லூரியிலே படிக்கக் கூடிய மாணவர்களுக்கு ரூ.6 ஆயிரத்திலிருந்து ரூ. 9 ஆயிரம் வரை வருமான வரம்பு இருந்தால் ஃபுல் பீஸ்கன்செஷனும் ரூ.9 ஆயிரத்திலிருந்து 12 ஆயிரம்வரை வரம்பு உள்ளவர்களுக்கு அரை ஃபீஸ் கன்செஷனும், ரூ. 12 ஆயிரத்திற்கு மேல் வருமான வரம்பு உள்ளவர்களுக்கு எந்தவிதமான சலுகையும் இல்லை என்று இருக்கிறது. ஆகவே அவர்கள் தொடர்ந்து அரசினுடைய சலுகைகளைப் பெற்று கல்விக் கண் திறந்து சமுதாயத்திலே சம அந்தஸ்து பெற்று விளங்குவதற்கு அரசு அறிவித்திருக்கக்கூடிய ரூ. 15 ஆயிரம் வருமான வரம்பை 25 ஆயிரமாக உயர்த்த வேண்டுமென்று நான் இந்த நல்ல தருணத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை)

**விடுதிகளில்** மாணவர்கள் தங்குகிறார்கள். அங்கு கட்டிட வசதிகள் இல்லை. கட்டிடங்கள் மூலை முடுக்குகளில் இருக்கின்றன. பல் இடங்களில் இன்னும் வாடகை கட்டிடத்திலே விடுதி நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். அந்தக் கட்டிடங்களில் சுகாதார வசதி இல்லை. சாக்கடைகள் போன்றவை ரொம்ப மோசமான நிலையிலே இருக்கின்றன. அந்த விடுதிகளுக்கு அரசு கட்டிடம் கட்டிக்கொடுக்க வேண்டும். அல்லது நல்ல சூழ்நிலை உள்ள இடத்திலே வாடகைக் கட்டிடம் அமைப்பதற்காக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். ஹாஸ்டலில் சமையல் பாத்திரங்கள் ஈயம் பூசாமல் இருக்கின்றன. அதில் சமைக்கின்ற உணவுகளை மாணவர்கள் சாப்பிடுகின்றபோது அவர்களுக்குச் சுகாதாரக் கேடு ஏற்பட்டு அதன் மூலமாக வாய்ப்புண் வந்து அவதிப்படுகிறார்கள். ஹைஸ்கூல் படிக்கின்ற மாணவர்கள் விடுதிகளில் இருக்கின்றவர்களுக்கு கையில் சிறங்கு ஏற்பட்டு மருத்துவமனைக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. கிராமப்புறங்களில் அரசு மருத்துவமனைக்குச் சென்றால் அங்கு சரியான சிகிச்சை அளிக்கப்படாமல் மருந்து கொடுக்கப்படாமல் அவர்கள் பள்ளிக்குச் செல்லும்போது தங்களுடைய கையிலே ஒரு கர்ச்சீப்பை சுற்றிக் கொண்டு போக வேண்டிய



1989 ஏப்ரல் 29] [திரு. வெ. இராசு]

நிலைமை இருக்கிறது. ஆகையினால் அரசு கவனம் செலுத்தி ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எனது தொகுதியில் விராலிமலை, இளப்பூர், அன்னவாசல், கீரனூர், ஆலூர் ஆகிய........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒரு நிமிடம் தான் இருக்கிறது. எல்லா மானியத்திலும் உங்கள் தொகுதியைப் பற்றியே பேசிக்கோண்டிருக்கிறீர்கள். பொதுவான கருத்துக்களைச் சொல்லுங்கள்.

திரு. வெ. இராசு : ஐந்து விடுதிகள் உள்ளன. இதில் ஒரு இடத்திலே ஆதிதிராவிடர் விடுதி இருக்கின்றது. சுகாதார முறையிலே நல்ல கட்டிடங்களைக் கட்டி, அங்கு மேலும் அதிகப்படியான மாணவர்கள் பயிலுகின்ற வகையிலே, அங்கு அவர்களுடைய ஸ்ட்ரென்த்தை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 1989–90-ல் 44 கல்லூரிகளுக்கு, தொழிற் பயிற்சி விடுதிகளுக்கு இண்டேன் கேஸ் எரிவாயு வழங்குவதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும், ஆதிதிராவிடர், பழங்குடியினர் மாணவர்களுக்கு இல்லங்களில், அரசினர் பள்ளிகளிலே வழங்குகின்ற பாய்களின் செலவுத் தொகை ரூ. 5.50-லிருந்து 15 ஆக உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது என அரசு அறிவித்துள்ளது. இந்த உத்தேசித்துள்ளது என்பதை ஆணை பிறப்பித்து நடைமுறைக்குக்கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருஸ்துவ மதத்திற்கு மாறிய ஆதிதிராவிடர்வகுப்பைச் சேர்ந்த வேளாண் தொழிலாளர்களுக்கு உழவுமாடுகள் வாங்குவதற்கு அரசு மூன்றில் ஒரு பங்கு மானியமாக வழங்குகின்றது. இந்த மூன்றில் ஒரு பங்கு என்பது சுமார் ரூ,800 என்பதை தற்போதுள்ள விலைவாசி ஏற்றத்தின்படி அவர்களுக்கு உயர்த்தி அதிகப்படியான கடன் கொடுத்து அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பெரும்பாலான ஆதிதிராவிடர்கள் வசிக்கக்கூடிய பகுதிகளில் மயான சாலைகள் பழையதை புதுப்பித்து புதியவற்றை விரைவில் போடுமாறு கேட்டுக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. ஜி. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையத் தினம் ஆதிதிராவிடர் பழங்குடியினருடைய மானிய கோரிக்கையின் மீது இந்தியகம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். ஆதிதிராவிடர்களுக்கு, பழங்குடியினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கக்கூடிய பட்டா அநேகமாக கிராமங்களில், நகர்ப்புறங்களில் குடியிருக்கக்கூடிய ஏழை எளிய மக்கள் ஹரிஜன மக்கள், மடம், கோவில் நிலங்களிலே குடியிருந்து கொண்டிருக்கிறார்கள், அவர்கள் எல்லாம் ஆதிதிராவிட வகுப்பினர், இருந்த போதிலும் கூட அரசால் பட்டா அவர்களுக்கு வழங்கப்பட முடியவில்லை. அப்படிப்பட்ட சட்ட திருத்தங்களில் வழங்க முடியாது

என்று சொல்லக்கூடிய நிலைமைகள் தொடர்ந்து நீடித்துக் கொண்டிருக்கிறது. இன்றையதினம் தமிழகத்திலே ஆட்சி நடத்திக் கொண்டிருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகம் கடந்த காலத்தில் தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களாலேயே அநேகமாக தமிழகத்திலே குடியிருப்பவர்களுக்குப் பட்டா வழங்க வேண்டும் என்ற அந்த அடிப்படையில் வழங்கியபோது, மக்கள் அனைவர்க்கும் குடியிருப்பதற்கு இடம் கிடைக்கும் என்று ஆவலோடு இருந்தவர்களுக்கு இப்படிப்பட்ட சட்டத்தால் பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு நிலப் பட்டாக்கள் வழங்க முடியாத ஒரு நிலையிருக்கிறது. ஆகவே, நிலப்பட்டா என்று சொல்லுகிறபோது குடியிருப்பு மனைப் பட்டா வழங்குகின்ற இந்தச் சூழ்நிலையில் தொடர்ந்து அநேகமாக 41 ஆண்டுக் கால சுதந்திரத்தில் தொடர்ச்சியாக ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறவர்கள் மனைப் பட்டா வழங்குவதற்கான சட்டங்களை நிறைவேற்றியபோதும் கூட, தொடர்ந்து மனைப்பட்டாவை ஒரு காலக் கட்டத்தோடு அவர்கள் வழங்காமல், ஒரு நீடிப்பாகவே அது தொடர்ந்து வருகிறது. ஆகவே, அரசு மூன்று ஆண்டுகளுக்குள்ளாக, அந்த வீடற்றவர்களுக்கு, மனைப்பட்டா இல்லாதவர்களுக்கு, ஏழை-எளிய அரிஜன மக்களுக்கு வழங்க வேண்டும். அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

(பிற்பகல் 12–40)

அதேபோல்தான் கட்டிடம் கட்டப்பட்ட காலனிகள், வீடுகள் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. இன்றைய தினம் அவை பழுதுபார்க்கப்படாமல், புதுப்பிக்கப்படாமல் இடிந்தநிலையிலேயே அந்த வீடுகள் இருக்கின்றன. அரசு அந்த வீடுகளைப் பழுது பார்க்கின்ற வகையில் அரசுச் செலவிலேயோ அல்லது கடனாக அவர்களுக்கு நிதியுதவி வழங்கியோ, அவர்களுக்கு அந்த வீடுகளைப் புதுப்பித்து புத்துயிர் ஊட்டுவதற்கு இந்த அரசு முன் வரவேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போன்று, வெள்ளத்தால், புயலால், சேதம் அடைந்தால் அவர்களுக்கு நிதியுதவி வழங்கப்படுவதில்லை. இது போன்று குடிசை வீடுகளுக்கு வழங்கப்படும் சலுகை என்பது, அந்த ஏழை எளிய மக்களுக்கு, அந்த இடிந்த வீட்டில் இருக்கிற காரணத்தால் அவர்களுக்கு வழங்கமுடியாது என்று கூறுகிறார்கள். அப்படிப்பட்ட நிலையை மாற்றுகின்ற வகையில் நமது அரசு பல சட்டத் திருத்தங்களைக் கொண்டுவர வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.



இதுபோன்று குடியிருக்கக்கூடிய வீடுகளில் இருப்பவர்களுக்கு ரோடு, குடிநீர் போன்ற அத்தியாவசியமான தேவைகளை அரசு செய்யவேண்டும். அரிஜன காலனிகளிலிருக்கின்ற தெருக்களுக்கு, அரிஜன வீடுகள் இருக்கின்ற தெருக்களுக்கு, ஆதிவாசிகள் குடியிருக்கின்ற தெருக்களுக்கு, குடிநீருக்காகக் கட்டப்பட்டிருக்கக்கூடிய கிணறுகள் பலவாண்டுக் காலமாக பாழடைந்த நிலையில் இருக்கிறது. அந்தப் பாழடைந்த கிணறுகளை சுத்தப்படுத்திக் கொடுத்தால் ஓரளவிற்கு குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நல்ல வாய்ப்பு ஏற்படுவதற்கு இன்றையதினம் ஒரு நிலைமை இருக்கிறது. அந்த அளவிற்கு அவர்களுக்கு அந்த வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இதுபோன்று அரிஜன நிதி பெற்று இன்றையதினம் பல்வேறு தொழிற்சாலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அநேகமாக பல்வேறு சட்ட வடிவங்கள் வந்த நேரத்திலும்கூட, அரசினுடைய நிதி ஆதாரங்களைப் பெற்று பல்வேறு தொழிற்சாலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பல்லாயிரக் கணக்கான பேர் அதில் பணியாற்றுகிறார்கள். ஆகவே, அரிஜன மக்களுக்கு இடம் ஒதுக்குகின்ற அடிப்படையில், அரசு உதவி பெற்று ஆலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த ஆலைகளில் இந்த அரசு அவர்களுக்கு விகிதாச்சார அடிப்படையில் பணிபுரிவதற்கான ஒரு புதிய சட்டத்தை இங்கே இயற்றவேண்டும். அதற்கான உத்தரவாதத்தினை அதன் மூலமாக வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். பொதுவாக அரசினுடைய இட ஒதுக்கீடு, சம்பந்தமாக, அரசு உத்யோகங்களில் அரசிலே வேலை பார்க்கக்கூடிய இடங்களில் அந்த வாய்ப்புக் கிடைக்கின்றதே தவிர, ஆலைகளிலே பணி புரியக்கூடியவர்கள் பல்வேறு தொழிற்சாலைகளிலே பல இலட்சக்கணக்கான வேலை செய்யக் கூடியவர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், பழங்குடியினருக்கு வேலை வாய்ப்புக்கு இடம் அளிக்காத ஒரு சட்டவடிவம் இருக்கிறது. அதற்கு இந்த அரசு முயற்சி செய்யவேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதனைப் போன்று, உதவித் தொகை. இன்றையதினம் மாணவர்களுக்கு உதவித் தொகை என்ற வகையில் அநேகமாக நீண்டதொரு கையாடல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவர்களுக்கு, படித்த மாணவ, மாணவியர்களுக்கு அந்தத் தொகை வழங்குகின்ற போது, மாணவர்களுக்கோ, பெற்றோர்களுக்கோ நேரடியாக கிடைக்கவேண்டிய அந்தத் தொகை கிடைப்பதற்கான நேரடியான வழிவகைகளைச் செய்யவேண்டும். பல்வேறு மாணவர்களுக்கு வயது கூடிவிட்டது என்ற காரணத்தினால் அப்படிப்பட்ட அரிஜன மாணவர்களுக்கு அவர்களுக்குக் கிடைக்க

வேண்டிய, அந்தப் பள்ளி மாணவர்களுக்குக் கிடைக்கவேண்டிய உதவித்தொகைகள் இன்றையதினம் வழங்கப்பட முடியாது என்று சொல்லி மறுக்கப்படுகிறது. ஆகவே, நமது அரசு அநேகமாக 28 வயதிலிருந்து 30 வயதாக இன்றைக்கு உயர்த்தி பல்வேறு வேலைத்துறைகளில் வாய்ப்புக் கொடுத்தபோதும்கூட, அவர்களுக்கும் இதே அடிப்படையாக வைத்து இந்தப் பள்ளி மாணவர்களுக்கு, அந்தப் பள்ளி கொடுக்கக்கூடிய அந்த மானியத் தொகைகளை வழங்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, தீண்டாமை ஒழிப்புச் சட்டம். தீண்டாமை ஒழிப்புச் சட்டம் இருந்தபோதிலும் இன்றைக்குகூடத் தமிழகத்தின் பல்வேறு இடங்களில், சில பல மாவட்டங்களில் பல்வேறு இயக்கங்கள், பல்வேறு அரசியல் கட்சிகள் பலமாய் இருக்கக்கூடிய இடங்களில் தீண்டாமை ஒழிப்பு தடுக்கப்பட்டிருக்கிறது. பல்வேறு இடங்களில் இந்தத்தீண்டாமை என்பது பல்வேறு மக்களை இழிவுப்படுத்துகின்ற நிலைமை நீடிக்கிறது. ஆகவே, சமூக நீதி வழங்கக்கூடிய சூழ்நிலையில் அவர்களுக்கு ஒரு சட்டத்தை நேர்மையான முறையில், நியாயமான முறையில் நடவடிக்கை எடுப்பதற்கு ஆவன செய்யவேண்டும் என்று இந்த அரசை கேட்டுக்கொள்கிறேன்.

ஏழை எளிய மக்களுடைய வறுமையை ஒழிக்கவேண்டும் என்று சொன்னால், அதற்கு ஒரு நிரந்தரமான தீர்வை காண்பதற்கு தேவையான திட்டங்களை நமது அரசு தீட்டவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வறுமையை ஒழிப்பதற்கான ஒரு நீண்டதொரு திட்டத்தை வடிவமைத்து அதற்கான அடிப்படையில் செயலாக்கத்தை கொண்டு வருவதன் மூலமாகத் தான் ஏழை எளிய மக்களுடைய வாழ்க்கை நிலைமை மாறுபட முடியுமே தவிர அதற்கான காரணங்களைச் சொல்லிக்கொண்டு தொடர்ச்சியாக வந்துகொண்டிருக்கிறோம் என்று சொன்னால் வறுமை கூடிக் கொண்டு இருக்குமே தவிர அதை ஒழிப்பதற்கான வழிவகைகளைக் காண முடியாத ஒரு சூழ்நிலை இந்த சந்தர்ப்பத்தில் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. 7-வது ஐந்தாண்டுத் திட்டம் இன்றைய தினத்தில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. மத்திய மாநில அரசுகள் பல கோடிகணக்கான ரூபாயை இந்த தினத்தில் அதற்காக செலவழித்தும் அந்த திட்டங்கள் ஏழை எளிய மக்கள், பழங்குடியினருக்கு இன்னும் போய் கிட்டாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அது அவர்களுக்குக்கிடைப்பதற்கான வாய்ப்பினை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நிலச் சீர்திருத்தம் சம்பந்தமாக இந்த அரிசன நலத் துறையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஏழை எளிய மக்கள் சுமார் 24 லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் இருக்கக்கூடிய தமிழகத்தில் அவர்கள் விவசாயத் தொழிலாளர்களாக, நலிந்த விவசாயிகளாக, ஆதி திராவிடர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறா



கள். முழுமையாக நில சீர்திருத்தத்தைக் கொண்டு வந்து அந்த நிலத்தை எடுத்து அவர்களுக்கு நிலத்தை வழங்கி உழுபவனுக்கே நிலத்தைக் கொடுத்தால் தான் அவர்களுடைய வாழ்க்கையில் ஒரு முன்னேற்றத்தைக் காண முடியும், ஒரு மறுமலர்ச்சியைக் காண முடியும். உணவு உற்பத்தியை பெருக்க முடியும் என்ற அந்த அடிப்படையில் நிலச்சீர்திருத்தச் சட்டத்தைத்தொடர்ந்து சொல்லிக் கொண்டு இருக்கக்கூடிய நமது அரசு நிச்சயமாக முழுமையாக அதைச் செய்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் கூலிச் சட்டங்கள். (மணியடிக்கப் பெற்றது) நான் எப்போதும் சுணக்காகத்தான் பேசுகிறேன். அதனால் கொஞ்சம் டைம் கொடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கூலிச் சட்டங்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இந்தக் கூலிச் சட்டங்கள் என்று சொன்னால் நமது அரசு விவசாய தொழிலாளர்களுக்கு, ஏழை எளிய அரிசன மக்களுக்கு கூலிச் சட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தக் கூலிச் சட்டத்திற்கு தனியாக ஒரு தாசில்தாரை அமைத்து அதை உடனடியாக அமுல் செய்வதற்கான அந்தப் பணியைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதில் ஏற்படக்கூடிய நிலைமைகளுக்கு போலீஸ் வழக்குக்கு போகாமல் விவசாயத் தொழிலாளர்கள் மேல் வழக்குப் போடாமல் பாதுகாப்பதற்கு அந்த வகையில் அந்தச்சட்டத்தைச் செயலாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சோ. கி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த கூலிச் சட்டத்தை **அமல்** செய்வதற்குத் தனியாக தாசில்தார் தேவையில்லை. அந்த சட்டத்திலேயே தாசில்தார் அந்தஸ்துக்குக் குறையாதவர்கள் அந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தலாம் என்று இருக்கிறது. அது இப்போது புதிய சட்டமும் அல்ல. பழைய சட்டத்திலே சற்று கூலியைத் தான் உயர்த்தியிருக்கிறோம். அப்படி ஏதாவது தகராறு ஏற்படுமானால் உடனடியாக தாசில்தார் இடத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கலாம். உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : குறைந்த பட்சக் கூலி கிடைக்கவில்லை என்று சொன்னால்தான் நீங்கள் தாசில்தாரிடம் போய் ரிப்போர்ட் செய்யவேண்டும். அப்படிப் பேசுங்கள்.

திரு. ஜீ. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. ஜி. பழனிச்சாமி] [1989 ஏப்ரல் 29

அதேபோல் அரிசன நலத்துறை தாசில்தார் அலுவலகம் என்று ஒன்று இருக்கிறது. அந்த அலுவலகத்தில் உள்ள தாசில்தாரை 6 மாதத்திற்கு ஒரு தாசில்தாரை, ஒரு வருடத்திற்கு ஒரு தாசில்தாரை அனேகமாக அந்த அலுவலகத்தில் யார் மனு போட்டாலும் சரி அந்த மனுக்களைப் பார்க்கமுடியாத ஒரு அபாயகரமான நிலை, மோசமான நிலை இருக்கிறது. ஆகவே அந்த அலுவலகத்தில் தாசில்தாரை நிரந்தரமாக குறிப்பிட்ட 3 ஆண்டுகளுக்கு, 2 ஆண்டுகளுக்கு ஒரு தாசில்தாரைப் போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏழை எளிய மக்கள், அரிசன மக்கள் கொடுக்கக்கூடிய அந்த மனுக்கள் பரிசீலனைச் செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்த அலுவலகத்தில் ஒரு ஜீப் வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் கிராமப்புறங்களுக்கு செல்லக்கூடியவர்கள், அவர்களுக்கு ஜீப் வழங்க அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆதிவாசிகள், ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர் இன்றைக்கு இந்தியாவில் 6 கோடி பேர் இருக்கிறார்கள். தமிழகத்தில் 6 லட்சம் பேர் இருக்கிறார்கள். சேலம், தர்மபுரி, வட ஆற்காடு, திருச்சி அதேபோல் கொல்லிமலை, கல்வராயன் மலை, பச்சைமலை, நீலக்கல்மலை, கோவையில் ஆனையாமலை, நெல்லை, மதுரை போன்ற இடங்களில் ஆதிவாசி மக்கள் வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். அந்த மக்களோடு தொடர்ச்சியாக பல்வேறு இன மக்களும் அங்கே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அதிலே தொண்டான், கோடான், குறும்பன், இளையார், சேரான், உருளையான், மலையரசர்கள், இதுபோன்ற பல்வேறு இனத்தவர்கள், பல்வேறு ஜாதியைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் வாழ்க்கை என்பது மிகவும் படுமோசமான நிலையில் அமைந்து கொண்டிருக்கிறது.

(பிற்பகல் 12-50)

மலைவாழ் பகுதி பல்வேறு உணவு உற்பத்திக்களை இந்த நேரத்திலே செய்து வருகின்றார்கள். அன்னாசிப் பழகம், கடுக்காய், சீயக்காய், காப்பி, மொச்சக்கொட்டை இதுபோன்ற பல பொருள்களை, இதுபோன்ற பல்வேறு பணப்பயிர்களை மலைவாழ் மக்கள் உற்பத்திச் செய்கிறார்கள். அவர்களெல்லாம் காடுகளை அழிக்கிறார்கள் என்று சொல்லி வனவளத் துறை அதிகாரிகள் அவர்களை அப்புறப்படுத்துகிறார்கள்.

**மாண்பமிகு பேரவைத் துணைத் தலைவர் :** 12 நிமிடங்கள் ஆகிவிட்டன. 10 நிமிடங்கள்தான் ஒதுக்கவேண்டும்.



1989 ஏப்ரல் 29]

**திரு. ஜி. பழனிச்சாமி :** அவர்கள் அப்பாவி மக்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். யார் எதைச் சொன்னாலும் நம்பக்கூடிய மக்களாக இருந்து காலங்களை கழித்துக்கொண்டிருக்க கூடிய அந்த மக்களுக்கு ஒரு உத்தரவாதமான சட்டங்களைக்கொண்டு வரவேண்டும். கேரளாவிலே இருப்பதைப்போன்று தனியாக தாசில்தாரை அமைத்து அவர்களைப் பாதுகாக்க வேண்டும். அவர்கள் பயிரிடக்கூடிய மரங்களைப் பாதுகாக்கக் கூடிய வகையில் அவர்களுடைய வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளிக்கக்கூடிய முறையில் செயல்படுவதற்கு அரசு தீவிரமான முயற்சி எடுத்துக்கொண்டு அவர்களுக்குச் சமவெளிப் பகுதிகளில் வீடு கட்டிக்கொடுத்து, ரோடு வசதிகள், மருத்துவ வசதிகள் இதுபோன்ற வசதிகளைப் பின்தங்கிய அந்த மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயர தொடர்ச்சியான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும். தொடர்ச்சியாக பல்வேறு திட்டங்கள் போடப்பட்டும் அந்த மக்களுடைய வாழ்க்கைக்கு உத்தரவாதம் இல்லாத ஒரு சூழ்நிலைமை தமிழகத்திலே இருக்கக் கூடிய 6 இலட்சம் ஆதிவாசி மக்களுடைய நிலைமைகள் அவல நிலைமைக்கு உள்ளாகி இருக்கிறது. இவர்களுடைய நிலைமைகளைப் பற்றி பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்களும், அவர்களுடைய குறைபாடுகளைப்பற்றி அனுதாபத்தோடு குறிப்பிட்டுப் பேசியிருக்கிறார்கள். ஆகவே, இந்த அரசு அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர வழி செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

***திரு. ந. சௌந்திரபாண்டியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மிகச் சாதாரணக் குடும்பத்தில் பிறந்த என்னை தமிழகச் சட்டமன்ற உறுப்பினராக்கிய, கருணையுள்ளம் கொண்ட, கோடானு கோடி தமிழ் மக்களுடைய இதயத்தில் வீற்றிருக்கும், ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினருடைய காவல் தெய்வமாக இருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், மதுரை மாவட்டச் செயலாளரும் மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும், எனக்கு வாக்களித்து வெற்றிப் பெறச் செய்த சமயநல்லூர் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியைக் கூறி, என்னுடைய கன்னிப் பேச்சைத் தொடங்குகிறேன்.

ஆதி திராவிட பழங்குடியினர் நலம் கருதி அரசு 1989–90 ஆம் ஆண்டிற்காக ரூ.76.12 கோடி வழங்குவதற்கான 31-ஆம் எண் மானிய கோரிக்கையின் கீழ் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். தமிழகத்தில் ஆதி திராவிடர்கள் 89 இலட்சம் பேர்கள் உள்ளனர். அதில் 75 இலட்சம் பேர்கள் கிராமப் புறங்களிலும் 18 இலட்சம் பேர்கள்

[திரு. ந. சௌந்திரபாண்டியன்] [1989 ஏப்ரல் 29

நகர்ப்புறங்களிலும் வசித்து வருகிறார்கள். இதில் 7 இலட்சம் பேர்கள் விவசாயத்தில் நேரடியாக ஈடுபட்டுள்ளனர். 26 இலட்சம் பேர்கள் விவசாயக் கூலிகளாக உள்ளனர் என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆதிதிராவிடர் பழங்குடியினர் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்காக கழக அரசு இந்த மானியத்தில் அவர்களுடைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு தமிழகத்திலுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் ஆதிதிராவிட நலத்துக்கென்று ஒரு குழு அமைத்து ஆய்வு செய்து அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளான வீட்டு மனைப்பட்டா, குடியிருப்பு வீடுகள், மயானத்திற்குச் செல்ல வழித்தடம், குடிநீர், சுகாதாரம், மின் வசதி, போக்குவரத்து வசதி மற்றும் கல்வி வசதி ஆகியவற்றை உடனடியாக இந்த மக்களுக்குச் செய்து கொடுக்க வேண்டுமென இந்த மானியத்தில் குறிப்பிட்டிருப்பதை முழு மனதாக அனைவரும் வரவேற்கின்றோம் என்பதனைக் கூறிக்கொள்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இலவச மனைப்பட்டா அளிப்பதில் தமிழக அரசு இப்போது முன்னிலையில் இருக்கிறது என்பதற்கு பல எடுத்துக் காட்டுகளைக் கூறுகின்றேன். 1989—90 ஆம் ஆண்டு ஆதிதிராவிட மக்களுக்காக 40 ஆயிரம் வீட்டு மனை பட்டாக்களை வழங்க அரசு முடிவு செய்து இருப்பதை இந்த தமிழக மக்கள் அனைவரும் வரவேற்கிறார்கள். சென்ற ஆண்டு 1988-89ஆம் ஆண்டு வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கியது 20 ஆயிரம் பேர்களுக்குத்தான். எனவே இந்த ஆண்டு, இந்த மானியத்தில் 40 ஆயிரம் பட்டாக்கள் வழங்குவது பற்றிக் குறிப்பிட்டு இருப்பது தாழ்த்தப்பட்டவர்களுடைய முன்னேற்றத்தில் இந்த அரசு அதிக அளவு அக்கறை கொண்டிருக்கிறது என்பது அனைவரும் அறிந்துள்ள ஒன்று எனக் குறிப்பிடுகின்றேன்.

மற்றும் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடு கட்டும் திட்டத்தில் கான்கிரீட் வீடுகளாக அனைத்தும் கட்டிக் கொடுக்கப்பட வேண்டுமென்று திட்டத்தை அரசு செயல்படுத்தவுள்ளது. தற்போது அரசு வீடற்ற ஆதிதிராவிட மக்களுக்கு 49 கோடி ரூபாயில் 45,000 கான்கிரீட் வீடுகளைக் கட்ட திட்டமிட்டுள்ளது. இதுவரையில் இதுபோன்ற திட்டம் செயல்படுத்தப்படவில்லை.

மேலும் கடந்த ஆட்சியாளர் காலத்தில், 13 ஆண்டுக் காலத்தில் ஆதிதிராவிடர்களுக்கு கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள் மொத்தம் 34,560 தான். ஆனால் இந்த அரசு இந்த மானியத்தில் குறிப்பிடப்பட்ட 49 கோடி ரூபாயில் சுமார் 45,000 வீடுகள் கட்டிக் கொடுக்க முன்வந்திருக்கிறது என்றால் இந்த அரசு தாழ்த்தப்பட்ட மக்கள் மீது மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறது என்பதை தமிழ்நாட்டு மக்கள் அறிந்து கொள்வார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.



1989 ஏப்ரல் 29] [திரு. சௌந்திரபாண்டியன்]

மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முதன் முதலாக தமிழ்நாடு ஆதிதிராவிட வீட்டு வசதிக் கழகம் என்பதை 1974ஆம் ஆண்டு அவர்கள் தமிழக முதலமைச்சராக இருந்த நேரத்தில் ஆரம்பித்தார்கள். ஆரம்பித்த அதே ஆண்டிலே அது செயல்படத் தொடங்கியது. செயல்படத் தொடங்கிய உடனே ஆதிதிராவிடர் நலன் கருதி 30,000 வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டன என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்குவதற்காக 1989—90 ஆம் ஆண்டில் இந்த மானியத்தில் 2.35 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இது சென்ற ஆண்டை விட 1.20 கோடி ரூபாய் அதிகம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிப்பட்ட நல்ல திட்டங்களை இந்த அரசு செயலாற்றி வருவதை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் அனைவரும் வரவேற்கிறார்கள், பாராட்டுகிறார்கள் என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வீட்டு மனைகள் கொடுப்பதற்கு தனியார் இடத்தை கையகப்படுத்தி ஒதுக்கீடு செய்வதில் கூட சில இடர்ப்பாடுகள் உள்ளதை இந்த அரசு முடிந்த அளவுக்கு விரைவில் தீர்த்து வைத்துக் கொண்டிருக்கிறது. சில கிராமங்களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக இலவச வீடுகள் கட்டிக் கொடுக்க தனியார் இடங்களை அரசு ஒதுக்குகிற நேரத்தில் தனியார்கள் கோர்ட்டுக்குச்சென்று அங்கே தடை உத்திரவு வாங்குகிற சூழ்நிலை இப்போதும் இருக்கிறது. அந்த நிலைமைகளைப் போக்குவதற்காக அரசு முனைந்து செயல்பட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

உதாரணமாக எனனுடைய தொகுதியில் உள்ள தேனூரில் சர்வே எண். 285/2-ல் 4.50 ஏக்கர் நிலம் கடந்த 4, 5 ஆண்டுகளுக்கு முன்னால் அரசு உத்தரவு பிறப்பித்தும் கூட, அந்த நிலத்தை அரசு எடுத்து இன்னும் அங்கிருக்கிற தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடு கட்டிக்கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மற்றும் ஆதி திராவிடர் நலனைக் கருதி இந்த அரசு கல்வி முன்னேற்றத்திற்காக 1989—90 ஆம் ஆண்டு மானியத்தில் அவர்களுடைய வருமானத்தை மனதிலே கொண்டு, சென்ற அரசு 12,000 ரூபாய் ஆண்டு வருமானம் நிர்ணயித்திருந்தாலும் கூட திராவிட முன்னேற்றக் கழக அரசு 15,000 ரூபாயாக இப்போது உயர்த்தியிருக்கிறது என்பதை நான் வரவேற்கிறேன். இந்த 15,000 ரூபாய் அதிகமாக இருந்தாலும் கூட இன்னும் அரசு பரிசீலித்து 15,000 ரூபாயை அதிகமாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் சட்டப் படிப்பு பட்டதாரிகள் படிப்பு முடித்தவுடன் வழக்கு மன்றத்திற்கு அவர்கள் வழக்காட வருகிறபோது தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த வழக்கறிஞர்கள் முதல் ஒன்றிரண்டு ஆண்டுகளுக்கு கஷ்டப்படும் சூழ்நிலை இருக்கிறது. அரசு வட்டியில்லாக் கடன் 1,500 ரூபாய் கொடுத்தாலும்கூட அவர்கள் ஓராண்டு மிகவும் கஷ்டப்படும் நிலைமை இருக்கிறது. அந்தக் கஷ்டத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அரசு அவர்களுக்கு வட்டி இல்லாத கடனாக 1,500 ரூபாய் கொடுப்பதைத் தவிர்த்து ஒரு ஆண்டுக்கு மட்டும் மாதம் ஒன்றுக்கு 300 ரூபாய் வீதம் கொடுத்தால் அவர்களுடைய தொழிலை உயர்த்தி, கஷ்டத்தை சரி செய்துகொண்டு, இரண்டாவது ஆண்டிலிருந்து நல்லதொரு நிலைமையை உருவாக்கி, தொழிலிலே முன்னேற்றம் கண்டு அவர்கள் நல்ல திறனைப் பெறுவார்கள் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

(பிற்பகல் 1—00)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இன்னும் ஒரு நிமிடந்தான், அதற்குமேல் முடியாது.

**திரு. ந. சௌந்திரபாண்டியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாணவ மாணவியர் விடுதிகள் 796 விடுதிகள் இருக்கின்றன. இதில் சுமார் 50,500 மாணவர் மாணவியர்கள் தங்கி படித்துக்கொண்டு இருக்கிறார்கள். பள்ளி மாணவர்களுக்கு ரூ. 85-ம் சென்னை கல்லூரி மாணவர்களுக்கு ரூ. 140-ம் மற்ற மாணவ மாணவியர்களுக்கு ரூ. 135-ம் அரசு கொடுத்துக் கொண்டிருக்கின்றது. ஒரு மாதத்திற்கு அவர்களுடைய மாத விடுதி கட்டணம் ரூ. 300ல் இருந்து ரூ. 400 அளவுக்கு வருகிறது. எனவே தற்போது அரசு 140 ரூபாய் கல்லூரி மாணவர்களுக்குக் கொடுப்பது போதுமானதாக இல்லை என்பதனையும் ஒரு மாதத்திற்கு வருகின்ற விடுதிக் கட்டணத்தை முழுவதையும் அரசு கொடுப்பதற்கு உரிய உத்தரவைப் பிறப்பிக்குமானால் மிகவும் வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கின்ற தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த மாணவர் மாணவியருக்குப் பயன்படுவதற்கு இது வழிசெய்யும் என்பதனை அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் தீண்டாமை ஒழிப்பைப் பற்றி இன்று இருக்கின்ற அரசியல்வாதிகள் அனைவரும், தீவிரமாக மேடை பிரச்சாரங்கள் மூலம் செய்தாலும்கூட நம்முடைய மாண்புமிகு தமிழகத்தின் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் உலகத்திலேயே ஒரு சமூக சீர்திருத்தவாதி என்பதனை பலமுறை அவர்கள் நிருபித்திருக்கின்றார்கள் என்பதனை உங்களுக்கு நான்



எடுத்துக்காட்ட, ஒரு நிகழ்ச்சியைச் சொல்கிறேன். தன்னுடைய மகனுக்கு எத்தனையோ குட்டி குபேரர்களும், மிட்டா மிராசுகளும் பெண் கொடுக்க தயாராக இருந்தும்கூட அவற்றை மறுத்து தான் முதலமைச்சராக இருக்கின்ற அந்த நேரத்தில் ஒரு தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த குடும்பத்தில் பெண் எடுத்து தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் என்னுடைய சம்பந்தி என்று மார்தட்டிக் கூறிய மாபெரும் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் என்பதனை இந்தச் சட்டமன்றத்திலே கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

1978 ஆம் ஆண்டு கலப்புத் திருமணம் செய்பவர்க்கு தங்கப் பதக்கம் கொடுப்பதை முந்தைய அரசு நிறுத்தியதை, மறுபடியும் கழக அரசு கலப்புத் திருமணம் செய்துகொள்கின்றவர்களுக்கு தங்கப் பதக்கம் கொடுக்க இருக்கின்றார்கள் என்பதனையும், மேலும் அவர்களுக்கு தேசிய சேமிப்புக்கு 4 ஆயிரம் ரூபாய் ஒதுக்கியுள்ளனர் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இன்னும் ஒரு நிமிடம் தான்.

**திரு. ந. சௌந்திரபாண்டியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேலும் திருமணச் செலவுக்கு ரூ. 300 கொடுப்பது குறைவாக இருக்கின்றது. எனவே அவர்களுக்கு ஆயிரம் ரூபாயாக அறிவிக்க வேண்டும் என்றும் நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். எனவே இவர்களுக்குக் கல்விச் சலுகைகள் அளித்தாலும்கூட, அரசு வேலையிலும் அவர்களுக்கு ஒரு முதலுரிமையை கொடுக்க வேண்டும் என்பதனை நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்காக கணிம (Computor) பொறிப் பயிற்சி அளிக்கும் நிலையங்கள் ஆங்காங்கே நிறுவப்பட்டிருக்கின்றன. தற்போது சென்னை, மதுரை, திருச்சி, கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய ஐந்து நகரங்களில்தான் இருக்கின்றன. இதனை ஒவ்வொரு மாவட்டத்தினுடைய தலைநகரங்களிலே உருவாக்கிக்கொடுக்கவேண்டும் என்றும், தற்போது 400 மாணவர்களே இருப்பதை மாற்றி, அங்கே அதிகமான மாணவர்கள் பயிலுகின்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

வேலைவாய்ப்பு பொறுத்து சொல்லும்போது, நாடு சுதந்திரம் அடைந்து 40 ஆண்டுகளுக்கு மேல் ஆகியும், அரசு மற்றும் அரசு சார்பு அலுவலகங்களில் 18 சதவிகிதம் நிரப்பப்படாத நிலை இருக்கிறது. இருக்கின்ற ஒவ்வொரு பதவிகளிலும் ஒவ்வொரு கேட்டகரியிலும், அரசில் குறிப்பிட்டுள்ள 18 சதவிகிதம் நிரப்பப்படவேண்டும். எனவே அரசு ஒவ்வொரு கேட்டகரியையும் பரிசிலித்து 18 பர்சென்ட் நிரப்ப ஆணையிட வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அது

மட்டுமல்லாது, ஆதிதிராவிடர்கள் எல்லா நிலையிலும் மேம்பாடு அடைவதற்கு உரிய திட்டம் சிறப்பு உள்ளடக்க திட்டத்தில் இன்றைய அரசு இந்த மானியத்தில் 191.22 கோடி ஒதுக்கியுள்ளது மிகவும் பெருமைக்குரியதாகும். எனவே சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு 1.4 சதவிகிதம் அதிகமாகி இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் ஆட்சி '' ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருடைய பொற்காலம்'' என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

**திரு. வே. பெரியசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அன்பு, நாண், ஒப்புரவு............

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. பெரியசாமிக்கு ஒரு செய்தி. சரியாக 7 நிமிடத்தில் முடித்துவிட வேண்டும். இல்லையென்றால் வேறு உறுப்பினரை நான் அழைப்பேன்.

**திரு. வே. பெரியசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை ஆகிய ஐந்தும் அமைந்து, கல்வி கேள்விகளில் சிறந்து, அறிவால் உயர்ந்து, ஆக்கத்தால் மேம்பாடு அடைந்து, தனக்கு என்று வாழாது, தமிழ் சமுதாயத்திற்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டு, இரவு என்றும் பகல் என்றும் பாராமல் கண் துஞ்சாமல் உழைக்கின்ற உத்தமத் தலைவி, புரட்சித் தலைவி அவர்களுடைய அடி பணிந்து நான் இந்த மாமன்றத்திலே (சிரிப்பொலி) சிரியுங்கள், சிரியுங்கள், இந்த மாமன்றத்திலே நான் ஆதி திராவிட நலத் துறை பற்றியும் காலம் ஒரு நாள் மாறும், எங்கள் கவலைகளும் ஒரு நாள் தீரும் என்பதைச் சொல்லி, ஆதி திராவிட நலத் துறைப் பற்றியும், பழங்குடியினர் மக்களுடைய நலத் துறை பற்றியும் இங்கே பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்தமைக்கு என்னுடைய நன்றியைக் கூறி என்னுடைய பேச்சை ஆரம்பிக்கின்றேன்.

ஆதி திராவிட நலத் துறையைப் பொறுத்தவரையில் கல்வி முக்கிய பங்கு வகிக்கிறது. ஏறத்தாழ 50 சதவிகிதம் கல்விக்காக ஒதுக்கப்படுகிறது. அந்தக் கல்வி முன்னேறினால்தான் கல்வி வளர்ச்சியில் இந்தச் சமுதாயம் முன்னேறினால்தான் நல்லபடியாக பொருளாதாரத்தில் மேம்பாடு அடையவும், சுகாதாரம் மற்றும் பல்வேறு வழிகளில் முன்னேற்றம் ஏற்படவும் வழிவகை ஏற்படும், வாய்ப்பு ஏற்படும் என்பதை நீங்கள் எல்லோரும் அறிவீர்கள்.

ஆதி திராவிட நலத் துறைப் பள்ளிகளில் படித்தவர்கள் இன்றைக்கு ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., போன்ற பல்வேறு வகையான பணிகளில் உயர்ந்த நிலையிலே ஏராளமான பேர் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் எல்லாம் தங்களுடைய கடந்த கால



நிலைகளைப் பற்றி திரும்பிக் கூட பார்ப்பதில்லை. இன்றைக்கு இரண்டு அமைச்சர்கள், சட்டமன்ற பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் போன்றோர் எல்லாம் இந்த அவையிலே இருக்கிறார்கள் என்று சொன்னால், இவர்கள் எல்லாம் ஆதி திராவிட நல இலாகா இருந்த காரணத்தால்தான், இங்கே ஆசனத்திலே உல்லாசமாக அமர்ந்திருக்கிறார்கள் என்றால் அந்த இலாகா தான் காரணம் என்று நான் சொன்னால் அது மிகையாகாது. அப்படிப்பட்ட ஒரு துறையை டாக்டர் அம்பேத்கார் அவர்களும், ஆசியாவின் ஜோதியாம் மனிதர்களுள் மாணிக்கமாம் பண்டித நேரு அவர்களும், உலகம் போற்றும் உத்தமர், நாடு போற்றும் நல்லவன், தேசம் போற்றும் தியாகி என்று எல்லாம் அழைக்கப்பட்ட அண்ணல் காந்தியடிகளும், 20 ஆம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற சிந்தனையாளரும், விடுதலை வீரரும் பகுத்தறிவுப் பகலவனுமான தந்தை பெரியார் அவர்களும் போட்ட திட்டத்தின் அடிப்படையில்தான் லேபர் பள்ளியாக அன்றைக்கு ஆரம்பிக்கப்பட்ட இந்தத் துறை இன்றைக்கு பல்வேறு வகையிலே முன்னேறி ஏராளமான ஆரம்பப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள், போன்றவற்றை இந்தத் துறை மூலம் உருவாக்கியிருக்கிறோம். எங்கள் புரட்சித் தலைவர் அவர்கள் பீரியடிலே, கடந்த ஆட்சிக் காலத்திலே, அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக்காலத்திலே எத்தனை உயர்நிலைப் பள்ளிகள், எத்தனை மேல்நிலைப் பள்ளிகள் திறக்கப்பட்டன என்பதை எண்ணிப் பார்க்கிறேன். அப்படிப் பார்க்கின்றபோது, இந்த ஆண்டு பட்ஜெட்டிலே அந்த நிலை இல்லையே என்பதைப் பார்க்கும்போது வேதனையாகவும், வெட்கமாகவும், தலைகுனிவாகவும் இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையினை பிற்பட்ட நலத் துறையை அதுவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய கையிலே வைத்திருக்கிற காரணத்தால் அங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற சலுகைகள், உயர் சமுதாயத்திலேயிருந்து அங்குள்ள மாணவர்களுக்கு வழங்குகின்ற ஊக்கத் தொகையிலேயிருந்து பார்த்தால் அங்கேயிருக்கின்ற மாணவர்களுக்கு 12-வது வகுப்பு தேறியிருந்தால் அவர்களுக்கு 3 ஆயிரம் என்றும், மோஸ்ட் பேக்வர்ட் என்றால் 5 ஆயிரம் என்றும் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இங்கே ஆதி திராவிட நலத் துறையிலே ஆயிரம் கொடுத்ததை 1,500 என்று 1988–89 ஆம் ஆண்டில், அ.இ.அ.தி.மு.க. ஆட்சியிலே இருந்தபோது கொடுத்திருக்கிறார்கள். அப்படி நீங்கள் அவர்களைப் புறக்கணிக்கிறீர்கள் என்றால், காரணம் என்ன என்று எனக்குத் தெரியும். தாழ்த்தப்பட்ட மக்கள் அ.இ.அ.தி.மு.க. வின் பால் அதிகமான பாச உணர்வு கொண்டு இருக்கிற காரணத்தால்தான் இங்கே இருக்கிற 28 பேரில் 10 பேர் நாங்கள் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக......

**திரு. மு. இராமநாதன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆன் ஏ பாயிண்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினருடைய பேச்சிலே குறுக்கிடவேண்டாம் என்றுதான் இருந்தேன். ஆதி திராவிட மக்கள் மீது, தாழ்த்தப்பட்ட மக்கள்

[திரு. மு. இராமநாதன்] [1989 ஏப்ரல் 2

மீது திராவிட முன்னேற்றக் கழக அரசு எந்த அளவுக்கு அக்கறை கொண்டிருக்கிறது என்பதைப் பற்றி உறுப்பினருடைய கவனத்திற்குச் சொல்ல விரும்புகிறேன். ஆதி திராவிட மக்களுக்காக குடியிருப்பு கட்ட கடந்த கால ஆட்சியிலே, ஒதுக்கப்பட்ட இடம் கடந்த 9 ஆண்டுக் கால ஆட்சியிலே இன்னும் அவர்களுக்கு கொடுக்கப்படாத காரணத்தால் என்னுடைய மேற்கு கோவை தொகுதியிலே ஆதி திராவிட மக்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற பகுதிகள் இன்னும் அப்படியே இருக்கின்றன. அதற்கான பைல்ஸ், ரெக்கார்ட்ஸ் எல்லாம் இருக்கின்றன. அவற்றை உறுப்பினர் தனியாகப் பார்த்துக் கொள்ளலாம். 9 ஆண்டுக் கால அட்சியிலே தாழ்த்தப்பட்ட மக்கள் மீது புரட்சித் தலைவர் கொண்டிருந்த அக்கறை என்ன என்பதற்கான பைல் இருக்கிறது

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வியிலே அக்கறைக் கொண்டிருப்பதாக இங்கே உறுப்பினர் சொன்னார். சான்றாக மாதிரிக்கு ஒன்றைக் குறிப்பிடுகிறேன். சிதம்பரத்தில் நந்தனார் மேல்நிலைப் பள்ளி என்று ஒன்று இருக்கிறது. அந்த மேல்நிலைப் பள்ளியில் ஏறத்தாழ 90 விழுக்காட்டுக்கு மேல் தேர்வு பெற்ற நிலை மாறி இன்றைக்கு 11 சதவிகிதமாக ஆகியிருக்கிறது. 90 சதவிகிதம் வெற்றி பெறும் நிலை இருந்த நேரத்தில், அன்றைக்கு இருந்த தலைமை ஆசிரியரை மாற்ற வேண்டுமென்று மிக்க பிராயசித்தப்பட்டு அமைச்சரிலிருந்து, பாராளுமன்ற உறுப்பினரிலிருந்து, அந்தத் தலைமையாசிரியரை மாற்றினார்கள். (குறுக்கீடு).

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து எனக்கு சற்று நேரத்தை கூட்டிக் கொடுங்கள், அடிக்கடி இங்கே குறுக்கிடுகிற காரணத்தால்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் உணர்ச்சிவசப்படாமல் பேசினால் போதும்.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் தாழ்த்தப்பட்டவன் என்கிற காரணத்தால் எங்கள் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்களே என்கின்ற நிலையை எண்ணிப் பார்க்கின்றபோது........



1989 ஏப்ரல் 29]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நானும் தாழ்த்தப்பட்டவன் என்பதால்தான் சொல்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு துணைச் சபாநாயகராக நமது சமுதாயத்திலேயிருந்து என்னை உட்கார வைத்து, இந்தியாவுக்கே வழிகாட்டியாக இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(பிற்பகல் 1-10)

*திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்திலே புரட்சித் தலைவர் அவர்கள் செய்த நல்ல காரியங்களெல்லாம் உங்கள் ஞாபகத்திற்கு வருமென்று நான் நினைக்கிறேன். அப்படிப்பட்ட தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்காக எவ்வளவு பெரிய நல்ல காரியங்களை ஆற்றியிருக்கிறார்கள், மத்திய அரசு துணை கொண்டு, என்றெல்லாம் இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய ஆதி திராவிட நலத் துறையைப் பொறுத்த வரையில் கல்வியிலே ஒரு மறுமலர்ச்சியை உருவாக்க வேண்டுமென்று சொன்னால், வருவாய்த் துறையிலே வேலை செய்கின்ற ஆதி திராவிட நல அதிகாரியையும், துணை வட்டாட்சியரையும் அந்தத் துறையிலே நியமித்து, அவர்கள் அந்தக் கல்விப் பணியைச் கவனிக்கச் செய்தால் அவர்களால் எவ்வாறு முடியும்? அதற்காக கடந்த காலத்தில் ஆதி திராவிடர் நலத் துறையிலே மண்டல துணை இயக்குநர்கள் என்று, கல்வியிலே மேம்பாடு அடைந்த உயர்ந்த அதிகாரிகளையும் நியமனம் செய்திருக்கிறார்கள். ஏ.இ.ஓ., பள்ளித் துணைக் கல்வி அலுவலர் போன்றவர்களை எல்லாம் நியமனம் செய்திருக்கிறார்கள். ஆனால் இங்கே பார்த்தால், இவ்வாண்டு இந்தக் குறிப்பிலே அவ்வாறு இடம் பெறவில்லை. 5 மாவட்டங்களிலே இந்த அதிகாரிகளை நியமனம் செய்து, கல்வி வளர்ச்சிக்காக கடந்த காலத்திலே உதவி செய்திருக்கிறார்கள். ஆகவே நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு முதல்வர் அவர்களையும் பணிந்து கேட்டுக் கொள்வதெல்லாம், எப்படி பிற்பட்டோர் நலத் துறைக்காக அதிக முக்கியத்துவம் கொடுத்திருக்கிறீர்களோ, அதே நிலையை இந்தத் துறைக்கும் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்களுடைய சமுதாயத்திலே நல்ல உயர்ந்த நிலையில் மேம்பாடு அடைந்துள்ள பெரிய அதிகாரிகளுக்கு பதவி உயர்விலே நீங்கள் முக்கியத்துவம் கொடுக்காததை நான் வருத்தத்துடன் குறிப்பிட விரும்புகிறேன். ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். படித்த அதிகாரிகள் இங்கே இருக்கிறார்கள். அந்த அதிகாரிகள் இந்தத் துறையின் வாயிலாகத்தான் முன்னுக்கு வந்திருக்கிறார்கள். எனவே பதவி உயர்வு வழங்கும்போது, எப்படி தாழ்த்தப்பட்ட மக்களை நியமிக்கும்போது 18 சதவிகி

தம் வழங்குகிறீர்களோ, அதைப்போல பதவி உயர்விலும் வழங்க வேண்டும். தொழிற்சாலைகளை ஏற்படுத்தும்போது, தொழிற்சாலைகளுக்கு கடன் கொடுக்கும்போது, இவர்களுக்கு ஏறத்தாழ 50 சதவிகிதத்தை தயவு செய்து நீங்கள் மானியமாகக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து ஊராட்சி ஒன்றியத்திலும், நகராட்சியிலும் ஊராட்சி மன்றங்களிலும் நடந்த காலத்தில், அண்ணா தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தலைவர் பதவிக்கு இவர்களுக்கு 18 சதவிகிதம் வழங்கலாமென்ற உத்தரவை மாண்புமிகு முதல்வரவர்கள் அளித்தார்கள். ஆனால் இடைக்காலத்திலே கோர்ட்டிலே தடை வாங்கப்பட்டு, நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே எங்களையும் ம... தர்கள் என்று எண்ணி, 18 சதவிகிதத்தை 25 சதவிகிதமாக் மாற்றி, இந்தப் பதவிகளுக்கு எங்களை நியமனம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய ஆதி திராவிடர் நலத் துறை மூலமாக விடுதிகள் நடைபெற்று வருகின்றன. அங்கே உணவுச் செலவு என்று ஒவ்வொரு உயர்நிலைப் பள்ளி மாணவனுக்கும் ஒரு மாதத்திற்கு 85 ரூபாய் என்றும், கல்லூரி மாணவனுக்கு 135 ரூபாய் என்றும் வழங்குகிறார்கள். இதை உயர்த்தி, கல்லூரி மாணவர்களுக்கு ஒரு மாதத்திற்கு 200 ரூபாயும், உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு 150 ரூபாயும் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சில மாணவர்களுக்கு கல்லூரியிலே இடம் கிடைத்து விடுகிறது. ஆனால் சில மாணவர்களுக்கு அந்தக் கல்லூரி விடுதியிலே இடம் கிடைக்காமல் இருக்கிறது. அவர்கள் ஒரு ஓட்டலிலே, அங்கும் இங்கும் பிச்சை எடுத்து, சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். எப்படி விடுதியிலே தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு உதவித் தொகையை, உணவுக்காக, புத்தகங்களுக்காக வழங்குகிறீர்களோ, அதே தொகையை கல்லூரி மாணவர்களுக்கும் இலவசமாக உதவித் தொகையாக வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு வருமான வரம்பை ரூ. 12,000 லிருந்து ரூ.15,000 ஆக உயர்த்தியிருக்கிறார்கள். ஒரு வீட்டிலே இரண்டு செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் இருந்தால் அவர்கள் வருமானம் 24,000 ரூபாய்க்கு மேலே ஆகிறது. ஆகவே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு குறைந்த பட்சம் 10 ஆண்டுகளுக்காவது வருமான அடிப்படையில்லாமல் சலுகைகளை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆதிவாசிகள் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் பற்றி அருமைச் சகோதரர்கள் சுட்டிக் காட்டிச் சொன்னார்கள். மலையிலே வாழ்கின்ற சோழகர்கள், இருளர்கள் இன்றைக்கும் ஆண்டான் அடிமைகளாக, வன விலங்குகளைவிட மோசமாக இருக்கிறார்கள். அதிலே ஹில் ட்ரைப்ஸ் என்று ஒரு சாதியினர் இருக்கிறார்கள். அவர்கள் சற்று வளர்ச்சி அடைந்திருக்கிறார்கள். சோழகர்கள், ஊராளிகள் போன்ற சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் தாளவாடி மலைப் பகுதியிலும், உத்தியானத்தூர் மலைப் பகுதியிலும் — பெரியார் மாவட்டம் —, என்னுடைய அந்தியூர் தொகுதியிலும் இருந்து கொண்டிருக்கிறார்கள்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இன்னும் ஒரு நிமிடம்.

**திரு. வே. பெரியசாமி :** அந்த மக்களுடைய கல்வி நிலையைக் கருத்திற்கொண்டு, அந்தக் குழந்தைகள் அத்தனை பேரையும் தத்து எடுத்துக் கொண்டு, ஏறத்தாழ 15 ஆண்டுகளுக்கு அந்தக் குழந்தைகளுடைய பெற்றோர்கள் முகத்தைக் கூடப் பார்க்காமல், ஓரேயிடத்தில் கல்வி அளித்து, 3 நேரமும் உணவு, உடை கொடுத்து, நல்ல ஆரோக்கியமான குழந்தைகளாக உருவாக்கி, அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்தால் அவர்கள் வாழ்க்கை முன்னேற முடியும். அவர்கள் ஆண்டான் அடிமைகளாக, கொத்தடிமைகளாக இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு முதலமைச்சரவர்களும், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களும் இதில் தனிக் கவனம் செலுத்தி ஆதிவாசிகள் சமுதாயத்திலே முன்னேறினால்தான் காந்தி கண்ட சமுதாயம், கிராம சமுதாயம் காண முடியுமென்று கூறி, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடை பெறுகிறேன்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் :** மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, தாங்கள் துணைச் சபாநாயகராக வந்திருப்பது குறித்து பெருத்த மகிழ்ச்சி. ஆனால் நீங்கள்தான் முதன் முதலாக இந்தப் பதவிக்கு வந்ததாகக் குறிப்பிட்டீர்கள். தமிழ்நாடு சட்ட மன்றம் 1952ல் அமைந்தபோது, முதல் சபாநாயகராக இருந்தவர் ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்த திரு ஜே. சிவசண்முகம் பிள்ளை அவர்கள் — அவர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மகிழ்ச்சி. அடுத்து இறுதியாக திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

**திரு. பி. எஸ். பாண்டியன் :** மாண்புமிகு துணைச் சபாநாயகர் அவர்களே, தாழ்த்தப்பட்டவர்கள் என்று சொல்லுவதே தவறு. ஆதி திராவிடர் என்று சொல்ல வேண்டும். நீங்களும் அப்படித்தான் சொன்னீர்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அப்படித்தான் சொன்னார்கள். தாழ்த்தப்பட்டவர்கள் சமுதாயம் என்று மனித சமுதாயத்தில் கிடையாது.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1952 ஆம் ஆண்டிலேயே ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்தவர் சபாநாயகராக வீற்றிருந்தார் என்று

[திரு. கே. என். நேரு] [1989 ஏப்ரல் 29

மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிட்டார். அவர் ஆதி திராவிடர். துணைத் தலைவர் அருந்ததியினர் வகுப்பைச் சார்ந்தவர். அதில் இவர் தான் முதல் பேரவைத் துணைத் தலைவராக வந்திருக்கிறார்.

***திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஹரிஜன நல மானியத்தின் மீது நான் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இந்த நேரத்தில் நம்முடைய மதிப்பிற்குரிய ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். இருந்தாலும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். காரணம் அவர்தான் ஒவ்வொன்றின் மீதும் முடிவெடுக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்துக்களையெல்லாம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள். எனவே அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிற நேரத்தில் நிச்சயமாக முதல்வர் அவர்கள் வந்து விடுவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் அவர்களின் பேச்சை மாண்புமிகு தலைவர் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறார்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** அப்படி இருந்தால் ரொம்ப நன்றி. அப்படி அவர் கேட்டுக் கொண்டிருந்தால்தான் இதற்கு ஒரு விடிவுகாலம் பிறக்கும்.

எதற்காக சொல்லுகிறேன் என்றால், காங்கிரஸ் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தபோது "ஸ்டேட் அரிஜன் வெல்பேர் கமிட்டி" என்று ஒன்று இருந்தது. அந்த ஸ்டேட் அரிஜன் வெல்பேர் கமிட்டியில் 4, 5 எம்.எல். ஏக்களும் வெளியே இருந்து படித்து வேலை பார்த்து ஓய்வு பெற்ற திறமைசாலிகளும், அரிஜன மக்கள் மீது அக்கறை கொண்டவர்களும் உறுப்பினர்களாக இருந்தார்கள். காங்கிரஸ் ஆட்சி போய் தி.மு.க. ஆட்சி வந்தபோது கூட அந்தக் கமிட்டி இருந்தது. ஆனால் 1980ஆம் ஆண்டிலிருந்து அந்தக் கமிட்டி இல்லாமல் போய்விட்டது. நான் இந்த மன்றத்திற்கு வந்து பலமுறை அதற்காக வாதாடியிருக்கிறேன். ஏனோ, இதற்கு முந்தைய அரசு, அந்தக் கமிட்டியை அமைக்கவே இல்லை.

**திரு. பெ. சீனிவாசன் :** நன்றாகச் சொல்லுங்கள் :

**THIRUMATHI A. S. PONNAMMAL :** What is right, I have done.



1989 ஏப்ரல் 29] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

பலமுறை கேட்டும்கூட ஏனோ அந்த அரசு செய்யாமல் தவறி விட்டது. இன்றைய தினம் மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்கும் மற்ற அமைச்சர்கள் கவனத்திற்கும் சொல்லுகிறேன். இந்தக் கமிட்டியை அமைத்தால் ஆண்டுக்கு அது 2 அல்லது 3 முறைதான் கூடும். அவ்வளவுதான். அப்போதுதான் மக்களின் பிரச்சினைகளை எடுத்துக் கொள்ள நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் நினைத்தேன். வந்துவிட்டார்கள். மிகவும் நன்றி. அவருடைய தலைமையில் இந்தக் கமிட்டி அமைந்து இருப்பது பற்றி மகிழ்ச்சியடைகிறேன். காரணம் இன்றைக்கு ஒரு துறையில்கூட 18 சதவிகிதம் இடம் ஆதி திராவிடர்களுக்கு ஒதுக்கப்பட்டது நிரப்பப்படவில்லை. இங்கே சட்ட மன்றத்தில் உள்ள செகரட்டேரியட்டில் எடுத்துக் கொள்ளுங்கள்—அல்லது இங்கே உள்ள எந்த டிபார்ட்மெண்டையாவது எடுத்துக்கொள்ளுங்கள்—ஹோம்—ரெவின்யூ—சோஷியல் வெல்பேர் என்று எந்தத் துறையில் பார்த்தாலும் 18 சதவிகித இடங்கள் பூர்த்தி செய்யப்படவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வேண்டுமானால் எல்லாத் துறைகளிலிருந்தும், 2, 3 மாதங்களில் பைலை வரவழைத்துப் பார்த்து இந்த கமிட்டியின் பரிசீலனையில் எடுத்துக் கொண்டு எங்கெங்கே நிரப்பப்படாமல் இருக்கிறதோ அங்கெல்லாம் படித்து வேலை இல்லாமல் அவதிப்படுகிற எஸ்.டி.எஸ்.சி. வகுப்பைச் சார்ந்தவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டும். அப்படி அவர்கள் செய்வார்கள் என்று நம்புகிறேன்.

(பிற்பகல் 1-20)

அடுத்து தீண்டாமை ஒழிப்பைப் பற்றி சொன்னார்கள். தீண்டாமை ஒழிப்பு பற்றி 13 ஆயிரத்து சொச்சம் கேஸ்கள் போடப்பட்டிருக்கின்றன. அதில் 4 ஆயிரத்து சொச்சம் கேஸ்களில தீர்ப்பு அளிக்கப்பட்டு இருக்கின்றன. தீண்டாமை ஒழிப்பில் நான் ரொம்ப வருத்தப்பட்டுச் சொல்லிக் கொள்வது எல்லாம் இன்றைக்கு ஐ. ஏ. எஸ். அதிகாரிகள் இருக்கிறார்கள். நான் தேடுகிறேன். பழைய காலத்தில்—உங்கள் காலத்திலும், எங்கள் காலத்திலும் அந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் செக்கரடரியாக ஹோம், ரெவின்யூ, பைனான்ஸ், சோஷியல் வெல்பேர் இப்படி முக்கியமான துறைகளில் பொறுப்பில் இருந்தார்கள். இன்றைக்கு அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்று தேடக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது. தயவுசெய்து இந்த நிலைமையை மாற்றி, அந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்கும் முக்கியமான பொறுப்புக்கள் கொடுத்து, எங்களுக்கு ஒரு மரியாதை கொடுக்க வேண்டுமென்று முதல்வர் அவர்களைப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [1989 ஏப்ரல் 29

இன்னொன்று இன்றைக்கு தீண்டாமையைப் பற்றி நம்முடைய தீட்சிதர் அவர்கள் சொன்னார்கள். திருமணங்கள் செய்து கொள்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு வழி காட்டியாக இருக்கிறார்கள். அதற்காக என்னுடைய அந்த சமுதாயத்தில் பிறந்தவள் என்ற முறையிலே அவர்களுக்கு நான் பணிவான வணக்கத்தையும், நன்றியையும், தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு ஆண் ஐ.ஏ.எஸ். அதிகாரி அரிசனாக இருந்தால் அல்லது ஐ.பி.எஸ். அதிகாரி, டாக்டர் இன்ஜினியர் போன்ற இவர்களுக்கு உயர்ந்த சாதியில் இருப்பவர்கள் பெண் கொடுக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் இந்த தாழ்ந்த சாதியிலே இருந்து ஒரு பெண்—என்னுடைய தங்கச்சியோ, அக்காவோ, பிள்ளையோ—படித்துவிட்டு வந்தால் அதை ஒரு உயர்ந்த சாதி அதிகாரி ஏற்றுக் கொள்வதில்லை; அது இன்னும் சரியாக நடைபெறுவதில்லை. இப்படி யாராவது அரிசன சமுதாயத்தில் பிறந்த ஒரு பெண்ணை உயர்ந்த சாதியில் இருப்பவர்கள் திருமணம் செய்து கொண்டால், அவர்களுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமோ, அவர்களுக்கு எந்த வகையிலே பரிசுகள் வழங்க வேண்டுமோ அதையெல்லாம் கொடுத்து ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே நாங்கள் 42 பேர் வந்திருக்கிறோம். அரிசனை தொட்டால் தீட்டு, சேர்த்தால் பாவம் என்ற நிலைமை இந்தியா முழுவதும் இருந்து கொண்டு இருந்தது. அதை நம்முடைய மகாத்மா காந்தி அவர்கள் மாற்றினார்கள். அவர்களுடைய வாழ்நாளை இரண்டாகப் பிரித்து, ஒரு பகுதியிலே வெள்ளைக்காரனை வெளியேற்றவும், மறு பகுதியிலே அரிசனங்களை மக்களோடு வாழ வைக்க வேண்டுமென்ற காரணத்தாலேதான் அவர்களுக்கு மனிதன் என்ற மானத்தைக் கொடுத்தார்கள். நம்முடைய தேசத் தந்தை மகாத்மா காந்தி அவர்கள் அந்த அடிப்படையில்தான் சுதந்திரத்தை வாங்கிக் கொடுத்தார்கள். ஆனால் அரிசனத் தந்தை டாக்டர் அம்பேத்கார் அவர்கள் இந்த இட ஒதுக்கீடு என்ற சட்டத்தை செய்ததால்தான் இன்றைக்கு நாங்கள் எல்லாம் வர முடிந்தது. பலமுறை சட்டமன்றத்திற்கு ஜெயித்து வர முடிந்தது. அதுபோல் இப்போது பஞ்சாயத்து யூனியன்கள், பஞ்சாயத்துகள் ஆகியவற்றில் மக்களே நேரடியாக ஓட்டுப் போட்டு தேர்ந்தெடுக்கும் நிலைமைகளை உருவாக்கி இருக்கிறார்கள். முன்பு இருந்த அரசு ஏற்கெனவே அதைச் செய்தது. அதற்கு கோர்ட்டில் தடை வாங்கிவிட்டார்கள். 378 யூனியன்கள் இருக்கின்றன. அவைகளிலே அரிசனப் பெண்களும் அரிசன சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் வரக்கூடிய அளவுக்கு இட ஒதுக்கீடு செய்வதற்கான ஒரு முயற்சியை மாண்புமிகு முதல்வரவர்கள் எடுக்க வேண்டுமென்று **நான் கேட்டுக் கொள்கிறேன்.**



1989 ஏப்ரல் 29] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

அடுத்து மலை வாழ் மக்கள் பற்றிச் சொல்லி இருக்கிறார்கள். அது பற்றி சொல்ல உண்மையிலேயே நான் வருந்துகிறேன். அது பற்றி முதல்வர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சொல்ல வேண்டுமென்பதற்காகத்தான் அப்போது நான் அவர்கள் இல்லை என்று சொல்லிக் கொண்டு இருந்தேன். அதாவது 1971 சென்சஸ் பிரகாரம் அவர்களின் ஜனத் தொகை ·071 என்று இருந்தது; இன்றைக்கு 5.2 ஆக இந்த மலைவாழ் மக்கள் உயர்ந்து இருக்கிறார்கள். இவ்வளவு பேர் எப்படி வந்தார்கள்? நான் எஸ்டிமேட் கமிட்டி சார்பில் சேலம், ஒசூர் ஆகிய இடங்களுக்குச் சென்றேன். தர்மபுரி பகுதிக்கும் சென்றிருந்தேன். நான் அங்கு இருந்தபோது இரண்டு மூன்று அரிசன சமுதாயத்தைச் சேர்ந்த அதிகாரிகள் என்னைத் தனியே அழைத்து, அக்கா இந்தமாதிரி குடியான சாதி, உயர்ந்த சாதியை சேர்ந்தவர்கள் தங்களுடைய குழந்தைகளுக்கு வேலை வேண்டும் என்பதற்காக எங்களிடம் தவறான சர்டிபிகேட் கேட்கிறார்கள் ; அதற்கு 10 ஆயிரம் ரூபாய் பணம் கொடுப்பதாகச் சொல்லுகிறார்கள் ; அதை நாங்கள் வாங்க மறுத்தால் உங்களை உடனே சுட்டு விடுவேன் என்று மிரட்டுகிறார்கள் என்று சொன்னார்கள். எஸ்.டி-யில் இல்லாதவர்கள் இப்படிக் கேட்கிறார்கள். இப்போதுகூட தஞ்சை ஜில்லாவில் சீந்தி வலையர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு எந்த ஒரு வேலை வாய்ப்பும் இல்லை; ஒரு தொழிலும் இல்லை. அதுபோல் மலைப் பகுதியில் வாழ்பவர்களுக்கும் எந்த ஒரு வேலை வாய்ப்பும், தொழிலும் இல்லை. ஆனால் நல்ல, உயர்ந்த சாதியைச் சேர்ந்தவர்கள், பணக்கார வீட்டைச் சேர்ந்தவர்கள் உத்தியோகங்கள் வாங்குவதற்காகவும், சலுகைகளை அடைவதற்காகவும், சர்டிபிகேட் வாங்கிக் கொடுத்து தங்களை எஸ்.டி என்று சேர்த்துக் கொண்டார்கள்.

இப்போது பயோ கேஸ் அடுப்பு வைக்கிறோம். அதில் எஸ். சி.க்கு மூன்றில் ஒரு பாகம் இனாம். ஆனால் எஸ்.டி. களுக்கு பாதி இனாம். இப்படி அந்தச் சலுகைகளை அடைவதற்கு அவர்கள் அப்படிச் செய்கிறார்கள். எனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதில் சற்று தனிக் கவனம் செலுத்தி எங்கெங்கு எல்லாம் இப்படி இருக்கிறதோ அங்கெங்கெல்லாம் இனிமேலாவது இந்த மாதிரியெல்லாம் நடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். எஸ். டி. என்று உண்மைக்குப் புறம்பான சர்டிபிகேட் யார் யார் கொடுத்து இருந்தார்களோ, அவர்களையெல்லாம் கண்டறிந்து, அதை வளரவிடாமல் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மற்றவர்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து வீடு கட்டிக் கொடுப்பது. காங்கிரஸ் காலத்திலே கூட வீடுகள் கட்டிக் கொடுத்தோம். இடத்தையும் வாங்கிக் கொடுத்தோம். ஆனால் பிரச்சினை தீர்ந்தபாடில்லை. இதற்கென்று தனியாக மூன்றாண்டுத் திட்டம் ஒன்றை தயவு செய்து போட்டு, எங்கெங்கெல்லாம் இடம் இல்லையோ, அவர்களுக்கு

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [1989 ஏப்ரல் 29

இடத்தை வாங்கிக் கொடுப்பதற்கும், அப்படி இடமே இல்லா விட்டாலும் கூட, அந்த எக்ஸிஸ்டிங் ஹட்ஸ், ஏற்கெனவே குடி இருந்த இடத்திலே—டவுனிலே கட்டிக் கொடுத்ததைப் போன்று—அபார்ட்மெண்ட்ஸ், அடுக்கு மாடி வீடுகளைக் கட்டிக் கொடுத்து அவர்கள் வாழ்வதற்கான வழிவகையைச் செய்யவேண்டும். ஏனென்றால் அந்த அளவுக்கு அந்த மக்கள் உங்களை நம்புகிறார்கள்.

ஏனென்றால் அந்த அளவிற்கு உங்களை இந்த மக்கள் நம்புகிறார்கள். என்னிடத்திலேகூட, தலைவரிடத்திலே நீங்கள் பேசுங்கள், நீங்கள் பேசுங்கள் என்று அரிஜன சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்றால், நீங்கள் செய்வீர்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில்தான் சொல்கிறார்கள். எனவே, அதையும் தாங்கள் செய்து கொடுப்பதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டும்.

இப்போது எட்டாயிரம் வீடு, பத்தாயிரம் ரூபாயிலே கட்டிக் கொடுப்பதாக இருக்கிறது. அதுவும் பாராட்டுக்குரியது. அதைப் பரவலாகச் செய்ய வேண்டும்.

49 கோடி ரூபாயிலே 45,000 வீடுகள் கட்டுவதாக இருக்கிறது. அதையும் வெகு விரைவிலேயே, இந்த ஆண்டுக்குள்ளேயே, 89–90-க்குள்ளேயே அந்த வீடுகளெல்லாம் கட்டி முடிக்கப் படவேண்டும். கட்டி முடிக்கப்பட்டு, அடுத்த 90–91 ஆம் ஆண்டுக்கு வேறு திட்டங்கள் வரும் வரைக்கும் இதைச் சீக்கிரமாக முடிப்பதற்கு, இதற்குத் தனி அதிகாரி போட்டு இந்த வேலையைச் செய்தால் இன்னும் சற்று நன்றாகவிருக்கும் என்பதையும் நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளுகின்றேன்.

மாணவ மாணவிகள் கல்லூரிகளில் படிக்கின்றார்கள். அப்படிப் படிப்பவர்களுக்கு இடையிலே பாகுபாடு இருக்கிறது. எனக்குப் பல மனுக்கள் வந்திருக்கின்றன. ஒரு உயர்ந்த ஜாதியிலே படிக்கக்கூடிய மாணவனுக்கு ஸ்காலர்ஷிப்பைப் பொறுத்தவரையில் அவனுக்கு 350 என்றால் ஹரிஜன மாணவனுக்கு 300 வருகிறது. அப்பொழுது அந்தக் குழந்தைகளுக்கு 'inferiority Complex' ஏன், அவர்களுக்கு மட்டும் ஜாஸ்தி, எங்களுக்குக் குறைந்து வருகிறதே, என்ன என்று கேட்கிறார்கள். ஆகையினால் இப்படியிருப்பதையெல்லாம் சற்று மாற்றியமைக்க வேண்டும்.

அரிசன நலப் பள்ளியிலே படிக்கக்கூடிய குழந்தைகளுக்கு நாம் புத்தகம் கொடுக்கிறோம். துணிகள் கொடுக்கிறோம். அது காலாகாலத்தில் கொடுக்கப்படுவதில்லை. அந்தப் புத்தகம் ஜூன் மாதத்திற்குள்ளாகக் கொடுக்கப்பட வேண்டுமென்று நான் இந்தச் சட்டமன்றத்திலே பலமுறை பேசியிருக்கிறேன். ஆனால் அது ஆகஸ்டு, செப்டம்பரிலேகூட........



1989 ஏப்ரல் 29]

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** தலைவரவர்களே, அம்மையார் அவர்கள் குறிப்பிடுவது, கடந்த காலத்திலே நடைபெற்ற நிகழ்ச்சி. இந்த ஆண்டு ஜூன் மாதம் 30 அல்லது ஜூலை முதல் வாரத்திற்குள்ளாக எல்லாப் பள்ளிகளுக்கும் புத்தகங்கள் வந்து சேரும்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** ரொம்ப நன்றி. அதைச் சொல்ல வேண்டுமென்று எதிர்பார்த்துத்தான் இப்பொழுது பொறுப்பு ஏற்றிருக்கின்றீர்கள்—அதைச் சொல்ல வேண்டுமென்று எதிர்பார்த்துத்தான் இதைச் சுட்டிக்காட்டினேனே தவிர வேறொன்றுமில்லை. ஆகையினாலே அதைச் செய்ய வேண்டும்.

நாம் துணிகளை அவர்களுக்குக் கொடுக்கிறோம். நான் சமூக நலத் துறையிலே பேசும்பொழுதுகூட சொன்னேன். அந்தத் துணிகளை ஆண்டுக்கு இரண்டு முறை கொடுக்கின்றோம். அப்படிக் கொடுக்கக்கூடிய துணியை 12 வயது, 15 வயது என்று வயதை வைத்துத் தைத்து விடுகின்றார்கள். அப்படித் தைத்துக் கொடுக்கின்றபொழுது, 12 வயதுக் குழந்தை இவ்வளவு உயரம் வளர்ந்திருக்கிறது; 15 வயதுக் குழந்தை பெரிய ஆளாக வளர்ந்து விட்டான். அந்த மாதிரி இருந்தால் டிரவுசரும் பத்தவில்லை; பெண் பிள்ளைகளுக்குப் போடுகிற அந்தப் பாவாடை சட்டைகள் பத்தமாட்டேன் என்கிறது. ஆகையினாலே அதை, டெய்லரை அனுப்பி, அளவெடுத்து, ஒவ்வொரு பள்ளியிலும் அந்தக் குழந்தைகளுக்கு உடைடான அந்தத் துணிகளைத் தைத்துக் கொடுப்போமேயானால் நாம் செலவழிக்கக்கூடிய பணம் உண்மையாகவே அந்த ஏழைக் குழந்தைகளுக்குப் போய்ச் சேரக்கூடிய ஒரு நல்ல நிலையை அடையும் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பத்தாவது வரைக்கும் நாம் உணவு போடுகிறோம். அப்படி உணவு போடுவது ரொம்ப நல்ல, சரியான ஒரு திட்டம் தான். அதை ஏற்கனவே காங்கிரஸ்காரர்கள்தான், இந்த மதிய உணவுத் திட்டமெல்லாம் கொண்டு வந்தார்கள். இந்த அரிசன நல மானியம் கொண்டு வருகிறோமே, இந்த அரிசன நலத் துறையையே ஏற்படுத்தியது காங்கிரஸ்காரர்கள்தான். அன்றைக்குப் போடப்பட்ட திட்டங்கள் இன்றைக்கு விரிவுபடுத்தப்படுகின்றன. அன்றைக்குப் போட்ட திட்டத்தை இன்றைக்கு விரிவுபடுத்தி, அன்றைக்கு ஏதோ கொஞ்சம் வீடுகள் கட்டிக் கொடுத்தோம், தொகுதிக்கு 20 வீடுகள், 30 வீடுகள் என்று கட்டிக் கொடுத்தோம். ஆனால் இன்றைக்கு அது ஆயிரக்கணக்கான வீடுகள் கட்டக் கூடிய அளவிற்கு சமுதாயத்திலே மக்கள் வளர்ந்து இருக்கின்றார்கள். அவர்களது தேவைகள்—மனிதனுக்கு நாகரிகம் வளர வளர அறிவு வளர வளர அவர்களுக்குத் தேவை அதிகப்படுகிறது. ஆகையினாலே அவர்கள் தேவைக்கேற்றபடி இன்றைக்கு நாம் அதிகப்படியான வீடுகளைக் கட்டிக் கொடுத்து வருகிறோம். எனவே அதிலேயும் என்னுடைய பாராட்டுதலை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

வீட்டு வளர்ச்சிக் கழகம் விழுப்புரத்திலே இருந்தது. பல முறை இந்த மன்றத்திலே பேசினேன். அன்றைக்கு மாற்றவில்லை. அதை நீங்கள் மாற்றி இந்தச் சென்னைக்குக் கொண்டு வந்ததற்காகவும் என்னுடைய பாராட்டுதலையும, நன்றியையும் இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

வீடுகள் கட்டுவதிலே, அதற்காக இடம் எடுக்கிறோம். 201 சதுர அடி. சார், இடம் எடுப்பதையெல்லாம் இந்த மனையடி சாஸ்திரத்தின்படி எடுக்க வேண்டும். நான் கணக்கு போட்டுப் பார்த்ததிலே, 14½, 14½ என்று வருகிறது. அப்படியென்றால், அது சர்வ நாசம். 12 அடி எடுக்கக் கூடாது, 13 அடி எடுக்கக் கூடாது. 8 அடி எடுக்க வேண்டும், 10 அடி எடுக்க வேண்டும், 11 அடி எடுக்க வேண்டும், 16 அடி எடுக்க வேண்டும். அந்த வீடு கட்டுவதிலேகூட நாங்களெல்லாம் சாஸ்திரம் பார்த்துத்தான் கட்டுவோம். மாண்புமிகு முதல்வர் அவர்களும் அப்படித்தான். மற்ற அமைச்சர்களும் அப்படித்தான் செய்வார்கள் என்று நினைக்கிறேன். ஆனால் இந்த அரிசன மக்களுக்குக் கட்டும் பொழுது இந்த சாஸ்திரப் பிரகாரம் கட்டினால்தான் நல்லது. இல்லையென்றால் சரியாக விளங்காது. ஆகையினால் இந்த மனை அடி சாஸ்திரத்தின் பிரகாரம் இப்பொழுது வீடுகள் கட்டுவதற்கு இடம் ஒதுக்க வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** சாஸ்திரப் பிரகாரம்தான் மக்களைப் பல ஜாதிகளாகப் பிரித்து, தாழ்த்தப்பட்டோர் என்று சொல்லக் கூடிய அளவிற்கு ஆதிதிராவிடர்களை ஆக்கி வைத்திருக்கிறார்கள். அந்த சாஸ்திரம் தேவையா?

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** இல்லை சார். அதைச் சொல்லவில்லை. அந்த சாஸ்திரம் என்றைக்கோ போய் விட்டது சார். இன்றைக்கு இந்த வீட்டிலே வாழக் கூடியவர்கள் ஒரு சிரமமும் இல்லாமல் வாழவேண்டும். ஒரு சிரமமும் இல்லாமல் அவர்கள் வாழ்க்கை நடத்த வேண்டும். அதற்காகத்தான் சொல்கிறேனே தவிர, அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. மாண்புமிகு முதல்வரவர்கள் எனக்கு ஒரு அடி அடிக்க வேண்டுமென்பதற்காகச் சொல்கிறார்கள். அவ்வளவுதான். (சிரிப்பு) (குறுக்கீடு) ஆமாம், மனை அடி சாஸ்திரம், அம்மாதிரி அந்த வீட்டைக் கட்ட வேண்டும்.

ஆர். எல். இ. ஜி. பி., என். ஆர். இ. பி. திட்டங்களைப் பற்றிச் சொல்லவேண்டும். மத்திய அரசு முழுப் பணம் கொடுக்கிறது. முழுப் பணம் 6,000 ரூபாயையும் கொடுக்கிறது. அதைப் போன்று என். ஆர். இ. பி.யிலே மாநில அரசும் போடுகிறது, மத்திய அரசும் போடுகிறது. [illegible]து கூட பன்றிக் குடிசை மாதிரி



தான். ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். ஒரு ரூம். அந்த ஒரு ரூமுக்குள்ளே என்ன சார், தாய், தகப்பன், ஒரு மகனுக்குக் கல்யாணம் செய்கிறார்கள். ஒரு மகளுக்குக் கல்யாணம் செய்கிறார்கள். இந்த மகனும், மருமகளும் எங்கே தங்குவார்கள்.

(பிற்பகல் 1-30)

தாய், தகப்பன் எங்கே தங்குவார்கள்? கல்யாணம் ஆகாத குழந்தைகள் எங்கே தங்குவார்கள்? ஆகவே, இந்தத் திட்டத்தை முழுமையாக மாற்றியாக வேண்டும். இந்தத் திட்டத்தை முழுமையாக மாற்றி எட்டு, எட்டு அடியிலே இரண்டு சிறிய ரூம்கள், ஒரு கிச்சன், ஒரு வராண்டா என்ற அடிப்படையில் இந்த வீட்டினுடைய அளவு இருக்க வேண்டும். அந்த அளவிற்கு போட்டு செய்தால்தான் நன்றாக இருக்கும், அப்போதுதான் ஒரு மரியாதை கிடைக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து அரிசனங்கள் மேம்பாட்டுத் திட்டங்கள் மூலமாக பல காரியங்களைச் செய்திருக்கிறோம். அது காங்கிரஸ் காலத்தில் செய்தது தான். ஒரு தொகுதிக்கு ஒரு யூனியன் என்று எடுத்துக் கொள்வார்கள் அல்லது ஒரு ஜில்லாவிற்கு ஒரு யூனியன் என்று எடுத்துக் கொள்வார்கள். மாடுகளை இனாமாகக் கொடுத்தோம். அப்படிக் கொடுப்பதில் 250 பேர்கள் மதுரை மாவட்டம் என்றால் மதுரை மாவட்டத்தில் 34 யூனியன்கள், அந்த 34 யூனியன்களில் ஒரு யூனியனை எடுத்துக் கொள்வார்கள். காங்கிரஸ் காலத்தில், அந்த ஒரு யூனியனில் 250 பேர்களை எடுப்பார்கள். அதாவது, அரிசன நலத்துறை மூலமாகவும், பிற்பட்ட நலத் துறை மூலமாகவும் பிறமலை கள்ளர்களுக்காக அப்படி எடுத்து, குலுக்குச் சீட்டுபோட்டு, அந்த மாட்டைச் கொடுத்தோம். அது மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் தெரியும், கல்வி அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். அதேபோல் இப்போது மாடுகளை நாம் இனாமாகக் கொடுக்கிறோம். இந்த மாடுகளைக் கொடுப்பது உண்மையிலேயே யார் இரண்டு ஏக்கர் நிலம் வைத்திருக்கிறார்கள். மாடு இல்லாமல் இருக்கிறார்கள் என்று பார்த்து கொடுப்பதற்காக அப்படி ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு யூனியன் என்று எடுத்து நிறைவேற்றினால் அது சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து கிணறுகள் வெட்டுவது, 2,500 ரூபாய் ஒரு கிணற்றிற்குக் கொடுக்கிறோம். அப்படி 2,500 கொடுத்தால் 10 கிணறு, 15 கிணறு தான் கொடுப்போம். ஆனால் இன்றைக்கு எத்தனை கிணறுகள் என்று இதில் போடவில்லை. இன்றைக்கு கிணறுகள் வெட்டுவதில், ஜீவன்தாராவில் அரிசன மக்களுக்கு 25,000 ரூபாய் இனாமாகக் கொடுக்கிறது மத்திய அரசு. அந்த 25,000

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [1989 ஏப்ரல் 29

ரூபாய் செலவு செய்து கூட முழுமையாக அந்தக் கிணறு வெட்ட முடியவில்லை. 30 அடி, 100 அடி போட்டாலும் தண்ணீர் இல்லாமல் போய் விடுகிறது. பிறகு அந்தக் கிணற்றை அப்படியே நிறுத்தி விடுகிறார்கள். அப்படி நிறுத்தாமல் எவ்வளவு பணம் செலவழிகிறதோ அவ்வளவு பணத்தை செலவு செய்து அந்தக் கிணற்றை வெட்டி தண்ணீர் கிடைக்கும்படியான நிலையை உருவாக்கிக் கொடுத்தால் தான் அவர்கள் விவசாயம் செய்கிற நல்ல நிலை உருவாகும். எனவே, அதையும் சற்று பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது நாம் பால் மாடுகள், ஆடுகள் மானியத்தில் வாங்கிக் கொடுக்கிறோம். இப்படி அவர்களுடைய மேம்பாட்டிற்காக சில காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறோம். அப்படிச் செய்கிறபோது உண்மையிலேயே சில இடங்களில் பாங்குகளில் உள்ளவர்கள்—மத்திய அரசு தான் அதற்குப் பொறுப்பு—சில அதிகாரிகள் அந்தப் பணம் கொடுப்பதிலே அவர்களுக்கு அதில் பொறாமை வந்து விடுகிறது. என்னடா, 5,000 ரூபாய் கொடுக்கிறோம், 2,500 ரூபாய் இனாமா என்ற பொறாமை வந்து விடுகிற காரணத்தால் அதைக் கொடுப்பதில் கால தாமதம் செய்கிறார்கள். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மற்ற அமைச்சர்களும் சம்பந்தப்பட்ட பாங்கு அதிகாரிகளை அழைத்து, நம்முடைய செகரட்டரிகளை வைத்து பேசி இந்த அரிசன மக்கள் மேம்பாட்டுத் திட்டங்கள் மூலமாக இந்தப் பணத்தை ஒழுங்காகக் கொடுக்கச் செய்ய வேண்டும். யாரும் கையிலிருந்து எடுத்துக் கொடுக்கவில்லை. எங்கேயிருந்தோ பணம் வருகிறது. மக்கள் வரிப்பணம் கொடுக்கிறார்கள். மத்திய அரசு கொடுக்கிறது. இதைக் கொடுப்பதில்கூட அவர்கள் தடையாக இருக்கிறார்கள். எனவே, அதைச் சற்று துரிதமாகக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மயானப் பாதை. உண்மையிலேயே சொல்வதென்றால், நான் 1957-ம் ஆண்டிலிருந்து இருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் தோற்காமல் தொடர்ந்து வந்திருக்கிறார்கள். நாங்கள் எல்லாம் தோற்றுப் போய் வந்திருக்கிறோம். இதற்கு ஒரு கிரேடு வேண்டுமென்றால் அவரைத் தான் சொல்ல வேண்டும். ஏனென்றால், ஒரு தொகுதியிலும் கூட அவர்கள் தோற்றதில்லை. ஏழு தடவைகள் ஜெயித்து இருக்கிறார்கள். ஒரு முறை நிற்கவில்லை என்று கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் எல்லாம் இரண்டு முறை தோற்றுப் போய் தான் வந்திருக்கிறோம். ஒருமுறை நான் நிற்கவில்லை. இந்த மாதிரி எல்லாவிதமான சிறப்பும் பெற்றிருக்கிற முதல்வர் அவர்கள், அவர்களுடைய காலத்தில் மயானப் பாதை என்ற பேச்சே இல்லாமல், இதற்கும் மூன்றாண்டுத் திட்டம் என்று ஒன்றை வைத்து, ஜாதி இந்துக்களாக இருந்தாலும் சரி, அரிசன மக்களாக இருந்தாலும் சரி, இந்தப்



1989 ஏப்ரல் 29] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

பாதைகளை உடனடியாகப் போடுவதற்கு முயற்சி மேற்கொள்ள வேண்டும். இந்தத் திட்டம் மூன்றாண்டுகளில் முடியவேண்டும். இந்த ஊரிலே சுடுகாடு இல்லை, சுடுகாட்டிற்கு இடம் இல்லையென்ற பிரச்சினை இல்லாமல் ஆக்க வேண்டும். அப்படி ஒரு வழிவகை செய்வார்களானால், அதுவும் சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் கூறிக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பற்றி அவர்களுக்கு நன்றாகத் தெரியும். நிலக்கோட்டை தொகுதி ஒன்றுக்குமே வழியில்லாத தொகுதி. இந்தத் தொகுதியில் எப்படியோ மக்கள் எனக்கு வோட்டு போடுகிறார்கள். நானும் வந்து விடுகிறேன். இந்தத் தொகுதியிலே அக்காள், அக்காள் என்று அழைத்து வோட்டு போடுகிறார்கள். அங்கே வேலையில்லாமல் மக்கள் ரொம்பவும் சிரமப்படுகிறார்கள். பெண்களுக்காக அரிசன நலத் துறையிலிருந்து ஐ.டி.ஐ. தொழில் பயிற்சி நிலையம் ஒன்றை ஆரம்பித்துக் கொடுக்க வேண்டும். அல்லது ஒரு நூல் மில்லாவது அங்கே ஆரம்பித்துக் கொடுக்க ஏற்பாடு செய்தால் என்னுடைய தொகுதி மக்கள் சார்பிலே நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருப்பேன் என்று கூறிக் கொள்கிறேன்.

அதைப் போல தஞ்சை மாவட்டத்திலே, வேதாராண்யம் தொகுதியில் 'சீந்தி வளையர், என்று ஒரு பிரிவினர் இருக்கிறார்களாம். 300 குடும்பத்தினர் அங்கே இருக்கிறார்களாம். அவர்கள் ஒரு வழியும் இல்லாமல் இருக்கிறார்கள். அவர்கள் மலையில் சென்று அங்கேயிருக்கிற கிழங்கை எடுத்துக் கொண்டு வந்து அதை சாப்பிடுவது, அங்கேயிருக்கிற மரம், செடிகளை வெட்டி வந்துதான் பிழைக்கிறார்கள் போல இருக்கிறது. அவர்களுக்கு பிழைப்பதற்கு ஒரு வழி செய்ய வேண்டும்.

மரத்தை அழித்தால் இன்னும் மோசமாகப் போய் விடும். இதை நான் இங்கே பேசுவதால், பொன்னம்மாள் ஒரு சீனியர் மெம்பர், அவரே மரத்தை வெட்டச் சொல்லி விட்டார்கள் என்று பத்திரிகையிலே போட்டு விடாதீர்கள், தயவு செய்து. எனவே அவர்கள் பிழைப்பதற்கு ஒரு வழியை ஏற்படுத்திக் கொடுத்தால் நன்றாக இருக்கும்.

பிறகு காமராசர் மாவட்டத்திலே 1985—லே வழங்கப்பட்ட மனைப்பட்டா இதுவரையில் கொடுக்கப்படவில்லை. அதையும் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எங்கெங்கே மனைப்பட்டா வைத்திருக்கிறார்களோ, அவர்களுக்கு எல்லாம் நாம் குறைந்த வட்டியிலே 4 சதவிகிதம் வட்டியிலே கூட ஹட்கோ திட்டத்தின் மூலமாக, பேங்க் மூலமாக கடன் வாங்கிக் கொடுத்து வீடுகள் கட்டிக் கொடுப்பதை முடித்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, உங்களுக்கு எல்லாம் நல்லாசி கூறி என் உரையை முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

[1989 ஏப்ரல் 29

**மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்** : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பகுத்தறிப் பகலவன் தந்தை பெரியார் கொள்கை வழியில் பேரறிஞர் அண்ணா அவர்களின் அடிச்சுவட்டில் தாழ்த்தப்பட்ட, ஒதுக்கப்பட்ட மக்களின் நலன் காக்க அயராது பாடுபடும் தமிழகத்தின் தன்னிகரில்லாத தானைத் தலைவர், தமிழகத்தின் முதல்வர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களே உங்கள் அனைவருக்கும் எனது நன்றி கலந்த வணக்கத்தை உரித்தாக்குகிறேன்.

டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழகத்தின் தானைத் தலைவன் மட்டுமல்ல, அறியாமை மற்றும் சாதிக் கொடுமை என்ற பெரும் இருளில் அகப்பட்டு உழலுகின்ற ஆதி திராவிட மக்களின் வாழ்வில் ஒளியூட்டி வரும் உதய சூரியன், கல்விப் பெருங்கடல், உலக அறிஞர் கூட்டத்தில் ஓங்கிப் புகழ் நின்ற ஒப்புயர்வில்லா தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவன், மாமேதை டாக்டர் அம்பேத்காருக்குப் பின், தலைவனின்றி தவிக்கும் இவ்வின மக்களுக்கு இதோ நான் இருக்கிறேன் என்று எண்ணற்ற இடையூறுகளையும், ஏச்சுக்களையும் பேச்சுக்களையும் ஏற்று, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்பட்ட மக்களுக்கு நம்பிக்கை நட்சத்திரமாக நிற்கும் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் இயங்கும் இவ்வரசின், பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த மாவட்டத்தின் சார்பில் எனக்கு அமைச்சர் பொறுப்பை அளித்து, செங்கை-அண்ணா மாவட்டம் எனப் பெயர் சூட்டி சிறப்பு அடைந்த இந்த வேளையில், தங்களுக்கும் இப்பேரவைக்கும் தமிழக மக்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியினைக் காணிக்கையாக்குகிறேன். வரலாற்றுச் சிறப்புடன் பொற்காலம் படைக்கும் இவ்வரசின் சார்பில் ஆதி திராவிட மற்றும் பழங்குடி மக்களின் வாழ்வை வளப்படுத்தவும், மக்கள் நலம் பேணும் நல்லதொரு மானியக் கோரிக்கையை உங்கள் முன்னால் வைப்பதில் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

1981ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இம்மாநிலத்திலுள்ள 484 லட்சம் மொத்த மக்கள் தொகையில், 88.81 லட்சம் ஆதி திராவிடர்களும் 5.20 இலட்சம் பழங்குடியினரும் உள்ளனர். இது முறையே 18.35 சதவீதமாகவும் 1.07 சதவீதமாகவும் கணக்கிடப்பட்டு இருக்கிறது. 1981 லிருந்து இந்த எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்துள்ளது.

மாநில அரசுக் கொள்கையின் நெறிமுறை கோட்பாடுகளில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ள ஆதி திராவிடர் பழங்குடியினரின் கல்வி மேம்பாட்டிற்கும், பொருளாதார நலனுக்கும் நாட்டின் பொறுப்பை கருத்தில் கொண்டு, நமது தொடர் திட்டங்களின் பலனை அனுபவிப்பதற்கு இயலும் வகையில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு நமது அரசு பல மேம்பாட்டுத் திட்டங்களையும், நல



திட்டங்களையும் உருவாக்கி பரிவுடன் செயல்படுத்தக் கருதியுள்ளது. தீண்டாமைக் கொடுமைகளைப் போக்குவதையும், அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதையும் நோக்கமாகக் கொண்டு ஒரு புறமும், தீண்டாமை குறித்த உண்மையான அச்சத்தைப் போக்குவதை, மற்றொரு புறமும் கொண்டு இந்த அரசு செயல்படுகிறது. வறுமைக் கோட்டிலிருந்து அவர்களை உயர்த்த பல்வேறு பொருளாதாரத் திட்டங்களைச் செயல்படுத்தவும், 1955-ஆம் ஆண்டு குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் விதித்துறைகளைச் சிறந்த முறையில் செயல்படுத்தவும் இந்த அரசு எண்ணியுள்ளது.

தீண்டாமையால் பாதிக்கப்பட்ட பகுதிகளைக் கண்டறிந்து இப்பகுதிகளில் குறைவாகவுள்ள அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அத்துடன் வகுப்பு, இனப்பாகுபாடற்ற சமூகத்தை ஏற்படுத்தவும், பொது நோக்குடன், ஏனைய சமூகத்தைச் சேர்ந்தவர்களுடன், இச்சமூகத்தைச் சேர்ந்தவர்களும் தாராளமாக ஒன்று கூடி, பழகவும், இது தொடர்பான எண்ணற்ற திட்டங்களையும் அரசு செயல்படுத்தக் கருதியுள்ளது.

அவர்களுடைய சமூக பொருளாதார நிலையை உயர்த்துவதற்கும், ஒதுக்கப்பட்டு, புறக்கணிக்கப்பட்ட இம்மக்களுக்கு நீதி வழங்குவதற்கும் வெவ்வேறு சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களின் மூலம் சமூகத்தில் சமத்துவத்தை அடைய அவர்களுக்கு உதவுவதற்கும் அரசு ஒருமித்த முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களுக்கு அதிக நிதி அளிப்பதை உறுதி செய்யும் பொருட்டு ஆதி திராவிடருக்கான சிறப்பு உள்ளடக்கத் திட்டம், பழங்குடியினருக்கான பழங்குடியினர் துணைத் திட்டம், ஆகியவை தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின் கீழ் இரண்டு இலக்குகளை எய்த அரசு முடிவு செய்துள்ளது. ஒன்று, வறுமைக் கோட்டைத் தாண்டிவர ஆதி திராவிடர் குடும்பங்களைச் சேர்ந்த 50 விழுக்காட்டினருக்கு உதவுவது, இரண்டு, ஆதி திராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளையும் பிறவசதிகளையும் செய்து கொடுப்பது. இதன் மூலம் ஆதி திராவிடர் நல மேம்பாட்டிற்கு ஒவ்வொரு துறைக்கும் குறிப்பிட்ட பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

1989-90-ஆம் நிதி ஆண்டிற்கு 2.00 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்கள் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இணைப்பு இரண்டில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின் கீழ் 1989-90-ஆம் ஆண்டில் பல்வேறு வளர்ச்சித் துறைகள் மூலம் ரூ. 191.22 கோடி செலவிடப்

[டாக்டர் எ. இராமகிருஷ்ணன்] [1989 ஏப்ரல் 29

மக்கள் தொகை ஒப்பீட்டு அடிப்படையில் பார்க்கையில் பழங்குடியினர் மிகச் சொற்பமே. ஆனால், அவர்களின் பண்பாடு, தனித்தன்மை, பழக்க வழக்கங்கள், நிலவியல் பின்னணி, கல்வி நிலை, அவர்களுடைய பிரச்சினைகள், தேவைகள் போன்றவை தனித்தன்மை வாய்ந்தவையாக இருப்பதோடு மட்டுமல்லாமல், சிக்கலானவையாகவும் இருக்கின்றன.

(பிற்பகல் 1-40)

இந்த அம்சங்களைக் கருத்திற் கொண்டு பழங்குடியினர் அதிகமாக உள்ள சேலம், தென் ஆற்காடு, திருச்சிராப்பள்ளி தருமபுரி, வட ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட 9 இடங்களில் அவர்களின் அனைத்து வளர்ச்சிக்காகவும், பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. பழங்குடியினர் துணைத் திட்ட அணுகுமுறையின் கீழ், வழக்கமான ஆண்டு வரவு-செலவுத் திட்டங்களில் பல அரசுத் துறைகள் பழங்குடியினர் பகுதி மக்கள் மேம்பாட்டிற்காக தனி ஒதுக்கீடுகளைச் செய்கின்றன. பழங்குடியினர் குடும்பங்கள் மீது அதிக கவனம் செலுத்துவதுடன் இத்திட்டம் பகுதியை அடிப்படையாகக் கொண்ட இன்றியமையாதத் திட்டமாகும். தமிழ்நாட்டைச் சேர்ந்த சுமார் 40.4 சதவீத பழங்குடியினர், அதாவது 2.10 இலட்சம் பேர் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த 9 பகுதிகளில் வாழ்கின்றனர். அங்கு பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டங்களும் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. பொருளாதார மேம்பாட்டை அடைவதையும், குடிநீர் வசதி செய்து கொடுத்தல், இணைப்புச் சாலைகள் அமைத்தல், பழங்குடியினர் குடியிருப்புகளில் மின் வசதியளித்தல், பள்ளிகளை ஏற்படுத்தல், சுகாதார வசதிகள் முதலியவற்றை செய்து கொடுத்தல், குடும்பத்தை அடிப்படையாகக் கொண்டு வருமானம் திறட்டும் திட்டங்களுக்கு வகை செய்தல் போன்ற பகுதி மேம்பாட்டை ஏற்படுத்துவதும், இத்திட்டத்தின் நோக்கமாகும். பழங்குடியினர் துணைத்திட்டத்தின் கீழ், 1989-90-ஆம் ஆண்டில் பழங்குடியினரின் பயனுக்காக மொத்தம் ரூ. 1,616.84 இலட்சம் செலவிடப்படும். வறுமைக் கோட்டைக் கடக்க 69,869 பழங்குடியினர் குடும்பங்களுக்கு உதவுவதும், ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட இலக்காகும். ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் 46,979 குடும்பங்களையும், ஒருங்கிணைக்கப்படாத பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் 22,890 குடும்பங்களையும், இத்திட்டத்தின் கீழ் கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது.



1989 ஏப்ரல் 29] [டாக்டர் எ. இராமகிருஷ்ணன்]

வீட்டு வசதி, இந்த மாநிலத்தில் 89 இலட்சம் ஆதி திராவிடர்கள் உள்ளனர். இதில் 71 இலட்சம் பேர் கிராமப்புறங்களிலும், 18 இலட்சம் மக்கள் நகர்ப்புறங்களிலும் வாழ்கின்றனர். 7 இலட்சம் மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். 26 இலட்சம் விவசாயக் கூலிகளாக இருக்கிறார்கள்.

அடுத்தபடியாக 11 இலட்சம் பேர் தோல் பதனிடும் தொழில் ஈடுபட்டுள்ளனர். மற்றவர்கள் அன்றாடம் கிடைக்கும் வேலை வாய்ப்புகளைக் கொண்டு வாழ்கின்றனர். அநேகமாக இந்த சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் பெரும்பாலோர் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கின்றனர். பழங்குடியின மக்களைப் பொறுத்த வரையில் 5 இலட்சம் மக்கள் உள்ளனர். இவர்களில் பெரும்பாலோர் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்கின்றனர். சுதந்திரம் பெற்று 42 ஆண்டுகள் ஆகியும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் அடிப்படை வசதிகளை நிறைவேற்றுவதில் முன்னேற்றம் இருந்த போதிலும், ஒட்டு மொத்தமாகப் பார்க்கும்போது அந்த முன்னேற்றம் கணிசமாக இல்லை. அவர்களின் அடிப்படை வசதிகள் எவை என்பது பற்றி முன்னர் பல ஆய்வுகள் எடுத்து, புள்ளி விவரங்கள் உண்மை நிலையினை எடுத்துக்காட்டவில்லை. ஆகவே, இந்த அரசு பொறுப்பேற்றவுடன் முதல் கட்டமாக கிராமந்தோறும் ஆதி திராவிலர் குடியிருப்புகளை ஆய்வு செய்து, அந்தக் குடியிருப்புகளின் அடிப்படைத் தேவை எவை என்றும் மற்றும் என்னென்ன பணிகள் இதுவரையில் நடைபெறவில்லை என்றும், என்னென்ன பணிகள் செய்யப்படாமல் இருக்கின்றன என்பது பற்றிய ஒரு விரிவான ஆய்வு எடுக்க உத்திரவிடப்பட்டுள்ளது. இந்த மக்களின் அடிப்படைத் தேவை, வீட்டுவசதி. வருவாய்த்துறை மூலம் புறம்போக்கு நிலங்களில் வீட்டுமனை பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகிறது. அதே துறை குடியிருப்புச் சட்டத்தின் மூலமாக வீட்டு மனைகளை வழங்கி வருகிறது. எனினும் இதுவரையில் கொடுக்கப்பட்டு வந்துள்ள வீட்டு மனைகள் வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் இந்த சமுதாயத்தின் வீட்வசதித் தேவைகளில் சரி பாதியைக் கூட நிறைவேற்ற முடியவில்லை. வருவாய்த்துறை மூலம் கொடுக்கப்படும் எண்ணிக்கையை அதிகப்படுத்தி அந்தத் துறை மூலம் அதிக அளவுக்கு நிலத்தினை கையகப்படுத்தி அதிக அளவு பட்டாக்கள் வழங்கப்பட வகை செய்யப்பட்டுள்ளது. 1949ஆம் ஆண்டிலிருந்து 1988-89 நிதி ஆண்டு வரை ஏறக்குறைய 40 ஆண்டுகளில் வழங்கப்பட்ட பட்டாக்களின் எண்ணிக்கை 4.88 லட்சம். செலவிடப்பட்ட தொகை ரூ. 19 கோடியாகும். இந்த அரசு இந்த ஆண்டுக்கு மட்டும் 40 ஆயிரம் பட்டாக்கள் வழங்கப்பட வேண்டுமென்றும் (மேசையைத் தட்டும் ஒலி) முடிவு செய்து அதற்காக ரூ. 2.35 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அரசு ஏறத்தாழ 4.8 லட்சம் காலி மனைப்பட்டாக்களை வழங்கியுள்ளது. இதுவரையில் செயல்படுத்தப்பட்ட திட்டங்களின் வாயிலாக கட்டிக் கொடுக்கப்பட்ட மொத்த வீடுகளின் எண்ணிக்கை ஏறக்குறைய 4 லட்சம் ஆகும். இந்த ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டுவதற்கென தனி வாரியம் ஒன்றை 1974 ஆம் ஆண்டு அமைத்தது. ஒரே ஆண்டில் 31,022 கான்கிரீட் வீடுகளை கட்டிக் கொடுத்தது. அதன் பின்னர் தொடர்ந்து தாட்கோ நிறுவனம் கட்டித்தருவதற்குப் பதிலாக பயனாளிகளே கட்டிக் கொள்ள சொல்லி அதற்காக முழு மானியம் ஒரு வீட்டுக்கு 6 ஆயிரம் வரை கொடுத்து வந்தது. கடந்த 13 ஆண்டுகளில் அத்தகைய முறை கடைபிடிக்கப்படவில்லை. இதுவரையில் 34,650 வீடுகள் தான் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த வீடுகளும் கான்கிரீட் வீடுகள் அல்ல. மோசமான நிலையில் உள்ள ஓட்டு வீடுகள் தான். பெயர் அளவில் வீடுகளே இல்லாமல் தரமான வீடுகள் அல்ல என்பதை இந்த நேரத்திலே மிகவும் வருத்தத்தோடு கூறிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

தாட்கோ : 1974-ல் திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல மேம்பாட்டுத் திட்டங்கள் செம்மையாக நடத்துவதற்காக தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதிக் கழகத்தை தோற்றுவித்தது. முதல்கட்டமாக இதுவரையில் வரலாறு கண்டிராத வகையில் 30 ஆயிரம் கான்கிரீட் வீடுகளை ஒரு ஆண்டில் கட்டுவதற்கு 1974 ல் இந்த அரசு உத்தரவு இட்டது. அதன்படி 30,022 வீடுகள் கட்டப்பட்டன. அதன் பின்னர் வந்த அரசு தாட்கோ மூலம் கட்டிய வீடுகளை தாட்கோவே கட்டாமல் பயன் அடைவோர்களே கட்டுவதற்குரிய உதவித் தொகையை முழுவதுமாக பயனாளிகளுக்கு கொடுத்தது. கழக அரசு ஓரிரு ஆண்டுகளில் கட்டியது 30,022 கான்கிரீட் வீடுகள். ஆனால் பின்னர் வந்த அரசு 13 ஆண்டுகளில் தாட்கோ மூலம் கட்டுவதற்கு பணம் கொடுத்து உதவி கட்டிய வீடுகள் 34,650 வீடுகள் மட்டும் தான் என்பது குறிப்பிடத்தக்கது. இனியும் இந்தத் தேக்க நிலை நீடிக்க இயலாது என்பதை உணர்ந்த இந்த அரசு, ஒடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களின் தலையாய பிரச்சினையாக வீட்டு வசதி வழங்கு தொகையை ரூபாய் 3 கோடியிலிருந்து ரூபாய் 49 கோடியாக உயர்த்தியுள்ளது (மேசையைத் தட்டும் ஒலி)

1981-82 ஆம் ஆண்டிலிருந்து இந்த நிறுவனம் ஆதிதிராவிடர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கான சில திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. அது மட்டும் அல்லாமல் பழங்குடியினர் நலப் பணியும் தீவிரமாக கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று இந்த அரசு திட்டமிட்டுள்ளது. தாட்கோ நிறுவனத்தையும், நிர்வாகத்தையும் செயல்பாட்டையும் சீர்படுத்தி அதனை மேலும் பயன் உள்ளதாக அமைப்பதற்காக தீவிரமாக நடவடிக்கைகள்





எடுக்கப்பட்டுள்ளன. மற்றும் பல துறைகளுடனும் கலந்து ஆலோசித்து திட்டங்களை விரைவுபடுத்த வசதியாக இருக்கும் வகையில் மேலும் தாட்கோவினை விரிவுபடுத்தியும் திட்டங்களை விரைவுபடுத்தியும் அடித்தளத்தில் உள்ள ஆதிதிராவிட மக்களுக்கு சீரிய பணி ஆற்றும் ஒரு நிறுவனமாக தாட்கோவை செயல்படுத்திட வேண்டும் என்ற கருத்தில் முதல் கட்டமாக தாட்கோ தலைமையிடத்தை சென்னைக்கு மாற்றியதோடு மட்டுமல்லாமல் அதனை நான்கு மண்டலங்களாகப் பிரித்து திட்டங்களை தீவிரப் படுத்த முடிவு செய்துள்ளோம். அம் மண்டலங்கள் விழுப்புரம், திருச்சி, கோவை, மதுரை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டு செயலாற்றிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மூடப்பட்ட குழாய்க் கிணறுகள் வாரியத்தின் முடிக்கப்படாத 100 ஆழ்க்குழாய் கிணறுகளையும் தாட்கோ எடுத்து சற்றேறக் குறைய 2000 ஆதிதிராவிட சிறு நில குறு நில விவசாயிகள் பயன்பெறும் வகையில் கட்டி முடித்துத் தரவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் தாட்கோவின் நிதி உதவி பெற்று மற்ற அரசுக் துறைகளினால் செயல்படுத்தப்படுகின்ற அல்லது செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ள ஆதிதிராவிடர் நலப் பணிகளை எத்தகைய அளவுக்கு தாட்கோவினாலேயே சீரிய முறையில் செயல்படுத்தப் படும் என்பதையும் ஆய்வு செய்து வருகிறோம்.

கடந்த ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டு செயல்படாத அடித்தளத்திலேயுள்ள ஆதி திராவிட மக்களின் வருமானத்தை உயர்த்திட இயலாத சில திட்டங்களைக் களைந்துவிட்டு புதிய சமுதாய பொருளாதார அறிவியல் மாற்றங்களுக்கு ஏற்பவும் தீர்மானத்தை அதிகரிக்கின்ற திட்டங்களை அமைத்து இவ்வாண்டு முதல் செயல்படுத்த திட்டம் இட்டிருக்கின்றோம்.

செங்கை அண்ணா மாவட்டத்தில் சற்றேறக்குறைய 1000 ஆதிதிராவிடர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் ஒரு நூற்பு ஆலை அமைக்கும் திட்டம் ஒன்று ஆய்வில் உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மே லும் 31,643 ஏழை ஆதிதிராவிடர்களுக்கு ரூபாய் 23 26 கோடி மொத்த செலவில் வங்கிகளின் கடன் உதவியுடன் அரசு மானியம் 10.46 கோடி மற்றும் அரசு விளிம்புத் தொகை 5.4 கோடி மூலம் 1989-90வது-ஆண்டில் பல திட்டங்களில் செயல் திட்ட அறிக்கைகள் தயார் செய்யப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

(பிற்பகல் 1-50)

இந்த அரசு 27–1–89 அன்று பணியேற்ற பின்னர் ஆதிதிராவிடர் நலனுக்காக மொத்த தொகை ரூ. 202.93 லட்சம் செலவில் வங்கிக் கடனுடன் அரசின் மானியம் 166.78 லட்சமும், அரசின் விளிம்புத் தொகை ரூ. 41.71 லட்சமும் உட்பட்ட உதவியுடன்

36,400 அடித்தளத்திலுள்ள ஆதிதிராவிடர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் பல அரசாணைகள் வெளியிடப்பட்டு தாட்கோவின் மூலம் பல அரசுத் துறைகள் செயல்படத் தொடங்கியுள்ளன.

''எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு''

கல்வியே வாழ்க்கையின் அடிப்படை ஆதாரம் என்பதனை வள்ளுவப் பெருந்தகை மேற்கண்ட குறள் மூலம் வலியுறுத்தியுள்ளார். இந்தத் துறை செய்திடும் பணிகளுள் தலையாயதும், அத்தியாவசியமானதும் கல்விப் பணியே ஆகும். ஆதிதிராவிடர்களின் கல்வி அறிவு விழுக்காடு 29.67தான். அதிலும் பெண்களின் கல்வியறிவு மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. பெண்களின் கல்வியறிவு விழுக்காடு 18.35 ஆகும்.

ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த குழந்தைகள் படித்த அறிவார்ந்த குடிமக்களாக வளர வேண்டியது அவசியம் என்பதை நன்குணர்ந்த அரசு, ஆதிதிராவிடர்—பழங்குடியினர் நலத் துறைக்கு செய்யப்பட்ட நிதி ஒதுக்கத்தில் 50 விழுக்காட்டிற்கு மேல் கல்வித் திட்டங்கட்குச் செலவிடப்படுகிறது. ஆதிதிராவிட மற்றும் பழங்குடி மக்களின் கல்வியறிவினை மேம்படுத்த 1204 தொடக்க நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளை நடத்தி வருகிறது. இதில் படிக்கும் மொத்த மாணவ மாணவியர்களின் எண்ணிக்கை 2,28,571 ஆகும். இது தவிர 13,450 குழந்தைகள் அரசு பழங்குடியினர் தங்கிப் பயிலும் பள்ளிகளில் படித்து வருகின்றனர். குழந்தைகளிடையே சாதிமத வேற்றுமையின்றி ஒற்றுமை ஏற்படுத்தும் நோக்குடன், இப்பள்ளிகளில் ஏனைய வகுப்பைச் சேர்ந்த குழந்தைகளும் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் 10ஆம் வகுப்பு வரையில் படிக்கும் அனைத்து மாணவியருக்கும், எட்டாம் வகுப்பு வரையில் படிக்கும் மாணவர்கட்கும் இரண்டு இணை சீருடைகள் இலவசமாக வழங்கப்படும்.

பழங்குடியினர் குழந்தைகளுக்குக் கல்வி அளிக்க வேண்டுமென்று வளர்ந்துவரும் எண்ணத்தை நிறைவேற்ற, பழங்குடியினர் மேம்பாட்டு ஒருங்கிணைந்த திட்டத்தின் கீழ் 1989-90-ல் புதிதாக 10 அரசு பழங்குடியினர் தங்கிப் பயிலும் தொடக்கப் பள்ளிகளைத் தொடங்க அரசு கருதுகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் சற்றொப்ப 500 பழங்குடியினர் குழந்தைகள் பயனடைவர். நடப்பாண்டில் ஆதிதிராவிடர்-பழங்குடியினர் குடியிருப்புகளில் மேலும் 50 பள்ளிகளைத் தொடங்கவும் பெரும்பாலும் இம்மக்கள் வசிக்கும் காலனிகளில் அல்லது அதற்கு அருகில் மேற்கண்ட பள்ளிகள் அமைக்கப்படவும் அரசு முடிவு செய்துள்ளது.



தற்போது 966 ஆதிதிராவிடர் நலப் பள்ளிகள் அரசுக் கட்டிடங்களிலும் எஞ்சிய 35 பள்ளிகள் வாடகைக் கட்டிடங்களிலும் அமைந்துள்ளன. படிப்படியாக, பள்ளிக் கட்டிடங்களைக் கட்டுவதற்கு அரசால் திட்டமிடப்பட்டுள்ளது. ஆதிதிராவிட நலப் பள்ளிக் கட்டிடங்களை மட்டுமே கட்டுவதற்கு ஒவ்வோராண்டும் சுமாராக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்படுகிறது. இதைத் தவிர கன்னியாகுமரி மாவட்டம், பேச்சிப்பாறை அரசு பழங்குடியினர் தங்கிப் பயிலும் மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கு ரூ. 10.35 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கல்விப் பயில்வதற்கான முறையே 774 மற்றும் 22 விடுதிகள் நடத்தப்படுகின்றன. இவைகளில் முறையே 50,500 ஆதிதிராவிட மாணவ, மாணவிகளும், 1000 பழங்குடி மாணவ மாணவிகளும் தங்கிக் கல்வி பயின்று வருகின்றனர்.

இந்த விடுதிகளைச் சுத்தமாக வைத்துக் கொள்ளவும் மாணவர்களுக்குச் சுகாதாரமான முறையில் உணவு தயார் செய்யவும் எரிவாயு அடுப்புகளை வழங்குவதற்குத் திட்டமிட்டுள்ளது. மாணவர்கட்குக் கல்வி கற்பிப்பது போலவே அவர்களின் பொது அறிவினை வளர்க்க வேண்டுமென்ற நோக்குடன் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. முதல் கட்டமாக சென்னை நகரிலுள்ள அனைத்து ஆதிதிராவிட நல மாணவ மாணவியர் விடுதிகளுக்கும், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கிட அரசு கருதியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

இந்த விடுதிகளில் 2,607 பணியாளர்கள் பல்வேறு நிலைகளில் பணிபுரிந்து வருகின்றனர். அவர்களின் பணிகளை வரன்முறைப்படுத்திடவும் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள குறைகளைப் போக்கவும் நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம். இந்த ஆண்டு 25 புதிய விடுதிகள் தொடங்கப்படும். இந்தப் பள்ளிகளுக்கும், விடுதிகளுக்கும் தேவையான அடிப்படை வசதிகளின் தேவைகளைப் பற்றி ஆய்வு செய்ய அரசு கோரியுள்ளது. அறிக்கைகள் கிடைக்கப் பெற்றவுடன் குறைபாடுகள் விரைவில் அகற்றப்படும். ஒப்பந்த முறையில் நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்களின் பணிகளை வரன்முறை செய்யவும் அரசு உத்தேசித்துள்ளது. இதனால் இந்தத் துறையில் பணியாற்றும் 181 ஆசிரியர்கள் பயனடைவார்கள்.

அரசு கல்வி உதவித் தொகை அளிப்பதற்கு இதுவரையில் இருந்துவந்த ஆண்டு வருமான வரம்பு ரூ.12,000-ஐ ரூ. 15,000 என இந்த அரசு உயர்த்தி உள்ளது. மேலும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மைய அரசின் கல்வி உதவித் தொகை பெற வருமான வரம்பை இதைப்போலவே ரூ. 15,000 என உயர்த்திட மைய அரசுடன் தொடர்பு கொண்டுள்ளார்கள்.

[டாக்டர் எ. இராமகிருஷ்ணன்] [1989 ஏப்ரல் 29

இந்தத் துறையினுடைய மொத்த ஒதுக்கீடான ரூபாய் 79 கோடியில், ரூபாய் 45 கோடி கல்விக்காக மட்டுமே ஒதுக்கியுள்ளோம்.

ஆதி திராவிட பழங்குடியினர் நலப் பள்ளிகள் ஊருக்குப் புறத்தே தொலைக் கோடியில் அமைந்துள்ளன. இவ்வகுப்பைச் சேர்ந்த ஏழைக் குழந்தைகள் ஏனைய வகுப்பைச் சேர்ந்த குழந்தைகளுக்குச் சமமாக படிப்பறிவினைப் பெற அவர்கள் கல்வியில் முன்னிலையில் இருக்க பள்ளி ஆசிரியர்களையே நம்ப வேண்டியுள்ளது. எனவே, போதுமான அளவுக்கு ஆசிரியர்களை நியமிக்கவேண்டியது பெரிதும் அவசியமாகிறது. நிதி நெருக்கடி இருந்த போதிலும் இந்த அரசு 1989-90-ல் ரூ. 23.00 இலட்சம் செலவில் குறைந்தது 150 இடைநிலை ஆசிரியர்கள் பதவிக்கு ஒப்புதலளிக்க கருதியுள்ளது.

ஆதிதிராவிடர்-பழங்குடியினரைச் சேர்ந்த கல்லூரி மாணவர்கட்கு ஆங்கிலம், தமிழ், கணிதம் முதலிய பாடங்களில் சிறப்புப் பயிற்சி அளிக்கவும், கல்லூரிக் கல்வி இயக்குநர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அனைத்துக் கல்லூரிகளிலும் தொழில் நுட்பக் கல்லூரிக் கல்வி இயக்குநர் கீழுள்ள கல்லூரிகளிலும் செயற்படுத்தப்படும் சென்னை, கோவை, திருச்சி, தஞ்சை, மதுரை ஆகிய இடங்களிலுள்ள ஆதிதிராவிடர் பழங்குடி வகுப்பைச் சார்ந்த நன்கு படிக்கும் மாணவ மாணவியர்கட்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டத்தைத் தொடர்ந்து நடத்தவும் அரசு முடிவெடுத்துள்ளது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு அத்தியாவசிய தேவைகளை மின் வசதி, பாதை வசதி, மயான வசதி மற்றும் குடிநீர் வசதி ஆகியவற்றினைச் செய்வதற்கான திட்டங்களை பல்வேறு துறைகளுடன் ஒருங்கிணைந்து நிறைவேற்றும்.

வேலைவாய்ப்புப் பெறுவதில் உதவிகரமாக இருக்கும் வகையில் பல்வேறு சிறப்புப் பயிற்சித் திட்டங்களை தொடங்க வகை செய்யப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு அண்ணா பல்கலைக் கழகத்தில் மட்டும் கம்ப்யூட்டர் பயிற்சி 50 மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இத்திட்டம் விரிவாக்கப்பட்டு அண்ணா பல்கலைக் கழகத்தில் மட்டுமின்றி கோவை, மதுரை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி ஆகிய நகரங்களிலும் இந்தப் பயிற்சி தொடங்கி, 400 மாணவர்கள் பயன்பெற வகை செய்யப்பட்டுள்ளன.

இந்த அரசு கொடுத்துள்ள வாக்குறுதிகளுள் ஒன்றான பட்டப் படிப்பு வரை பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்கட்கு இலவசமாக கல்வி வழங்கும் திட்டத்தை இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் அறிவித்ததோடு, ரூ. 1 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதனால் சுமார், 25,550 மாணவர்கள் பயன் பெறுவார்கள்.



1989 ஏப்ரல் 29] [டாக்டர் எ. இராமகிருஷ்ணன்]

**மெட்ரிக் படிப்பிற்கு முந்தைய படிப்பு :**

இத்திட்டத்தின்கீழ் கல்வித்துறை மூலமாக ஆதிதிராவிடர் பழங்குடியினர், கிறித்துவராக மதம் மாறிய ஆதிதிராவிட மாணவர்கள் உட்பட அனைத்து மாணவர்கட்கும் ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை பாடப் புத்தகங்களை இலவசமாக வழங்குகிறது. ஒன்பது,பத்தாம் வகுப்புகளில் பயிலும் ஆதிதிராவிடர் பழங்குடியினர், கிறித்துவராக மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவ, மாணவியருக்கு ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத் துறை பாடப் புத்தகங்களை இலசவசமாக வழங்குகிறது. இந்த மாணவர்கள் எஸ்.எஸ்.எல். சி.தேர்விற்காகச் செலுத்த வேண்டிய கட்டணங்களையும், சிறப்புக் கட்டணங்களையும் செலுத்துவதிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதைத்தவிர ஆறு முதல் பத்தாம் வகுப்பு வரை மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலும் ஆதிதிராவிட பழங்குடியினர், கிறித்துவராக மதம் மாறிய ஆதிதிராவிடர்களுக்குத் தங்கிப் பயில்பவர்கட்கான படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. ஆதி திராவிடர் நலப் பள்ளிகளில் தங்கிப் பயிலும் மாணவர்கட்கு இதற்காக படிப்புதவித் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ், ஆண்டொன்றிற்கு அளிக்கப்படும் உணவு மற்றும் உறைவிடச் செலவு ரூ. 250 லிருந்து ரூ. 350 வரை வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் 4 முதல் 10 ஆம் வகுப்பு வரையிலு ஆதிதிராவிடப் பழங்குடியினர், கிறித்துவராக மதம் மாறிய ஆதிராவிட மாணவர்களுக்கு இலவசமாக நோட்டுப் புத்தகங்கள் வழங்கும் புதிய திட்டம், 1988-89 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்டுள்ளது. இது 1989-90 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்காக ரூ. 1.75 கோடி செலவிடவும் ஆண்டுதோறும் சுமார்10 இலட்சம் மாணவர்கள் பயனடைய வழி செய்யப்பட்டுள்ளது.

**மெட்ரிக் படிப்பிற்கு பிந்தைய படிப்பு :**

பத்தாம் வகுப்பு முடிய பயிலும் அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் இலவசக் கல்வி வழங்கப்படுகிறது. பத்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட முதுநிலை பட்டப் படிப்பு முடிய பயிலும் அனைத்து ஆதிதிராவிடர், பழங்குடியினர் கிறித்துவராக மதம் மாறிய ஆதி திராவிட மாணவ மாணவியர்களுக்கு அவர்களது பெற்றோர்/பாதுகாவலரின் ஆண்டு வருமானத்தினை கணக்கில் கொள்ளாமல் படிப்புக் கட்டணச் சலுகை (டியூஷன் பீஸ் கன்செஷன்) வழங்கப்படுகிறது. மைய/மாநில அரசு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை பெற தகுதியுடைய ஆதிதிராவிடர் (இந்து) பழங்குடியினர், கிறித்துவராக மதம் மாறிய ஆதி திராவிட மாணவ மாணவிகள் கல்வி நிலையங்களுக்குச் செலுத்த வேண்டிய தனிக் கட்டணமும் (ஸ்பெஷல் பீஸ்) மற்றும் தேர்வுக் கட்டணமும் (எக்சாமினேஷன் பீஸ்) அவர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகையுடன் சம்மந்தப்பட்ட கல்வி நிலையங்களுக்குச் சேர்ந்து வழங்கப்படுகிறது. இந்த அரசு 1989

90-ஆம் ஆண்டு முதல் பட்டப்படிப்பு முடிய பயிலும் அனைத்து ஆதி திராவிடர், பழங்குடியினர், கிறித்துவ ஆதிதிராவிட மாணவ மாணவியர்களுக்கு இலவசக் கல்வித் திட்டத்தை அமுல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி மைய, மாநில அரசு மெட்ரிக் படிப்பிற்கு முந்தைய கல்வி உதவித் தொகை பெறத் தகுதியற்ற ஆதிதிராவிடர் பழங்குடியினர் கிறித்துவ ஆதிதிராவிட மாணவ மாணவியர்கள் செலுத்த வேண்டிய தனிக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் ஆகியவைகளைச் செலுத்துவதிலிருந்து விலக்களித்து கல்வி நிலையங்களுக்கு அரசால் ஈடுசெய்யப்படும். இத் திட்டத்தில் ஆண்டொன்றுக்கு சுமார் 27,550 ஆதி திராவிடர் பழங்குடியினர், கிறித்துவராக மதம்மாறிய ஆதிதிராவிட மாணவ, மாணவியர்கள் பயனடைவார்கள். இத்திட்டத்திற்கு 1989-90 ஆம் ஆண்டிற்கு ரூ. 1 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இம்மாணவர்கட்கு அனுமதிக்கப்படும் பராமரிப்புப் படியானது வீட்டில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு திங்கள் ஒன்றுக்கு ரூ. 50-லிருந்து ரூ. 120 ஆகவும் மாணவரில்லத்தில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு திங்கள் ஒன்றுக்கு ரூ. 75 லிருந்து ரூ. 200 வரையிலும் வழங்குகிறது. 1988-89 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு வகையைச் சேர்ந்த மாணவர்களுக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 25 அதிகமாக வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் ஒவ்வோராண்டும் சுமார் 70,200 மாணவர்கள் பயனடைவர்.

(பிற்பகல் 2-00)

மெட்ரிக் படிப்பிற்குப் பிந்தைய படிப்பிற்கு மாநில அரசு வழங்கும் படிப்புதவித் தொகை திட்டத்தின்கீழ் சுமார் 4,400 ஆதிதிராவிடர், பழங்குடியினர் கிறித்துவராயிருந்து மதம் மாறிய ஆதிதிராவிட மாணவர்கள் பயனடைகின்றனர்.

ஆதி திராவிடர், பழங்குடியினர், கிறித்துவராக மதம் மாறிய ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் கல்வியில் சிறந்த மாணவர்களுக்கு (சாந்தி நினைவுப் பரிசு) தகுதிக்கான பரிசு, தகுதிக்கென்று தனி மான்யம் வழங்குதல், போன்ற திட்டங்களின் மூலம் பரிசு வழங்கப்படுகிறது. இம்மாணவர்கள் பட்ட படிப்பு, முதுநிலைப் படிப்பு, தொழிற் கல்வி போன்ற படிப்புகளில் 60 விழுக்காடும் அதற்கு அதிகமாகவும் மதிப்பெண் பெற்ற மாணவர்கட்கும் முதன் முறையிலேயே தேர்ச்சி பெற்ற மாணவர்கட்கும் 1988-89ஆம் ஆண்டிலிருந்து ரொக்கப் பரிசு வழங்கும் புதிய திட்டத்தை அரசு அறிமுகப் படுத்தியுள்ளது. இந்த ரொக்கப் பரிசு ரூ. 1000-லிருந்து ரூ. 1500ஆக இருக்கும். இத்திட்டத்தின் கீழ், மொத்தம் 1000 மாணவர்கள் பயனடைவர்.

**கடன் படிப்புதவித் தொகை வழ்ங்கும் திட்டம் :**

மெட்ரிக் படிப்பிற்குப் பிந்தைய படிப்பிற்கு மாநில அரசு, மைய அரசு வழங்கும் படிப்புத் தொகை பெறத் தகுதி வாய்ந்த மாணவர்களும் அவர்களுக்கு வழங்கப்படும் படிப்புத் தொகைக்கு



மேல் செலவாகும் விடுதிக் கட்டணம் போன்ற செலவை முழுவதுமாக ஏற்க இயலாத மாணவர்களும், பட்டப்படிப்பு, முதுநிலை பட்டப்படிப்பு, தொழிற் கல்வி ஆகிய படிப்பைத் தொடரும் ஆதி திராவிடர், பழங்குடியினர், மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு நிதியுதவி அளிக்கும் பொருட்டு, கடன் படிப்புதவித் தொகை வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. 1988-89ஆம் கல்வி ஆண்டிலிருந்து தற்போதுள்ள கடன் படிப்புத் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது. அவரவர் பயிலும் படிப்பின் அடிப்படையில் ஆண்டொன்றுக்கு இது ரூ. 750-லிருந்து ரூ. 1,750 வரை வேறுபடும்.

**புத்தக வ்ங்கித் திட்டம் :**

இத்திட்டத்தின் கீழ், மத்திய அரசின் மெட்ரிக் படிப்பிற்குப் பிந்தைய படிப்புக்கான உதவித் தொகை பெறும் மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களில் ஒவ்வொரு 3 மாணவர்களுக்கு ஒரு தொகுதி புத்தகங்கள் என்ற வீதத்தில் ரூ. 5,000 பெறுமான புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் அலமாரி வாங்குவது குறித்து ஏற்படும் செலவிற்கு வழங்கப்படும் தொகையும் 1988-89 ஆம் ஆண்டிலிருந்து ரூ.1,000-லிருந்து ரூ. 1,500 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

**சட்டப் பட்டதாரிகளுக்கு நிதியுதவி :**

சட்டத் தொழில் கல்வியைப் பாடமாக எடுத்து கொண்டுள்ள ஆதிதிராவிடர், பழங்குடியினர், மதம் மாறிய ஆதிதிராவிட மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கு நிதியுதவியாக வட்டியில்லாக் கடனாக ரூ. 750-ம் உதவி தொகையாக ரூ. 750-ம் மொத்தம் ரூ. 1,500 வழங்கப்படுகிறது. சுகாதாரமற்ற தொழிலில் (துப்புரவுப் பணி, தோலுரித்தல், தோல் பதனிடுதல்) ஈடுபட்டுள்ள ஆதிதிராவிடர்களுக்கும் ஏனையோருக்கும் தங்களுடைய குழந்தைகளுக்குக் கல்வி புகட்டுவதில் போதிய கவனம் செலுத்த முடிவதில்லை. அவர்களுடைய குழந்தைகளைக் கல்வி கற்கச் செய்வதற்குத் தூண்டுதலாக மத்திய அரசு ஆண்டொன்றுக்கு சுமார் 600 மாணவர்களுக்குச் சிறப்புப் படிப்பு உதவித் தொகை வழங்குகிறது. மாணவரில்லங்களில் தங்கி ஆறாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை படிப்பவர்களுக்கு 10 திங்கள் கால அளவுக்கு திங்கள் ஒன்றுக்கு ரூ. 200 முதல் ரூ. 250 வரை படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் ஆதி திராவிடர் நல மாணவரில்லங்களில் 8 கிலோ மீட்டர் தொலைவிற்குள் இருப்பவர்களே சேர்த்துக் கொள்ளப்படுவர் என்ற விதி நீக்கப்பட்டுள்ளது.

மாணவரில்லங்கள் :

தமிழ்நாடு அரசு, ஆதிதிராவிடர், பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்தவர்களின் சமூகப் பொருளாதார நிலையையும் கல்வித் தரத்தை உயர்த்துவதற்காகவும் நாடு விடுதலை அடைந்த பின்னர் பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்தி வந்துள்ளது. அதிலும் கழக ஆட்சி, முன்பு ஆட்சி பொறுப்பிலிருந்த காலத்திலும் தற்பொழுது ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகும் இம்மக்களின் கல்வி சமூகப் பொருளாதார வளர்ச்சியில் தனிக் கவனம் செலுத்தி பாடுபட்டு வருகிறது.

ஆதிதிராவிடர், பழங்குடியினரைச் சேர்ந்த மாணவர்கள் இடைவிடாமல் தொடர்ந்து கல்வி பயில அல்லது படிப்பைப் பாதியில் நிறுத்திவிடாமலிருக்க இயலும் வகையில், உணவு, தங்கல் வசதிகளுடன் 774 மாணவரில்லங்களையும் பழங்குடியின ருக்காக 22 மாணவரில்லங்களையும் அரசு நடத்தி வருகிறது. இந்த மாணவரில்லங்களில் ஆதி திராவிடர் அல்லாத மாணவர் களுக்கும் பழங்குடியினர்/கிருத்துவர்களாக மதம் மாறிய ஆதி திராவிடர் மாணவர்களுக்கும் இட வசதி அளிக்கப்படுவதால் அவை சாதி மத வேற்றுமையின்றி இயங்க வாய்ப்பளிக்கிறது. ஒவ்வோராண்டும், 15 மாணவரில்லங்கள் புதிதாகக் தொடங்கப் படுகின்றன. இம்மாணவரில்லங்களில் சேர்த்துக் கொள்ளப் படும் மாணவர்கள் தேவை அதிகரித்து வருவதை ஈடு செய்ய ஒவ்வொன்றிலும் 50 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படும். வசதியுடன் புதிதாக 25மாணவரில்லங்களை 1989—90-ல் தொடங் கக் கருதப்பட்டுள்ளது. இதற்காக ரூ. 27.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகரில் பள்ளி மாணவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூ. 85-ம் கல்லூரி மாணவர்களுக்கு ரூ.140-ம் வெளியூரில் பயிலும் கல்லூரி மாணவர்களுக்கு ரூ.135-ம் உணவுக் கட்டணமாக வழங் கப்படுகிறது. இலவச உணவு, இருப்பிட வசதிகளுடன் சோப்பு, சிகைக்காய், எண்ணெய் போன்ற குளியல் சாதனப் பொருள் களும் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன. மாணவரில்லங்களில் தங்கிப் பயிலுகின்ற நான்கு முதல் பத்தாவது வகுப்பு மாணவ மாணவியர் அனைவருக்கும் இலவசமாக இரண்டு இணை(ஜோடி) சீருடைகள் வழங்கப்படுகின்றன. தற்போதுள்ள 61 மாணவ ரில்லங்களில் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையை 1918 ஆக உயர்த்தவும் கருதப்பட்டுள்ளது. இதற்காக 1989—90-ல் ரூ. 18.62 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதேபோன்று படிப் படியாக அந்த மாணவரில்லங்களுக்கு 'இன்டேன் சமையல் எரிவாயு' வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1989—90-ல் 4 கல்லூரி மாணவர் விடுதிகளுக்கும் எரிவாயுவழங்க உத்தேசிக் கப்பட்டுள்ளது. ஆதி திராவிடர், பழங்குடியினர் தங்கிப் பயிலும்



மாணவரில்லங்களிலும் மாணவர்களுக்கு வழங்குகின்ற பாய்களின் செலவுத் தொகையை ரூ. 5.50 லிருந்து ரூ. 15 ஆக உயர்த்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்முடைய அமைச்சர் அவர்களுடைய அறிக்கையைக் கேட்டு திரு. சொக்கர் அவர்கள் மிகவும் சொக்கிப் போய் இருக்கிறார்கள். (சிரிப்பு).

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : இத்தகைய அரசினர் மாணவரில்லங்களுடன் தொண்டு நிறுவனங்களும் ஆதி திராவிடர்/பழங்குடியினர் நலத்துறையின் நிதியுதவியுடன் மாணவ ரில்லங்களை நடத்தி வருகின்றன. இவ்வாறு மாணவர்களின் கல்வி வளர்ச்சியின் தேவைக்கு ஏற்ப உதவி செய்ய அரசு தொடர்ந்து முயன்று வரும்.

கழக அரசின் சிறப்புமிக்க செயல் திட்டங்களின் கண்ணோட்டம்.

1. சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின் கீழ் 1989—90-ஆம் ஆண் டில் பல்வேறு வளர்ச்சித்துறைகள் மூலம் ரூ. 191.22 கோடி செலவிடப்படும்.

2. பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் 1989—90 ஆம் ஆண்டில் பழங்குடியினரின் பயனுக்காக மொத்தம் ரூ. 1,616.84 இலட்சம் செலவிடப்படும்.

3. 1949 முதல் 1988—89 நிதியாண்டு வரை ஏறத்தாழ 40 ஆண்டு களில் வழங்கப்பட்ட பட்டாக்களின் எண்ணிக்கை 4.88 லட்சமாகும். செலவிடப்பட்டுள்ள தொகை ரூ. 19 கோடி யாகும்.

அரசு இந்த ஆண்டிற்கு மட்டும் 40 ஆயிரம் பட்டாக்கள் வழங்கவேண்டுமென்று 2.35 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

4. 1974ல் ஆதி திராவிடர்கள் வீடு கட்டும்வாரியம் அமைக்கப் பட்டு ஒரே ஆண்டில் 30,022 வீடுகள் கட்டித் தந்துள்ளது.

கடந்த 13 ஆண்டுகளில் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 34,650. ஆனால் 1989—90 ஆண்டில் அதாவது ஒரே ஆண்டில் மட்டும் சுமார் 45,000 வீடுகள் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

ரூபாய் 3 கோடியாக இருந்த தொகை ரூ. 49 கோடியாக உயர்ந்துள்ளது.

டாக்டர் எ. இராமகிருஷ்ணன்) [1989 ஏப்ரல் 29

5. மூடப்பட்டுள்ள குழாய்க்கிணறுகள் வாரியத்தில் முடிக்கப் படாத 100 ஆழ் துளைகுழாய் கிணறுகளை தாட்கோ கட்டித்தர முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. இதனால் பயன்பெறும் ஆதி திராவிட குறுநில-சிறுநில விவசாயிகள் சுமார் 2,000 பேர் ஆவர்.

6. செங்கை அண்ணா மாவட்டத்தில் சற்றேறக்குறைய 1,000 ஆதிதிராவிடர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும்வகையில் ஒரு நூற்பாலை அமைக்கும் திட்டம் ஒன்றும் ஆய்வில் உள்ளது.

7. 31,643 ஏழை ஆதி திராவிடர்களுக்கு ரூ. 23.26 கோடி மொத்த செலவில் வங்கிகளின் கடன் உதவியுடன், அரசு மானியம் 10.46 ரேகடி மற்றும் அரசின் விளிம்புத் தொகை 5.04 கோடி மூலம் 1989–90 நிதி ஆண்டில் பல திட்டங்களின் செயல் திட்ட அறிக்கைகள் தயார் செய்யப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

(பிற்பகல் 2-10).

ஆதிதிராவிடர்-பழங்குடியினர் நலத்துறைக்கு செய்யப் பட்ட நிதி ஒதுக்கத்தில் 50 விழுக்காட்டிற்கு மேல்கல்வித் திட்டங்களுக்கு செலவிடப்படுகிறது. மொத்த ஒதுக்கீடான 79 கோடி ரூபாயில் கல்விக்காக 45 கோடி ரூபாய் ஒதுக்கப் படுகிறது.

ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலப் பள்ளிகளில் 10-ம் வகுப்பு வரையில் படிக்கும் அனைத்து மாணவிகளுக்கும் எட்டாம் வகுப்பு வரையில் படிக்கும் அனைத்து மாணவர்களுக்கும் இரண்டு இணை (இரண்டு செட்டுகள்) சீருடைகள் இலவசமாக வழங்கப்படும்.

1989–90 ஆம் ஆண்டில் புதிதாக 10 அரசு பழங்குடியினர் தங்கிப்பயிலும் தொடக்கப் பள்ளிகளைத் தொடங்க அரசு திட்டமிட்டுள்ளது.

நடப்பாண்டில் ஆதிதிராவிடர்-பழங்குடியினர் குடியிருப்புகளில் மேலும் 50 பள்ளிகளைத் தொடங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஆதி திராவிட நலப்டள்ளி கட்டிடங்கள் மட்டும் கட்டுவதற்காக சற்றொப்ப ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

திரு. ரா. சொக்கர் : பாயின்ட் ஆப் ஆர்டர், தலைவரவர்களே, என் நினைவு சரி என்றால், நான் சொக்கிப் போகவில்லை-அமைச்சர் படித்ததையே திருப்பிப் படிக்கிறாரோ என்ற சந்தேகம் வருகிறது. (குறுக்கீடு) இல்லை என்றால் சரி. ஏனென்றால் செங்கை மாவட்டத்தில் நூற்பாலை பற்றி சொல்கிறார். மேலும் இரண்டு இணை சீருடை என்கிறார்......

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் முதலிலே பதிலுரை அளித்தார்கள். இப்போது இந்த அரசின் சார்பில் அறிவிப்புகளை அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள்



1989 ஏப்ரல் 89]

**மாண்புமிகு டாக்டர் எ. இராதாகிருஷ்ணன் :** இந்த விவாதத்தில் கலந்து கொண்ட பல உறுப்பினர்கள் தாழ்த்தப்பட்ட ஆதி திராவிடர்களுக்கும் பழங்குடியினருக்கும் ஏற்பட்டுள்ள சுடுகாட்டுப் பிரச்சினையை எடுத்து வைத்தார்கள். அது குறித்து ஒவ்வொரு கிராமத்திலும் ஆய்வு செய்து, சுடுகாட்டிற்கு இட வசதி வழங்கவும், அதற்கான பாதை வசதியை ஏற்படுத்தவும் உடனடியாக நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனைவரும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

மேலும் மாண்புமிகு உறுப்பினர் சித்திக் போன்றவர்கள் கிறித்தவ மதத்திற்கு மாறிய தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் சலுகைகளை நீட்டிக்க வேண்டுமென்று கேட்டார்கள். இது குறித்து இந்த அவையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே தெளிவான பதிலை அளித்திருக்கிறார்கள். மத்திய அரசு இது குறித்து பரிசீலனை செய்து, முடிவு தெரிவித்த பின்னால்தான், அந்த முடிவுக்குப் பின்னால் அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் திரு. இளம்வழுதி அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் நலக் குழு ஒன்றைத் தொடங்க வேண்டுமென்று சொன்னார்கள். அதை அரசு உடனே பரிசீலனை செய்யும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியசாமி அவர்கள் பிளஸ் 2, 10-ஆம் வகுப்பு, 8ஆம் வகுப்பு இறுதித் தேர்வில் முதல் மதிப்பெண் பெறும் பிற்பட்ட, மிகவும் பிற்பட்ட மாணவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள பரிசுத் தொகையினைப் போன்று தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கும் அளிக்கப்படுமா என்று கேட்டார்கள். மிகவும் பிற்பட்ட மாணவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதைப்போல அதே அளவு தொகை தனியாக ஆதி திராவிடர், ஆதி திராவிட கிறித்தவர், பழங்குடியினர் மாணவர்களுக்கும் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்றுக் கொண்டு, இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றி தரும்படி கேட்டுக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு 40,000 பேர்களுக்கு பட்டா வழங்கப்படும் என்று சொன்னார்கள். நான் கேட்டுக்கொள்வது, ஆதி திராவிட மக்கள் ஆங்காங்கே அரசு புறம்போக்கு நிலங்கள், வனப்புறம்போக்கு நிலங்கள், குளம் புறம்போக்கு நிலங்களில் 10 ஆண்டுகள், 20 ஆண்டுகள் சாகுபடி செய்து கொண்டிருக்கிறார்கள். அவ்வப்போது அவர்க ள அதிகாரிகள் வெளியேற்றுகிறார்கள்; தெண்டத் தீர்வை விதிக்கிறார்கள். அவர்களை வெளியேற்றுவதிலிருந்து பாதுகாக்க உடனடியாகப் பட்டா கொடுக்க அரசு உத்தரவிடுமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எ. இராதாகிருஷ்ணன் :** தலைவரவர்களே மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப்போல குளம் புறம்போக்கு, வனப் புறம்போக்கு நிலங்களை ஆர்ஜிதம் செய்து. பட்டாக்களை வழங்க முடியாத நிலைமை அரசுக்கு இருக்கிறது. ஆகவே, இந்த அரசு அதைச் செய்ய முடியவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜீவன்தாரா திட்டத்தின் கீழே ஆதி திராவிடர் மக்களுக்காக ஒதுக்கப்படுகின்ற தொகை முறையாகப் பயன்படுத்துவது இல்லை என்ற புகார்கள் இருக்கின்றன. குறிப்பாக ஜீவன்தாரா திட்டத்தின் கீழ் விவசாயத்திற்காக தாழ்த்தப்பட்டவர்கள் ஆதி திராவிடர் மக்களுக்கு இலவசமாக கிணறுகள் வெட்டித் தருகின்ற திட்டம் இருக்கின்றது. எங்கள் மாவட்டத்திற்கு, கோவை மாவட்டத்திற்கு சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்டத் தொகை முறையாகப் பயன்படுத்தப்படாமல் அந்தத் தொகை அப்படியே திருப்பி அனுப்பப்பட்டு விட்டது. நான் காரணம் கேட்டபோது ரூ. 25,000 கிணறு வெட்டுவதற்குப் போதாது என்று சொன்னால், அதிகமாக ஒதுக்க வேண்டும். முறையாக ஆதி திராவிட மக்களுக்கு வேளாண்மைக் கிணறுகள் வெட்டித் தர வேண்டும். எங்களுடைய மாவட்டத்திலே அதை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜீவன்தாரா திட்டத்தின்படி கிணறு வெட்ட 25 ஆயிரம் ரூபாய் சென்ற ஆண்டு, ஒதுக்கப்பட்டுள்ளது போதாது என்று சொன்னார்கள். சென்ற ஆண்டு நடைபெற்றது கவர்னர், ஆட்சி.

***திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது கடந்த 40 ஆண்டுக்காலமாக வீட்டுமனைப் பட்டா வழங்குவதிலே 50 சதவிகிதம்மக்களுக்குத்தான் ஆதி திராவிட மக்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது என்று சொன்னார்கள். அது 40 வருடங்களிலே 19 கோடி ரூபாய் ஒதுக்கி அந்த காரியத்தை செய்திருக்கிறார்கள். இந்த ஓராண்டு மட்டும் 2.35 கோடி ஒதுக்கியிருப்பதாகச் சொன்னார்கள். ரொம்ப நன்றி. ஆதி திராவிட மக்கள் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இருந்தாலும் கூட சொந்தமாக வீட்டுமனை இல்லாத ஆதி திராவிட மக்கள் அனைவருக்கும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக ஒரு 3 ஆண்டு காலத்திற்குள்ளாக ஒவ்வொருவருக்கும் மனை கொடுப்பதற்கு வேண்டிய துரிதமான ஏற்பாடுகளை அமைச்சர் அவர்கள் செய்வார்களா அல்லது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியிருப்பு மனைகள் சொந்தம் என்ற நிலையில்லாமல் லட்சக்கணக்கான மக்கள் தமிழ்நாட்டிலே வாழ்ந்தார்கள் என்பது மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்களுக்கு மிக நன்றாகத் தெரியும். அந்த குடியிருப்பு மனைகளை, அதிலே குடியிருக்கின்ற அவர்களுக்கே சொந்தம் ஆக்கிக்கொள்ளலாம் என்கின்ற சட்டத்தை முதன்முதலாக இந்தியாவிலேயே கொண்டு வந்தது தமிழ்நாட்டிலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான். (மேசையைத் தட்டும் ஒலி) அப்போது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மாபெரும் தலைவர்களில் ஒருவரான தியாகி மணலி கந்தசாமி அவர்கள், அந்த நிகழ்ச்சி, திருத்துறைப்பூண்டியில் நடைபெற்ற போது சொன்ன சொல் இன்னமும் என்னுடைய செவிகளிலே ரீங்காரம் செய்து கொண்டிருக்கிறது. எத்தனையோ பேர்கள் ரத்தம் சிந்தியும் கூட நடைபெறாத இந்தக் காரியம் இன்றைக்கு தி.மு.க. ஆட்சியிலே ஒரு துளி மையினால் நிறைவேறியிருக்கிறது. என்று குறிப்பிட்டார்கள். இன்று இரவு தூங்கச்செல்கின்ற ஏழையெளிய மக்கள், ஆதி திராவிட மக்கள் சொந்த வீட்டில் தூங்குகிறோம் என்ற உணர்வோடு தூங்கச் செல்வார்கள் என்று மணலி அவர்கள் அன்றைக்குக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அன்றைய தினம் மாத்திரம் வழங்கப்பட்ட குடியிருப்பு மனை சொந்தம் என்கின்ற அந்த பட்டாக்கள் 2 லட்சத்திற்கு மேற்பட்டவை. அதிலே ஒன்றரை லட்சத்திற்கு மேற்பட்டவர்கள் ஆதி திராவிடர் மக்கள் என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன். அந்த உணர்வோடு செயல்படக்கூடிய இந்த அரசு திரு. அழகர்சாமி அவர்களுடைய அந்த எண்ணத்தை நிச்சயமாக நிறைவேற்றும் என்ற உறுதியைச் தெரிவித்துக் கொள்கிறேன்.

***திரு. கோ. பூவராகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மக்களுக்கு வழங்குகின்ற விவசாயக் கருவிகள், விதை தானியங்கள், பூச்சி மருந்துகள் இன்னும் இதர சலுகைகள் எல்லாம் பாதி விலையிலே மானிய விலையிலே கொடுப்பது, ஏதோ, கொடுக்கிற மாதிரி கணக்கு வைத்து விட்டு, அது இருந்த இடத்திற்கே போய் விற்பனைக்கு வருவதை தவிர்ப்பதற்கு ஏதாவது இடமுண்டா? அதைத் தடுக்க முடியாதா?

அடுத்து ஒவ்வொரு பஞ்சாயத்து ஒன்றியத்திலே தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு, 100 வீடுகள் கட்டுவதற்கு, அதுபோன்று 7, 8 பஞ்சாயத்து ஒன்றியங்களை சேர்த்து பொறியாளர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் காலாகாலத்திலே வீடுகள் கட்டுவதற்கு உதவுவது இல்லை. அதனாலே அந்தந்த ஒன்றியங்களிலே இருக்கின்ற பொறியாளர்களுக்கு அந்த பொறுப்பை அளித்தால் விரைவிலே கட்டுவதற்கு உதவியாக இருக்கும். சிக்கனமாகவும் இருக்கும். அவர்கள் கேட்கின்ற தொகையை கொடுக்காமல் தவிர்ப்பதற்கு முறையாகவும் இருக்கும் என்றும் அதற்கு என்ன ஏற்பாடு செய்ய இருக்கின்றார்கள் என்றும் அறிய விரும்பு

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களுக்குத் தரப்படுகின்ற சலுகைகள் உரிய முறையிலே போய்ச் சேரவில்லை. பாதி வேறு பக்கம் போய்விடுகிறது என்று குறிப்பிட்டார்கள். திரு. பூவராகன் அவர்கள். இதை ஒரு பொதுவான கருத்தாகச் சொன்னால் அரசு பொதுவாகத்தான் நடவடிக்கை எடுக்க முடியும். இங்கே இப்படி நடைபெறுகிறது என்பதை உணருகின்ற நேரத்தில், அவர்கள் மாத்திரம் அல்ல,எல்லா கட்சியையும் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களும் அதை அரசுக்கு அல்லது தொடர்புடைய அதிகாரிகளுக்கு உடனடியாகத் தெரிவித்து பரிகாரம் காண முயற்சி செய்ய வேண்டும்.

(பிற்பகல் 2–20)

அப்போதும் பரிகாரம் காணவில்லையென்றால் குற்றம் சொல்ல வேண்டும். அத்தகைய தகவல்களை உடனுக்குடன் அறிவிக்க வேண்டுமென்று நான் இங்கே மெத்த பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். தொகுப்பு வீடுகள் பற்றி இங்கே சொன்னார்கள். அதற்கு அவர்கள் சொன்ன யோசனையும் பரிசீலிக்கப்படும்.

**திரு. எஸ். ஆர். முனிரத்தினம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு அண்ணா மாவட்டத்தில் ஆயிரம் அரிஜன மக்களுக்காக நூற்பாலை ஒன்றை கொண்டு வருவதாக இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.. அரிஜன மக்கள் வாழ்கின்ற நிலங்களைப் பொறுத்தவரையில், அவர்கள் தாழ்வான பகுதிகளில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அரசினுடைய நிலம் எந்த நிலமாக இருந்தாலும் அந்த நிலத்திற்கு துரிதமாக பட்டா வழங்கும் திட்டம் ஏதாவது அரசிடம் இருக்கிறதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலம் இருந்தால் அதை அரசு பரிசீலனை செய்து உடனடியாக பட்டா வழங்க ஏற்பாடு செய்யும் என்பதைத் தெவிரித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. எச். பாண்டியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீண்டாமையை ஒழிப்பதற்கு சட்டம் இருக்கிறது என்று சொன்னாலும் கூட அது ஒழியாமல் இருப்பதற்குக் காரணம் தொகுப்பு வீடுகள் அரசால் கட்டப்படும் போது ஊருக்கு வெளியே ஒட்டுமொத்தமாக கட்டாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.



அப்படி ஊருக்கு வெளியே ஒட்டுமொத்தமாக கட்டாமல் ஊருக்கு உள்ளே வாழ்கின்ற மற்ற ஜாதிகளோடு ஒவ்வொரு தெருவிலும் ஒரு வீடு அல்லது இரண்டு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா? அப்படிச் செய்தால் இன்னும் மேலாக ஒழிப்பதற்கு வாய்ப்பு ஏற்படும். அதுபோல நியாய விலைக் கடைகளைத் திறக்கும்போது அங்கே பணியாற்றுவதற்கு தாழ்த்தப்பட்ட நண்பர்களை நியமிக்க வேண்டும். அதுபோல தமிழ்நாட்டிலுள்ள முனிசிப்பாலிட்டி, பஞ்சாயத்துக்களில் கடைகளை ஏலம் விடும்போது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கடைகளை வழங்குகின்ற அடிப்படையில் பஞ்சாயத்துக்களிலும், முனிசிபாலிட்டிகளிலும் ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலயங்களில் பூசை செய்வதில் கூட தாழ்த்தப்பட்ட மக்கள் இடம் பெற வேண்டுமென்று சட்டம் கொண்டு வந்தது இந்த அரசு என்பது திரு. பாண்டியன் அவர்களுக்கு தெரியும். ஒதுக்குப் பகுதிகளிலே அவர்களுக்கு வீடு கட்டி தந்தால் தீண்டாமை அகலாது என்று அவர்கள் சொன்னார்கள். எனவே, நகரப் பகுதிக்குள், கிராமப் பகுதிக்குள் ஆதிதிராவிடர் அல்லாத மக்கள் வாழ்கின்ற இடங்களில் ஏன் வீடுகளைக் கட்டி தரக் கூடாது என்று இங்கே கேட்டார்கள். அதிலுள்ள சங்கடம் என்னவென்றால், கட்டித் தருகிறபோது அந்த மக்களே கூட உழைக்கின்ற பகுதிகள், பயிர் செய்கிற பகுதிகள், கழனிகளுக்கு அருகாமையிலே உள்ள பகுதிகள் இப்படிப்பட்ட இடங்களில்தான் வீடுகள் கட்டித் தர வேண்டுமென்று விரும்புகிறார்கள். ஆனால் இப்போது மைலாப்பூர், மாம்பலம் இப்படிப்பட்ட இடங்களில் கூட ஆதி திராவிட மக்கள் வீடு கட்டி வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்பது திரு. பாண்டியன் அவர்களுக்குத் தெரியாத விஷயம் அல்ல. ஒரு காலம் இருந்தது. இன்றைக்கு அந்தக் காலம் மாறி, 'மை லார்ட்' என்று இன்றைக்கு நீதிமன்றங்களில் ஆதிதிராவிடர் சமுதாயத்தைச் சார்ந்த நீதிபதிகளைப் பார்த்து அழைக்கின்ற காலம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதைக் கூட உருவாக்கியது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே தான் (கரவொலி) என்பதை அவர்கள் நிச்சயமாக அறிவார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவாதம் முடிவுற்றது: இப்போது வாக்கெடுப்பு.

**கோரிக்கை எண் 31.**

**பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன்**

திருவாளர்கள் எம். அண்ணாமலை மற்றும் வே. பெரியசாமி ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

'' மானியக் கோரிக்கை எண். 31—பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ரூ. 76,11,61,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும். ''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**8. பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் வாழ்த்து.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அனைவருக்கும் ஒரு வாழ்த்து.

பாட்டாலே புரட்சி செய்து சமுதா யத்தைத்
தலைகீழாய்ப் புரட்டிவைத்துத் தொண்டு செய்த
பாட்டாளி பாவேந்தர் பிறந்த நாளில்
பைந்தமிழர் மேன்மையுற வாழ்த்து கின்றேன்.
கேட்டால்தான் கிடைக்குமெனக் கிளர்ந்தெ ழுந்து
சிரமிழந்து குருதிசிந்தி வாழ்வி ழந்த
பாட்டாளி மக்களினம் நினைத்துப் போற்றிப்
பார்புகழும் மே நாளில் வாழ்த்து கின்றேன்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, செவ்வாய்க்கிழமை (2—5—1989) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-25 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

**9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.**

**அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்**

108. தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்தின் (1986-87-ஆம் ஆண்டிற்கான இரண்டாவது ஆண்டறிக்கை 1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம். 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது),

109. பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தின் 1986-87-ஆம் ஆண்டிற்கான ஐந்தாவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.)



110. திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் 1986-87 ஆம் ஆண்டிற்கான எட்டாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

111. தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் 1986-87 ஆம் ஆண்டிற்கான பன்னிரெண்டாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

112. தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் 1986-87 ஆம் ஆண்டிற்கான பன்னிரெண்டாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் [1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

**ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்**

* 140. கோரிக்கை எண். 31—ஆதி திராவிடர் பழங்குடியினர் நலத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1989-90 (தமிழ், ஆங்கிலம்).

* 141. ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலத்துறை குறித்த செயலாக்கத் திட்டம், 1989-90 (ஆங்கிலம்).

600 008.

## இணைப்பு

### ஆதி திராவிடர்— பழங்குடியினர் நலத்துறை
### தமிழ்நாடு

ஆதி திராவிடர்—பழங்குடியினர் நலன் என்ற தலைப்பின் கீழ் 1989–90 ஆம் ஆண்டிற்கு ரூ. 76.12 கோடி வழங்குவதற்கான 31 ஆம் எண் மானியக் கோரிக்கையை அவை முன் வைக்கிறேன்.

2. ஆதி திராவிடர்—பழங்குடியினரின் சமூகப் பொருளாதார நலனை மேம்படுத்த இந்த அரசு செயல்படுத்தி வருகிற பல்வேறு நடவடிக்கைகள், திட்டங்கள், திட்டப் பணிகளைக் கூர்ந்து கவனிப்பதற்கு இந்த வாய்ப்பினை நான் பயன்படுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

3. 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, இம்மாநிலத்திலுள்ள 484 இலட்சம் மொத்த மக்கள் தொகையில், 88.81 இலட்சம் ஆதி திராவிடர்களும், 5.20 இலட்சம் பழங்குடியினரும் உள்ளனர். இது முறையே 18.35 சதவீதமாகவும் 1.07 சதவீதமாகவும் கணக்கிடப்பட்டிருக்கிறது. 1981–லிருந்து இந்த எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்துள்ளது.

4. மாநில அரசுக் கொள்கையின் நெறிமுறை கோட்பாடுகளில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ள ஆதிதிராவிடர்—பழங்குடியினரின் கல்வி மேம்பாட்டிற்கும், பொருளாதார நலனுக்கும் நாட்டின் பொறுப்பை கருத்தில் கொண்டு, நமது தொடர் திட்டங்களின் பலனை அனுபவிப்பதற்கு இயலும் வகையில் இந்த வகுப்பைச் சேர்ந்தவர்களுக்காக நமது அரசு, பல மேம்பாட்டுத் திட்டங்களையும், நலத் திட்டங்களையும் உருவாக்கி பரிவுடன் செயற்படுத்தி வந்துள்ளது. தீண்டாமைக் கொடுமைகளை போக்குவதையும், அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதையும் நோக்கமாகக் கொண்டு ஒரு புறம், தீண்டாமை குறித்த உண்மையான அச்சத்தைப் போக்கவும், மற்றொரு புறம், வறுமைக் கோட்டிலிருந்து அவர்களை உயர்த்த பல்வேறு சமூக பொருளாதாரத் திட்டங்களைச் செயல்படுத்தவும் 1955 ஆம் ஆண்டு குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் விதிமுறைகளை சிறந்த முறையில் இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. தீண்டாமையால் பாதிக்கப்பட்ட பகுதிகளைக் கண்டறிந்து, இப்பகுதிகளில் குறைவாகவுள்ள அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அத்துடன் வகுப்பு, இனப் பாகுபாடற்ற சமூகத்தை ஏற்படுத்தவும், பொது நோக்குடன், ஏனைய சமூகத்தைச் சேர்ந்தவர்களுடன் இச் சமூகத்தைச் சேர்ந்தவர்களும் தாராளமாக ஒன்று கூடி பழகவும் இது தொடர்பான எண்ணற்ற திட்டங்களையும் அரசு செயல்படுத்துகின்றது.



5. அவர்களுடைய சமூக–பொருளாதார நிலையை உயர்த்துவதற்கும், ஒதுக்கப்பட்டு, புறக்கணிக்கப்பட்ட இவர்களுக்கு நீதி வழங்குவதற்கும் வெவ்வேறு சமூக–பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களின் மூலம் சமூகத்தில் சிறிதளவு சமத்துவத்தை அடைய அவர்களுக்கு உதவுவதற்கும் அரசு ஒருமித்த முயற்சிகளை மேற் கொண்டுள்ளது. செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்களுக்கு அதிக நிதி அளிப்பதை உறுதி செய்யும்பொருட்டு, ஆதி திராவிடருக்கான சிறப்பு உள்ளடக்கத் திட்டம், பழங்குடியினருக்கான பழங்குடியினர் துணைத் திட்டம் ஆகியவை தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சிறப்பு உள்ளடக்க திட்டத்தின் கீழ் இரண்டு இலக்குகளை எய்த அதாவது (1) வறுமைக் கோட்டைத் தாண்டிவர ஆதி திராவிடர் குடும்பங்களைச் சேர்ந்த 50 சதவீதத்தினருக்கு உதவுவதற்கும், (2) ஆதி திராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளையும், பிற வசதிகளையும் செய்து கொடுப்பதற்கும் பகிர்ந்து கொள்ளத் தக்க திட்டங்களின் கீழ் இலக்குகள் நிர்ணயிப்பதன் மூலம் ஆதி திராவிடர் நல மேம்பாட்டில் ஒவ்வொரு துறைக்கும் குறிப்பிட்ட பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. 9 இலட்சம் குடும்பங்களை இத்திட்டத்தின் கீழ் கொண்டு வர இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கையில், பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் மூலம் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், அரசு 8.90 இலட்சம் ஆதிதிராவிடர் குடும்பங்களை இத் திட்டத்தில்கீழ்க் கொண்டு வந்துள்ளது. அதே போல், ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் முதல் நான்கு ஆண்டுகளில் (அதாவது 1985–86, லிருந்து 1988–89 வரையில்), 7-வது ஐந்தாண்டுத் திட்ட இலக்கு மொத்தம் 10.00 இலட்சம் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கையில், 8.42 இலட்சம் ஆதி திராவிடர் இத்திட்டத்தின் கீழ்க் கொண்டு வரப்பட்டனர். 1989–90 ஆம் நிதி ஆண்டிற்கு 2.00 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்கள் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இணைப்பு II-ல் சுட்டிக் காட்டப்பட்டுள்ளவாறு சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின் கீழ் 1989–90 ஆம் ஆண்டில் பல்வேறு வளர்ச்சித்துறைகள் மூலம் ரூ. 191.22 கோடி செலவிடப்படும்.

6. பழங்குடியினர் மக்கள் தொகை ஒப்பீட்டு அடிப்படையில் பார்க்கையில் மிகச் சொற்பமே. ஆனால் அவர்களின் பண்பாடு, தனித்தன்மை, பழக்க வழக்கங்கள், நிலவியல் பின்னணி, கல்வி நிலை, அவர்களுடைய பிரச்சினைகள், தேவைகள் போன்றவை தனித்தன்மை வாய்ந்தவையாக இருப்பதோடு மட்டுமல்லாமல், சிக்கலானவையாகவும் இருக்கின்றன. இந்த அம்சங்களைக் கருத்திற்கொண்டு, பழங்குடியினர் அதிகமாக

[1989 ஏப்ரல் 29

உள்ள சேலம், தென் ஆற்காடு, திருச்சிராப்பள்ளி, தருமபுரி, வடாற்காடு ஆகிய மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட 9 இடங்களில் அவர்களின் அனைத்து வளர்ச்சிக்காகவும் பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பழங்குடியினர் துணைத்திட்ட அணுகுமுறையின் கீழ், வழக்கமான ஆண்டு வரவு–செலவுத் திட்டங்களில் பல அரசுத் துறைகள் பழங்குடியினர் பகுதி மக்கள் மேம்பாட்டிற்காக தனி ஒதுக்கீடுகளைச் செய்கின்றன. பழங்குடியினர் குடும்பங்கள் மீது அதிக கவனம் செலுத்துவதுடன், இத்திட்டம், பகுதியை அடிப்படையாகக் கொண்ட இன்றியமையாத திட்டமாகும். தமிழ் நாட்டைச் சேர்ந்த சுமார் 40.4 சதவீத பழங்குடியினர் அதாவது 2.10 இலட்சம் பேர் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த 9 பகுதிகளில் வாழ்கின்றனர். அங்கு பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பொருளாதார மேம்பாடடைவதையும், குடிநீர் வசதி செய்து கொடுத்தல், இணைப்புச் சாலைகள் அமைத்தல், பழங்குடியினர் குடியிருப்புகளில் மின் வசதியளித்தல், பள்ளிகளை ஏற்படுத்துதல்; சுகாதார வசதிகள் முதலியவற்றை செய்து கொடுத்தல், குடும்பத்தை அடிப்படையாகக் கொண்டு வருமானம் திரட்டும் திட்டங்களுக்கு வகை செய்தல் போன்ற பகுதி மேம்பாட்டை ஏற்படுத்துவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ், 1989–90 ஆம் ஆண்டில் பழங்குடியினரின் பயனுக்காக மொத்தம் ரூ. 1,616.84 இலட்சம் செலவிடப்படும். (விளக்கம் இணைப்பு iii-ல்) ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வெவ்வேறு பொருளாதார வளர்ச்சித் திட்டத்தின் மூலம் வறுமைக் கோட்டைக் கடப்பதற்கு 28,834 பழங்குடியினர் குடும்பங்களுக்கு உதவி அளிக்கப்பட்டது. இது நிர்ணயிக்கப்பட்ட 19,000 பழங்குடியினர் குடும்பங்கள் என்ற இலக்கினைத் தாண்டிவிட்டது. வறுமைக் கோட்டை கடக்க 69,869 பழங்குடியினர் குடும்பங்களுக்கு உதவுவதும் ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட இலக்காகும். ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் 46,979 குடும்பங்களையும், ஒருங்கிணைக்கப்படாத பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் 22,890 குடும்பங்களையும், இத்திட்டத்தின் கீழ் கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது.



1989 ஏப்ரல் 29]

கல்வி :

7. '' எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு''

கல்வியே வாழ்வின் ஆதாரம் என்பதனை வள்ளுவர் பெருந்தகை மேற்கண்ட குறள் மூலம் வலியுறுத்தியுள்ளார்.

8. நலிவுற்ற வகுப்பைச் சேர்ந்த குழந்தைகள் படித்த அறிவார்ந்த குடிமக்களாக வளர வேண்டியது மிக அவசியம் என்பதை நன்குணர்ந்த அரசு, ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலத்துறைக்கு செய்யப்பட்ட நிதி ஒதுக்கத்தில், 50 சதவீதத்திற்கு மேல் கல்வித் திட்டங்களுக்குச் செலவிடுகிறது. ஆதிதிராவிடர், பழங்குடியினர், கிறித்துவராக மதம் மாறிய ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த அனைத்து மாணவர்களுக்கும், பெற்றோர்களின் வருமானத்தைக் கணக்கில் கொள்ளாமல் மெட்ரிக் படிப்பிற்கு பிந்தைய படிப்பிற்கு படிப்புக் கட்டணச் சலுகை தமிழ்நாடு அரசு வழங்குகிறது. பெரும்பாலும் ஆதிதிராவிடர் வசிக்கும் காலனிகளில் அல்லது அதற்கு அருகாமையில் தொடக்கப் பள்ளிகள் அமைக்கப்பட்டுள்ளன. 878 ஆதிதிராவிடர் தொடக்கப் பள்ளிகளும், தங்கிப் பயிலும் பழங்குடியினர் தொடக்கப் பள்ளிகள் 170-ம் உள்ளன. தொடக்கப் பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை, இடைநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி ஆகியவற்றின் எண்ணிக்கையைப் போன்று சுமார் ஏழு மடங்காகும். பள்ளி செல்லும் வயதுடைய ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த 26.35 இலட்சம் குழந்தைகளில் சுமார், 88 சதவீதம் குழந்தைகள் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். பொருளாதார வகையில் பின்தங்கியுள்ள ஆதிதிராவிடர், பழங்குடியினரைக் கருத்தில் கொண்டு இரு படிப்புதவித் தொகைகள் முக்கியமாக மெட்ரிக் படிப்பிற்கு முந்தைய படிப்பிற்கும், மெட்ரிக் படிப்பிற்கு பிந்தைய படிப்பிற்கும் அளிக்கப்படுகின்றன.

மெட்ரிக் படிப்பிற்கு முந்தைய படிப்பு :

9. இத் திட்டத்தின்கீழ் கல்வித்துறை மூலமாக ஆதிதிராவிடர், பழங்குடியினர், கிறித்துவராக மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவர்கள் உட்பட அனைத்து மாணவர்கட்கும் தமிழக அரசு சத்துணவுத் திட்டத்தின் கீழ் ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை பாடப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. ஒன்பது, பத்தாம் வகுப்புகளில் பயிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர், கிறித்துவராக மதம் மாறிய ஆதி திராவிடர் மாணவ–மாணவியருக்கு, ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறை பாடப் புத்தகங்களை இலவசமாக வழங்குகிறது. இந்த மாணவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. தேர்விற்காகச் செலுத்தத்தக்க தேர்வுக் கட்டணங்களையும், சிறப்பு கட்டணங்களையும் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளனர். இதைத்

தவிர ஆறு முதல் பத்தாம் வகுப்பு வரை மாணவர் இல்லங்களில் தங்கிப்பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர், கிறித்துவராக மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு தங்கிப்பயிலுபவர்களுக்கான படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் தங்கிப்பயிலும் மாணவர்களுக்கு இதற்கான படிப்புதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் ஆண்டொன்றுக்கு அளிக்கப்படும் உணவு மற்றும் உறைவிடச் செலவுக்கு ரூ. 250 லிருந்து ரூ. 350 வரை வழங்கப்படுகிறது. மெட்ரிக் படிப்பிற்கு முந்தைய படிப்புக்கான படிப்புதவித் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ், அனைவரும் பயிலும் பள்ளிகளில் 4 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர், கிறித்துவராக மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு இலவசமாக நோட்டுப் புத்தகங்கள் வழங்கும் புதிய திட்டம் 1988–89 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்டது. இது 1989–90 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்காக ரூ. 1.73 கோடி செலவிடப்பட்டு ஆண்டு தோறும் சுமார் 10 இலட்சம் மாணவர்கள் பயனடைகின்றனர். மெட்ரிக் படிப்பிற்கு முந்தைய படிப்புக்கான படிப்புதவித் தொகை பெறுவதற்கு மாணவர்களின் பெற்றோர்களுக்கு (காப்பாளருக்கு ) ஆண்டொன்றுக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த வருமான உச்சவரம்பு ரூ. 6,000லிருந்து ரூ. 12,000மாக 1988-89 ஆம் ஆண்டிலிருந்து உயர்த்தப்பட்டுள்ளது. 1989-90 ஆம் கல்வி ஆண்டிலிருந்து இது ஆண்டொன்றுக்கு ரூ. 15,000மாக உயர்ததப்பட்டுள்ளது.

**மெட்ரிக் படிப்பிறகு பிந்தைய படிப்பு :**

10. பத்தாம் வகுப்புவரை மாணவர்கள் அனைவருக்கும் இலவசக் கல்வி வழங்கப்படுகிறது. 10ஆம் வகுப்புக்குப் பின்னர் முதுநிலை பட்டப்படிப்பு வரை, ஆதிதிராவிடர்/பழங்குடியினர், ஆதிதிராவிடர்களாயிருந்து கிறித்துவராக மதம் மாறிய மாணவர்களுக்கு அவர்களுடைய பெற்றோர்களின் வருமானம் எவ்வளவாயிருப்பினும் படிப்புக் கட்டணம் வசூலிக்கப்படுவதில்லை. எனினும், பொருந்தத்தக்க இனங்களில், அவர்கள் தேர்வுக் கட்டணத்தையும் சிறப்புக் கட்டணத்தையும் செலுத்த வேண்டும். கல்வி குறித்து அவர்களுக்கு ஏற்படும் இச்செலவினை கருத்தில் கொண்டு அவரவர் தகுதிக்கேற்ப அவர்களுக்கு மத்திய அரசு அல்லது மாநில அரசு படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. ரூ. 12,000-க்கும் குறைவாக ஆண்டு வருமானம் கொண்ட பெற்றோர்களையுடையவர்களும் தங்களுடைய பெற்றோருக்கு மூன்றாவது குழந்தையாக இல்லாதவர்களுமான ஆதிதிராவிடர்/பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் மத்திய அரசு படிப்புதவித் தொகை பெறத் தகுதியுடையவராவர். 1987-88ஆம் ஆண்டிற்கு முந்தைய ஆண்டுகளில், ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/கிறித்துவர்களாக மதம் மாறிய ஆதி



திராவிடர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள், மெட்ரிக் படிப்புக்கு மேற்பட்ட படிப்பிற்கு மாநில படிப்புத் தொகை பெற அவர்களுடைய பெற்றோர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள வருமான உச்சவரம்பு ஆண்டொன்றுக்கு ரூ. 6,000 ஆக இருந்தது. 1988-89 ஆம் ஆண்டில் இந்த வருமான உச்சவரம்பு ஆண்டொன்றுக்கு ரூ. 12,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 1989-90 ஆம் கல்வி ஆண்டிலிருந்து இந்த வருமான உச்சவரம்பு ரூ. 15,000மாக உயர்த்தப்பட்டுள்ளது. மத்திய அரசு படிப்புதவித் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மாணவர்களுக்கு அனுமதிக்கப்படும் பராமரிப்பு படியானது வீட்டில் தங்கிப்பயிலும் மாணவர்களுக்கு திங்கள் ஒன்றுக்கு ரூ. 50லிருந்து ரூ. 120-ம் மாணவர் இல்லத்தில் தங்கிப்பயிலும் மாணவர்களுக்கு திங்கள் ஒன்றுக்கு ரூ. 75லிருந்து ரூ. 200 வரையிலும் ஆகும். மெட்ரிக் படிப்புக்கு பிந்தைய படிப்புக்கு மாநில படிப்புதவித் திட்டத்தின்கீழ் உணவு மற்றும் உறைவிடச் செலவுக்கு மாநில அரசும் தொகை வழங்குகிறது. மாணவர் இல்லங்களில் தங்கிப்பயிலும் மாணவர்களுக்கு உணவு மற்றும் உறைவிடச் செலவுக்கு திங்கள் ஒன்றுக்கு ரூ. 50-லிருந்து ரூ. 75 வரை வழங்கப்படுகிறது. 1988–89 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு வகையைச் சேர்ந்த மாணவர்களுக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 25 அதிகமாக வழங்கப்படுகிறது. மெட்ரிக் படிப்பிற்கு பிந்தைய படிப்பிற்கு மத்திய அரசு வழங்கும் படிப்புதவித் தொகை திட்டத்தின் கீழ், ஒவ்வோராண்டும் சுமார் 70,200 ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மாணவர்கள் பயனடைகின்றனர். மெட்ரிக் படிப்பிற்கு பிந்தைய படிப்பிற்கு மாநில அரசு வழங்கும் படிப்புதவித் தொகை திட்டத்தின்கீழ் சுமார் 4,400 ஆதிதிராவிடர், பழங்குடியினர், கிறித்துவராகயிருந்து மதம் மாறிய ஆதிதிராவிட மாணவர்கள் பயனடைகின்றனர். ஆதிதிராவிடர்/பழங்குடியினர், கிறித்துவராக மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு நடப்பு ஆண்டிலிருந்து பட்டப் படிப்புவரை இலவசக் கல்வி அளிக்க இவ்வரசு முடிவு செய்துள்ளது. 1989-90 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கென ரூ. 100.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

11. ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/கிறித்துவராக மதம் மாறிய ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த கல்வியில் சிறந்த மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில், காந்தி நினைவு பரிசு. தகுதிக்கான பரிசு, தகுதிக்கென்று தனி மானியம் வழங்குதல் போன்ற திட்டங்களின் மூலம் பரிசு வழங்கப்படுகிறது. ஆதிதிராவிடர், பழங்குடியினர், கிறித்துவராக மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவர்களில் பட்டப் படிப்பு/முதுநிலைப் படிப்பு தொழில் கல்வி போன்ற படிப்புகளில் 60 சதவீதமும் அதற்கு அதிகமாகவும் மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கும் முதல் முறையிலேயே தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கும் 1988-89ஆம்

[1989 ஏப்ரல் 29

ஆண்டிலிருந்து ரொக்கப் பரிசு வழங்கும் புதிய திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த ரொக்கப்பரிசு ரூ. 1,000 லிருந்து ரூ. 1,500 ஆக இருக்கும். இத்திட்டத்தின்கீழ் மொத்தம் 1,000 மாணவர்கள் பயனடைவர்.

கடன் படிப்புதவித் தொகை வழங்கும் திட்டம் :

12. மெட்ரிக் படிப்பிற்கு பிந்தைய படிப்பிற்கு மாநில அரசு வழங்கும் படிப்புதவித் தொகை அல்லது மெட்ரிக் படிப்பிற்கு பிந்தைய படிப்பிற்கு மத்திய அரசு வழங்கும் படிப்புதவித் தொகை பெறத் தகுதி வாய்ந்த மாணவர்களும் அவர்களுக்கு வழங்கப்படும் படிப்புதவித் தொகைக்கு மேல் செலவாகும் விடுதிக் கட்டணம் போன்ற செலவை முழுவதுமாக ஏற்க இயலாத மாணவர்களும், பட்டப்படிப்பு/முதுநிலை பட்டப் படிப்பு, தொழில் கல்வி ஆகிய படிப்பைத் தொடரும் ஆதி திராவிடர், பழங்குடியினர், மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு நிதியுதவி அளிக்கும் பொருட்டு, கடன் படிப் புதவித் தொகை வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. 1988-89 ஆம் கல்வி ஆண்டிலிருந்து, தற்போதுள்ள கடன் படிப்புதவித் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது. அவரவர் பயிலும் படிப்பின் அடிப்படையில் ஆண்டொன்றுக்கு இது ரூ. 750-லிருந்து ரூ. 1,750 வரை வேறுபடும்.

புத்தக வங்கித் திட்டம் :

13. இத் திட்டத்தின்கீழ், மத்திய அரசின் மெட்ரிக் படிப்பிற்கு பிந்தைய படிப்புக்கான உதவித் தொகை பெறும் மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களில் ஒவ்வொரு 3 மாணவர்களுக்கு ஒரு தொகுதி புத்தகங்கள் என்ற வீதத்தில் ரூ. 5,000 பெறுமான புத்தகங்கள் வழங்கப்பட்டன. இத் திட்டத் தின்கீழ் அலமாரி வாங்குவது குறித்து ஏற்படும் செலவிற்கு வழங்கப்படும் தொகையும் 1988-89 ஆம் ஆண்டிலிருந்து ரூ. 1,000லிருந்து ரூ. 1,500 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

சட்டப் பட்டதாரிகளுக்கு நிதியுதவி :

14. சட்டத் தொழில் கல்வியை பாடமாக எடுத்துக் கொண்டுள்ள ஆதிதிராவிடர், பழங்குடியினர், மதம் மாறிய ஆதி திராவிடர் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில், அவர்களுக்கு நிதியுதவியாக (வட்டியில்லா கடனாக ரூ. 750-ம் உதவித் தொகையாக ரூ. 750-ம்) மொத்தம் ரூ. 1,500 வழங்கப்படு கிறது.



1989 ஏப்ரல் 29]

15. சுகாதாரமற்ற தொழிலில் (துப்புரவுப்பணி, தோலுரித்தல், தோல் பதனிடுதல்) ஈடுபட்டுள்ள ஆதிதிராவிடர்களும் ஏனையோரும் தங்களுடைய குழந்தைகளுக்குக் கல்வி புகட்டுவதில் போதிய கவனம் செலுத்த முடிவதில்லை. அவர்களுடைய குழந்தைகளைக் கல்வி கற்கச் செய்வதற்குத் தூண்டுதலாக மத்திய அரசு ஆண்டு ஒன்றுக்கு சுமார் 600 மாணவர்களுக்குச் சிறப்புப் படிப்புதவித் தொகை வழங்குகின்றது. ஆண்டு வருமான வரையறை ரூ. 12,000 ஆகும். மாணவரில்லங்களில் தங்கி ஆறாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்புவரை படிப்பவர்களுக்கு 10 திங்கள் கால அளவுக்கு திங்கள் ஒன்றுக்கு ரூ. 200 முதல் ரூ. 250 வரை படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. ஒரு குடும்பத்தில் இரண்டு குழந்தைகள் மட்டுமே, இந்த படிப் புதவித் தொகையைப் பெறத் தகுதியுடையவராவர். இத்திட்டத் தின்கீழ் ஆதிதிராவிடர் நல மாணவரில்லங்களில் 8 கிலோமீட்டர் தொலைவிற்குள் இருப்பவர்களே சேர்த்துக் கொள்ளப்படுவர் என்ற விதி, 1987-88ஆம் ஆண்டிலிருந்து நீக்கப்பட்டுள்ளது.

பள்ளிகள் :

16. ஆதிதிராவிடர்/பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த குழந்தைகளின் கல்வித்தரத்தை உயர்த்துவதற்கு, அரசு, 1,204 தொடக்க, நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளை நடத்தி வருகிறது. இப்பள்ளிகள் அனைத்திலும் 2,28,571 மாணவர்களும் மாணவிகளும் கல்வி கற்கின்றனர். இதுதவிர 13,450 குழந்தைகள் அரசு பழங்குடியினர் தங்கிப் பயிலும் பள்ளிகளில் படித்து வருகின்றனர். குழந்தைகளிடையே சாதிமத வேற்றுமையின்றி ஒற்றுமையை ஏற்படுத்தும் நோக்குடன் இப் பள்ளிகளில் ஏனைய வகுப்பைச் சேர்ந்த குழந்தைகளும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

17. ஆதிதிராவிடர்-பழங்குடியினர் நலப்பள்ளிகளில் பத்தாம் வகுப்பு வரையில் படிக்கும் அனைத்து மாணவியருக்கும், எட்டாம் வகுப்பு வரையில் படிக்கும் மாணவர்களுக்கும் இரண்டு ஜோடி சீருடைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

18. பழங்குடியினர் குழந்தைகளுக்குக் கல்வி அளிக்க வேண்டுமென்று வளர்ந்து வரும் எண்ணத்தை நிறைவேற்ற, பழங்குடியினர் மேம்பாட்டு ஒருங்கிணைந்த திட்டத்தின்கீழ் 1989-90-ல் புதிதாக 10 அரசு பழங்குடியினர் தங்கிப் பயிலும் தொடக்கப் பள்ளிகளைத் தொடங்க அரசு கருதுகிறது. இதனால் கிட்டத்தட்ட 500 பழங்குடியினர் குழந்தைகள் பயனடைவர். நடப்பாண்டில் ஆதிதிராவிடர்/பழங்குடியினர் குடியிருப்புகளில் மேலும் 50 பள்ளிகளைத் தொடங்க அரசு முடிவெடுத்துள்ளது.

19. தற்போது 966 ஆதிதிராவிடர் நலப்பள்ளிகள் அரசுக் கட்டிடங்களிலும் எஞ்சிய 35 பள்ளிகள் வாடகைக் கட்டிடங் களிலும் அமைந்துள்ளன. படிப்படியாக, பள்ளிக் கட்டிடங்

களைக் கட்டுவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. ஆதிதிராவிடர் நலப்பள்ளிக் கட்டிடங்களை மட்டுமே கட்டுவதற்கு ஒவ்வோராண்டும் கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்படுகிறது. இதைத் தவிர கன்னியாகுமரி மாவட்டம், பேச்சிப்பாறை அரசு பழங்குடியினர் தங்கிப் பயிலும் மேல்நிலைப்பள்ளிக்கு கூடுதல் பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கு ரூ. 10.35 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

20. ஆதிதிராவிடர்/பழங்குடியினர் நலப் பள்ளிகள் ஊருக்குப் புறத்தே தொலை கோடியில் அமைந்துள்ளன. ஆதிதிராவிடர்/பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த ஏழைக் குழந்தைகள், ஏனைய வகுப்பைச் சேர்ந்த குழந்தைகளுக்குச் சமமாக படிப்பறிவைப் பெற, அவர்கள் கல்வியில் முன்னணியில் இருக்க அவர்கள் பள்ளி ஆசிரியர்களையே நம்பவேண்டியுள்ளது. எனவே, போதுமான அளவுக்கு ஆசிரியர்களை நியமிக்க வேண்டியது பெரிதும் அவசியமாகிறது. நிதி நெருக்கடி இருந்த போதிலும், அரசு 1989-90-ல் ரூ. 23.00 இலட்சம் செலவில், 150 இடைநிலை ஆசிரியர்கள் பணியிடங்களுக்கு ஒப்புதல் அளிக்கக் கருதியுள்ளது.

21. ஆதிதிராவிடர், பழங்குடியினரைச் சேர்ந்த கல்லூரி மாணவர்களுக்கு ஆங்கிலம், தமிழ், கணிதம் முதலிய பாடங்களில் சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டத்தை அரசு செயல்படுத்துகிறது. இத்திட்டம், கல்லூரிக் கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள அனைத்துக் கல்லூரிகளிலும், தொழில் நுட்பக் கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள பொறியியல் கல்லூரிகளிலும், செயற்படுத்தப்படுகிறது. சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை ஆகிய இடங்களிலுள்ள அரசு கல்லூரிகளில் ஆதிதிராவிடர். பழங்குடியினரைச் சேர்ந்த நன்கு படிக்கும் மாணவ, மாணவியருக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டத்தை அரசு செயல்படுத்துகிறது.

**மாணவரில்லங்கள் :**

22. தமிழ்நாடு அரசு ஆதி திராவிடர், பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்தவர்களின் சமூகப்பொருளாதார நிலையையும், கல்வித்தரத்தையும் உயர்த்துவதற்காக, நாடு விடுதலை அடைந்த பின்னர் பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களைச் செயற்படுத்தி வந்துள்ளது. சமூகத்தில் பின்தங்கிய வகுப்பினருக்கு மெட்ரிக்குக்கு முந்தைய, மெட்ரிக்குக்குப் பிந்தைய, கல்வியை இலவசமாக மாநில அரசு பயிற்றுவித்த போதிலும் ஆதிதிராவிடர் பழங்குடியைச் சேர்ந்த மாணவர்கள் இடைவிடாமல் தொடர்ந்து கல்வி பயில அல்லது படிப்பைப் பாதியில் நிறுத்தி விடாமலிருக்க இயலும் வகையில் உணவு, உறைவிட வசதிகளுடன் ஆதிதிராடர்களுக்காக 774 மாணவரில்லங்களையும், பழங்குடியினருக்காக 22 மாணவரில்லங்களையும் அரசு நடத்தி வருகின்றது. இந்த மாணவரில்லங்களில் ஆதிதிராவிடர் அல்லாத மாணவர்களுக்கும் பழங்குடியினர்/கிறித்துவர்களாக மாறிய





ஆதிதிராவிடர் மாணவர்களுக்கும் இடவசதி அளிக்கப்படுவதால் அவை சாதி–மத வேற்றுமையின்றி நடத்தப்படுபவையாகும். ஒவ்வோராண்டும் 15 மாணவரில்லங்கள் புதிதாக தொடங்கப் படுகின்றன. ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறை நடத்தும் மாணவரில்லங்களில் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படும் தேவை அதிகரித்து வருவதை ஈடு செய்ய, ஒவ்வொன்றிலும் 50 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படும் வசதியுடன் புதிதாக 25 மாணவரில்லங்களை 1989–90-ல் தொடங்கக் கருதப்பட்டுள்ளது. இதற்காக ரூ. 27.09 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 774 மாணவரில்லங்களில் 238 ஆதிதிராடர் மாணவியருக்கும், 536 ஆதிதிராவிடர் மாணவர்களுக்கும் செயல்படுகின்றன. பள்ளி மாணவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூ. 85-ம் சென்னை மாநகரில் பயிலும் கல்லூரி மாணவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூ. 140-ம் வெளியூரில் பயிலும் கல்லூரி மாணவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூ. 135-ம் உணவுக் கட்டணமாக வழங்கப்படுகின்றது. இலவச உணவு வசதி, இருப்பிட வசதிகள் போன்ற வசதிகளும் வழங்கப்படுகின்றன; அவற்றுடன் சோப்பு, சீயக்காய், எண்ணெய் போன்ற குளியல் சாதனப் பொருட்களும் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன. மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலுகின்ற நான்கு முதல் பத்தாவது வகுப்பு மாணவ மாணவியர் அனைவருக்கும் இலவசமாக இரண்டு ஜோடி சீருடைகள் வழங்கப் படுகின்றன. ஒவ்வோராண்டும், இருக்கிற இடவசதிக்குட்பட்டு, மாணவர் இல்லங்களில் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை உயர்த்தப்படுகின்றன. தற்போதுள்ள இல்லங்களில் 61 மாணவர் இல்லங்களின் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை 1,918 ஆக உயர்த்தவும் கருதப்பட்டுள்ளது. இதற்காக 1989–90-ல் ரூ. 18.62 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதே போன்று, படிப்படியாக அந்த மாணவர் இல்லங்களுக்கு 'இன்டேன் சமையல் எரி வாயு' வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1987–88-ல் 16 மாணவர் இல்லங்களுக்கு 'இன்டேன் எரி வாயு' அனுமதிக்கப்பட்டது. 1989–90-ல் 44 கல்லூரி தொழிற் பயிற்சி விடுதிகளுக்கும் 'இன்டேன் எரி வாயு' வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் பழங்குடியினர் மாணவர் இல்லங்களிலும், பழங்குடியினர் மாணவர் தங்கிப்பயிலும் அரசினர் பள்ளிகளிலும், மாணவர்களுக்கு வழங்குகிற பாய்களின் செலவுத் தொகையை ரூ. 5.50லிருந்து ரூ. 15 ஆக உயர்த்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் பழங்குடியின மாணவர்களின் நன்மைக்காக இத்தகைய அரசினர் மாணவர் இல்லங்களுடன், தொண்டு நிறுவனங்களும், இந்தத் துறையின் நிதியுதவியுடன் மாணவர் இல்லங்களை நடத்தி வருகின்றன. இம்மாநிலத்தில் அத்தகைய மாணவர் இல்லங்கள் 44 உள்ளன.

**மாணவர் இல்லங்களுக்காக கட்டிடங்கள் கட்டுதல் :**

23. அனைத்து அடிப்படை வசதிகளுடன் ஆதிதிராவிட இன மாணவர்களின் நலனுக்காக நடத்தப்படுகின்ற அரசினர் மாணவர் இல்லங்களைக் கண்டறியவும், அவர்கள் கல்வியைத் தொடர நல்ல சூழ்நிலை ஒன்றை உருவாக்கவும், மத்திய அரசு

[1989 ஏப்ரல் 29

பொறுப்பேற்கும் திட்டத்தின்கீழ் ஆதிதிராவிட இன மாணவியருக்கும், மாநிலத் திட்டத்தின்கீழ் ஆதிதிராவிட இன மாணவருக்கும் படிப்படியாக அனைத்து வசதிகளுடன் நிலையான கட்டிடங்கள் கட்டும் திட்டம் ஒன்றை அரசு மேற்கொண்டுள்ளது. இப்பணி, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள 536 மாணவர் இல்லங்கள் மற்றும் 238 மாணவியர் இல்லங்களில், 203 மாணவர் இல்லங்கள், 144 மாணவியர் இல்லங்கள் அரசுக் கட்டிடங்களில் அமைந்துள்ளன; எஞ்சிய 333 மாணவர் இல்லங்கள், 124 மாணவியர் இல்லங்கள் வாடகைக் கட்டிடங்களில் அமைந்துள்ளன. 1985–86, 1986–87 ஆம் ஆண்டுகளில் எட்டு மாணவரில்லங்களும், 21 மாணவியர் இல்லங்களும் கட்ட அனுமதி வழங்கப்பட்டது. 1987–88ஆம் ஆண்டில் இரண்டு மாணவரில்லங்களும், 11 மாணவியரில்லங்களும் கட்ட அனுமதி வழங்கப்பட்டது. 1988–89ஆம் ஆண்டில் நான்கு மாணவரில்லங்களும், 12 மாணவியரில்லங்களும் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

24. 1989–90-ல் மாணரில்வலங்கள், பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கு, மேற்குமலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ. 21.00 இலட்சமும், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ. 30.00 இலட்சமும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பொருளாதார மேம்பாடு :

25. வேளாண் தொழிலாளர்களில் பெரும்பாலானோர், ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்கள். அவர்கள், வேளாண் தொழிலாளர்களாக அல்லது சொற்ப நில உரிமையாளர்களாக, குத்தகைதாரர்களாக உள்ளனர். அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு, அவர்களின் வருமான வாயில்களைப் பெருக்குவது ஒன்றே வழியாகும். வருமானத்தைப் பெருக்குவதற்கு உயரளவு வேளாண் விளைச்சலைப் பெறவேண்டும்.

26. ஆதிதிராவிடர்/பழங்குடியினர், மற்றும் கிறித்துவ மதத்திற்கு மாறிய ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த வேளாண் தொழிலாளர்களுக்கு உழவு மாடுகள் வாங்குவதற்கு அரசு மானியம் அளிக்கிறது. இத்திட்டத்தின்கீழ், உழவு மாடுகளின் விலையில் 1/3 பங்கு, (ஒரு ஜோடி மாடு வாங்குவதற்கு ரூ. 800 என்ற உயரளவிற்கு உட்பட்டு) மானியம் வழங்கப்படுகிறது. எஞ்சிய 2/3 பங்கு வங்கிகள் மூலம் கடனாகப் பெற வேண்டும்.

சிறுவணிக உதவித் தொகை—கடன் நிட்டம்.

ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/கிறித்துவ மதத்திற்கு மாறிய ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த சிறு வணிகங்களில் குறிப்பிட்ட ஒரு வணிகத்தில் திறமையும், அனுபவமும் பெற்றவர்களுக்கு வட்டியில்லாக் கடன்வழங்கப்பட்டது. இது 1968–69லிருந்து ஆதிதிராவிடர்/பழங்குடியினர் நல இயக்குநரால் செயல்படுத்தப்பட்டது. 1984–85ஆம் ஆண்டில், அரசு இத்திட்டத்தை சிறு வணிக உதவித் தொகை கடன் திட்டமென மாற்றி இத்திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பை, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்தின் மேலாண்மை இயக்குநரிடம் ஒப்படைத்து ஆணைகள் பிறப்பித்தது. இத்திட்டத்தின் மூலம், பயனடைவோருக்கு, 25 சதவீதம் மான்யமும், 25 சதவீத தொடக்க நிதியுதவியும், 50 சதவீதம் வணிக வங்கிகளிடமிருந்து கடனாகவும் வழங்கப்படுகிறது.



1989 ஏப்ரல் 29]

கருவிகளும், சாதனங்களும் :

28. தொழில்நுட்பப் பயிற்சி பெற்ற ஆதிதிராவிடர் பழங்குடியினர் கிறித்துவ மதத்திற்கு மாறிய ஆதிதிராவிடர் ஆகியோருக்கு கருவிகளும் சாதனங்களும் வழங்கும் திட்டத்தை அரசு செயல்படுத்துகிறது. இத்திட்டத்தின்கீழ், தச்சு தொழிலுக்குத் தேவைப்படும் கருவிகள், கருமார் தொழிலுக்குத் தேவைப்படும் கருவிகள், துணி, தோல் முதலியவற்றைத் தைப்பதற்கு தையல் இயந்திரங்கள், முதலியன ஒவ்வோராண்டும் அவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன.

29. ஆதிதிராவிடர், கிறித்துவ மதத்திற்கு மாறிய ஆதிதிராவிடர் ஆகியோரின் பொருளாதார மேம்பாட்டிற்காக, பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள், அமைக்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ், கறவை மாடுகள் வாங்குவதற்கு, அரசு நிதியிலிருந்து 33 1/3 சதவீதம் மானியமாகவும், எஞ்சியதொகை நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து கடனாகவும் வழங்கப்படுகிறது. ஒவ்வோர் உறுப்பினரும், இரண்டு கறவை மாடுகள் வாங்குவதற்கு இந்த உதவித் தொகையை பெறத் தகுதியுடையவராவர். 1989–90 ஆம் ஆண்டில், இதற்காக ரூ. 53.36 இலட்சம் செலவிடப்படும். இதில் பணியாளர்கள் வகையிலான செலவு ரூ. 1.86 இலட்சமும் அடங்கும்.

பயிற்சியும் வேலைவாய்ப்பும் :

30. பயிற்சி, வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், அரசு பின் வரும் வாய்ப்புகளுக்கு வகை செய்கிறது.

(1) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழகத்தால் நடத்தப்படும் தொகுதி 4 தேர்வு எழுதுவதற்கு ஆதிதிராவிடர்களுக்கு இரண்டு மாதகால சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

(2) 1989ஆம் ஆண்டில், அரசு திட்டம் ஒன்றை வகுத்து நிறைவேற்றி வருகிறது. இத்திட்டத்தின்கீழ், சிறப்பு மத்திய உதவியிலிருந்து நிதியுதவி பெற்று மொத்தம் ரூ. 8.61 இலட்சம் செலவில், பல்வேறு அரசு தனியார் கல்லூரிகளில், ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த 350 பட்டதாரிகளுக்கு ஆறுமாத கால அளவிற்கு கணிப்பொறி (Computer) கல்வி தொடர்பான பயிற்சி அளிக்கப்படுகிறது.

(3) 1989ஆம் ஆண்டு பணியாளர் தேர்வாணைக்குழு மத்திய (அரசுப் பணிகள்) தேர்வுகள் எழுதக்கூடிய ஆதி திராவிட மாணவர்களுக்கு நியமனத்திற்கு முந்தைய பயிற்சி வழங்கும் திட்டத்தையும், அரசு நடத்துகிறது. இத்திட்டம், மொத்தம் ரூ. 7,26,400 செலவில் சிறப்பு மத்திய உதவியிலிருந்து முழு மானியம் பெற்று, 2,300 ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் பயனடைவதற்காகச் செயல்படுத்தப்படுகிறது.

(4) உயர்கல்வி பெற்ற ஆதிதிராவிடர், பழங்குடியினர் மாணவர்களுக்கு, இந்திய ஆட்சிப்பணி, இந்திய காவல் பணி தேர்வுகள் மற்ற, இதைப்போன்ற அனைத்திந்திய பணிகள் தேர்வுகள் எழுதுவதற்கு, தேர்வுக்கு முன் பயிற்சி அளிக்கும் நிலையத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

31. ஆதிதிராவிடர்/பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த 20 புதிய சட்ட பட்டதாரிகளுக்கு நீதி நிருவாகத்தில் பயிற்சி அளிப்பதற்காக அரசு திட்டம் ஒன்றைத் தொடங்கியுள்ளது. ஒவ்வோராண்டும், ஆதிதிராவிட/பழங்குடி வகுப்பைச் சேர்ந்த 20 சட்ட பட்டதாரிகள் தெரிந்தெடுக்கப்பட்டு, இந்திய அரசியலமைப்பு, கம்பெனி சட்டம் முதலியவற்றில் வல்லுநர்களாக விளங்குகின்ற மூத்த வழக்கறிஞர்கள் ஒவ்வொருவருக்கும் இரு பட்டதாரிகள் வீதம் நான்காண்டு காலத்திற்கு பயிற்சி பெறுவதற்காக அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

**வீட்டுமனைகளைக் கையகப்படுத்தி ஒதுக்கீடு செய்தல் :**

32. பெரும்பான்மையான ஆதிதிராவிடர் குடும்பங்கள் சொந்தமான வீடுகளோ வீட்டுமனைகளோ இல்லாமல் மிகவும் வருந்தத்தக்க நிலையில் வாழ்கின்றனர். அவர்களுக்கு நல்ல உரிய இடவசதி அளிக்கும் நோக்கத்துடன், அவர்கள் சொந்தமாக வீடுகட்டிக்கொள்ள இயலும் வகையில், அவர்களுக்கு வீட்டுமனைகள் வழங்க அரசு திட்டம் ஒன்றை வகுத்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் புறம்போக்கு நிலங்கள் எங்கெங்கு கிடைக்கின்றதோ அவற்றை ஆதிதிராவிடர் பழங்குடியினர்க்கு மாவட்ட ஆட்சித் தலைவர் ஒப்படை செய்கிறார். இவை தவிர, குடியிருப்புச் சட்டத்தின் கீழும் தனியார் நிலங்களைக் கையகப்படுத்தியும் பல குடும்பங்களுக்கு வீட்டு மனைகள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு குடும்பத்திற்கும் உயரளவு 3 சென்ட் பரப்புள்ள வீட்டுமனை வழங்கப்படுகிறது. இதுவரை 4,87,942





வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இதுவரை பல்வேறு திட்டங்களின் கீழ் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு வீட்டு மனைகள் வழங்கப்பட்டுள்ளன. ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைகள் வழங்குவதற்கான நிதி ஒதுக்கீடு (1988-89-ல்) ரூ. 1.15 கோடியிலிருந்து 1989-90-ல் ரூ. 2.35 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இதில் உயர்த்தப்பட்ட இழப்பீட்டுத்தொகை ரூ. 100.00 இலட்சம், வழக்குரைஞர் கட்டண வகையில் ரூ. 1.26 இலட்சம், விளம்பரக் கட்டணங்கள் ரூ. 23.45 இலட்சம் ஆகியவையும் அடங்கும். இது போன்று கடந்த ஆண்டில் 20,000 வீட்டுமனை பட்டா வழங்கப்பட்டிருக்க இவ்வாண்டில் 40,000 வீட்டுமனை பட்டா வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**வீட்டுவசதித் திட்டங்கள் :**

33. வீடற்ற ஆதிதிராவிடர்களின் துயரத்தைப் போக்குவதற்காக அவர்களுக்குப் போதுமான வீட்டுவசதி அளிப்பதை தனது அடிப்படை பொறுப்பாக அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. இச்சீரிய நோக்கத்தை கருத்தில் கொண்டு இந்நோக்கத்திற்காக அரசு ''தாட்கோ'' என்னும் தனி அமைப்பை ஏற்படுத்தியுள்ளது.

34. தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி வளர்ச்சிக் கழகம் 1974-ம் ஆண்டிலிருந்து செயற்படத் தொடங்கியது. இக்கழகத்தின் முக்கிய நோக்கங்களாவன :

(1) ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுத்தல்.

(2) ஆதிதிராவிடர்களுக்காக மாணவர் இல்லங்கள், பள்ளிக்கூடங்கள், சமுதாயக் கூடங்கள், பால்வாடிகள் முதலியவற்றைக் கட்டுதல்.

(3) ஆதிதிராவிடர்களின் பொருளாதார நிலை உயருவதற்காக சமூகப் பொருளாதார வளர்ச்சி திட்டங்களை செயற்படுத்துதல்.

(4) ஆதிதிராவிடர்களின் முன்னேற்றத்திற்காக அவ்வப்போது கழகத்திடம் ஒப்படைக்கப்படும் திட்டவட்டமான பணிகளை மேற்கொள்ளுதல். முக்கியமாக தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி வளர்ச்சிக் கழகம் 1979-80 வரை ஆதிதிராவிடர்களுக்கு இலவசமாக வீடுகளைக் கட்டித் தரும் பணியில் முக்கியமாக ஈடுபட்டு வந்தது. எனினும் ஆதிதிராவிடர்களுக்கு அளிக்கப்படும் உதவித்தொகை கொண்டு அவர்களே சொந்தமாக வீடு கட்டிக்கொள்வதற்கு தொழில் நுட்ப உதவி அளிக்கும் பணியில் 1979-லிருந்து 1987 வரை இக்கழகம் ஈடுபட்டு வந்துள்ளது. இக்கழகம் கிராம வீட்டு வசதித் திட்டமாதிரி வடிவமைப்பைப்

பின்பற்றி, 201 ச.அடி கட்டிடப் பரப்பில் வீடு கட்டப்படுகிறது. 1974-ல் ஒரு வீடு கட்டுவதற்கான செலவு ரூ. 3,000 ஆக இருந்தது 1987-88-ல் சமவெளியில் ரூ. 6,000 ஆகவும் மலைகளில் ரூ. 9,000 ஆகவும் உயர்ந்துள்ளது.

35. 1988-89-ம் ஆண்டில் ஆதிதிராவிடர் இலவச வீட்டு வசதித் திட்டம் என்னும் புதிய சிறப்புத் திட்டத்தின்கீழ் மாநிலத்தில் பல்வேறு மாவட்டங்களில் அடிக்கடி இனக்கலவரம் ஏற்படும் கிராமங்களில் இக்கழகம் மீண்டும வலுவூட்டப்பட்ட சிமிட்டி கற்கலவை கூறையுடன் 201 ச.அடி கட்டிட பரப்பில் ஒவ்வொன்றும் ரூ. 10,000 செலவில் 8,000 தீப்பிடிக்காத வீடுகள் கட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ. 8.00 கோடியாகும்.

36. தற்போது ஆதிதிராவிடர்களுக்காக கட்டப்படும் ஓட்டு வீடுகளுக்குப் பதிலாக இலவசமாக கான்கீரிட் வீடுகள் கட்டித் தருவது என்பது அரசின் தற்போதைய கொள்கையாகும். ஆதிதிராவிடர்களுக்காக இலவசமாக 45,000 வீடுகள் கட்டி தருவதற்காக ரூ. 49 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. கட்டுமானப்பணியை நிறைவேற்றும் முகவரமைப்பு இவ்வீடுகளைக் கட்டுவதற்கான வழி முறைகள், செலவுகள் பற்றிய விவரங்கள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி வளர்ச்சிக் கழகத் தலைமையிடம் விழுப்புரத்திலிருந்து சென்னை மாநகருக்கு மாற்றப்பட்டுள்ளது. தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி வளர்ச்சி கழகத்தின் களப்பணி அமைப்பு நான்கு வட்டார அலுவலகங்களின்கீழ் சீரமைக்கப்படும். அவற்றில் ஒன்று விழுப்புரத்தில் இருக்கும்.

**இன்றியமையா அடிப்படை வசதிகள் மேம்பாடு :**

37. நலிவடைந்த பிரிவினரின் வாழ்க்கை நிலையையும் வாழ்க்கைத் தரத்தையும் மேம்பாடடையச் செய்வதற்கு உரிய அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க வேண்டியதன் தேவையை அரசு உணர்ந்துள்ளது. எனவே, இதற்குத் தேவையான அடிப்படை வசதிகளைப் பலப்படுத்தி, மேம்பாடடையச் செய்வதற்கு உதவி புரியும் சில துணைத் திட்டங்களை அரசு உருவாக்கியுள்ளது. ஆதிதிராவிடர் / பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது இத்தகைய முக்கியமான திட்டங்களின் ஒன்றாகும். பொதுவாக, எல்லா குடியிருப்புகளுக்கும் குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் என்ற பிரிவின்கீழ் கிணறு ஒன்றுக்கு ரூ. /,500 செலவில் குடிநீர் கிணறுகள் தோண்டப்படுகின்றன. ரூ. 13,000 செலவில் ''சென்ட்டிள் பியூகல் பம்புசெட்'' பொருத்தப்பட்ட நில மட்ட நீர்த்தேக்கமும். ரூ. 15,000 செலவில் ஆழ்கிணறு பம்பு செட்டுக்கள் பொருத்தப்பட்ட நிலமட்ட நீர்த்தேக்கமும் அமைக்கப்படுகின்றன.





1989-90-ம் ஆண்டில் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் கிறித்துவர்களாக மாறிய ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதிகள் செய்து கொடுப்பதற்கு ரூ. 26.30 இலட்சம் செலவிடப்படும். ஆதிதிராவிடர் / பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பொருட்டு, ஊரக வளர்ச்சித் துறை, தமிழ்நாடு குடிநீர் வழங்கல் வடிகால் வாரியம் முதலிய முகவரமைப்புகளின் வளஆதாரங்களும் ஒன்று திரட்டப்படுகின்றன. 1989—90-ம் ஆண்டில் இடுகாடுகளுக்குச் செல்லும் பாதைகள் ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்குச் செல்லும் பாதைகள் அமைப்பதற்கும் ரூ. 27.00 இலட்சம் செலவிடப்படும். அத்துடன் குடிநீர் கிணறுகள் சாலைப் பணிகளுக்கு ஊராட்சி ஒன்றியங்களுக்குரிய பங்குத் தொகையாக 1989-90-ம் ஆண்டு ரூ. 4.30 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது. சேகரிக்கப்பட்ட புள்ளிவிவரங்களின்படி இணைப்புச் சாலைகள் சுமார் 2,850 குடியிருப்புகளுக்குத் தேவைப்பட்டன. தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உத்தரவாதத் திட்டம் போன்ற திட்டங்கள் மூலமாக இணைப்புச் சாலைகள் போடப்பட்டு வருகின்றன. ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் சமூகக் கூடங்கள் கட்டும் திட்டமும் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

**தீண்டாமை ஒழிப்பு :**

38. நம் நாட்டில் பன்னெடுங்காலமாக நிலவி வரும் கொடிய சாதி முறைதான், தீண்டாமை போன்ற எண்ணற்ற சமூகப் பிரச்சினைகள் உருவாகுவதற்கு முதற்காரணமாக உள்ளது. சமூகத்தில் உயர்நிலையிலுள்ள மக்களுக்கும், தாழ்ந்த நிலையில் உள்ள மக்களுக்குமிடையேயுள்ள சமூக இடைவெளியைக் குறைக்க பல சமூக பொருளாதார நலத்திட்டங்களைச் செயற்படுத்துவதன் மூலம் சமூகத்தில் தாழ்ந்த நிலையிலுள்ள மக்களை மேம்படுத்தி அவர்களை உயர்நிலைக்குக் கொண்டுவர அரசு எல்லா முயற்சிகளையும் செய்து வருகிறது. இந்நல நடவடிக்கைகளைச் செயற்படுத்துவதால் மட்டுமே சமுதாய சமத்துவத்தைக் கொண்டு வரமுடியாது என்பதையும் அரசு உணர்ந்துள்ளது. தீண்டாமை என்னும் இத்தீய பழக்கத்தை ஒழிக்கவும், ஆதிதிராவிடர்/பழங்குடியினருக்கு இழைக்கப்படும் வேறுவகையான கொடுமைகளை நீக்கவும் அரசு இம்மாநிலத்தில் 1955-ம் ஆண்டு குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தை செயல்படுத்தி வருகிறது. தற்போது, இம்மாநிலத்தில் 24 நடமாடும் காவல் படை பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. இப்பிரிவுகள் 28-2-1989 வரையில் 13,066 வழக்குகளை பதிவு செய்துள்ளன. இவற்றில் 4,223 வழக்குகள் நீதிமன்றங்களால் தண்டனை வழங்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. குடியியல் உரிமைகள் பாதுகாப்பு சட்டத்தின்கீழ் வரும் குற்றங்களை விசாரிப்பதற்காக 4 தனி நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டு உள்ளன. நீதிமன்றப் பணிகளை கவனிப்பதற்காக 8 வழக்கு தொடரும் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன.

[1989 ஏப்ரல் 29

39. ஆதிதிராவிடர் மக்கள் சுற்றுப்புறத்தைத் துப்புரவாக வைத்துக்கொள்வதற்கு ஊக்கம் அளிக்கும் வகையில் துப்புரவாக பராமரிக்கப்படும் ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு வானொலிப் பெட்டி வழங்கும் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் தீண்டாமை ஒழிப்பதற்கு பாடுபடும் கிராமங்களில் சிறந்த இரு கிராமங்களுக்கு பரிசுகள் வழங்கப் படுகின்றன. தீண்டாமையால் வரும் சமூகக் கேடுகள் குறித்து பொதுமக்களின் கவனத்தை கவரும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் சனவரி 24 முதல் 30 வரையில் தீண்டாமை ஒழிப்பு வாரமாக கொண்டாடப்படுகிறது. தீண்டாமையின் கேடுகள் குறித்து மக்களுக்கு எடுத்துரைப்பதற்காக '' தீர்த்த யாத்திரை '' என்னும் செய்திப்படம் தயாரிக்கப்பட்டு கிராமங் களில் திரையிட்டு காட்டப்படுகிறது. இதற்காக இயக்ககத்தில் பிரச்சார வண்டி ஒன்று உள்ளது. தீண்டாமையை ஒழிக்கவும் சாதி வேறுபாடற்ற சமுதாயத்தை உருவாக்கும் பொருட்டும், கலப்பு திருமணங்கள் ஊக்குவிக்கப்படுகின்றன. கலப்பு திருமணம் புரிந்த தம்பதியர்க்கு தங்கப் பதக்கங்களும் பாராட்டு சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. 22 காரட் தங்கப்பதக்கம் வழங்க தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இதைத் தவிர, இத்தகைய தம்பதிகளின் பெயரில் ரூ. 4,000 தேசீய சேமிப்பு சான்றிதழில் முதலீடு செய்யபபடுகிறது. அவர் களுடைய திருமணச் செலவிற்கென ரூ. 300 வழங்கப்படுகிறது. கலப்பு திருமணம் செய்துகொண்ட தம்பதிகளின் குழந்தை களுக்கென்று ஒருங்கிணைந்த எம்.பி.பி.எஸ். முதலாமாண்டு பட்டப்படிப்பில் 12 இடங்களும் பி.எஸ்.எம். மற்றும் எஸ். படிப்பில் 2 இடங்களும், இந்திய முறை மருத்துவத்தில் பார்மசி பட்டப்படிப்பில் 1 இடம், முதலாண்டு பொறியியல் பட்டப் படிப்பில் 5 இடங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன. இச்சலுகை களை வழங்க தென்னாற்காடு மாவட்ட வருவாய் அலுவலர் (ஆதிதிராவிடர் நலன்) இதர மாவட்டங்களில் மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர்களுக்கும் அதிகாரமளிக்கப் பட்டுள்ளது.

**இட ஒதுக்கீடு பற்றிய விதிமுறை :**

**கல்வி நிறுவனங்களில் சேர்த்தல் :**

40. அரசு உள்ளாட்சி மற்றும் அரசு உதவிபெறும் நிறுவனம் போன்ற அனைத்து வகையான கல்வி நிறுவனங்களிலும் உள்ள அனைத்து படிப்புகளிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங் குடியினருக்கும் அரசு 18 சதவீத இடங்களை ஒதுக்கியுள்ளது. தனியார் அல்லது உள்ளாட்சி மன்றம் அல்லது பல்கலைக் கழகங் கள் நடத்தும் படிப்புகள் அல்லது அவை நேரடித் தொடர்பாக நடத்தும் கல்வி நிறுவனங்களுக்கு அரசு நிதியிலிருந்து உதவி மானியம் வழங்குவதற்கு இந்த இட ஒதுக்கீடு ஒரு நிபந்தனை யாகும்.



1989 ஏப்ரல் 29]

**அரசுப் பணிகளில் நியமனம் :**

41. இட ஒதுக்கீடு அளிக்கப்படுகின்ற அனைத்து வகையான பணிகளிலும் ஆதி திராவிடர், பழங்குடியினருக்கு 18 விழுக்காடு பதவிகள் அரசு ஒதுக்கியுள்ளது. இட ஒதுக்கீடு விதியை பணி நியமன அதிகாரிகள் கண்டிப்பாக பின்பற்றுகின்றனரா என்பதை கண்காணிக்க ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. அரசு பணிகளில் ஆதி திராவிடர், பழங்குடியினர் இடம் பெறுவதை ஆய்வு செய்வதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை தலைவராக வும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கு பொறுப்பு வகிக்கும் அமைச்சரை துணைத் தலைவராகவும், இதர அலுவலர்களையும் கொண்டு உயர்நிலைக்குழு ஒன்று மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கு போதிய பிரதிநிதித்துவம் கிடைக்காவிடில் அதற்கான காரணங் களை இக்குழு ஆய்வு செய்து, நிலைமையை மேம்படுத்த குறுகிய கால நீண்ட கால நடவடிக்கை குறித்து கருத்துத் தெரிவிக்கும். இது தவிர, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறையின் ஆணையர் மற்றும் அரசுச் செயலாளரின் தலைமையின் கீழ் உயர் மட்ட கண்காணிப்புக் குழு ஒன்றும் இட ஒதுக்கீடு விதிமுறைகளை செயல் படுத்துவதை மறு ஆய்வு செய்கிறது. இக்குழு மேற்சொன்ன உயர்நிலைக் குழுவின் துணை நிலைக் குழுவாக இயங்கும்.

**பழங்குடியினர் :**

42. இம்மாநிலத்தில் பழங்குடியினர் மக்கட்தொகை 5.20 இலட்சமாகும். இது மொத்த மக்கட் தொகையில் 1.07 சதவீதமாகும். பழங்குடியினர் அதிகமாக வாழும் பகுதிகளில் விரிவான ஒருங்கிணைந்த மேம்பாட்டு பணிகளை செயல் படுத்தும் வகையில் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பழங்குடியினர் மேம்பாட்டு துணைத் திட்டம் கொண்டு வரப்பட்டது. இத்திட்டத்தை செயல் படுத்து வதற்கு 5 மாவட்டங்களில் அதாவது சேலம், தர்மபுரி, வட ஆற்காடு, திருச்சிராப்பள்ளி, தென்னாற்காடு ஆகிய மாவட்டங் களில் பழங்குடியினர் அதிகமாக வாழும் 9 பகுதிகள் தெரிந் தெடுக்கப்பட்டன. தமிழ் நாட்டில் உள்ள மொத்த பழங் குடியினரில் சுமார் 40.4 சதவீதம் பழங்குடியினர் இப்பகுதி களில் வாழ்கின்றனர். தோட்டக் கலை, கால் நடை பரா மரிப்பு, மண்வள பாதுகாப்பு, சிறுபாசனம், பட்டுப் புழு வளர்ப்பு, சிறு தொழில்கள், தேனீ வளர்ப்பு போன்ற மேம் பாட்டுத் திட்டங்கள் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம் பாட்டுப் பகுதித் துணைத் திட்டத்தின் கீழ் இப்பகுதிகளில் செயல் படுத்தப்பட்டு வரும் திட்டங்களில் சிலவாகும். ஒருங் கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் செயல் படுத்தப்படுகின்ற இந்த அனைத்துப் பகுதிகளிலுள்ள பழங்குடி யினருக்கு நூறு சதவீதம் மானியத்தில் இடு பொருட்கள் வழங்கப் படுகின்றன.

43. ஆறாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் மூலம் 28,884 பழங்குடியினர் குடும்பங்கள் உதவி பெற்றன. ஏழாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்கான இலக்கு 69,869 குடும்பங்கள் ஆகும். இதில் 1985–86 ஆம் ஆண்டு 10,059 குடும்பங்களும், 1986–87 11,845 குடும்பங்களும் , 1987–88 இல் 9,854 குடும்பங்களும் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளன. இடைத்தரகர்களின் சுரண்டலிலிருந்து இப்பழங்குடியினரைப் பாதுகாப்பதற்காக இந்த ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதியில் 16 பெரிய அளவிலான பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. இச்சங்கங்கள் ஒரே அமைப்பின் கீழ், உற்பத்திக்கும், நுகர் பயனுக்கும் ஆகிய இவ்விரண்டிற்குமான குறுகிய கால, நடுத்தர கால கடன்களை வழங்குவதற்கும், அவர்களுடைய வேளாண் உற்பத்திப் பொருள்களையும் காடுபடு சிறு பொருட்களையும் விற்பனை செய்வதற்குரிய வசதிகளுக்கு வகை செய்யவும் நியாய விலைகளில் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் இன்றியமையா நுகர் பொருட்களை வழங்குவதற்கும் உரிய முகவரமைப்புகளாகச் செயல்படுகின்றன. இந்தப் பகுதிகளில் வாழும் பழங்குடியினர் அனைவரும் பெரிய அளவிலான பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் ஆவர். மேற் கூறிய இந்த பதினாறு சங்கங்களோடு, மேலும் இரு சங்கங்கள் பண்டைய பழங்குடியினருக்காக ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவை ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படாத பகுதிகளில் அமைந்துள்ளன.

44. குறிப்பிட்ட பகுதிகளின் வளர்ச்சியை நோக்கமாகக் கொண்ட திட்டங்கள், அதாவது சாலைகள் போடுதல், சுகாதார வசதிகளை ஏற்படுத்துதல், பள்ளிகளை ஏற்படுத்துதல், தெரு விளக்கு போடுதல், குடியிருப்புகளுக்கு மின்னிணைப்பு வழங்குதல், குடிநீர் வழங்குதல் போன்ற திட்டங்கள், குடும்பங்களின் வறுமையை ஒழிப்பதை நோக்கமாகக் கொண்ட மேற்கூறிய திட்டங்களோடு, பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

45. தமிழ் நாட்டின் பண்டையப் பழங்குடியினர் என்ற அட்டவணையிடப்பட்ட 36 பழங்குடியினர் பிரிவுகளிலிருந்து கீழ்க்காணும் அளவுகோலின் அடிப்படையில் 16 பழங்குடியினர் பிரிவுகளை தமிழ்நாடு அரசு தெரிந்தெடுத்துள்ளது. (1) வேளாண் தொழில் நுட்பவியல் நிலைக்கு முந்தியவர்கள், (2) குறைந்த அளவே கல்வியறிவு பெற்றவர்கள், (3) மக்கள் தொகைப் பெருக்கம் தேக்க நிலை அடைந்தவர்கள் அல்லது மக்கள் தொகைப் பெருக்கம் குறைந்து வருபவர்கள். தெரிந்தெடுக்கப்பட்ட பண்டைய பழங்குடியினரின் பயனுக்காகச் சிறப்புத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் வாழும் பழங்குடியினர் பண்டைய பழங்குடியினர் பல இடங்களில் பரந்து வாழ்ந்து வருவோர் ஆகியோரைச் சேர்ந்து 9,000 குடும்பங்களுக்காக 1989–90 ஆம் ஆண்டில் ரூ. 1,616.84 இலட்சம் செலவிடப்படும்.



46. மத்திய அரசு பொறுப்பேற்கும் ஆராய்ச்சி பயிற்சித் திட்டத்தின் கீழ் மொத்தம் 200 இலட்சம் ரூபாய் செலவில், நீலகிரி மாவட்டம் உதகமண்டலம், பழங்குடியினர் குறித்த ஆராய்ச்சி நிலையத்தில் பழங்குடியினர் பற்றிய அருங்காட்சியகம் ஒன்றை ஏற்படுத்த அரசு அனுமதி வழங்கியுள்ளது. இது தொடர்பான செலவு மத்திய, மாநில அரசுகளால் 50 : 50 என்ற அடிப்படையில் ஏற்கப்படும். 200 இலட்சம் ரூபாய் செலவானது 1988–89 ஆம் ஆண்டிலிருந்து 1992–93 ஆம் ஆண்டு வரையிலான ஐந்தாண்டு கால அளவில் ஏற்கப்பட வேண்டும் என்றும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

**சிறப்பு உள்ளடக்க திட்டம் :**

47. ஆதிதிராவிடர்கள் எல்லா நிலைகளிலும் மேம்பாடடைவதற்கு உறுதி செய்ய 1980–81 ஆம் ஆண்டிலிருந்து சிறப்பு உள்ளடக்க திட்டம் தயாரிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் கீழ்க்காணும் நோக்கங்களை எய்த விழைகிறது.—

(1) வறுமைக் கோட்டை கடக்க ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு உதவி புரிதல்.

மற்றும்

(2) ஆதி திராவிடர்கள் வாழும் பகுதிகளில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்துதல்.

சிறப்பு உள்ளடக்க திட்டமானது பயன் பகுக்கக் கூடிய திட்டங்களிலிருந்து தொகையைப் பெற்று, ஆதிதிராவிடர்களின் மேம்பாட்டை விரைவுபடுத்துவதற்காக அவர்களுக்கு அதிக அளவில் பயன்கள் சென்றடைய உறுதி செய்கிறது. எனவே, மேற் கூறிய இரு நோக்கங்களையும் எய்துவதே அரசின் ஒட்டு மொத்தமான முயற்சியாகும். ஆதி திராவிடர் மக்களின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்காக ஆறாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 363.532 கோடி ரூபாய் செலவிடப்பட்டது. ஏழாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 686.25 கோடி ரூபாய் செலவு செய்ய சிறப்பு உள்ளடக்கத் திட்டம் வகை செய்கிறது. பொருளாதாரத் துறையில் 10 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு இத்திட்டத்தின் கீழ் பயனளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1987–88 ஆம் ஆண்டு வரையில் 389.79 கோடி

ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. 6.46 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு பொருளாதார உதவி செய்யப்பட்டுள்ளது. 1988-89 ஆம் ஆண்டுக்குரிய சிறப்பு உள்ளடக்கத் திட்டம் 177.99 கோடி ரூபாய் செலவு செய்யவும் 1 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு உதவி புரியவும் வகை செய்கிறது.

48. அடையப் பெறும் பயன்களை (பொருளாதார வகையிலும் திட்ட வகையிலும்) சிறப்பு உள்ளடக்கத் திட்டம் அளவிடுவதோடு, பல்வேறு திட்டங்களின் மூலம் அளிக்கப்பட வேண்டிய மொத்தப் பயன்களை அதிகரிக்க உயர் இலக்குகளையும் வரையறுக்கிறது. பல்வேறு துறைகளின் வரவு-செலவுத் திட்டத் தலைப்புகளில் தனியாகத் துணைத் தலைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவை, திட்டம் செயல்படுத்தப்படுவதை சிறந்த முறையில் கண்காணிக்கவும் இத்திட்டத்தினால் கிடைக்கப் பெறும் பயன்களை அளவிடவும் உதவியாக இருக்கும். உயர் இலக்கை வரையறுப்பது, பயன்கள் உயர் அளவிற்கு கிடைக்க உறுதி செய்யும் என்பதோடு, வளர்ச்சியில் காணப்படும் இடைவெளியைக் குறைக்கவும் செயயும். மாநில திட்டச் செலவான 1,360 கோடி ரூபாயில் இந்த சிறப்பு உள்ளடக்க திட்டத்திற்கு 1989–90 ஆம் ஆண்டில் 191.22 கோடி ரூபாய் செலவிடப்படும் என்பதை இந்த அவையில் அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இத்தொகை சிறப்பு உள்ளடக்கத் திட்டத்திற்காக 1988–89 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட தொகையைக் காட்டிலும் 1.4 சதவிதம் அதிகமாகும். இது ஆதி திராவிடர்களின் பொருளாதார வளர்ச்சிக்கும், அவர்களுடைய குடியிருப்புகளுக்கு வேண்டிய குறைந்த அளவுத் தேவைகளுக்கும் வகை செய்யும். 1989–90 ஆம் ஆண்டில் 2 இலட்சம் குடும்பங்கள் இத்திட்டத்தின் கீழ் பயன் பெறும். இந்த அளவில் செயல் படுத்தப்பட்டால் ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்கான இலக்கை எய்திவிடுவோம் என்று நான் நம்புகிறேன்.

சிறப்பு மத்திய உதவி :

49. சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின்கீழ், மத்திய அரசு ஒவ்வோராண்டும் சிறப்பு மத்திய உதவியை அளிக்கிறது. இது ஆதிதிராவிடர்களின் பொருளாதார வளர்ச்சிக்கு மாநில அரசு செய்து வரும் முயற்சிக்கு மேலும் அதிகப்படியாக அளிக்கப்படும் பயனாகும். இந்த நிதி, ஆதி திராவிடர்களின் பொருளாதார வளர்ச்சிக்காக மாநில அரசின் திட்ட நிதியோடு சேர்த்து பயன்படுத்தப்படும். 1985–86 ஆம்



ஆண்டிலிருந்து 1988–89 ஆம் ஆண்டு வரையில் சிறப்பு மத்திய உதவியாக 54.87 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இத்தொகையைப் பயன்படுத்தி, வருவாயைப் பெருக்கும் திட்டங்கள் பல்வேறு துறைகளின் மூலம் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் கூட்டுறவு நூற்பாலைகள் கைத்தறி நெசவாளர்கள் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள், செங்கல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள், கல் உடைக்கும் பிரிவுகள், தோல் பதனிடும் பிரிவுகள், காலணிகள் தயாரிக்கும் பிரிவுகள், பனைநார் தயாரிக்கும் பிரிவுகள், கயிறு திரிக்கும் பிரிவுகள், செருப்பு தைப்போர் கடைகள், தனிப்பட்ட குடும்பங்கள், தொகுதியினர் நலனுக்காக ஏனைய திட்டங்கள் ஆகியவை அடங்கும். சுய வேலை வாய்ப்புத் திட்டங்களை ஏற்படுத்தி, அவர்கள் சுயமாக முன்னேற வழிகாட்டப்படுவதோடு போதுமான நிதியுதவியும் அளிக்கப்படுகிறது. இந்த சுயவேலைவாய்ப்புத் திட்டங்களில் ஆட்டோ ரிக்ஷாக்கள், டெம்போக்கள், வேன்கள் ஆகியவற்றை வழங்குவதும் தொழில்களை தொடங்குதலும் அடங்கும். சுயவேலை வாய்ப்பு, தொழில்கள் ஆகியவற்றிற்குரிய புதிய வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள தேவையான இடங்களில் ஆதிதிராவிடர் இளைஞர்களுக்கு பயிற்சியும் அளிக்கப்படுகிறது. ஆதிதிராவிடர் தொழில் முனைவர்களை மாவட்டத் தொழில் மையங்கள் கண்டறிந்து, அவர்களுக்குத் தேவையான நிதியுதவியையும் தொழில் நுட்ப ஆதரவையும் அளித்து வருகிறது. மத்திய பணியாளர் தேர்வாணைக்குழு, ஆயுள் ஈட்டுறுதிக் கழகம், வங்கிப் பணியாளர் தேர்வாணைக்குழு முதலியவை நடத்தும் போட்டித் தேர்வுகளில் ஆதிதிராவிட மாணவர்கள் வெற்றி பெறுவதற்குரிய வாய்ப்பை அதிகப்படுத்த சிறப்புப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. கணிப்பொறி, தட்டச்சுப்பொறி, சுருக்கெழுத்து ஆகியவற்றிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது. மத்திய அரசிடமிருந்து பெறப்படும் சிறப்பு மத்திய உதவித் தொகை தொன்றுதொட்டு வரும் துறைகளிலும் பயன்படுத்தப்படுகிறது. தொன்றுதொட்டு வரும் துறைகளின் கீழ் நிலமேம்பாடு, பாசனக் கிணறுகளைத் தோண்டுதல், விதைகள், ரசாயன உரங்கள், நாற்றுகள், ஆடுகள், கறவை மாடுகள் ஆகியவற்றை வழங்குதல் போன்ற திட்டங்களும் தாராளமாக உதவித் தொகை வழங்கிச் செயல்படுகின்றன. பயிற்சித் திட்டங்கள், சுய வேலை வாய்ப்பை உருவாக்குவதற்குரிய உதவித் தொகைகள் வழங்குதல், சிறிய உற்பத்திப் பிரிவுகளை ஏற்படுத்தி நிதியுதவி வழங்குதல் ஆகியவை அடங்கிய சிறப்புத் திட்டங்களை செயல்படுத்த 1989–90 ஆம் ஆண்டில் 20 கோடி ரூபாய் செலவிடப்படும்.

**20 அம்சத் திட்டம் :**

50. 20 அம்சத் திட்டம் 1986 முதல் தமிழ்நாட்டில் தீவிரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. 11(ஏ) என்ற அம்சத்தின் கீழ் ஆதிதிராவிடர்களுக்கு உதவி வழங்க 1985–86 ஆம் ஆண்டிலிருந்து 1988–89 ஆம் ஆண்டு வரையிலான கால அளவில் ஆண்டொன்றுக்கு 2 இலட்சம் குடும்பங்களுக்கு உதவி கிடைக்க இலக்கு வரையறுக்கப்பட்டது. இந்த ஆண்டுகளில் எய்திய சாதனை 2 இலட்சம் குடும்பங்கள் என்ற இலக்கைக் காட்டிலும் தொடர்ந்து அதிகமாகவே இருந்து வந்துள்ளது. 11 (பி) பழங்குடியினருக்கு உதவி கிடைக்கச் செய்தல் என்ற அம்சத்தின்கீழ் 1986–87 ஆம் ஆண்டில் 11,845 பழங்குடியினர் குடும்பங்களுக்கு உதவி கிடைக்கச் செய்யப்பெற்றது. 1987–88 ஆம் ஆண்டில் 9,854 பழங்குடியினர் குடும்பங்களுக்கு உதவி கிடைக்கச் செய்யப்பெற்றது. 1988–89 ஆம் ஆண்டில் 10,557 பழங்குடியினர் குடும்பங்களுக்கு உதவி கிடைக்கச் செய்யப் பெற்றது. 1989–90 ஆம் ஆண்டில் 2 இலட்சம் ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கும் 9,000 பழங்குடியினர் குடும்பங்களுக்கும் உதவி கிடைக்கச் செய்ய கருதப்பட்டுள்ளது. இந்த இலக்கை எய்த எல்லாவித முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

51. கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு புதுவாழ்வு அளிக்கும் திட்டத்தின் கீழ் 1988–89 ஆம் ஆண்டிற்கு 400 கொத்தடிமைத் தொழிலாளர்கள் என்று இலக்கு வரையறுக்கப்பட்டுள்ளது. 811 (358 கொத்தடிமைகளுக்கு வழங்கப்பட்ட பிழைப்பூதியப்படி உட்பட) கொத்தடிமைத் தொழிலாளர்களுக்குப் புதுவாழ்வு அளிக்க 21.51 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது. 1989–90 ஆம் ஆண்டிற்கான இலக்கு 400 கொத்தடிமைத் தொழிலாளர்கள் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**தொடக்க செலவுத் தொகை உதவி:**

52. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு, குறிப்பாக நலிந்த பிரிவினரின் பொருளாதார வளர்ச்சிக்கு நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகளும் தங்கள் பங்கை ஆற்றுகின்றன. வங்கித் துறையில் கிடைக்கப் பெறும் ஆதாரங்களைப் பெற, சுய வேலைவாய்ப்புத் திட்டங்களைத் தொடங்குவதற்காக ஆதிதிராவிடர்களுக்கு தொடக்க செலவுத் தொகை (கடன்) வழங்கும் திட்டத்தை மத்திய அரசு கொண்டு வந்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் சிறப்பு மத்திய உதவியிலிருந்து 50 சதவீதம் உதவித் தொகை வழங்குவதோடு, 4 சதவீத வட்டி வீதத்தில் இந்த நிதியிலிருந்து இந்த திட்டத்திற்காகும் செலவில் 25 சதவீதத் தொகை வழங்கப்படுகிறது. எஞ்சியுள்ள தொகை வங்கியிலிருந்தோ, நிதியுதவி நிறுவனங்களி



லிருந்தோ கடனாகப் பெறப்படும். இத்திட்டத்தை ''தாட்கோ'' செயற்படுத்தி வருகிறது. மத்திய அரசு இந் நிதியில் 49 சதவீதத் தொகையை அளிக்கிறது. எஞ்சியுள்ள 51 சதவீதத் தொகையை மாநில அரசு அளிக்கிறது. தொடக்கச் செலவுத் தொகையை வழங்கி, அதனைத் திருப்பி வசூலிக்கும் நடைமுறையில் அதிக அளவு எழுத்துப் பணி பிரிவு வேண்டியுள்ளது என்று வங்கிகள் கருதியதால், இத் திட்டத்தின் கீழ் எய்திய முன்னேற்றமானது பெருமளவிற்கு இல்லை. இந்த இடர்பாடுகளை நீக்கவும் வங்கிகளுக்கு ஊக்கமூட்டவும் தொடக்கச் செலவுத் தொகையை வங்கிகளில் குறித்தகால வைப்பீட்டுத் தொகைக் கணக்கில் வைப்பீடு செய்யுமாறு அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. திருத்தி அமைக்கப்பட்ட ஆணைகளின்படி வங்கிகள் தேவையான கடன் தொகைகளை பயனீட்டாளர்களுக்கு வழங்கி, அக்கடன் தொகைகளை வசூலிக்கும் குறித்த கால வைப்பீட்டுத் தொகைக்கு வட்டியுண்டு. இந்த வட்டித் தொகையை ''தாட்கோ''வும் ஆதிதிராவிடர் பயனீட்டாளர்களும் பகிர்ந்து கொள்வர்.

53. ஆதிதிராவிடர் பயனீட்டாளர்களுக்கு தொடக்கச் செலவுத் தொகையாக வழங்க ''தட்கோ''விற்கு இதுவரை 15.56 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதில், 12.17 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தை மேலும் தீவிரமாகச் செயற்படுத்த 1989–90 ஆம் ஆண்டில் ''தட்கோ'' விற்கு 200 இலட்சம் ரூபாய் அளிக்கப்படும்.

**தொகுதி மேம்பாட்டுத் திட்டம் :**

54. 1982–83 ஆம் ஆண்டிற்குரிய தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தை அரசு செயற்படுத்தி வருகிறது. இதில், ஒரு வளர்ச்சி வாட்டாரத்தில் அடுத்தடுத்துள்ள பகுதிகளில் தொகுதியாகவுள்ள பகுதிகளில் வாழும் ஆதிதிராவிடர் மக்களுக்கு அவர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த, ஒவ்வோராண்டும், சிறப்பு மத்திய உதவித் திட்டத்தின் கீழ் உதவித் தொகை வழங்கப்படுவதும் அடங்கும். ஒவ்வோராண்டும் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு வளர்ச்சி வட்டாரம் தெரிந்து எடுக்கப்பட்டு, 1,000 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்குப் பயன் அளிக்கும் வகையில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றன. ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு பொருளாதார உதவி புரிய இம்மாநிலத்தில் இது வரையில் 102 வளர்ச்சி வட்டாரங்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. தெரிந்தெடுக்கப்பட்ட குடும்பங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு நபர் ஆண்டு முழுவதும் வேலை வாய்ப்பைப் பெற உறுதி செய்யும் வண்ணம், இந்தத் தொகுதிகளில் கிராமத் தொழில்கள் தொடங்கப்பட்டுள்ளன. 1989–90 ஆம் ஆண்டில் சென்னை மாநகர் நீங்கலாக ஏனைய மாவட்டங்களில் பிறிதொரு தொகுதி வளர்ச்சி வட்டாரங்கள் தெரிந்தெடுக்கப்பட்டு தகுந்த திட்டங்கள் நிறைவேற்றப்படும்.

55. 1989–90 ஆம் ஆண்டில் 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் அனுமதிக்கப்பட்ட 7,611.61 இலட்சம் ரூபாயும் சாட்டப்பட்ட 10.03 இலட்சம் ரூபாயும் செலவிடப்படும். இத்துடன் ஆதிதிராவிடர் பழங்குடியினர் மேம்பாட்டிற்காக 43 ஆம் எண் மானியக் கோரிக்கையிலிருந்து (பல்வகை) 0.42 இலட்சம் ரூபாயும் 58 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் (மூலதனச் செலவு) 656.36 இலட்சம் ரூபாயும், 59 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் (கடன்கள்—முன் பணங்கள்) 91.64 இலட்சம் ரூபாயும் செலவிடப்படும். இவ்வாறாக, ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலனுக்காக மொத்தம் 8,370.06 இலட்சம் ரூபாய் செலவிடப்படும். இந்த முறையில் தமிழ்நாடு அரசு, ஆதிதிராவிடர் பழங்குடியினர் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்காக இயன்ற நடவடிக்கைகள் அனைத்தையும் எடுத்து வருகிறது.



## ஆதி திராவிடர்—பழங்குடியினர் நலத்துறை இணைப்புகள்.

டி 2 எ 53-100—2.

ஆதிதிராவிடர்—பழங்குடியினர் நலத்துறை.

இணைப்பு—1.

(1989-90 ஆம் ஆண்டு வரவு—செலவுத் திட்ட மதிப்பீடு).

(ரூபாய் ஆயிரத்தில்).

| தொடர் எண், திட்டத்தின் விவரங்கள். | (790,608) மத்திய அரசு பொறுப் பேற்கும் திட்டம். மத்திய அரசும் மாநில அரசும் சம அளவிற் செலவுப் பொறுப்பேற் கும் திட்டங்கள். | | மாநிலத் திட்டம். | | திட்டத்தில் சேராதவை. | | மொத்தம். | | பெரு மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆதி திராவிடர். | பழங்குடி யினர். | ஆதி திராவிடர். | பழங்கு யினர் | ஆதிதிராவிடர். | பழங்குடியினர். | ஆதிதிராவிடர். | பழங்குடியினர். | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| | 98,645 | 1,460 | 350,900 | 33,286 | 2,80,205 | 26,112 | 7,29,750 | 60,858 | 7,90,608 |
| I—கல்வி | | | | | | | | | |
| 1. படிப்புதவித் தொகை .. | 53,040<br>1,489†† | 154 | 20,602<br>8,652(க)<br>367(க)† | .. | 13,206<br>19,075<br>135(க) | 288 | 1,16,566 | 442 | 1,17,008 |
| 2. மருத்துவ-பொறியியல் பட்டப் படிப்புகளில் பயிலும் ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மாணவர்களுக்கு புத்தக வங்கி. | 300†† | .. | .. | .. | .. | .. | 309 | .. | 30 |
| 3. பி ஏ., பி.எஸ்சி., பி.காம்., பட்டப்படிப்புகளில் பயிலும் ஆதிதிராவிடர்/பழங்குடியினர் கிறித்துவர்களாக மதம் மாறிய பழங்குடி மாணவர்களுக்கு இலவச கல்வி. | .. | .. | 10,000 | .. | .. | .. | 10,000 | .. | 10,000 |
| 4. பள்ளிகள் .. .. | .. | .. | 3,723<br>5,051<br>261<br>3,148 | .. | 100,272<br>4,253 | 8,932 | 1,16,808 | 8,932 | 1,25,740 |
| 5. தமிழக அரசு சத்துணவுத் திட்டம். | .. | .. | 1,980 | .. | 10,742 | .. | 12,722 | .. | 12,722 |
| 6. பள்ளிக் கட்டிடங்களை கட்டுதல், பழுது பார்த்தல் | .. | .. | 1,707<br>9,500(மு) | 250<br>1,035(மு) | 1,559 | 400 | 12,766 | 1,685 | 14,451 |
| 7. சீருடைகள் .. .. | .. | .. | 2,773 | .. | 12,234 | 757 | 16,007 | 766 | 16,771 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 8. சாரணர் சாரண ஆசிரியர் ஆகியோருக்கு சாரணர்ச் சீருடை வழங்குதல். | .. | .. | 100 | 10 | .. | .. | 100 | 10 | 110 |
| 7. பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் கரும்பலகைகள் மற்றும் பள்ளிகளுக்கு சாதனங்கள் வழங்குதல். | .. | .. | 5,236 | 3 | 3 141 | 202 | 8,377 | 206 | 8,583 |
| 10. ஆசிரியர்களுக்கு வீடுகள் | .. | .. | 150 | 248 | 41 | 25 | 191 | 273 | 464 |
| 11. சுற்றுலா .. .. | .. | .. | 67 | .. | .. | 10 | 67 | 10 | 77 |
| 12. பரிசுப் பொருள்கள் .. | .. | .. | | .. | 66 | .. | 66 | .. | 66 |
| 13. மாணவர் இல்லங்கள் .. | .. | .. | 14,840<br>299 | 2,883<br>162 | 71,478 | 4,758<br>1,243<br>1,878 | 86,617 | 10,127 | 96,744 |
| 14 மாணவர் இல்லக் கட்டிடங்களைக் கட்டுதல் பராமரித்தல். | 20,000(மூ)†† | .. | 10,000(மூ) | 1(மூ) | 740 | 40 | 30,930 | 41 | 30,971 |
| 15. பகுதி நேர ஆசிரியர்கள் | .. | .. | .. | .. | 140 | 15 | 140 | 15 | 155 |
| 16. தங்கிப் பயிலுவதற்கான மானியம். | .. | .. | .. | .. | 1,579<br>5 | 185 | 1,584 | 185 | 1,769 |
| 17. ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/மதம் மாறிய ஆதிதிராவிடர்களுக்கு தனித்தகுதி மானியம். | .. | .. | .. | 2,000 | .. | .. | .. | 2,000 | 2000 |
| 18. ஆதிதிராவிடர் பழங்குடியினர்/மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு பரிசுத் தொகை வழங்கல். | .. | .. | .. | .. | 1,175 | .. | 1,175 | .. | 1,175 |
| 17. தேர்வுக்கு முந்தைய பயிற்சி நிலையங்கள் | 979†† | .. | 45 | .. | .. | .. | 1,024 | .. | 1,024 |
| 20. பல்கலைக் கழகங்களுக்கு இழப்பீட்டுத் தொகை. | .. | .. | .. | .. | 485 | .. | 485 | .. | 485 |
| 21. கல்வியில் சிறந்த மாணவர்களுக்கு படிப்புதவித் தொகை. | .. | .. | 150†<br>20 | .. | 430 | 50<br>40 | 600 | 90 | 690 |
| 22. கல்லூரி மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி. | .. | .. | 50 | .. | .. | .. | 50 | .. | 50 |
| 23. பட்டயக் கணக்கர் தேர்வு | .. | .. | .. | .. | 5 | .. | 5 | .. | 5 |
| 24 தட்டச்சு சுருக்கெழுத்து ஆகியவற்றில் பயிற்சி. | .. | .. | 79<br>130† | .. | .. | .. | 200 | . | 200 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 25. அதிக மதிப்பெண் பெற்ற மாணவ/மாணவிகளுக்கு சிறப்புப் பயிற்சி வகுப்புகள். | .. | .. | .. | .. | 11 | .. | 32 | | |
| 26. ஆதிதிராவிடர்—பழங்குடியினர் நலத்துறையின் கல்விப் பிரிவை விரிவு படுத்து தல் | .. | .. | 91 | .. | 1,620 | .. | 1,116 | .. | 1,116 |
| 27. தொழிற்பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி பெறும் ஆதி திராவிடர்/பழங்குடியினருக்கு பயிற்சி உதவித்தொகை. | .. | .. | 225 | .. | 955 | — | 1,210 | — | 1,210 |
| 28. ஆதிதிராவிடர்/பழங்குடியினருக்கு சிறப்பு தொழிற் பயிற்சி நிறுவனம். | .. | .. | 421 | .. | .. | .. | 421 | .. | 421 |
| 27. ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/மாணவ மாணவியரின் கல்வி மேம்பாட்டிற்கு ஊக்கத் தொகை வழங்கல் | .. | .. | 112 | .. | .. | .. | 112 | .. | 112 |
| 30. இந்தியத் தொழில் நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் சேருவதற்கு ஆதிதிராவிடர்/பழங்குடியினருக்குப் பயிற்சி வகுப்புகள் நடத்துதல். | 6†† | .. | .. | .. | .. | .. | 6 | .. | 6 |
| 31. மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பள்ளிகள் மாணவ-ரில்லங்கள் மூதலியன கட்டுதல், | 2,100(மூ) | .. | .. | .. | .. | .. | 2,10 | .. | 2,100 |
| 32. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பழங்குடியினர் மாணவர்களுக்கான பள்ளிகளுக்கு பயிற்றுவிப்பு சாதனங்களும், விளையாட்டுப்பொருள்களும் வழங்குதல் | .. | .. | .. | 165 | .. | .. | .. | 165 | 165 |
| 33. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மாணவரில்லங்களும், பழங்குடியினர் தங்கிப் பயிலும் பள்ளிகளும் கட்டுதல். | .. | .. | .. | 3,000(மூ) | .. | .. | .. | 3,000 | 3,000 |
| மொத்தம் [ கல்வி .. | 77,914 | 154 | 99,800 | 89,40 | 2,44,063 | 18,853 | 4,21,707 | 27,947 | 4,49,724 |

| (1) | (2) | (3) | (4) | (5) | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| I. வேலைவாய்ப்பு—பொருளாதார மேம்பாடு— | | | | | | | | | |
| 34. வேளாண்மை .. .. | .. | .. | 1,296<br>158† | 187 | .. | .. | 1,454 | 187 | 1,641 |
| 35. கூட்டுறவு .. .. | .. | 35†† | .. | .. | | .. | .. | 35 | 35 |
| 36. பால்வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள். | .. | .. | 5,000<br>150† | .. | 186 | .. | 5,336 | .. | 5,336 |
| 37. குடிசைத் தொழில்கள் | .. | .. | 27 | .. | 472 | 30 | 499 | 30 | 529 |
| 38. பயிற்சி உற்பத்தி நிலையம். | .. | .. | — | 68 | .. | .. | .. | 68 | 68 |
| 37. தொழில் நுட்பப் பயிற்சி பெற்றவர்களுக்கு உதவித் தொகை. | .. | .. | 150†<br>1,150 | 100 | .. | .. | 1,300 | 100 | 1,400 |
| 40. பயிற்சி–வேலை வாய்ப்பு (தொகுதி 4 பணி தேர்வுகள்). | .. | .. | 1<br>1† | .. | .. | .. | 2 | .. | 2 |
| 41. சிறு வணிகம் .. .. | .. | .. | 500<br>100† | 50 | .. | .. | 600 | 50 | 650 |
| 42. துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெறசிறப்பு பயிற்று வகுப்புகள் | .. | .. | 1<br>1† | .. | .. | .. | 2 | .. | 2 |
| 43. வானொலி, தொலை காட்சிப் பெட்டி பழுது பார்ப்புப் பணியில் ஆதிதிராவிடர், பழங் குடியினர் பெண்களுக்குப் பயிற்சியளிப்பதற்கான திட்டம். | .. | .. | 1 | .. | .. | .. | 1 | .. | 1 |
| 44. தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகத்தில் பங்கு மூலதன முதலீடு. | 20,000(மூ)†† | .. | .. | .. | .. | .. | 20,000 | .. | 20,000 |
| 45. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி வட்டாரங் களுக்கு நலம் பயக்கும் பணித்திட்டங்கள் (ஆதி திராவிடர்களுக்கான தனித் துணைத்திட்டத் திற்கு சிறப்பு மத்திய உதவி). | .. | .. | 1,10,000 | .. | .. | .. | 1,10,000 | .. | 1,10,000 |
| 46. சட்டக் கல்வி பட்டதாரி களுக்குப் பயிற்சி | .. | .. | 171 | .. | .. | .. | 171 | .. | 171 |
| மொத்தம்—II வேலை வாய்ப்பு—பொருளாதார மேம்பாடு. | 20,000 | 35 | 118,707 | 405 | 658 | 30 | 1,39,365 | 470 | 1,39,835 |

[1989 ஏப்ரல் 29 1989 ஏப்ரல் 89]

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (7) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| III. சுகாதாரம், வீட்டு வசதி, ஏனைய திட்டங்கள் :— | | | | | | | | | |
| 47. ஆதிதிராவிடர்களுக்கு கான்கிரீட் வீடு கட்டும் திட்டம். | .. | .. | 1,00,000 | .. | .. | .. | 1,00,000 | .. | 1,00,000 |
| 48. வீட்டு வசதி .. .. | .. | .. | 1 | 200 | .. | .. | 1 | 200 | 201 |
| 49. வீட்டு மனைகள் .. | .. | .. | 126<br>2,345<br>1,000(சா)<br>20,000 | .. | .. | .. | 23,471 | .. | 23,471 |
| 50. நடைபாதைகள், சுடுகாடுகள், ஏற்படுத்திக் கொடுத்தல்,. (குடிநீர் சாலைப் பணிகளுக்காக ஊராட்சி ஒன்றியத்திற்கு அளிக்கப்படும் தொகை உட்பட). | .. | .. | 3,130 | .. | .. | .. | 3,130 | .. | 3,130 |
| 51. குடிநீர் கிணறுகள் .. | .. | .. | 180†<br>2,145 | .. | .. | .. | 2,235 | .. | 2,325 |
| 52. மருத்துவம் .. .. | .. | .. | .. | 97 | 100 | 502 | 100 | 599 | 699 |
| 53. பிரச்சாரச் செலவுகள் .. | 231†† | .. | .. | .. | .. | .. | 231 | .. | 231 |
| 54. தெரிந்தெடுக்கப்பட்ட கிராமங்களுக்குப் பரிசுகள். | .. | .. | .. | .. | 54 | .. | 54 | .. | 54 |
| 55. சுத்தமாக பராமரிக்கப்பட்டு வரும் ஆதிதிராவிடர் காலனிகளுக்குப் பரிசுகள். | .. | .. | .. | .. | 111 | .. | 111 | .. | 111 |
| 56. சமுதாய நிலையங்கள் .. | .. | .. | .. | .. | 883 | .. | 883 | .. | 883 |
| 57. சமுதாயக் கூடங்கள் .. | .. | .. | 500 | .. | .. | .. | 500 | .. | 500 |
| 53. கலப்புத் திருமணங்கள் .. | .. | .. | 2,870 | .. | .. | .. | 2,870 | .. | 2,870 |
| 59. சலவைத் துறைகள் கட்டுதல். | .. | .. | 10<br>10(க) | .. | .. | .. | 20 | .. | 20 |
| 60. சுகாதாரமற்ற தொழில்களில் ஈடுபட்டுள்ள ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்டுதல். | .. | .. | 1 | .. | .. | .. | 1 | .. | 1 |
| 61. துப்புரவாளர் மற்றும் கழிவுப்பொருள் அகற்றுவோரின் தொழில்களை நவீனமயமாக்குதல். | .. | .. | 75 | . | .. | .. | 75 | .. | 75 |
| 62. பழங்குடியினர் ஆராய்ச்சி நிறுவனத்தை ஏற்படுத்துதல். | . | 1,270†† | . | .. | .. | .. | | 1,270 | 1,27( |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 63. உதகமண்டலம் பழங்குடியினர் ஆராய்ச்சி நிலையத்தில் அரும்பொருட் காட்சியகம் அமைத்தல். | .. | 1†† | .. | .. | .. | .. | .. | 1 | 1 |
| 64. ஈமச்சடங்குகளுக்குத் தொகை கொடுத்தல். | .. | .. | .. | .. | .. | 6,685 | .. | 6,685 | 6,685 |
| 65. ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத் திட்டங்களை மதிப்பீடு செய்ய ஆராய்ச்சி—ஆய்வுப் பிரிவு. | 200†† | .. | .. | .. | .. | .. | 200 | .. | 200 |
| 66. 1955-ஆம் ஆண்டு குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தைச் செயற்படுத்தப் பணியாளர் அமைப்பு. | 300†† | .. | .. | .. | .. | .. | 300 | .. | 300 |
| மொத்தம்—III சுகாதாரம் வீட்டுவசதி ஏனைய திட்டங்கள். | 731 | 1,271 | 1,32,393 | 297 | 1,148 | 7,187 | 1,34,272 | 8,755 | 1,43,027 |
| IV. பழங்குடியினர் பகுதிகள் துணைத் திட்டம். | | | | | | | | | |
| 67. பழங்குடியினர் மேம்பாட்டிற்கான துணைத் திட்டம் குறித்த ஒருங்கிணைந்த பகுதிகள் மேம்பாட்டுத் திட்டத்திற்கான வல்லுநர் குழு. | .. | .. | .. | 117 | .. | .. | .. | 117 | 117 |
| 68. பழங்குடியினர் மாணவரில்லம் இணைந்த பள்ளிகளைத் தொடங்கி பராமரித்தல். | .. | .. | .. | 12,903 | .. | .. | .. | 12,903 | 12,903 |
| 69. பழங்குடியினர் கிராமங்களுக்கு மின் வசதி செய்து கொடுக்கும் திட்டங்கள். | .. | .. | .. | 3,000 | .. | .. | .. | 3,001 | 3,001 |
| 70. பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் சிறு பாசன திட்டங்கள். | .. | .. | .. | 2,100 | .. | .. | .. | 2,100 | 2,100 |
| 71. கல்ராயன் மலைக்கான நிருவாக அமைப்பை ஏற்படுத்துதல். | .. | .. | .. | 325 | .. | .. | .. | 325 | 325 |
| 72. ஆதிவாசிகள் மேம்பாடு | .. | .. | .. | 1,716 | .. | .. | .. | 1,716 | 1,716 |

| 1 | 2 | 3 | 4 | 5 | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 73. பழங்குடியினர் ஆராய்ச்சி மேம்பாடு. | — | — | — | 187 | .. | .. | .. | 187 | 187 |
| 74. சாலைகள் .. .. | .. | .. | .. | 350 | .. | .. | .. | 350 | 350 |
| 75. பரந்து வாழும் பழங்குடியினர். | .. | .. | .. | 2,000 | .. | .. | .. | 2,000 | 2,000 |
| 76. குடிநீர் கிணறுகள் .. | .. | .. | .. | 305 | .. | .. | .. | 305 | 305 |
| 77. ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் பழங்குடியினருக்கான வீட்டுவசதி. | .. | .. | .. | 630 | .. | .. | .. | 630 | 630 |
| 78. தமிழ்நாடு பழங்குடியினர் மேம்பாட்டு அதிகார மன்றம். | | .. | .. | 10 | .. | .. | .. | 10 | 10 |
| மொத்தம்—IV. பழங்குடியினர் பகுதிகள் துணைத் திட்டம். | .. | .. | .. | 23,644 | .. | .. | .. | 23,644 | 23,644 |
| V. கொத்தடிமைத் தொழிலாளர்களுக்கான புது வாழ்வுத் திட்டங்கள்— | | | | | | | | | |
| 79. கொத்தடிமைத் தொழிலாளர்களுக்கு புது வாழ்வு அளித்தல். | .. | .. | .. | .. | .. | 1 | .. | 1 | 1 |
| 80. விடுவிக்கப்பட்ட கொத்தடிமை தொழிலாளர்களுக்கு வீட்டு வசதிகள் அளிப்பதற்கான நிதியுதவி. | .. | .. | .. | .. | .. | 1 | .. | 1 | 1 |
| 81. கொத்தடிமைத் தொழிலாளர்களுக்கு நிலக்குடியேற்றத் திட்டங்களைச் செயற்படுத்துதல். | .. | .. | .. | .. | .. | 40 | .. | 40 | 40 |
| மொத்தம்—V. கொத்தடிமைத் தொழிலாளர்களுக்கான புதுவாழ்வுத் திட்டங்கள். | .. | .. | .. | .. | .. | 42 | .. | 42 | 42 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| VI. நெறிப்படுத்தலும் நிருவாகமும்.— | | | | | | | | | |
| 82. தலைமையிட—மாவட்டப் பணியாளர்கள். | .. | .. | .. | .. | 3ச<br>34,333 | —<br>.. | —<br>34,336 | —<br>.. | —<br>34,336 |
| மொத்தம்—VII. நெறிப் படுத்தலும் நிருவாகமும். | .. | .. | — | .. | 34,336 | .. | 34,336 | .. | 34,336 |
| I. கல்வி .. .. .. | 77,914 | 154 | 99,800 | 8,940 | 2,44,063 | 18,853 | 4,21,777 | 27,947 | 4,49,724 |
| II. வேலை வாய்ப்பு—பொருளாதார மேம்பாடு. | 20,000 | 35 | 1,18,707 | 405 | 658 | 30 | 1,39,365 | 470 | 1,89,835 |
| III. சுகாதாரம், வீட்டுவசதி ஏனைய திட்டங்கள். | 731 | 1,271 | 1,32,393 | 297 | 1,148 | 7,187 | 1,34,272 | 8,755 | 1,43,02[illegible] |
| IV. பழங்குடியினர் வாழும் பகுதிகள் துணைத் திட்டங்கள். | .. | .. | .. | 23,644 | .. | .. | .. | 23,644 | 23,644 |
| V. கொத்தடிமைத் தொழிலாளர் புது வாழ்வுத் திட்டங்கள். | .. | .. | .. | .. | .. | 42 | .. | 42 | 42 |
| VI. நெறிப்படுத்தலும் நிருவாகமும் (தலைமையிட—மாவட்டப் பணியாளர்கள்). | .. | .. | .. | .. | 34,336 | .. | 34,336 | .. | 34,33 |
| மொத்தம் .. | 98,645 | 1,460 | 3,50,900 | 33,286 | 2,80,205 | 26,112 | 7,29,750 | 60,858 | 7,90,608 |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| மொத்த வருவாய்— | | | | |
| சாட்டியது .. .. | .. | .. | 1,000 | .. |
| அனுமதித்தது .. .. | 56,545 | 1,460 | 3,21,371 | 29,250 |
| மூலதனம் .. .. .. | 42,100 | .. | 19,500 | 4,036 |
| கடன்களும் முன் பணங்களும். | .. | .. | 9,029 | .. |
| பெருமொத்தம் .. | 98,645 | 1,460 | 3,50,900 | 33,286 |

† கிறித்துவ மதத்திற்கு மாறிய ஆதிதிராவிடர்கள்.

†† மத்திய, மாநில அரசுகள் சம அளவில் பொறுப்பேற்கும் திட்டங்கள்.

சா.—சாட்டியது. மூ—மூலதனம். க—கடன்களும் முன்பணங்களும்.



| (1) | (2) | (3) | (4) | |
|---|---|---|---|---|
| 3 | .. | 1,003 | .. | 1,003 |
| 2,80,067 | 26,112 | 6,57,983 | 56,822 | 7,14,805††† |
| .. | .. | 61,600 | 4,036 | 65,635 |
| 135 | .. | 9,164 | .. | 9,164 |
| 2,80,205 | 26,112 | 7,29,750 | 60,858 | 7,90,608††† |

†††கீழே உள்ள இனங்கள் நீங்கலாக

| | |
|---|---|
| 1. ரயத்துவாரி கிராமங்களுக்காக பயிற்சி மையம். | 1 |
| 2. ஊரக வீட்டு வசதித் திட்டம், சென்னை கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி) திட்டம் தொடர்புடையவை. | 22,000 |
| 3. அகவிலைப்படி வழங்குவதற்கான ஒரு மொத்த நிதியொதுக்கம். | 24,396 |
| 4. கருணைத் தொகை வழங்குவதற்கான ஒரு மொத்த நிதியொதுக்கம். | 1 |
| | 46,398 |

[1989 ஏப்ரல் 29

## இணைப்பு II

சிறப்பு உள்ளடக்க திட்டம், 1989–90.

| தொடர் எண். | திட்டம். | ஆதிதிராவிடர் திட்டங்களுக்கு நிதியுதவி, 1989–90. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
| 1 | வேளாண்மை—பயிர் வளர்ப்பு .. | 798.29 |
| 2 | நிலச்சீர்திருத்தம் .. .. .. | 2.40 |
| 3 | சிறப்புப் பகுதித் திட்டம் .. .. | 890.00 |
| 4 | நிலம்-நீர்வளப் பாதுகாப்பு .. .. | 24.00 |
| 5 | கால்நடை வளர்ப்பு .. .. .. | 31.80 |
| 6 | பால்பண்ணை மேம்பாடு .. .. | 0.05 |
| 7 | வனங்கள் (சமுதாயக் காடு வளர்ப்பு).. | 705.00 |
| 8 | சமுதாய மேம்பாடு .. .. .. | 1,322.00 |
| 9 | மின்சக்தி அபிவிருத்தி .. .. | 324.00 |
| 10 | கிராம சிறுதொழில்கள் .. .. | 16.63 |
| 11 | சாலைகள்-பாலங்கள் .. .. | 70.60 |
| 12 | பொதுக் கல்வி .. .. .. | 1,579.73 |
| 13 | மருத்துவம்-பொது சுகாதாரம் .. | 150.00 |
| 14 | கழிவு நீர் அகற்றுதல்-குடிநீர் வழங்கல் | 4,164.90 |



1989 ஏப்ரல் 29]

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 15 | வீட்டு வசதி .. .. .. .. | 555.62 |
| 16 | நகர்ப்பகுதி வளர்ச்சி .. .. | 844.00 |
| 17 | வேலைவாய்ப்புப் பணிகள் .. .. | 83.25 |
| 18 | ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலம். | 2,870.91 |
| 19 | சமூக நலம் .. .. .. .. | 2,570.23 |
| 20 | சத்துணவு .. .. .. | 2,118.16 |
| | மொத்தம் .. .. | 19,121.57* |

* தற்காலிகமானது.

## இணைப்பு III

### பழங்குடியினர் துணைத் திட்டம்—1989–90.

| தொடர் எண். | திட்டத்தின் பெயர். | மாநிலத் திட்டத்திலிருந்து அளிக்கப்படும் நிதியுதவி. | சிறப்பு மத்திய நிதியுதவி. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1 | தோட்டக்கலை .. .. | 40.00 | 40.00 |
| 2 | மண்வளம் பாதுகாப்பு .. | 30.00 | .. |
| 3 | கால்நடை வளர்ப்பு .. | 35.00 | 25.00 |
| 4 | கிராமத் தொழில்கள் .. | 25.00 | 25.00 |
| 5 | பட்டுப்புழு வளர்ப்பு .. | 39.66 | 30.00 |
| 6 | சிறுபாசனம் .. .. | 11.00 | 10.00 |
| 7 | காடு வளர்ப்பு .. .. | 100.00 | 15.00 |
| 8 | கூட்டுறவு .. .. | 80.00 | 30.00 |
| 9 | மின்வசதியளித்தல் .. | 30.00 | .. |
| 10 | சாலை வசதி .. .. | 165.00 | .. |
| 11 | வீட்டு வசதி .. .. | 6.30 | .. |
| 12 | மனித ஆற்றல்—வேலை வாய்ப்பு. | 13.47 | .. |
| 13 | கல்வி .. .. | 132.00 | 10.00 |
| 14 | மகளிர்—குழந்தைகள் மேம்பாடு. | 18.42 | .. |



| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 15 | குடிநீர் வசதி .. .. | 26.00 | .. |
| 16 | சமுதாய மேம்பாடு .. | 5.20 | .. |
| 17 | மருத்துவப் பணிகள்—குடும்ப நலம். | 15.00 | .. |
| 18 | பொதுச் சுகாதாரம்—நோய்த் தடுப்பு மருந்துகள். | 20.00 | .. |
| 19 | தொடக்க சுகாதார நிலையம் | 12.00 | .. |
| 20 | இந்தியமுறை மருத்துவம் .. | 20.00 | .. |
| 21 | ஆதிதிராவிடர்-பழங்குடியினர் நல இயக்ககம் (கல்வி நீங்கலாக). | 6.08 | .. |
| 22 | கண்காணித்தல்—மதிப்பீடு செய்தல். | 1.87 | .. |
| 23 | பரவி வாழும் பழங்குடியினர் | 20.00 | .. |
| 24 | பண்டைய பழங்குடியினர் | .. | 15.00 |
| | மொத்தம் .. | 852.00 | 200.00 |
| 25 | இதர பொது பிரிவுத் திட்டங்கள். | 564.84 | |
| | பெரு மொத்தம் .. | 1,616.84 | |

600 008 144367